# நெல்லிக்கனி

## தொண்ணூறாவது ஆண்டுவிழாச் சிறப்புமலர்




## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

### கரவெட்டி

1921 2011

# J/NMMV

## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

# நெல்லிக்கனி

### தொண்ணூறாவது ஆண்டுவிழாச் சிறப்புமலர்

## J/Nelliady Madhya Maha Vidyalayam

# Nellikkani

### 90th Anniversary Special Publication

2011

# சமர்ப்பணம்



எமது கல்லூரியின் வாழ்விலும் வளர்ச்சியிலும்
அதீத ஈடுபாடுகொண்டு
தனது சிந்தையிலும் செயற்பாடுகளிலும்
கல்லூரி மேம்பாட்டிலேயே கருத்தூன்றி
தனது இறுதிமூச்சு வரை உணர்வாலும் உழைப்பாலும்
கல்லூரியின் அபிவிருத்திக்கு உரமூட்டிய
கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவரும்
பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் முன்னைநாள் செயலாளரும்
பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினரும்
கிராம அலுவலருமான

**அமரர் சிதம்பரப்பிள்ளை பிரபாகரன்**

அவர்களுக்கு இம்மலரினைக் காணிக்கையாக்குகின்றோம்.

– மலர்க்குழு –

## Motto

*"Let Knowledge radiate; Culture burgeons"*

## The vision of the college

*"Blossoming as Higher college,*

*to shape a fitting society for the twenty – one century,*

*which combines knowledge, creative skills, personality and human dignity"*

## Mission Statement

*"A unique college, fulfilling at both national and Inter-national levels,*

*the contemporary and future educational needs*

*with efficient field and resourceful facilities,*

*to uphold the happy life of people in vadamaradchi and catchments areas."*

**மகுடவாசகம்**

## "அறிவு ஒளிர சால்பு சிறக்க"

**கல்லூரியின் நோக்கு**
**[Vision]**

**"அறிவும் ஆக்கமும் ஆளுமைத்திறனும் மானிட மாண்பும் மிளிரும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான சமூகத்தை உருவாக்கும் உயர் கல்லூரியாக மலர்தல்"**

**கல்லூரியின் பணிக்கூற்று**
**[Mission Statement]**

**" சமகால எதிர்காலக் கல்வித் தேவைகளை**
**தேசிய மற்றும் சர்வதேசரீதியில் நிறைவு செய்யும் வகையில்,**
**வினைத்திறன்மிக்க கள, வள, வசதிகளை ஏற்படுத்தி**
**ஒரு தலைசிறந்த கல்லூரியாக, உயர்ந்து**
**வடமராட்சி மற்றும் ஏந்து பிரதேச மக்களது**
**மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கான செயற்பாடுகளை**
**விளைதிறனுடன் முன்னெடுத்தல் "**

# கல்லூரிக் கீதம்

இராகம் : சம்கரந்தனப்பிரியா　　　　　　　　　　தாளம் : திஸ்ரலகு

<u>முதல்நிலை</u>

வாழ்க வாழ்க வாழ்கவே - எங்கள் கலைக்
கோயில் என்றும் வாழ்க வாழ்க வாழ்கவே

<u>நடுநிலை</u>

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
நிகரில்லாத கலையின் ஊற்று குருகுலபீடம்

(வாழ்க)

<u>இறுதிநிலை</u>

கண்விழித்த கமலமன்ன கவர்ச்சிபொங்கு பார்வையும்
கனல்தெறித்து வீறுகொள்ளும் ஆண்மையோங்கு நெஞ்சமும்
எண்ணிலாத இலட்சியங்கள் சூழுமிதய வேகமும்
விண்முகட்டிற் பாயவைக்கும் விந்தையறிவு நிலையமாய்

(வாழ்க)

இன்பவாழ்வு பூக்கும்வண்ணம் இனியகலை விஞ்ஞானமும்
என்றும் எங்கும் உண்மை காணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரியபண்பு நெறிகளும்
ஆக்கியெம்மில் ஆற்றலேற்றும் அறிவு நீர்வீழ்ச்சியாய்

(வாழ்க)

கல்விப்பண்ணை வளரநாளும் களைபிடுங்கி அறிவுநீர்
மெள்ளமெள்ளச் சொரிந்து நிற்கும் மேன்மைமிக்க குரவர்கள்
செல்வம் என்று போற்றும் எங்கள் உயிரில் வாழும் செந்தமிழ்
அல்லல் நீக்கி ஆட்சிகாண அருள்வழங்கு வாணியாய்

(வாழ்க)

என்பும் உரியம் பிறர்க்கு என்ற இனியகொள்கை அழகிலே
அன்புநெறியிற் பணிகள் ஆற்றி அருமைத்தமிழின் நிழலிலே
தென்பு பெற்றுத் தெய்வஒளியில் திசைகடந்த புகழிலே
இன்பம் காட்டும் வாழ்வு நல்கும் இணையில் சாந்தி நிலையமாய்

(வாழ்க)

வைத்தகாலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்
வையவாழ்வு சொர்க்கமென்று வாகைசூடிக் கூறுவோம்
நித்தம் எம்மைக் காக்க என்று நிமலன்பாதம் சூடுவோம்
அத்தன் கருணை வெள்ளம்மூழ்கி அமரகீதம் பாடுவோம்

(வாழ்க)

கவீ.

# நெல்லிக்கனியினுள்ளே . . .


நல்லாசிகள் I - II

நல்வாழ்த்துக்கள் III - XXII

தொண்ணூறாவது ஆண்டு விழாக் குழுவினரிடமிருந்து

தரமான கல்வியினூடாக தரமான சமூகத்தை உருவாக்கும் பயணத்தின்

தொண்ணூறாவது ஆண்டில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 01 - 19

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - குறுக்குமுகப் பார்வை 20 - 20

- திரு.ந.பாஸ்கரன்

அபிவிருத்தியை நோக்கி 21 - 23

- திரு.மு.சுந்தரலிங்கம்

தொண்ணூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளும்

போட்டி முடிவுகளும் அநுசரணையாளர்களும். 24 - 27

முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட - கல்லூரி மாணவர் ஆக்கங்கள் 28 - 39

- பழைய மாணவர் ஆக்கங்கள் 40 - 43

- திறந்த போட்டியாளர்களின் ஆக்கங்கள் 44 - 45


**கல்வியியலாளர்களின் ஆக்கங்கள்**


தொலைநோக்குள்ள ஆசிரியர்கள் - இன்றைய தேவை 01 - 05

- பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி

உலக நிதி நெருக்கடி : குற்றம் கூறப்படவேண்டியது கணிதத்தையா? 06 - 14

*Dr. S. Srisatkunarajah, Mr. A. Laheetharan, Mr. J. Robinson*

ஆசிரியரும் தலைமைத்துவமும் 15 - 18

பேராசிரியர் சபா ஜெயராஜா

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வளர்ச்சியில்

யப்பானிய ஐவிதி (5S) கோட்பாடுகளின் பங்கு 19 - 24

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்

"Impossible" is Impermanent 25 - 27

- திரு.சி.அம்பிகாவரன்

நலமுடன் வாழ்வோம் 28 - 30

வைத்திய கலாநிதி வே.கமலநாதன்

தமிழ்மொழியைப் பிழையற எழுதுதல் 31 - 33

- திரு.கி.நடராஜா (ஓய்வுபெற்ற அதிபர்)

யாழ்ப்பாணத் தமிழர்களின் தனித்துவத்திற்குச் சான்றாக

இன்னும் தேசவழமைச் சட்டம் 34 - 36

- திரு.அ.க.நடராஜா (சட்டத்தரணி)

சக்திமிகு பாடசாலை முகாமைத்துவம் 37 - 41

- திரு.செ.சேதுராஜா (அதிபர்)

பாடசாலை மேம்பாடும் பெற்றோர் பங்களிப்பும் 42 - 47

- கலாநிதி த.கலாமணி

சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி: 2224870

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

## அருள் ஆசிச் செய்தி.

2011.07.14.

கல்விமான் பெருந்தகையீர்;-

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இன்று தனது 90 வது ஆண்டு நிறைவை அடைந்திருப்பதை இட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். இத் நாட்டில் கல்விக்காக 90 ஆண்டுகள் தன்னிகரில்லாப் பணியாற்றியது. பேராசிரியர்களும், கல்விமான்களும், ஒழுக்க சீலர்களும், இப்பாடசாலை நெல்லியடி வாழ் மக்களுக்கு ஆற்றிய பணி பெரும் சிறப்பாகும். கல்வியே மனிதனின் கண் ஆகும். கல்வியை வழங்குவதில் இப் பாடசாலையும் தன்னிகரில்லாப் பணியாற்றியது சிறப்புடையதாகும். திருவள்ளுவரும்

கண்ணுடையர் என்பவர் கற்றோர் - முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

கல்வி இருட்டறையில் நிற்பவனை வெளிச்சத்துக்கு கொண்டு வருவது ஆகும். இப்பாடசாலை 90 ஆண்டுகள் இப்பணியாற்றியமை அனைவருக்கும் பெருமையைத் தருகின்றது. அதிபர், ஆசிரியர், பழைய மாணவர்கள் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இன்னும் பல நூற்றாண்டுகள் பல்லாண்டு காலம் வாழ்வதற்கும் மேலும் பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

[illegible]

வாழ்க மேற்படி பாடசாலை.

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



## அகில உலக சைவக் குருமார் சம்மேளன குரு பீடாதிபதியின் ஆசிகள்

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**

*பிரதமகுரு வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில்* J,P

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் தனது தொண்ணூறாவது ஆண்டைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்று வெளிவருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.**

**இக்கல்லூரி மாதாவின் பழைய மாணவன் என்ற வகையில் பெருமையடைகின்றேன். நான் இவ்வளவு தூரம் உயர்வாக இருப்பதற்கு இக்கல்லூரியில் கல்வி கற்றது தான் என்பதை எவரும் மறுக்க முடியாது.**

**தொண்ணூறாவது ஆண்டென்ன என்னும் பல நூற்றாண்டுகளை இக் கல்லூரி கடந்து கல்வியில் சாதனைகள் படைக்க வேண்டு மென்று எல்லாம் வல்ல இறைவியை இறைஞ்சி வேண்டிப் பிராத்தித்து அடியேனின் உள்ளமைந்த ஆசியைக் கூறுகின்றேன்**



## கரவெட்டி பங்குத் தந்தையின் ஆசிகள்

**அருட்பணி. எமில் போல்**
பங்குத்தந்தை,
புனித அந்தோனியார் ஆலயம்
நெல்லியடி,
கரவெட்டி.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் என்னும் கல்விக் கூடம் தொண்ணூறுஆண்டுகளைப் பூர்த்தி செய்து பணியாற்றி வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நிறைவின் மகிழ்வில் "நெல்லிக்கனி" என்னும் நினைவு மலர் வெளியிடப்படுகிறது. நெல்லிக்கனியின் மகத்துத்தை சுதேச வைத்தியர்கள் எடுத்தியம்புவார்கள். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் மகத்துவத்தை இந்த நெல்லிக்கனி மலரினூடாக அதனைச் சுவைத்து பயன் பெற்ற பலர் வெளிப்படுத்துவார்கள். கடந்த காலத்தில் இக்கல்விக் கூடத்தின் அரும்பணியைக் கண்ணூடாக கண்டவன் என்ற வகையில் நானும் அவர்களோடு இணைந்து கொள்கின்றேன்.

கல்விச் சாலையை ஒரு சமூகத்தின் இதயம் என்று குறிப்பிடலாம். ஒரு இதயம் நாளங்களினூடாக மாசடைந்த குருதியைப் பெற்று அதனைச் சுத்திகரித்து நாடிகளினூடாக உடலெங்கும் தூய குருதியைப் பரவச் செய்கிறது. உடலுக்கு புத்துயிர் கொடுக்கிறது. இதயம் நின்று போனால் உடலின் உயிர் நின்று போகிறது. மரணம் சம்பவிக்கின்றது. அதுபோலவே ஒரு சமூகத்திலே பல்வேறு விதமான பின்னணிகள், மனப்பாங்குகள், பழக்கவழக்கங்கள், பாதிப்புக்கள் என்பனவற்றோடு வரும் மாணவச் செல்வங்களை ஒரு பாடசாலை உள்வாங்கி சமூகத்திற்குகந்த நல்ல பிரஜைகளாக அவர்களை வெளியனுப்பி வைக்கிறது தன்னுள்ளே அவர்களை வைத்திருக்கும் காலத்தில் அவர்களை சமூகமயப்படுத்தி நல்ல புதிய மனப்பாங்குகளை உருவாக்கி பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி, ஆற்றல்களை பெருக்கி, அந்நிலை அதிகரித்து சமூகம் வளரப் பெரும் பங்களிக்கின்றது. எனவே தான் கல்விச் சாலைகள் எப்போதும் சமூகத்தால் போற்றிப் பேணப்படத்தக்கவையாகின்றது.

ஏனினும் ஒரு கல்விச்சாலை இத்தகைய கடமையைச் செய்யத் தவறும் போது அது சமூகத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகின்றது. இதயம் நின்ற உடல் இறந்து அழுகுவது போல சரியாக இயங்காத பாடசாலையுள்ள சமூகமும் அழுகி நாற்றமெடுக்கும். பல்வேறு தீமைகளும் அங்கு வந்து குடிகொள்ளும் ஆகவே கல்விச் சாலையைக் கண்காணிப்பதும் தட்டிக் கொடுப்பதும் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் சமூகத்தின் கடப்பாடாகும்.

இந்த நெல்லியடிச் சமூகத்திற்கு இதயமாக திகழும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 90வது அகவையை கடந்து செல்கிற போது இதன் சமூகம் சார் பங்களிப்பை பாராட்டி கௌரவிப்பது எமது கடமையாகிறது. அதேவேளை தனது பணியில் அது மேலும் வளர தொடர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்குவது அவசியமாகிறது.

இவ்விழாவும், "மலரும்", இப்பாடசாலை மீதான சமூக அக்கறையைப் புதுப்பிக்க வேண்டும் என ஆசித்து நிற்கின்றேன்.

மேலும் இந்நிறைவில் மகிழும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.



## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து...

**இ.இளங்கோவன்,**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தனது 90 ஆவது ஆண்டினை நிறைவு செய்து அதையொட்டி வெளியிடப்படும் "நெல்லிக்கனி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

C.W.W கன்னங்கரா அவர்கள் நனவாக்கிய மத்திய மகா வித்தியாலயங்களில் இதுவும் ஒன்றாகும். தேசிய பாடசாலைகள் உருவாவதற்கு முன்னர் மத்திய மகா வித்தியாலங்களே கிராமப் புறத்திலிருந்து வரும் மாணவர்களிற்கு கல்வி, தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கி பலரை நாட்டில் அபிவிருத்திக்குரிய முன்னோடிகளாக ஆக்கியுள்ளது. இவ் அணியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் விடுதி வசதிகளை கொண்டிருந்தமையினால் மலையகம், வன்னிப் பிரதேசங்களில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை தன்னகத்தே உள்வாங்கி அவர்களை உயர் கல்வி பெறச்செய்து ஆளாக்கிய பெருமையும் இவ் மகா வித்தியாலயத்தையே சாரும். சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இவ் வித்தியாலயம் மீண்டும் பழைய நிலையை அடைவதற்கு ஆசிரிய குழாமும் கல்விச் சமூகமும் முயற்சி செய்து வருவது வரவேற்பிற்குரியதொன்றாகும்.

"நெல்லிக்கனி" மலரானது மாணவர்களிற்கு நவீன யுகத்திற்கு சவால் கொடுக்க கூடிய வகையில் சிறந்த ஆக்கங்களை தாங்கி வருகின்றது என எதிர் பார்த்து வெளியீட்டு விழா சிறப்புற அமைய எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூற்றாண்டு விழாவை ஒட்டி வெளிவரும் சஞ்சிகை ஆனது பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி கல்லூரியின் வரலாற்றுத் தடங்களையும் அறிக்கையிட வேண்டும் என எதிர்பார்த்து இக்கல்லூரி மேலும் வினைத்திறனான கல்விப் பணியை செய்யவும் இம் மலர் வெளியீடு சிறப்பாக அமையவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நல்வாழ்த்துக்கள்



**திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்**
நீதிபதி,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

வடமராட்சியின் அறிவுக் கண்களுக்கு கலங்கரை விளக்காகத் திகழும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90ஆவது ஆண்டு வெளியீடான நெல்லிக்கனி சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலை வடமராட்சியின் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாக விளங்குவதுடன் இன்று பெரு விருட்சமாகி கல்வி ஒளியினை இப்பிரதேசத்து மாணவர்களுக்கு நிறைவாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எத்தனையோ வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும், சட்டத்தரணிகளையும் கலை, வர்த்தகத்துறை விற்பன்னர்களையும் உருவாக்கிய பெருமை இப்பாடசாலைக்கும் உண்டென்றால் அது மிகையாகாது.

இன்றைய உலகில் நல்லொழுக்கமுள்ள நற்பிரசைகளை உருவாக்கவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. அதற்கு உன்னத பணியையும் இப்பாடசாலை சிறப்பாக மேற்கொண்டுவருவது கண்கூடு. சமகாலத்தில் இப்பாடசாலையின் சாதனைகள் தேசிய மட்டத்தில் தனக்கென ஒரு தனியிடம் பெற்றுள்ளதை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

பெருமையுடனும் சாதனையுடனும் மிளிரும் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு தொண்ணூறு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு சுவைகள் பல தரும் நெல்லிக்கனி சிறப்பு மலரில் வரும் ஆக்கங்கள் எமது ஏனைய சந்ததியினரின் தேவைகளுக்கு நல்லதொரு ஆவணமாக அமைவதுடன் இவை நீதியும் சமாதானமும், சமத்துவமும் மிக்க சடுகத்தை உருவாக்க ஏதவாக அமையுமென நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றேன். இத்தகைய நற்பணியில் தம்மை இணைத்து அரும்பணியாற்றிவரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விச் சமூகத்தவர்கள் யாவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



**யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின்**
**தொண்ணூறாவது ஆண்டு நிறைவுவிழா**
**சிறப்படைய வாழ்த்துக்கள்.**

**திருமதி.இமெல்டா சுகுமார்**
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் தொண்ணூறாவது ஆண்டு நிறைவு விழா "நெல்லிக்கனி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நாளைய நற்சமுகத்தை உருவாக்குகின்ற கலைக்கோவில்களாகப் பாடசாலைகள் விளங்குகின்றன. ஏற்றத் தாழ்வுகளின்றி அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் நோக்கில் இலங்கையில் தாபிக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயங்கள் கடந்த காலத்தில் மிகச்சிறப்பான சேவையாற்றி நாட்டுக்கு நல்ல தலைவர்களையும் பிரஜைகளையும் உருவாக்கியுள்ளன. யாழ்மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசத்திற்கென திட்டமிடப்பட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்ட கல்லூரியே நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமாகும். மாதிரிப் பாடசாலையாக 1921 இல் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கலாநிதி C.W.W.கன்னங்கரா அவர்களது சிந்தனையில் உருவான கிராமத்துக் திறமைமிக்க மிக்க ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வி கற்பிக்கக்கூடிய சகல வசதிகளையும் கொண்ட மத்திய மகா வித்தியாலயமாக 1946 ஆம் ஆண்டு மிளர்ந்துள்ளது.

இக்கல்லூரியின் புகழ்பூத்த மாணவர்கள் நாடாளாவியரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் தமது சீரிய திறமையாலும் அயராத உழைப்பினாலும் பாடசாலைக்கும் நாட்டுக்கும் சேவைசெய்து புகழ்சேர்க்கின்றனர்.

இப்பாடசாலையானது பாடவிதான, இணைப்பாடவிதான மற்றும் பௌதிகவள மேம்பாட்டுச் செயற்பாடுகளில் சிறப்புப் பெற்றுள்ளது. அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு 90 ஆண்டுகளை நிறைவுசெய்கின்ற இப் பாடசாலையானது தோற்றத்திலும் தொடர்ச்சியிலும் முற்றுமுழுதான அரசாங்கப் பாடசாலை என்பதில் சிறப்புப் பெற்றுள்ளது.


இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் இதன் இன்றைய வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு பணியாற்றிவருவதனை மனதாரப் பாராட்டுவதோடு அகவை 90 ஆண்டுகள் நிறைவுசெய்து விழாக்காணும் இப்பாடசாலை மேன் மேலும்வளர்ச்சி பெற்று சிறந்த கல்விமான்களை உருவாக்கிச் சிறப்புற வாழ்த்துகின்றேன்.



# நல் வாழ்த்துக்கள்

**வே. தி .செல்வரத்தினம்**
பிரதிச் செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
வடமாகாணம்

இலவசக் கல்வியின் தந்தை கலாநிதி C.W.W கன்னாங்கரா அவர்களினால் வடமராட்சிப் பகுதிக்கு பெரும் சொத்தாகிய யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அமரர் பாராளுமன்ற உறுப்பினர் திரு பொன் கந்தையாவின் விதப்புரையுடன் கிடைத்தது. இம் மத்திய மகா வித்தியாலயம் ஆல் போல் தழைத்து பெரு விருட்சமாக வளர்ந்து பல ஏழை மாணவர்களுக்கு அறிவுக் கண்களைத் திறந்தது என்றால் மிகையாகாது. ஒரு பாடசாலையின் தொண்டு என்னும் போது அப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் ஆசிரியர்களின் சேவையையே குறிக்கும். அந்த வகையில் தற்போதைய அதிபர் காலத்தில் சிதைந்த கட்டடங்களும் சிதைக்கப்பட்ட மாணவ வளமும் புனரமைக்கப்பட்டு வடமராட்சிப் பகுதிக்குஒளி வீசுகின்றது."நவோதய" GEP II 1000 பாடசாலை அபிவிருத்தி ஆகிய திட்டங்களுள் உள்வாங்கப்பட்டு வளங்கள் பெருகின. இப்பாடசாலையில் மிகப் பெரிய கேட்போர்கூடம் உருவாவதில் அதிபர் திரு .செ. சேதுராஜாவின் அர்ப்பணிப்பான் சேவையே காரணமாகும். சிறந்த கல்வியியலாளராகிய இவ் அதிபரின் வழிகாட்டலில் ஆசிரியர்கள் சிறப்பான பணியாற்றி உயர் கல்விச் சாதனைகளையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனைகளையும் பெறக்கூடியதாக உள்ளது. இச்சாதனைகளால் பாடசாலை மட்டுமல்லாது வடமராட்சிப் பகுதி மட்டுமல்லாது வட மாகாணமே சிறந்த பெயர் பெறுவதாக அமைந்துள்ளது. அர்ப்பணிப்பான சேவை வழங்கும் இப் பாடசாலையின் அதிபர் ஆசியர்களைப் பாராட்டுவதிலும் சாதனை படைக்கும் மாணவர்களைவாழ்த்துவதிலும் பெருமையடைகிறேன்.இன்னும் பல பௌதிக மனித வளங்களை இப் பாடசாலை பெற்று வடமராட்சியிலுள்ள சகல மாணவர்களும் சிறந்த சாதனை படைக்க இப் பாடசாலை உதவ வேண்டும் என்பது எனது பிரார்த்தனைகள்.



## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துக்கள்

**திரு.ப.விக்னேஸ்வரன்**
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*வடமாகாணம்.*

*கல்வி இலக்குகளை மாணவர்கள் அடைந்துகொள்வதற்கு அடிப்படைக் களமாக அமைவன பாடசாலைகளேயாகும். இன்றைய உலக நிலைமைகளுக்கு ஈடுகொடுத்து உலகில் தமக்கென ஓரிடத்தினைப் பெற்று மகிழ்ச்சிகரமான வாழ்க்கைப் பாணியினை மாணவர்கள் ஏற்படுத்திக்கொள்வதற்கு பாடசாலைகளே முக்கிய பயிற்சிக் களங்களாகும். இவ்வாறான மானிட மற்றும் சமூகப் பொறுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் பரிபூரண வளர்ச்சியினையும் பண்பினையும் கொண்டனவாக அபிவிருத்தி அடையவேண்டியது காலத்தின் தேவையாகும். இவ்வகையில் கல்விப் பாரம்பரியமிக்க வடமராட்சிப் பிரதேசத்தில் தனக்கேயுரிய ஒரு தனிச்சிறப்போடு கல்விமணம் பரப்பிவரும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமானது பல தடைகளைத் தாண்டி கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சுற்றாடல் விருத்தியிலும் பன்முக பாங்கில் விரைந்து அபிவிருத்தி அடைந்துவருவது மகிழ்ச்சியளிக்கின்றது. அரசாங்கத்தினாலேயே ஒரு மாதிரிப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு ஒரு 1AB தர மத்திய மகா வித்தியாலயமாகத் தரமுயர்ந்து பல தடைகளையும் இழப்புக்களையும் தாண்டி இன்று மீண்டும் வலுப்பெற்று பொலிவுற்று தனது தொண்ணூறாவது ஆண்டு நிறைவினை எழுச்சியோடு கொண்டாடும் இத்தருணத்தில் அதன் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினரைப் பாராட்டுவதோடு இக்கல்லூரி எதிர்காலத்தில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று நீடித்த நிலைத்த கல்விப் பணியாற்ற வாழ்த்துகின்றேன்.*



## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துக்கள்

**திரு.வ.செல்வராசா**

*வலயக் கல்விப் பணிப்பாளர்,*

*வடமராட்சி.*

கல்விக் கருவூலமே வாழி வாழி!
"நெல்லியடியிலிருந்து நெறிமுறை சார் கல்வியினை
எல்லையின்றி எமக்களித்து ஏற்றமுற வைத்த
கன்னிகையே ஏழைகளின் காவிய நாயகியே
காரிகையே கருவூலமே வாழி வாழி!

ஒன்பது தசாப்த காலம் வடமராட்சியின் மையப்பகுதியில் அமைந்து கல்விப்பணியாற்றிய யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தின் "நெல்லிக்கனி"க்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

1921ம் ஆண்டில் மாதிரிப்பாடசாலையாக உருவாகிய இப்பாடசாலை இன்று இப்பிரதேசத்தின் மாதிரி உருவாகக் காட்சி தருவது மகிழ்ச்சிக்குரியதாகும். 1946ஆம் ஆண்டில் கலாநிதி C.W.W கன்னங்கராவின் சிந்தனைக்கமைய இப் பாடசாலை மத்திய மகா வித்தியாவயமாகத் தரமுயர்ந்தது. இதனைத் தொடர்ந்து இப் பள்ளிக்கூடம் வேகமான வளர்ச்சியைக் கண்டது. நாட்டின் பல பாகங்களிலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் களமாக இப் பாடசாலை விளங்கியது.

இப் பள்ளிக்கூடத்தின் ஒன்பது தசாப்த கால கல்விப் பணியால் சமூகத்திற்கு தேவையான அறிவு ஆற்றல் மனப்பான்மை நிறைந்த பலர் உருவாகினர். சமூகத்தின் மேலோங்கிய வளர்ச்சிக்கு இப்பாடசாலை உதவியது. இவ் அற்புதப் பணியை நிறைவேற்றுவதில் முன்னின்று உழைத்த அதிபர்கள் ஆசிரியர்கள் வணக்கத்திற்குரிய பிதாமக்களே! பள்ளிக்கூடம் என்னும் உருவிற்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் மிளிரும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மேலும் வளர்ச்சி கண்டு சமூகத்தை வலுவூட்ட வாழ்த்துகின்றேன்.



# வாழ்க! வாழ்க! வாழ்கவே!

**திரு. இ. ஐயாத்துரை,**

*தலைவர்,*

*பழைய மாணவர் சங்கம்.*

*யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடவுள்ள “நெல்லிக்கனி” சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.*

*கடந்தகாலத்தில் ஏற்பட்ட பேரழிவு நிகழ்வுகளால் கல்லூரியின் அபிவிருத்தியை மீண்டும் முன்னெடுக்க வேண்டிய நிலையில், பாடசாலைச்சமூகம் பல வழிகளிலும் முயற்சியை மேற்கொண்டு, கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை அபிவிருத்திக்காகப் பயன்படுத்தி வருகின்றது. அந்த வகையில் கல்லூரியின் 90வது ஆண்டு நிறைவை அபிவிருத்திக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியாகவும், அதில் ஒரு அங்கமாக “நெல்லிக்கனி” சிறப்புமலர் ஒன்றையும் வெளியிட எடுத்துள்ள தீர்மானம் வரவேற்கக்கூடியதொன்றாகும்.*

*ஓர் கல்லூரியின் அபிவிருத்திக்கும் பாடசாலைச் சமூகத்தின் விடாமுயற்சியும் ஊக்கமும் மிக அத்தியாவசியமானது. அந்த வகையில் இக்கல்லூரியின் பாடசாலைச் சமூகத்தின் விடாமுயற்சியினால், இக்கல்லூரியில் ஏற்பட்ட அழிவு நிலையிலிருந்து தற்போது முன்னேற்றம் அடைந்துகொண்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. தற்போதைய அதிபர் திரு. செ. சேதுராஜா அவர்களின் அயராத முயற்சியால் பல அழிந்த வளங்கள் சீர்செய்யப்பட்டுள்ளதோடு புதிய வளங்களும் உருவாக்கப்பட்டு உள்ளன. இக்கல்லூரியின் பாடசாலைச்சமூகம், குறிப்பாக லண்டன், கனடா போன்ற நாடுகளில் செயற்பட்டு வருகின்ற பாடசாலையின் பழைய மாணவர் கிளைச்சங்கங்களின் உதவி அனுகூலங்கள் மிகவும் போற்றக்கூடிய வகையில் அமைந்துள்ளன. எனினும் இக்கல்லூரியின் முழுமையான அபிவிருத்திக்கு மேலும் பல வளங்கள் தேவைப்படுகின்றன.*

*எனவே பாடசாலைச்சமூகம் பாடசாலை நலன்விரும்பிகளும் தொடர்ந்தும் தங்களது உதவிகளை வழங்கி இக்கல்லூரியின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக்கேட்டுக்கொள்வதோடு இக்கல்லூரி முழுமையாக முன்னேற்றமடைந்து சிறப்பாக செயற்பட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.*




# முன்னாள் அதிபரின் வாழ்த்துச்செய்தி

**திரு. சி.சிற்றம்பலம்**
*முன்னாள் அதிபர்*

யாஃ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தனது 90 ம் ஆண்டு நிறைவு விழாவை மேற்படி கல்லூரியின் கல்லயரங்கில் இம் மாதம் 15 ஆம் ,16ஆம், 17ஆம் திகதிகளில் நடாத்த இருப்பதையிட்டு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக் கல்லூரி தனது நீண்ட 90 ஆண்டு வரலாற்றில் பல ஏற்ற இறக்கங்களை கண்டிருக்கின்றது. அவை யாவற்றையும் இக்கல்லூரிச் சமூகத்தின் ஏகோபித்த ஒற்றுமையினால் வெற்றிகண்டு வெற்றி நடைபோட்டுக்கொண்டு வருவது எங்கள் எல்லோருக்கும் மிக மகிழ்ச்சியை அளிக்கின்றது. இக் கல்லூரி வடமராட்சி மக்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பணியாற்றிக் கொண்டு வருகின்றது என்பதை எல்லோரும் நன்கறிவர்.

இக் கல்லூரி 1921 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வந்தது. 1956 ம் ஆண்டு பருத்தித்துறைப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. பொன். கந்தையா அவர்களின் முயற்சியினாலும் அப்பொழுது இக் கல்லூரியின் அதிபராக இருந்த திரு.யு.மு சபாரட்ணம் அவர்களின் அயராத உழைப்பினாலும் கல்வி வளர்ச்சியிலும் பௌதீக வளர்ச்சியிலும் பெரும் ஏற்றத்தைக் கண்டது. 1987 ம் ஆண்டு இதன் வளர்ச்சியில் வீழ்ச்சியேற்பட்ட போதிலும் பாடசாலை நலன்விரும்பிகளின் முயற்சியினால் மீண்டும் வளர்ச்சி காணத் தொடங்கியதென்பதை எல்லோரும் அறிவர். மேலும் 1991 ம் ஆண்டு இப்பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பாதிப்பு ஏற்பட்ட காலமாகும். இக் கல்லூரியை ஒரு ஆண்கள் மட்டும் கற்கும் பாடசாலையாக மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டது. இம் முயற்சி பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிந்த இப்பாடசாலையின் அதிபர், நலன்விரும்பிகள் எடுத்த நடவடிக்கைகளால் அம் முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டு தொடர்ந்தும் கலவன் பாடசாலையாக பெருவளர்ச்சியடைந்து வருகின்றது. இக்கல்லூரி என்றும் ஒரு கலவன் பாடசாலையாக (ஆஐஓநுனு ளுஊஉழுமுடு) விளங்கி இப் பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பணியாற்ற வேண்டும் என்பது எனதும் பாடசாலை விரும்பிகளினதும் விருப்பமாகும். தற்போதைய அதிபர் தலைமையில் பாடசாலை சிறப்புற இயங்கி வருகின்றது. இக்கல்லூரி வளர்ச்சிக்கு எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டியும் 90 ம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சி விழா சிறப்புடன் நடைபெற வேண்டியும் எனது வாழ்த்துக்களையும் விருப்பங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**வைத்த காலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேற வைத்த எம் கல்லூரித் தாயே, வாழ்க!**

**கலாநிதி த.கலாமணி,**

*தலைவர், சட்டத்துறை,*

*சிரேஷ்ட விரிவுரையாளர்,*

*கல்வியியல் துறை,*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*இன்று எமது பாடசாலைக்கு அகவை தொண்ணூறு என்பதை நினைக்கும்போது நெஞ்சம் புளகாங்கிதமடைகின்றது. 1921 இல் மாதிரிப் பாடசாலையாக அரசினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று சகல வசதிகளும் கொண்டதும் கல்விச் சாதனைகளைப் புரிகின்றதுமான ஒரு நவோதய பாடசாலையாக வளர்ச்சி கண்டிருக்கின்றது.*

*எமது உடலையும் உளத்தையும் விருத்தியுறச்செய்து, பல்துறை ஆற்றல்களிலும் எம்மை வல்லபம் பொருந்தியவர்களாகச் செய்து, எமது ஆளுமை விருத்தியிலும் முழுமையான பங்களிப்புச் செய்த எமது பாடசாலையையும் ஆசிரியர்களையும் நினைத்துப் பார்ப்பதற்கு இன்று நடைபெறுகின்ற தொண்ணூறாவது ஆண்டு விழா ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.*

*இவ்வேளையில், முன்னாள் அதிபர்களையும் ஆசிரியர்களையும் நினைத்துப் பார்ப்பதோடு மட்டுமல்லாமல் இன்று எமது பாடசாலைக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ள அதிபர் திரு.செ.சேதுராஜா அவர்களையும் அவரின் செயல் நடவடிக்கைகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்துவருகின்ற அனைத்து ஆசிரியர்களையும் எமது பாடசாலைச் சமூகம் நன்றியுடன் பாராட்டுகின்றது.*

*எமது பாடசாலை என்றுமே ஒரு கலைக்கூடமாகவே விளங்கிவந்துள்ளது என்பதை இங்கு கல்விகற்ற யாவருமே அறிவர். எமது கல்லூரித்தாய் எம்மைத் திருநயனம் காட்டி என்றுமே புரந்து வந்திருக்கின்றார். எமக்கு நம்பிக்கையையும் உறுதியையும் அளித்து வாழ்வில் முன்னேற்றம் காணச்செய்திருக்கின்றார். இன்று எமது அன்னையின் திருநோக்கினால் எமது பாடசாலை மாணவர்கள் தேசியமட்டத்திலும்கூட பல சாதனைகளைப் புரிந்து வருகின்றார்கள். இவ்வேளையில், எமது கல்லூரித்தாயைப் போற்றி, எமது பாடசாலை அதிபர் அவர்களையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்றரீதியில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.*




# பிரதேச செயலரின் நல் வாழ்த்துக்கள்

**திரு.சி.சத்தியசீலன்**
பிரதேச செயலர்,
வடமராட்சி தெற்கு மேற்கு.

வடமராட்சிப் பிரதேசத்தின் கல்வி வரலாற்றில் நீண்ட பாரம்பரியத்தினைக் கொண்ட இக்கல்லூரி தனது தொண்ணூறு ஆண்டுகள் நிறைவினைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் சிறந்த பங்களிப்பினையாற்றி பல கல்விமான்களை உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கு இருக்கின்றது. இக்கல்லூரி கல்வித் துறையிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தனது திறமையினை மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் கடந்த காலங்களில் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இக்கல்லூரியானது வடமராட்சிக் கல்வி வலயத்தின் ஒரு வளநிலையமாக இருந்து செயற்பட்டு வருகின்றது என்று கூறினால் மிகையாகாது. ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் வலயரீதியான விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்ற முக்கிய செயற்பாடுகளுக்கு தனது வளங்களைப் பகிர்ந்து ஒத்துழைப்பு வழங்கிவருவது முன்னுதாரணமான செயற்பாடாகும். வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைத் தங்கவைப்பதற்கான நலன்புரி நிலையமாகவும், ஆழிப் பேரலையின்போது இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையமாகவும் செயற்பட்டு தனது சகல வளங்களையும் இந் நடவடிக்கைகளுக்காக இந்நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு பூரணமான ஒத்துழைப்புடன் செயலாற்றியமைக்கு இக்கல்லூரிச் சமூகத்திற்கு நன்றிகூறவேண்டிய கடப்பாடு உள்ளது.

இக்கல்லூரியினை கடந்த ஒரு தசாப்தகாலமாக வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் நிர்வகித்துவரும் பாடசாலை அதிபர் திரு செ.சேதுராஜா அவர்களுக்கும் மற்றும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிவரும் ஆசிரியர்கள் கல்லூரி வளர்ச்சியில் அக்கறையுடன் செயலாற்றிவரும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் இக்கல்லூரியானது சகல துறைகளிலும் பிரகாசித்து உயர்ந்த கல்விச் சாதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் நல்லொழுக்கமும் நற்பண்புகளுமுள்ள உயரிய சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



# நல் வாழ்த்துக்கள்

**திரு.இ.வரதீஸ்வரன்.**

பிரதேச செயலாளர்,

வடமராட்சி வடக்கு,

பருத்தித்துறை

கல்வியால் சிறப்புற்ற வடமராட்சியின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இன்று தனது தொண்ணூறாவது அகவையை உயர் பெருமையுடன் கொண்டாடுவதை எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இக்கல்லூரியானது அதன் உருவாக்கத்திலேயே தனித்துவமான பண்புகளையும் சிறப்பான திட்டமிடலினையும் சமூக நீதயான கல்விக் கொள்கையினையும் கொண்டமைந்ததால் இன்று கல்லூரியின் அமைப்பும் சூழலும் அழகொளிர்வதாக காட்சி தருவதுடன் தனித்துவமான இடத்தினையும் பெற்றுள்ளது.

ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை இப்பாடசாலையிலேயே கல்வி கற்றவன் என்ற வகையில் எனக்கு தனிப் பெருமையும் இக்கல்லூரியின் மீது தனி மதிப்பும் மரியாதையும் எனக்குண்டு. "வாழ்க வாழ்க வாழ்கவே ..........." என்று தொடங்கும் கீர்த்தி மிக்க இப்பாடசாலையின் கீதம் பாடப்படும் போது உடலிலுள்ள ஒவ்வொரு மயிர்களும் சிலிர்த்தெழும்.

நிகரிலாத கலையின் ஊற்றுக் குருகுல பீடமான இப்பாடசாலையின் ஆரம்ப கர்த்தாக்கள், நல்வளர்ச்சிக்காக பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பும் கல்விச் சமூகத்தினர் அனைவரும் என்றும் நினைவு கூறப்படவேண்டியவர்கள். தற்போது இக்கல்லூரியின் நிர்வாகத்தினை மிகச்சிறப்பாக ஆற்றி வரும் மதிப்பிற்குரிய அதிபர் திரு.செ.சேதுராஜா அவர்களுக்கும் பாடசாலை ஆசிரியர் குழாமுக்கும் மாணவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இக்கல்லூரி எதிர்காலத்தில் மேலும் பல பெருமைகளை பெறுவதற்கு இறைவனின் அருளையும் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.



# நெல்லிக்கனிக்கு வாழ்த்துக்கள் பல

**திரு. ந. திருலிங்கநாதன்,**
*உதவி அரசாங்க அதிபர்,*
*மருதங்கேணி.*

*வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தில் தனித்துவம் மிக்க நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தன்னுடைய கல்விச்சேவையில் 90ஆண்டுகளை பூர்த்தி செய்வதனையிட்டு வெளியிடப்படுகின்ற "நெல்லிக்கனி" என்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது பிரதேச மக்களின் கல்வி அறிவினை விருத்தி செய்வதற்காக பெரியோர்களின் முயற்சியினால் 1921ம் ஆண்டு இக்கல்லூரி உருவாக்கப்பட்டு தனது கல்விச்சேவையில் சிறப்பாக விளங்கியதன் பயனாக 1946ம்ஆண்டில் இலங்கையில் உருவாக்கப்பட்ட 54 மத்திய மகா வித்தியாலயங்களில் ஒன்றாக இக்கல்லூரியும் தரமுயர்த்தப்பட்டு தனது சேவைகளை செவ்வனே வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.*

*வடமராட்சியிலே பல பாடசாலைகள் வளர்ச்சியுற்று தமது கல்விச்சேவைகளை வழங்கி வருகின்ற போதிலும் என்னைப்போன்ற கிராமப்பாடசாலைகளிலே ஆரம்பக்கல்வியை பெற்ற மாணவர்களுக்கும் வாய்ப்புக் கொடுத்து அவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு விடுதி வசதிகளையும் ஏற்படுத்தி எந்தப்பிரதேசத்து மாணவர்களும் கல்விப்பசியினைத் தீர்ப்பதற்கு வழிகோலியது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் என்றால் அது மிகையாகாது.*

*இப்பாடசாலையில் எண்பதுகளின் நடுப்பகுதியில் கல்வி கற்றவன் என்ற வகையில் இப்பாடசாலை ஆசிரியர்களது கல்விப்பணியினையும் வழிகாட்டுதலையும் பழைய மாணவர் சங்கத்தின் சிறப்பான சேவைகளையும் நேரடியாக உணரும் வாய்ப்பு எனக்கு கிட்டியிருந்தது. குறிப்பாக விடுதியில் தங்கி கல்வி கற்கும் மாணவர்களது பொருளாதார நிலைகளைக் கருத்திலெடுத்து அவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கியமையால் பல மாணவர்கள் உயர்நிலைக்கு வருவதற்கு வாய்ப்பு கிட்டியது.*

*தற்பொழுதும் இக்கல்லூரியின் துறைவாரியான பெறுபேறுகளையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் பத்திரிகைகள் வாயிலாக அறியும் போது இப்பாடசாலை தனது பணியை வைத்தகாலைப் பின் வையாது செவ்வனே ஆற்றி வருவதனை அறியக்கூடியதாக உள்ளதோடு மகிழ்ச்சியாகவும் உள்ளது. இவ்வாறான சிறப்புமிக்க இக்கல்லூரித்தாய் தனது கல்விச்சேவையில் 90ஆண்டுகளை பூர்த்தி செய்யும் இச்சந்தர்ப்பத்தில் "நெல்லிக்கனி" என்னும் இச்சிறப்பு மலரினை வெளியீடு செய்வதற்கு காரணகர்த்தாக்களாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோருக்கு அவர்கள் தம்பணியிலே மென்மேலும் சிறக்க, எவ்வித தடைகளும் இன்றி எல்லா வளங்களும் கிடைக்க இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.*



## முன்னைநாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

**திரு.சிவராஜா**

ஒய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் உலகளாவிய நன்நெறிக் கல்வி நோக்கிற்கு அமைவாக தாபிக்கப்பட்டு இன்று தொண்ணூறு ஆண்டுகளைக் கடந்து கல்விச் சேவையால் நிறைவுற்றிருக்கும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு இலங்கையின் கல்வி வரலாற்றில் தனியிடம் உண்டு. கிராமத்து ஏழைச் சிறார்களுக்கு கல்வியில் சமசந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயங்களில் வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்த இக்கல்லூரியானது ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் வறிய மாணவர்களின் திறன் வளர்க்கும் கலைக்கூடமாகத் திகழ்ந்தது. நாட்டின் சகல பாகங்களிலிருந்து மாணவர்கள் இங்கு அனுமதிபெற்று கல்வி பயின்று பல உயர் பதவிகளிலும் வாழ்க்கை நிலையிலும் இருந்து வருக்கினறனர். இடைக்காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களால் நலிவுற்ற இக்கலைக்கோவில் இன்று மீண்டும் உத்வேகத்துடன் வளர்ந்து நிமிர்ந்து நிற்பதனையிட்டு இக்கல்விப் புலத்தில் கருமமாற்றியவன், வசிப்பவன் என்ற வகையில் பேருவகையடைகின்றேன். இக்கல்லூரியின் தொண்ணூறாவது நிறைவாண்டினை அபிவிருத்தியைத் துரிதப்படுத்தி மேம்படுத்தும் நோக்கில் ஒரு விழிப்புணர்வு ஆண்டாகக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் பெருமையடைகின்றேன். எதிர்வரும் காலங்களில் இக்கல்லூரியில் பணிக்கூற்றுக்கேற்றாற்போல் சர்வதேச தரம்நாடி வளர்ந்து வளம்பெற வாழ்த்துகின்றேன்.



# நல் வாழ்த்துக்கள்

**செல்வி ச.பெரியதம்பி**

*முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளர்.*

*வடமராட்சியில் வளமும் வனப்பும் மிகுந்து விளங்கும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 வது ஆண்டு சிறப்பு மலராக மலரும் நெல்லிக் கனிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.*

*1921 ம் ஆண்டு வடமராட்சியின் மையப்பகுதியில் மாதிரி அரச பாடசாலையாக நிறுவப்பட்டு 1946 ம் ஆண்டு மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டு யாழ் மாவட்டத்தில் அமையப் பெற்ற நான்கு மத்திய மகா வித்தியாலயலயங்களில் சிறப்புமிக்கதாக விளங்கி யாழ் மாணவர்களை மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வருகை தந்த மாணவர்களை அரவணைத்து வினைத்திறன் மிக்க அதிபர்களின் வழிகாட்டலில் ஏற்பும் மிக்க வித்தியாலயமாகத் திகழ்ந்து திறன் மிக்க சமுதாய சிற்பிகளை உருவாக்கிய பெருமை இவ் வித்தியாலயத்திற்கு உண்டு.*

*1987ம் ஆண்டு தனது வளங்களின் பெரும் பகுதியை இழந்த போதும் மீள் எழுச்சி பெற்று வளம் பெருக்கி அபிவிருத்திப் பாதையில் வீறு நடைபோடுகின்றது. தற்போதைய அதிபர் திரு.எஸ்.சேதுராஜா அவர்களின் அயராத உழைப்பினாலும் ஆசிரியர்களின் சிறந்த சேவையினாலும் அபிவிருத்திப் பாதையில் பல ஏற்றங்களைக் கண்டு வரும் இவ்வித்தியாலயம் பல நூற்றாண்டுகள் நிலைத்து நின்று தனது சமூகப் பணியைத் தொடர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.*



# நல் வாழ்த்துக்கள்


**திரு.சி.நற்குணலிங்கம்,**
கோட்டக் கல்வி அதிகாரி,
கரவெட்டி.

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் அறிவொளி பரப்பிக் கொண்டிருக்கும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தொண்ணூறாம் ஆண்டை எட்டிப்பிடித்து எடுப்பாக உயர்ந்து நிற்கின்றது. அதற்கு அதிபர், ஆசிரியர்களின் ஆற்றல் மிக்க செயற்பாடுகள்தான் காரணமாக அமைகின்றதெனின் மிகையாகாது. அத்தோடு மாணவர்களின் சீரிய செயலாற்றலும், பழைய மாணவர்களின் பங்களிப்பும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் ஒய்யார வளர்ச்சிக்கு உரமூட்டியுள்ளன.

1921 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பேரறிஞர்களையும், அதிகாரிகளையும் கல்விமான்களையும் சாதனையாளர்களையும் பல்துறையிலும் பாண்டித்தியம் பெற்றவர்களையும் பிரசவித்துள்ளது.

எமது வித்தியாலயம் ஆற்றிய சேவைகள், புரிந்த சாதனைகள், பெரும் முயற்சி செய்து பெற்ற பெறுபேறுகள் பாடசாலையின் வளர்ச்சி, பயன்பாடுகள் ஆகியவற்றை வெளிக்கொணர்வதற்கு ஏற்ற சாதனமாக விளங்குவது இத்தகைய மலர் ஒன்றே.

தொண்ணூறு ஆண்டு காலப்பகுதிக்குள் காத்திரமான கல்விப் பணியினை ஆற்றி- கலங்கரை விளக்காயிருந்து வைத்த காலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேற வழிகாட்டி நிற்கும் இப்பாடசாலை இன்னும் பல வளர்ச்சிப் படிகளையும் வெற்றிகளையும் கண்டு வளமாக வளர்ந்தோங்க வாழ்த்துவதில் இப் பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.



# பக்தி கலந்த வாழ்த்துக்கள்

சி.அம்பிகாவரன்
(முன்னாள் ஆசிரியர், போசகர்)
கனடாக்கிளை பழைய மாணவர் சங்கம் சார்பாக


எமது கல்லூரி எம் 'இன்ப வாழ்வு பூக்கும் வண்ணம் இனிய கலை விஞ்ஞானம்' தொழில்நுட்பக் கல்வியைக் கடந்த தொண்ணூறு ஆண்டுகளாக எமக்குத் தந்து வந்திருக்கிறது. மேலும் என்றும், எங்கும் உண்மை காணும் பேறு கொள் மெஞ்ஞானத்தைப் புரிய வைக்கும் உணர்வுகளை ஆற்றுப்படுத்திக் கொண்டிக்கிறது. அதன் விளைவாக வடமராட்சியின் மையப்புள்ளியில் ஆரம்பித்த மாதிரிப் பள்ளி, மத்திய மகா வித்தியாலமாக வளர்ந்து, இலங்கையின் ஏனைய பாகங்களிலுமிருந்து வந்த கல்வித்தகமை பெற்ற, வசதியற்ற ஆண், பெண் பிள்ளைகள் அவர்களுக்கான விடுதிகளில் தங்கியிருந்து படிக்கக் கூடிய வசதிகளுள்ள பாடசாலையாக அமைந்து, பன்முக ஆளுமை மிக்க அதிபர் திரு.சேதுராஜா அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் வெகு விரைவில் தேசியப் பாடசாலையாக மிளிரப் போகின்றது என்பதைக் கேள்வியுறும் போது கல்லூரியின் கனடா வாழ் முன்னாள் ஆசிரியர்கள், மூத்த மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகிய எமது உள்ளங்கள் பூரிக்கின்றன.

எமது கல்லூரியின் கடந்த கால வரலாற்றில், கடினமான சோதனைகள் நிகழ்வுகள் ஏற்பட்ட போதும், கல்லூரியின் முகாமைத்துவம் சோர்வடையாமல் தொழிற்பட்டதால் எமது கலைக் கோவிலானது தேசிய ரீதியாகப் பல்லாயிரம் மாணவர்களை 'விண் முகட்டில் பாய வைக்கும் விந்தை அறிவு நிலையாகத்' துலங்கியிருக்கிறது, மேலும் பல்லாண்டுகள் பல்லாயிரம் மைல்கள் கடந்து வந்த போதும் பல்லினப் பண்பாடுகள் ஊடுருவல்களும் செல்வாக்குகளும் எம்மிற் கணிசமானோரை ஆட் கொண்டு விட்ட போதிலும் தாய் மண்ணை நேசிக்கும் நாம் ஆங்கமைந்த கலாலயத்தைப் பூசிக்கும் நாம், பணிவும், பக்தியும் நிறைந்த நன்றி அறிதலோடு அவற்றை நினைவு கூர்ந்து மென்மேலும் எமது மாணவர்களின் 'அறிவு ஒளிர சால்பு சிறக்க' உளமார வாழ்த்துகிறோம்.

பிரித்தானியா, கனடா போன்று மற்றும் பல நாடுகளிலுள்ள எமது கல்லூரியின் மூத்த மாணவர்கள் சங்கம் அமைக்க முன்வர வேண்டும் அல்லது எம்முடன் இணைய வேண்டும் என்றும், நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து எமது கல்லூரிக்கான சர்வதேச சங்கம் அமைக்க முன்வர வேண்டும் என்றும் அதற்கான ஆரம்ப முயற்சிகளைத் தாய்ச் சங்கம் மேற் கொள்ள வேண்டும் என்றும் கோருகின்றோம். அத்துடன் தாயகபுலம்பெயர் பிரதேசங்களிலுள்ள இளைஞரிடையேயும் தொடர்புகள், அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் இல்லையெனில் காலப்போக்கில் பழைய மாணவர் சங்கங்கள் 'இயற்கை மரணம்' எய்தும் நிலை உருவாகலாம்.

கனடாக் கிளையினராகிய நாமும் கடந்த பல வருடங்களாக தாய்ச்சங்கமும் அதிபரும் அவ்வப்போது விடுத்த கோரிக்கைகளைப் பூர்த்தியாக்கி வருகின்றோம்.மேலும் எமது பணி தொடரும் என உறுதியளிக்கின்றோம்.

யாழ் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 90 வது ஆண்டு விழா சிறப்பாக மலர வேண்டும், தொடர்ந்து 100 வது ஆண்டு விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட வேண்டும். கல்லூரியின் பல்துறைச்சேவைகள் மேலும் பரிணமிக்க வேண்டும் என்று' அத்தனை கருணை வெள்ளம் மூழ்கி அமர கீதம் பாடுவோம்.



# அறிவொளிமுதலே வாழ்க!

**திரு.து.வாசுதேவன்**
*கல்லூரிக்கான இணைப்பாளர்,*
*பழைய மாணவர் சங்கம்,*
*லண்டன்.*

ஒன்பது தசாப்தங்களாக எம் சமூகத்திற்கு அறிவொளியூட்டும் ஒளிமுதலாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் நம் கல்லூரித்தாய் எமக்களித்த அறிவுசார்ந்த மற்றும் அனுபவக் கல்வியினை எம் வாழ்வில் என்றும் மறக்க இயலாது. ஒரு பாடசாலைக்கு இருக்க வேண்டிய அனைத்து அம்சங்களும் நிறைந்திருந்த கல்லூரியாக எண்பதுகளின் இறுதிவரை எமது கல்லூரி திகழ்ந்துகொண்டிருந்தது. அச்சிறப்புக் காலத்தின் பயன்களை முழுமையாக அனுபவிக்கும் பேற்றினைப் பெற்றிருந்தவன் என்ற வகையில் அன்றைய நினைவுகள் என்முன் நிழலாடுகின்றன. நாட்டின் பல இடங்களிலிருந்தும் வருகைதந்து விடுதிகளிலும் அயற்பிரதேசங்களிலும் தங்கி கல்விகற்ற மாணவர்கள், அழகான பிரமாண்டமான முகப்புக் கட்டடம், சகல வளங்களும் நிறைந்த ஆய்வுகூடங்கள், தரமான நூலகம், வளம்நிறைந்த தொழினுட்பத் தொகுதி, மணிமண்டபம், கால்நடைகளோடு கூடிய விவசாயப் பண்ணை, உயிரியல் வாயுத் தொகுதி, நன்நீர் மீன் வளர்ப்பு நிலை என தன்னிறைவு கொண்ட பாடசாலையாக அன்று மிளர்ந்தது. பிற்காலத்தின் சூழ்நிலைகளால் கல்லூரிக்கு ஏற்பட்ட பௌதிக மற்றும் மாணவ ஆளணி வளரீதியான பாதகநிலை கல்லூரியின்பால் பற்றுக்கொண்ட அனைவரின் உள்ளங்களையும் நெகிழச்செய்திருந்தன.

எவ்வாறாயினும் கல்லூரியின் இன்றைய வளர்ச்சி நிலை எம்மைப் பிரமிப்பிலாழ்த்தி புளகாங்கிதமடையச் செய்கின்றது. மாணவர் கல்வி அடைவுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், மாணவர் ஒழுக்கம், பௌதிகவள விருத்தி என நம் கல்லூரியின் சமகாலநிலைமை அனைவராலும் விதந்து பாராட்டப்படும்வகையில் சிறப்புற்றுள்ளன. கல்லூரியின் அதிபர் அவர்களது சீரிய முகாமையாலும் ஆசிரியர்கள், பணியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையாலும் எமது பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோரின் விழிப்புணர்வாலும் இச்சிறப்புநிலை தோன்றியதெனின் அது மிகையாகாது.

தொண்ணூறாவது ஆண்டு நிறைவு விழாக்காணும் இன்றைய நிலையில், கல்லூரியின் அபிவிருத்திக்கு எக்காலத்திலும் தோளோடு தோள்நின்று உழைப்போம் என உறுதிகூறுவதுடன் கல்லூரியின், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்களுக்கு எமது லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களையும் தெரிவித்து, விழா சிறப்புறவும் "நெல்லிக்கனி" சிறப்புமலர் அழகுற வெளிவரவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.



## நெல்லிக்கனிக்கு வாழ்த்துக்கள் பல

**திரு.சி.யோகலிங்கம்,**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தனது தொண்ணூறாவது ஆண்டு விழாவினை மிகவும் சிறப்பாக கொண்டாடும் இந் நேரத்தில் கல்லூரியில் கனிந்த இரண்டாவது கனியாம் "நெல்லிக்கனி" அதிபர் செ.சேதுராஜா அவர்களின் வழிகாட்டலிலும் அவரோடு இணைந்த கல்விச் சமூகத்தின் துணையோடும் கனிந்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இந்தக் கனியில் பல்தரப்பட்ட பல்வேறு ஆக்கங்களை தன்னகத்தே தாங்கி வருவது கனிக்கு மேலும் மெருகூட்டுவதாக அமையும் என்றால் அது மிகையாகாது. எமது கல்லூரி பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து நாட்டில் பல்வேறு துறை சார்ந்த பெருந்தகைகளை உருவாக்கியுள்ளமை பெருமைக்குரியதே.

மென்மேலும் வித்தியாலயம் பல்வேறு துறைகளிலும் கால்த்தடம் பதித்து சமூகத்தில் சிறப்புற விளங்கி வீறுநடையுடன் பல்லாண்டு காலம் தனது சேவையை தொடர்வதற்கு எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகிட்டும் என்பதில் ஐயமில்லை.

இன்று இந்த வித்தியாலயத்தில் கனிந்த இந்த "நெல்லிக்கனி" போன்ற பல கனிகள் கனிவதற்கு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு நாமும் சேர்ந்து உழைப்போம். வளமான வாழ்விற்கு வழிகாட்டும் கல்லூரிக்கும் இந்நாளில் வெளிவரும் "நெல்லிக்கனி"க்கும் என்து மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி



## பாடசாலை அபிவிருத்திக் குழுச்செயலாளரின் வாழ்த்துக்கள்

**திரு.ஆ.ஜெயக்குமார்**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திக்குழு

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பிரதேசத்தில் தற்போது சகல துறைகளிலும் எழுச்சி பெற்று வளர்ச்சியடைந்து வரும் இக் கல்லூரியின் 90வது ஆண்டு நிறைவு விழாவின் நெல்லிக்கனி சிறப்புமலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் என்ற ரீதியில் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்.பாடசாலை சமூகத்தை உரிய வகையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் அரிதான பல இலக்குகளையும் அடைந்து கொள்ளலாம் என்பதற்கு இக் கல்லூரியின் இன்றைய நிலையும் அதிபர் ஆசிரியர்கள் பணியாளர்களின் செயற்பாடுகளும் சிறந்த உதாரணமாகும். அபிவிருத்தி சார்ந்த எவ் விடயத்தையும் நேரான மனப்பாங்குடன் ஏற்று ஒன்றுகூடி பணியாற்றி வெற்றி பெறும் இப் பாடசாலையின் முகாமைத்துவக்குழுவோடு சேர்ந்தியங்கும் வாய்ப்பு கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இக் கல்லூரியானது கல்வி அடைவுகள் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மாணவர் நலன் நோன்பு நடவடிக்கைகள் ,மாணவர் ஒழுக்கம், கட்டுமான மேம்பாடு ,சுற்றுப்புற மேம்பாடு முதலான அனைத்து விடயங்களிலும் சிறப்பான முன்னேற்றம் கண்டு இலங்கையின் கல்விப் புலத்தில் ஏனையவர்களால் மதிக்கத்தக்க வகையில் ஒரு நிலையை அடைந்திருப்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்ளர். இதற்கு உழைத்த அதிபர் உட்பட்ட ஆளணியினரையும் கல்விப் புலம்சார் அலுவலகர்களையும் பழைய மாணவர் சங்கம் வெளிநாடுகளில் வதியும் பழைய மாணவர்கள் ,பெற்றோர் ,பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அனைவரையும் பாராட்டி இக் கல்லூரியானது மேன்மேலும் மேன்மையுற வாழ்த்துகின்றேன்.



## கல்லூரி முதல்வரின் உள்ளத்திலிருந்து ....

எழு பிறப்பிலும் ஏமாப்புடைத்தான கல்வியைப் பெறுவதற்கு இப்பிறப்பில் எத்தகைய தியாகத்தையும் செய்யலாம் என்பது கற்றோரதும் ஞானியரதும் கருத்தாகும். கல்விப்பணியென்பது தெய்வப் பணியாகக் கொள்ளப்படும். கல்வியை இடையீடின்றி வழங்குவதற்கும் பெறுவதற்குமான ஏற்பாட்டுக் களங்களே பாடசாலைகளாகும். உலகெங்கிலும் பரந்து சிறக்கும் ஞானவிளக்குகளை ஏற்றி உலகுக்கு உவந்தளிக்கும் ஆலயங்களாக பாடசாலைகள் அமைகின்றன. மாணவர்களை எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுத்து சொந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் வெற்றிபெறச் செய்யும் பயிற்சிக் களங்களாகப் பாடசாலைகள் திகழவேண்டும் என்பதால் அவை வினைத்திறனும் விளைதிறனும் உடையனவாக மாற்றப்படவேண்டும். யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இந்த நோக்கில் இயங்கி வருவதனையும் இக்கல்லூரியின் முகாமைத்துவக்குழுவினர், ஆசிரியர்கள், பணியாளர்கள், எனது அன்புக்குரிய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இயங்கி வரும் பழைய மாணவர் சங்கத்தினர், நலன் விரும்பிகள் யாவரும் என்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்து வருவதனால் கல்விசார் இலக்குகள் பலவற்றை குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவிற்கு அடையமுடிந்துள்ளது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் பாடவிதானம், இணைப்பாடவிதானம், பௌதிக வளம், தொழினுட்ப வளம் முதலான அனைத்துத் துறைகளிலும் கல்லூரி பெற்றுள்ள வளர்ச்சிக்கும் கீர்த்திநாம உயர்ச்சிக்கும் எனக்கு உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்ற பாடசாலைச் சமூகமும் அநுசரணையாகவுள்ள கல்வி நிர்வாகத்தினருமே காரணகர்த்தாக்கள். இக்கல்லூரி ஆரம்பித்து அகவை தொண்ணூறை நிறைவு செய்கின்றவேளை இது தன்து கடந்தகால இழப்புக்களை ஈடுசெய்து மீண்டெழுந்துவரும் காலத்தில் கல்லூரியின் முழுமையான இலக்குகளை அடைந்துகொள்வதற்கான ஒரு உத்தியாகவும் கல்லூரிச் சமூகத்தினரிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேவை நோக்கிலும் எனது ஆலோசனையுடன் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன ஒன்றிணைந்து தொண்ணூறாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளன. இச்செயற்பாடுகள் எதிர்பார்த்த வெற்றியை அளித்துள்ளமை மிக்க மகிழ்ச்சியளிக்கின்றது. திட்டமிடப்பட்ட பௌதிகவள மேம்பாடுகள் பெரும்பாலும் நிறைவுசெய்யப்பட்டுள்ளமை இதற்கோர் உயர்பண்புக்குறியாகும். இவ்வாறான கடந்தகால, நிகழ்காலச் சிறப்புக்களையும் இழப்புக்களையும் ஆவணப்படுத்தவும் ஆக்கங்களை வெளிப்படுத்தவும் எமது கல்லூரியின் நெல்லிக்கனி மலர் இரண்டாவது கனியாகவும் சிறப்பு வெளியீடாகவும் வெளிவருகின்றது. இதன் நோக்கங்கள் வெற்றிபெற இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

# தொண்ணூறாவது ஆண்டு விழாக்குழுவினர்

**ஆலோசகர்கள் :**

| | |
|---|---|
| திரு.இ.ஜயாத்துரை | (தலைவர், பழைய மாணவர் சங்கம்) |
| திரு.வை.செல்வராஜா | (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி) |
| திரு.சி.சத்தியசீலன் | (பிரதேச செயலர், கரவெட்டி) |

**ஏற்பாட்டுக்குழுவினர் :**

| | |
|---|---|
| திரு.செ.சேதுராஜா | (அதிபர்) |
| திரு.க.கிருஷ்ணகுமார் | (பிரதி அதிபர்) |
| திரு.அ.அரியரத்தினம் | (பிரதி அதிபர்) |
| திருமதி.இ.சிவராஜா | (பகுதித் தலைவர்) |
| திருமதி.ம.நற்குணலிங்கம் | (பகுதித் தலைவர்) |
| திரு.ச.சரவணபவன் | (பகுதித் தலைவர்) |
| திரு.ச.உருத்திரகுமார் | (பகுதித் தலைவர்) |
| திரு.இ.குகதாசன் | (சிரேஷ்ட ஆசிரியர்) |
| திரு.வீ.சுதர்சன் | (ஆசிரியர், செயலாளர் - பழைய மாணவர் சங்கம்) |
| திருமதி.க.விக்னராஜா | (ஆசிரியர்) |
| திரு.செ.ஞானச்செல்வன் | (ஆசிரியர்) |
| திரு.வே.வீரபத்திரபிள்ளை | (உபதலைவர் - பழைய மாணவர் சங்கம்) |
| திரு.த.சுந்தரபாரதி | (பழைய மாணவர் சங்கம்) |
| திரு.க.சிறீஸ்குமார் | (பொருளாளர் - பழைய மாணவர் சங்கம்) |
| திரு.ச.பிரேம்குமார் | (பழைய மாணவர் சங்கம்) |
| திரு.தெ.சுகந்தன் | (பழைய மாணவர் சங்கம்) |
| திரு.து.வாசுதேவன் | (பழைய மாணவர் சங்கம் - லண்டன்) |
| திரு.சி.அம்பிகாவரன் | (பழைய மாணவர் சங்கம் - கனடா) |
| திரு.ச.ராஜக்கோன் | (பழைய மாணவர் - அவுஸ்திரேலியா) |
| திரு.சி.யோகலிங்கம் | (செயலாளர்-பாடசாலை அபிவிருத்திச் சங்கம்) |
| திரு.மு.சுந்தரலிங்கம் | (பாடசாலை அபிவிருத்திச் சங்கம்) |
| திரு.ஆ.ஜெயக்குமார் | (பாடசாலை அபிவிருத்திக் குழு) |
| திரு. செல்வேள் | (பாடசாலை அபிவிருத்திச் சங்கம்) |
| திரு.சி.தங்கராஜா | (பாடசாலை அபிவிருத்திச் சங்கம்) |
| திரு.சி.சிற்றம்பலம் | (முன்னாள் அதிபர்) |
| திருமதி.ம.மகேந்திரா | (முன்னாள் பிரதி அதிபர்) |

# உள்ளம் கனியும் நெல்லிக்கனி


மனிதர்களைப் புனிதர்களாக்குகின்ற சக்தி கல்விக்கே உரியதாகும். கல்வியின் வரலாறு என்பது கல்விச் சாலைகளின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாகும். இவ்வகையில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு கனதியான ஒரு கல்விப் பாரம்பரியமும் வரலாற்றுச் சிறப்பும் உள்ளது. இக்கல்லூரி ஆரம்பித்து இன்று தொண்ணூறு ஆண்டுகளை நிறைவுசெய்து, எழுச்சிபெற்று வருகின்ற இத்தருணத்தில் கல்லூரித் தாயின் மைந்தர்களும் கல்லூரிச் சமூகமும் இதன் வரலாற்றினையும் வளர்ச்சியினையும் ஆவணமாக்கி எதிர்காலக் கல்விச் சமூகத்திற்கு அளிக்கின்ற நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற தொண்ணூறாவது ஆண்டு நிறைவு விழிப்பணர்வுச் செயற்பாடுகளும் “நெல்லிக்கனி” சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறுகின்றன. இவ்வேலைத்திட்டங்கள் மிகுந்த மனிதவலு, நிதிமூலம், காலம் என்பவற்றைக் கொண்டதாக அமைதல் இயற்கையே. கல்லூரியால் முன்னர் வெளியிடப்பட்ட நெல்லிக்கனி மலரினையும் புலம்பெயர் உறவுகள் வாழும் பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளில் இயங்கும் பழைய மாணவர் சங்கக் கிளைகளினால் வருடாந்தம் வெளியிடப்படும் “நெல்லி மலர்”, “நெல்லைத் தீபம்” ஆகிய மலர்களையும் அடிப்படையாகக் கொண்டும் ஏனைய விடயங்களை இற்றைப்படுத்தியும் இக்கல்லூரியின் தொண்ணூறாவது ஆண்டு “நெல்லிக்கனி” சிறப்பு மலர் வெளிவருகின்றது. அத்துடன் கல்லூரியின் வரலாற்றுக் குறிப்புக்களுக்கு இணையாக தொண்ணூறாம் ஆண்டு நிறைவுவிழா தொடர்பான குறிப்பறிக்கைகளும் தொகுப்பறிக்கைகளும் விசேட கட்டுரைகளும் மாணவர் ஆக்கங்களும் இம்மலரிலே தெரிந்து பதியப்பட்டுள்ளன.

இம்மலர் வெளியீட்டுக்கான செயற்பாடுகளுக்கும் தொண்ணூறாவது ஆண்டு நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளுக்கும் நல்லுள்ளம் படைத்த பல கனவான்களும் தனவான்களும் உதவி புரிந்துள்ளனர். இம்மலர் வெளியீட்டுக்கு ஆரம்ப அடிப்படையாக அமைந்த தொண்ணூறாம் ஆண்டு நிறைவு விழா விளையாட்டு மற்றும் ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்களுக்கும் வெற்றிக் கிண்ணங்களுக்கும் ஏற்பாட்டுச் செலவுகளுக்கும் நெல்லியடி செல்லமுத்தூஸ் நிறுவனப் பணிப்பாளர் திரு.சண்முகசுந்தரம் பிறேம்குமார், யாழ்ப்பாணம் E.S.P. மற்றும் கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளர் திரு.E.S.P. நாகரட்ணம், நெல்லியடி கிளினிக் பணிப்பாளர் Dr.வே.கமலநாதன், நெல்லியடி கணேசா ஹட்வெயார் உரிமையாளர் திரு.நா.தெய்வேந்திரம், நெல்லியடி ESOFT நிறுவனத்தார், நெல்லியடி சிதம்பரப்பிள்ளை உரிமையாளர் திரு.சிதம்பரப்பிள்ளை சிவம், நெல்லியடி ஜமுனா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு.M.இராஜகோபால், நெல்லியடி தொழிலதிபர் திரு.ந.பாஸ்கரன் ஆகியோர் அனுசரணை வழங்கியமை எமக்குப் பேருதவியாக அமைந்தது. அத்துடன் வேண்டிய நிதியுதவிகளையும் பொருளுதவிகளையும் ஆதரவினையும் வழங்கிய ஏனைய வர்த்தகர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெல்லிக்கனி மலரினைத் தயாரிப்பதற்கும் வெளியிடுவதற்கும் ஆக்கங்களைத் தந்துதவியோர் அச்சுப் பதிக்க உதவிய நெல்லியடி “லக்ஷ்மி ஓஃப்செற்” பதிப்பகத்தார் மற்றும் ஏனைய வழிகளில் மலர் வெளியீட்டுக்கான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இம்மலரின் முதற்பிரதியினைப் பெறுகின்ற கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையின் போஷகர் திரு.சி.அம்பிகாவரன், சிறப்புப் பிரதிகளைப் பெறவுள்ள கனடா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு.க.குலராஜேந்திரம், லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் திரு.வை.ஸ்ரீதரன் அவர்களுக்கும் இம்மலரினைப் பெறவுள்ள ஆர்வலர்களுக்கும் பெற்றோருக்கும் நெல்லிக்கனி தனது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்தக் கொள்கின்றது. இம்மலரினை விரைந்து வடிவமைத்த எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.வீ.சுதர்சன், அதற்குதவிய அதிபர், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரையும் நெல்லிக்கனி உள்ளங்கனிந்து நோக்குகின்றது.

- நெல்லிக்கனிச் சமூகம்

J/NELLIADY MADHYA MAHA VIDYALAYAM



# ஆண்டுகள் 90 கடந்து
# மக்கள் கல்லூரியாக மிளிரும்
# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

# எமது கல்லூரி முதல்வர்




**திரு.செல்லத்துரை சேதுராஜா அவர்கள்**

*SLPS - I , B.A.,Dip.in.Ed., PGDEM, MSc.(Ed.Mgt), M.Phil.(Ed.)*

# பிரதி முதல்வர் (நிர்வாகம்)



திரு.கணேசரத்தினம் கிருஷ்ணகுமார் அவர்கள்

*SLPS - 2 , B.A.,Dip.in.Ed., PGDE, M.Ed.*

# பிரதி முதல்வர் (கல்வி அபிவிருத்தி)



திரு.அம்பலவி அரியரத்தினம் அவர்கள்

*SLTS - 1, B.A.(Hons), PGDE.*

# எமது கல்லூரியின் ஆசிரியர்கள் - 2011



**அமர்ந்திருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

திருமதி.சூ.சிறீபவன், திருமதி.இ.அருளானந்தன், திருமதி.இ.குலவரதராஜா, திருமதி.க.விக்னராஜா, திருமதி.ம.நற்குணலிங்கம்(பகுதித் தலைவர்), திருமதி.இ.சிவராஜா (பகுதித் தலைவர்), திரு.அ.அரியரட்ணம் (பிரதி முதல்வர்), திரு.செ.சேதுராஜா (முதல்வர்), திரு.க.கிருஷ்ணகுமார் (பிரதி முதல்வர்), திரு.ச.சரவணபவன் (பகுதித் தலைவர்), திரு.க.பரம்சோதி, திரு.ச.உருத்திரகுமார் (பகுதித் தலைவர்), திரு.இ.குகதாசன், திரு.த.பாலகுமார், திரு. வி.மரியதாஸ்

**நிற்பவர்கள்** (நடுவரிசை - இடமிருந்து வலமாக)

திருமதி.ற.நகுலன், திருமதி.வ.சுதாஸ், திருமதி.ம.கண்ணதாசன், திருமதி.பி.இராஜசேகரன், செல்வி.க.யோகாம்பிகை, செல்வி.ச.வசந்தி, திருமதி.ம.விக்னேஸ்வரன், திருமதி.கீ.ரவிக்குமார், திருமதி.ச.இராஜேந்திரன், திருமதி.தி.தவனேசன், திருமதி.தே.துஸ்யந்தன், திருமதி.சா.சிறீஸ்குமார், திருமதி.சௌ.பத்மகுமாரன், திருமதி.ற.சுகந்தன், திருமதி.வ.புஸ்பராஜா, செல்வி. வ. யோகேஸ்வரி, செல்வி. ஸ். ராஜினி, செல்வி. த. சரண்யா, செல்வி. செ. பிரார்த்தனா, செல்வி.க.தயா

**நிற்பவர்கள்** (பின்வரிசை - இடமிருந்து வலமாக)

திரு.க. உதயசீலன், திரு.பொ.வரதராஜா, திரு.பொ.செல்வகுமார், திரு.சி.மதுசூதனன், திரு.இ.சுகேந்திரன், திரு.க.குணசுந்தர், திரு.செ.ஞானச்செல்வன், திரு.வீ.சுதர்சன், திரு. வாசுதேவன், திரு.ச. உதயநாதன், திரு.வே.நாகராஜா, திரு.கு.அம்பிகைபாகன், திரு.கா.சிவனேசன், திரு.சீ.அமரஜோதி, திரு.ப.கேசவன், திரு.நா.பிரபாகரன்

# மாணவர் தலைவர்கள் - 2011



**அமர்ந்திருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

**திருமதி.ம.நற்குணலிங்கம்** (பகுதித் தலைவர்), **திருமதி.இ.சிவராஜா** (பகுதித் தலைவர்), **திரு.க.கிருஷ்ணகுமார்** (பிரதி முதல்வர்), **செல்வி.நே.ஆதித்தியா** (சிரேஷ்ட மாணவர் தலைவி), **திரு.செ.சேதுராஜா** (முதல்வர்), **செல்வன்.மு.அபிராம்** (சிரேஷ்ட மாணவர் தலைவன்), **திரு.அ.அரியரட்ணம்** (பிரதி முதல்வர்) , **திரு.ச.சரவணபவன்** (பகுதித் தலைவர்), **திரு.ச.உருத்திரகுமார்** (பகுதித் தலைவர்), **திரு.வீ.சுதர்சன்** (மாணவர் ஒழுங்கு)

**நிற்பவர்கள்** (நடுவரிசை - இடமிருந்து வலமாக)

**செல்வி.கு.பர்மினா, செல்வி.வி.பிரியா, செல்வி.செ.மயூரா, செல்வி.பா.லக்சிப்பிரியா, செல்வி.ஞா.பிரவீனா, செல்வி.கோ.கோசலா, செல்வி.ம.நேசநிரஞ்சினி, செல்வி.வி.கலைவாணி, செல்வி. க. வானுஜா, செல்வி. செ. ஞானகௌரி, செல்வி.அ.உஷாந்தினி, செல்வி.ஸ்ரீ.சாகிர்த்தியா, செல்வி.செ.செஞ்சிகா, செல்வி.கை.வினோதா, செல்வி.பா.பிரியதர்சினி,**

**நிற்பவர்கள்** (பின்வரிசை - இடமிருந்து வலமாக)

**செல்வன்.யோ.ஜிவாகன், செல்வன்.நே.அங்கதன், செல்வன்.க.பிருந்தாபன், செல்வன்.வி.சிந்துஜன், செல்வன்.ஜெ.குகப்பிரசாந், செல்வன்.ந.சிந்துஜன், செலவன்.வி.முகுந்தன், செல்வன்.ச.சுஜீவன், செல்வன்.சி.சுகந்தன், செல்வன்.கி.பிரணவன், செல்வன்.சி.அருண்குமார், செல்வன்.இ.பிரசாத், செல்வன்.த.யசீந்திரன், செல்வன்.பு.கிருஷ்ணானந்தன், செல்வன்.க.தர்ஷ்நாத், செல்வன்.சி.பிரகாஷ், செல்வன்.அ.மோகன்லால், செல்வன்.க.நிரோசன், செல்வன்.ப.ஹரிரிதர்ஷன், செல்வன்.க.அருண், செல்வன்.ந.டினாளன், செல்வன்.சி.துவாரகன், செல்வன்.ஞா.சர்மிலன்,**

# பகுதித் தலைவர்கள்



# முகாமைத்துவக் குழு



**அமர்ந்திருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

**திருமதி.ம.நற்குணலிங்கம்** (பகுதித் தலைவர்), **திருமதி.இ.சிவராஜா** (பகுதித் தலைவர்), **திரு.அ.அரியரட்ணம்** (பிரதி முதல்வர்), **திரு.செ.சேதுராஜா** (முதல்வர்), **திரு.க.கிருஷ்ணகுமார்**(பிரதி முதல்வர்), **திரு.ச.சரவணபவன்** (பகுதித் தலைவர்) **திரு.த.பாலகுமார்**

**நிற்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

**திருமதி.ம.விக்னேஸ்வரன், செல்வி.க.யோகாம்பிகை, திருமதி.சா.சிறிஸ்குமார், திரு.வீ.சுதர்சன், திரு.ச.உருத்திரகுமார்** (பகுதித் தலைவர்), **திரு.இ.குகதாசன்**

## விளையாட்டுக் குழு



**அமர்ந்திருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

**திருமதி.ம.நற்குணலிங்கம்** (பகுதித் தலைவர்), **திருமதி.இ.சிவராஜா** (பகுதித் தலைவர்), **திரு.க.கிருஷ்ணகுமார்** (பிரதி முதல்வர்), **திரு.செ.சேதுராஜா** (முதல்வர்), **திரு.அ.அரியரட்ணம்** (பிரதி முதல்வர்) , **திரு.ச.சரவணபவன்** (பகுதித் தலைவர்), **திரு.ச.உருத்திரகுமார்** (பகுதித் தலைவர்), **திரு.இ.குகதாசன்**

**நிற்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

**திருமதி.ம.விக்னேஸ்வரன், திருமதி.சா.சிறிஸ்குமார், திரு.த.பாலகுமார், திரு.வீ.சுதர்சன், திரு.ச.உதயநாதன், திரு.செ.ஞானச்செல்வன், திரு.கு.அம்பிகைபாகன், திரு.இ.சுகேந்திரன்**

## கல்விசாரா பணியாளர்கள்



**அமர்ந்திருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

**திருமதி.ம.சிவாஜினி, திருமதி.கு.பொன்னையா, திரு.அ.அரியரட்ணம்** (பிரதி முதல்வர்), **திரு.செ.சேதுராஜா** (முதல்வர்), **திரு.க.கிருஷ்ணகுமார்** (பிரதி முதல்வர்) , **செல்வி.செ.சுதர்சினி**

**நிற்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

**திரு.ஆ.கந்தசாமி, திரு. ஆ.தவராஜா, திரு.வ.சிவசுந்தரம், திரு.த.துரைராஜா, திரு.ம.ஜெயக்குமார், செல்வி.ப.சிவரஜனி**

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழு



**அமர்ந்திருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

திருமதி.இ.சிவராஜா, திரு.க.கிருஷ்ணராஜா, திரு.அ.அரியரத்தினம், திரு.செ.சேதுராஜா (அதிபர்/தலைவர்), திரு.மு.சுந்தரலிங்கம், திரு.சி.யோகலிங்கம் (செயலாளர்), திரு.சி.கமலேஸ்வரன்

**நிற்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

திருமதி.பி.ராஜசேகரன், திருமதி.சா.சிறீஸ்குமார், திருமதி.வா.ஜோதீஸ்வரன், திரு.ந.நவரட்ணராஜா, திரு.செ.சுபேந்திரன், திரு.சு.சிவலிங்கம், திரு.க.இராசகுமார், திரு.வை.சாந்தலிங்கம், திரு.தி.கோபாலசண்முகம், திரு.ச.உருத்திரகுமார்

இடம்பெறாதோர் : திரு.க.கிருஷ்ணகுமார், திரு.த.பாலகுமார், திரு.க.சிவகுமார், திரு.க.திருமலைச்செல்வன், திரு.தி.மனோராஜா திரு.ந.செவ்வேள், திருமதி.ப.யோகேஸ்வரி

## பழைய மாணவர் சங்க நிறைவேற்றுக் குழு



**அமர்ந்திருப்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

திரு.சு.விஜயகுமார், Dr.வே.கமலநாதன், திரு.இ.ஐயாத்துரை (தலைவர்), திரு.வே.வீரபத்திரபிள்ளை (துணைத் தலைவர்), திரு.ச.சரவணபவன் (துணைத் தலைவர்), திரு.த.சுந்தரபாரதி

**நிற்பவர்கள்** (இடமிருந்து வலமாக)

திரு.சி.யோகலிங்கம், திரு.கி.கிருஷ்ணயோகன், திரு.சோ.புஸ்பாகரன், திரு.தெ.சுகந்தன்(துணைச் செயலாளர்), திரு.வீ.சுதர்சன் (செயலாளர்), திரு.க.சிறிஸ்குமார்(பொருளாளர்), திரு.ச.உருத்திரகுமார், திரு.தி.செல்வராஜா

இடம்பெறாதோர் : திரு.ச.ஸ்ரீராமச்சந்திரன், திரு.சி.மகேந்திரன், திரு.கா.ராமஜெயம், செல்வி.சு.மலர்விழி, திரு.சி.அகிலதாஸ், திரு.க.முத்துக்குமாரு, திரு.ந.நவரட்ணராஜா, திரு.வே.குருபரன், திருமதி.ச.விஜெயந்தி

# பழைய மாணவர் சங்கம் – கனடா





*Standing - Left to right:*
Mr.S.Vinayagamoorthy, Mr.P.Rajmohan, Mr.S.Murugesu, Mr.N.Moganathas, Mr.N.Gnanendran, Mrs.Y.Thamayanthi, Mr.T.Ganapathippillai, Mr.S.Yogarajah, Mr.M.Manoharan, Mr.T.Selvaratnam, Mr.S.Raveendran

*Sitting Left to right:*
Mr.N.Thiraviam, Mr.K.Kantharupan, Mr.C.Ambigawaran, Mr.K.Kularajendram, Mr.K.Yarnacumaran, Mrs.S.Nalini

*Absent:*
Mr.B.Anantharajah, Mrs.B.Sivagini, Mrs.S.Saroja

# பழைய மாணவர் சங்கம் – பிரித்தானியா





முன்னாள் முதல்வர்
**திரு.சி.சிற்றம்பலம்** அவர்கள்



முன்னாள் பிரதி முதல்வர்
**திருமதி.பி.சண்முகம்** அவர்கள்




முன்னாள் பிரதி முதல்வர்
**திருமதி.ம.மகேந்திரா** அவர்கள்

# எமது அதிபர்களின் வரிசையில் ....

## பெற்றுக்கொள்ள முடிந்த நிழற்படங்கள்



திரு. S.இரத்தினசபாபதி அவர்கள்
(1961 - 1967)




திரு.K.சிவசிதம்பரம் அவர்கள்
(1967 - 1972)



திரு.V.K.நல்லையா அவர்கள்
(1973 - 1975)



திரு.K.குணரட்ணம் அவர்கள்
(1975.05.08 - 1982.07.21)




திரு.S.றோய்காந்தராசா அவர்கள்
(1982.07.21 - 1991.01.24)



திரு.K.நடராஜா (பதில் அதிபர்) அவர்கள்
(1991.01.24 - 1991.03.20)



திரு.V.அருளானந்தம் அவர்கள்
(1991.03.20 - 1992.02.05)



திரு.S.சிற்றம்பலம் அவர்கள்
(1992.02.05 - 2001.12.02)



திரு.S.சேதுராஜா அவர்கள்
(2001.12.02 - இலிருந்து )

# தரமான கல்வியூடாக தரமான சமூகத்தை உருவாக்கும் பயணத்தின் தொண்ணூறாவது ஆண்டில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

கல்வியின் இலக்குகள் அடிப்படையில் மனித விழுமியத்தினையும் நாகரிக மேம்பாட்டினையும் நிலையாகக் கொண்டுள்ள போதிலும் காலவோட்டத்தில் மகிழ்ச்சிகரமான மனித வாழ்க்கை தேவைகளுக்கான கோரிக்கைகளால் காலத்திற்கமைவாகத் தினப்படுத்தி புதுப்பிக்கப்படுகின்றன. இவ்வகையில் இன்றைய தசாப்தத்தின் கல்விச்சுலோகமான "தரமான கல்வியூடாக தரமான சமூகம்" என்னும் இலக்கினை எய்தும் படியான கல்வி முயற்சிகள் முனைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுக்கல்விக்களமான பாடசாலைகளின் கல்விசார் கொள்கைளும் செயற்பாடுகளும் இவ்விரண்டு நோக்கிலேயே முடுக்கிவிடப்பட்டுள்ளன. பாடசாலைகள் யாவும் தத்தமது இலக்கு, நோக்கு, சக்தி, முகாமைத்துவத்தெளிவு என்பவற்றிற்கமைவாக இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இதற்கான பயணத்தில் பல தடைகளையும்தாண்டி இலக்குகளை இன்று அண்மித்திருக்கின்றது.

சாம்பல் மேட்டிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போன்று வரலாற்றில் இடம்பிடித்த பாரிய இழப்புக்களிலிருந்து மீண்டெழுந்து காலத்திற்கேற்ற தரரீதியில் மேம்பட்டுவரும் ஒரு கல்லூரியாக மிளிர்கின்றது. யாழ்மாவட்டத்தில் உள்நாட்டுப் போரினால் தனது பௌதிகவளங்களை பெருமளவில் இழந்த முதல் கல்லூரியான இப்பாடசாலை கடினமான பல முயற்சிகளினூடாக இன்று பொலிவுபெற்றுத் தலைநிமிர்ந்துள்ளது.

இக்கல்லூரியின் இன்றைய வளர்ச்சி நிலையினையும் கல்லூரியின் முக்கியத்துவத் தினையும் வெளிக்கொணர்ந்து கல்லூரிச் சமூகத்திடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இக்கல்லூரி ஆரம்பித்து தொண்ணூறு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அது தொடர்பான வரலாற்றினை ஆவணப்படுத்தும் நோக்கில் கல்லூரியின் உத்தியோகபூர்வ வெளியீடான நெல்லிக்கனி மலர் சிறப்புமலராக முடிந்தவரை திருத்தம் செய்யப்பட்ட சான்றுகளுடன் வெளியிடப்படுகின்றது.

இக்கல்லூரியானதுஅதன் உருவாக் கத்திலேயே நல்ல கனதியான காரணத்தையும் சிறப்பான திட்டமிடலினையும் ஏற்றத்தாழ்வற்ற சமூகநோக்கினையும் கொண்டதாக அமைந்தது. 1921 ஆம் ஆண்டிலே இப்பிரதேசத்தில்மாதிரிப் பாடசாலையொன்றை அமைப்பதற்கு விளைந்த அரச அதிகாரிகளும், சமூகப் பெரியாரும், சமூகவியலாளர்களும் வடமராட்சிப் பிரதேசத்தின் மையப்பகுதியான கட்டைவேலி, கரவெட்டி வடக்கு பிரதேசத்தினைத் (தற்போது நெல்லியடி) தெரிவுசெய்தனர். அரச தலையீட்டுடனான இம் மாதிரிப் பாடசாலை அமைப்பிற்கு முன்னோடியாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்கப் பாடசாலைகள் குழுவின் (The Committee of Government Schools) தலைவர் 1918.08.09 இல் விடுத்திருந்த கோரிக்கையின்பேரில் நில அளவை நாயகத்தின் (Survior General) 1919.02.05ஆம் திகதிய ஆரம்ப நில அளவைத் திட்டத்தின் பிரகாரம் இப்பகுதியில் 01 ஏக்கர் 3 றூட், 28.1 பேர்ச் நிலம் பாடசாலை தாபிப்பதற்கென சுவீகாரம்செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதற்கட்டமாகச்

சுவீகரிக்கப்பட்ட நிலத்தில் இக்கல்லூரியானது 1921 இல் தாபிக்கப்பட்டது. சமயச் சார்பு மிஷனரிமார்களும் தனியார்கள் சிலருமே பாடசாலைகளை நிறுவிய காலகட்டத்தில் அரசாங்கத்தினால் இலங்கையில் நிறுவப்பட்ட ஒருசில அரச பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாக அமைந்தமை வரலாற்றுப் புகழுடையதாகும். புவியியல்ரீதியில் ஆய்வுசெய்யப்பட்டு வடமராட்சியின் மையப்பகுதியில் திட்டமிடப்பட்ட வகையில் அமைக்கப்பட்ட இப்பாடசாலையின் அமைப்பும் சூழலும் இன்றும் அழகொளிர்வதாகும்.

இலவசக்கல்வியின் பிதாமகன் கலாநிதி. C.W.W.கன்னங்கரா அவர்களது சமூகநீதிக்கல்விச் சிந்தனையின் வழி இலங்கை முழுவதிலுமாக அக்காலத்திலிருந்த தேர்தல் தொகுதிகளுக்கு ஒவ்வொன்றாக 54 மத்திய கல்லூரிகளை சகல வள வசதிகளுடனும் உருவாக்கப்பட்டவற்றில் யாழ்மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 4 மத்திய மகா வித்தியாலங்களில் வடமராட்சிக்கென ஒதுக்கப்பட்ட ஒரேயொரு மத்தியமகா வித்தியாலயம் இதுவாகும். மறைந்த சமவுடைமைவாதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன். கந்தையா அவர்களது தீர்க்கதரிசனம்மிக்க தீவிர அக்கறையால் வளம்பெற்று வளர்ந்த இக்கல்லூரியானது வடமராட்சி மக்களது கல்விச்சொத்தாக மேலெழுந்தது. நாடாளவிய ரீதியில் 5ம்தரப்புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்கள் இருபாலாரும் இக்கல்லூரியில் அனுமதிபெற்று இலவசமாக விடுதிகளில் தங்கிப்படித்த தங்கமான வரலாறு கொண்டது இக்கல்லூரி. இக்கல்லூரியின் பழையமாணவர்கள் நாடாளவியரீதியில் வசிப்பிடங்களைக் கொண்டவர்கள், இன்று தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொழிலிலும் கல்வியிலும் வாழ்விலும் சிறந்து விளங்குகின்றனர்.

இக்கல்லூரியின் செயற்பாடுகளுக்கென மீண்டும் 1947 இல் இரண்டாம் கட்டமாகச் சுற்றாடலிலுள்ள 03 ஏக்கர் 02 றூட், 30.5 பேர்ச் காணி சுவீகரிக்கப்பட்டதுடன் அடுத்துவந்த 10 ஆண்டுகளில் பிரமாண்டமான இருமாடி வகுப்பறைக் கட்டடங்கள், பௌதிக, இரசாயன, உயிரியல் ஆய்வுகூடங்கள், ஆண், பெண்களுக்கான தனித்தனி மாணவர் விடுதிகள், நூல் நிலையம், தொழில்நுட்பச் செயற்பாட்டறைகள், விவசாயப் பண்ணை, நிர்வாக அலகுக்கான கட்டடம், விளையாட்டு மைதானம், அதிபர் விடுதி முதலான அனைத்து அம்சங்களும் உயர்தரத்தில் உருவாக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து மட்டுமல்லாது நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் புலமைப்பரிசில் பெறும் கெட்டித்தனம்மிக்க மாணவர்கள் இக்கல்லூரியில் அனுமதிபெற்று விடுதிகளில் தங்கியிருந்து கல்வி பயின்றனர்.

கிராமப்புற மக்களுக்கும் தரமான கல்வியை வழங்கும் நோக்குடன் யாழ். மாவட்டத்தில் நிறுவப்பட்ட நான்கு மத்திய மகா வித்தியாலயங்களில் யா/ நெ.ம.ம.வித்தியாலயம் மாத்திரமே அக்காலத்தில் சிரேஷ்ட உயர்நிலை வகுப்புக்களில் (HCS) விஞ்ஞானப் பிரிவினைக் கொண்டிருந்தது. யாழ் குடாநாட்டில் ஏனைய மத்திய மகா வித்தியாலயங்களிலிருந்து மாணவ, மாணவியர் விஞ்ஞானத்தில் உயர்கல்வி பெறுவதற்காக இக்கல்லூரியில் அனுமதி பெற்று தமது கல்வியை தொடர்ந்தனர். இவர்களில் அநேகமானவர்கள் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாயும் உருவாகியதுடன் சிலர், வெளிநாடுகளில் உயர் விஞ்ஞானிகளாகவும் பதவிவகித்தனர். அக்காலத்தில், இக்கல்லூரியில் பணியாற்றுவதற்கென பெரும்பாலான ஆசிரியர்கள் நாளாந்தம் யாழ் நகரிலிருந்து வருகை தந்தனர். பல கல்விமான்கள் வினைத்திறன் மிக்க அதிபர்களாக இக்கல்லூரியில் அடுத்தடுத்து பதவி வகித்து கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

அக்காலத்தில் திட்டமிட்ட புறக்கிருத்திய செயற்பாடுகளில் இக்கல்லூரி இப்பிரதேசத்தில் முதன்மையான கல்லூரியாக திகழ்ந்தது. கடேற் தொண்டர் படையணி, சாரணர் படையணி என்பவற்றோடு கால்பந்து, கிரிக்கட் முதலான பெருவிளையாட்டுகளும் தடகள்

பெருவிளையாட்டுகளும் தடகள் விளையாட்டுக்களும் சிறப்பான முறையில் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு ஏதுவாக 1959 இல் 3ம் கட்டமாக சுற்றாடலில் உள்ள 2 ஏக்கர் 5 றூட் 6.6 பேர்ச் காணி சுவீகரிக்கப்பட்டது. இக்கல்லூரியின் வள வசதிகளை பெருக்குவதில், வடமராட்சி பிரதேசத்தின் புகழ் பூத்த பாராளுமன்ற உறுப்பினரும், சமூக நீதிக் கொள்கையாளரும் பிரபல பொதுவுடமையாளருமான திரு.பொன்.கந்தையா அவர்கள் சிறப்பான பங்காற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். வடமராட்சி பிரதேசத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த மத்திய மகா வித்தியாலயத்தின் உருவாக்கம் அமைப்பு சமூக நீதியான கல்விக் கொள்கை என்பவற்றில் மிக்க விளக்கமும் வெளிச்சமும், தூரநோக்கும் உள்ள ஒரு கல்விமானாகவும் அரசியல் வாதியாகவும் செயற்பட்டு அவரிட்ட அத்திவாரத்தில் இக்கல்லூரி இன்றும் தலைநிமிர்ந்து நிற்பதனை அவதானிக்கலாம். கம்பீரமான இருமாடி வகுப்பறைக் கட்டடம், விஞ்ஞான ஆய்வுகூடம் தொழில் நுட்ப ஆய்வுகூடம் முதலியவற்றை அமைத்து ஏழை, மற்றும் நடுத்தர வருமான மக்களின் பிள்ளைகளுக்கு தரமான கல்வியை ஊட்ட அவர் வழிசமைத்தார். இக்கல்லூரியில் அவரது பங்களிப்பு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். அவரது பெயரில் திறந்து வைக்கப்பட்ட இருமாடிக்கட்டடம் இக்கல்லூரியில் இன்றும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதைக்காணலாம்.

அன்றைய இக்கல்லூரியின் கல்வி செயற்பாடுகள் ஏனைய பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளை விடவும் முன்னேற்றகரமான வேறுபாடுகளைக் கொண்டிருந்தன. விடுதிகளில் தங்கியிருந்து கல்விபயிலும் மாணவர்களின் புறக்கிருத்தியச் செயற்பாடுகள் இங்கே விசேடமாகக் குறிப்பிடத்தக்கனவாகும். புலமைப்பரிசில் பெற்ற உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட மாணவர்களே பெரும்பாலும் விடுதிகளில் தங்கியிருந்தனர். ஆண், பெண், இருபாலாருக்கும் தனித்தனி விடுதிகள் இயங்கி வந்தன. பெரும் எண்ணிக்கையான பாடசாலைப் பணியாளர்களும், உத்தியோகத்தர்களும் கடமையாற்றி வந்தனர். விவசாயப் பண்ணையிலிருந்து விடுதிகளுக்கு தேவையான காய்கறிகளும் பாற் பொருட்களும் பெருமளவில் பெறப்பட்டன. வருடத்தில் ஒருமுறை விடுதியில் தங்கியிருந்து கற்கும் மாணவர்களுக்கான அகில இலங்கை கல்விச் சுற்றுலாவிற்கு இலவசமாக ஒழுங்குகள் செய்யப்பட்டன. 1971 இல் இக்கல்லூயின் வடக்கு புறமாகவுள்ள, அன்று செல்லையா பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்ட தனியாரால் நிறுவப்பட்ட பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை நலிவுற்று அப்பாடசாலையின் கட்டிடம் பயன்பாடற்று இருந்தமை காரணமாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் க.பொ.த (உ.த) கலைப்பிரிவு அங்கு மாற்றப்பட்டதுடன் நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தின் இணைக்கப்பட்டது. ஆண், பெண் மாணவர்கள் அடங்கலாக 2000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வந்த இக்காலகட்டத்தில் பல புகழ்பூத்த கல்விமான்கள் அதிபர்களாக இருந்து அரும்பணியாற்றினார். கலாநிதி.S சிவப்பிரகாசம், திரு. இரத்தினசபாபதி, திரு.மு.சிவசிதம்பரம் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கோர்.

1977 இல் நாட்டில் அரசியல் பிரச்சினைகள் முனைப்படைந்திருந்த நிலையில், உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.த. இராசலிங்கம் அவர்கள் தனது அரச நிதி ஒதுக்கீட்டின் மூலம் அழகானதும் நவீனத்துவமுடையதுமான ஆராதனை மண்டபத்தினை கல்லூரிக்கென அமைத்துக் கொடுத்தார். பாடசாலை, மற்றும் கல்வித்திணைக்கள நிகழ்வுகள் மட்டுமின்றி சமூகத்தின் பொது நிகழ்வுகள் பலவும் இவ்வாராதனை மண்டபத்தில் கோலாகலமாக அரங்கேறின.

1987 வரையில், பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்புற்று இருந்த இக்காலங்களில் பல புகழ்மிக்க

அதிபர்களும் ஆசிரியர்களும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இக்காலக்கட்டத்தில் இக்கல்லூரியின் வளர்ச்சியில் அரும்பணியாற்றிய அதிபர்களில் திரு.K.குணரத்தினம், திரு.V.K.நல்லையா, திரு.S.றோய்க்காந்தராஜா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

கால ஓட்டத்தில் இக்கல்லூரியின் பெண் மாணவர்களின் வகுப்புப் பிரிவுகள் இணைக்கப்பட்ட செல்லையா பள்ளிக்கூட கட்டிடத்தில் இயங்கவைக்கப்பட்டன. 1987இல் வடமராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் இக்கல்லூரியின் கட்டுமானங்களில் பெரும்பாதிப்புக்கள் ஏற்பட்டன. கல்லூரியின் பிரதான நிர்வாகக் கட்டடம் இராசலிங்கம் ஆராதனை மண்டபம், நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் முதலான வளங்கள் முற்றாக சேதமடைந்தன. இதன் பின்னர் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் பலவீனமடைந்ததுடன் உயர் நிலையில் இருந்த புறக்கிருத்தியங்களும் வெகுவாய் பாதிப்புற்றன. இதற்கு முன்னைய காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே சிறப்பாக செயற்பட்டு வந்த இக்கல்லூரியின் கடேற் தொண்டர் படையணியின் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. வருடா வருடம் தியத்தலாவை வரை பயிற்சி பெற்ற கடேற் தொண்டர் படையணிக்கு 1960 களில் 2ம் லெப்ரினன்ட் திரு T.பாலேந்திரன், திரு. அருளையா ஆகியோர் ஆற்றிய பணிகள் இன்றும் நினைவு கூறப்படுகின்றன. 1987இன் பின்னர் இக்கல்லூரியின் மற்றும் கல்விச் செயற்பாடுகள் தளம்பலுற்று நலிவடைந்த நிலையில் நாட்டு சூழ்நிலை காரணமாக மாணவர் பலர் புலம் பெயர்ந்த காரணங்களினால் குறிப்பாக ஆண் மாணவர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தமையால் ஆண் மாணவர்களது எண்ணிக்கை வெகுவாய் குறைவடைய நேரிட்டது.

அண்மைய 1990களில் இக்கல்லூரியின் தோற்ற இலக்கினை மறந்து குறுகிய நோக்கில் ஆண்/பெண் என இரு பாடசாலைகளாகப் பிரித்தமையானது ஏற்படுத்திய நன்மைகளைவிடத் தீமைகளையே அதிகமாக்கியது. வலுவான ஒரு மாணவர் தொகை நலிவாயிற்று. யுத்த அனர்த்தத்தினால் பௌதிகவளங்கள் பாதிக்கப்படலாயின. மாணவர் எண்ணிக்கையும் குறைவடைந்தது. இந்நிலையில் பொறுப்பேற்ற அதிபர்கள் மிக்க சிரமங்களின் மத்தியில் ஒரு தரமான பாடசாலையாக மீண்டும் கொண்டுவருவதற்கு முயன்றனர். ஓய்வுபெற்ற அதிபர் திரு.சி.சிற்றம்பலம் அவர்கள் கல்லூரியின் தரத்தினைத்தக்கவைக்கும் பணியில் நெருக்கடிமிக்க காலத்தில் சிறப்பாக ஈடுபட்டார். கல்வி, விளையாட்டு ஆகிய இருதுறைகளிலும் மீண்டும் கல்லூரி தன்னம்பிக்கையுடன் மீண்டெழத் தொடங்கியது. இதன்பின்னரான இன்றைய கல்லூரி நிர்வாகம் நவீன கல்விச்சீர்திருத்த இலக்குகளோடு நிலைத்த அபிவிருத்திக்கான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்து தரரீதியான பல அடைவுகளை ஈட்டி தேசியரீதியில் தரம்மிக்க ஒர்கல்லூரி என்னும் இலக்கினை நோக்கி வெற்றிகரமாகப் பயணிக்கின்றது. நவீன முகாமைத்துவ எண்ணக்கருக்களின் அடிப்படையில் பாடசாலைச்சமூகத்தினரான பெற்றோர், பழையமாணவர்கள் அனைவரையும் ஆரோக்கியமான விதத்தில் உள்வாங்கி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தி கடினமான பல இலக்குகளைக்கூட எட்டிப்பிடித்துள்ளது.

மாணவர் எண்ணிக்கை இரண்டுமடங்காக (1260) அதிகரித்துள்ளதுடன் இதில் பெண் மாணவர்களது எண்ணிக்கை சுமார் 450ஆக அதிகரித்தமையானது கல்லூரியில் தோற்றத்தின் நோக்கத்தினை மீண்டும் நிறைவு செய்துள்ளது. மாணவர்விடுதி, பாடசாலைத்தோட்டம், விளையாட்டுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, விளையாட்டு மைதான விஸ்தரிப்பு, கணனி ஆய்வுகூடங்கள், வகுப்பறைக் கட்டிடங்கள், ஆராதனை மண்டபம், சுற்றுப்புற அழகு, மாணவர்கல்வி அடைவு, ஒழுக்கம், கட்டுப்பாடு, இணைப்பாடவிதான சாதனைகள், ஆங்கில மொழிமூல கல்விமேம்பாடு, மாணவர் சிற்றுண்டிச்சாலை வசதிகள், முதலுதவி அலகு,

ஆண்/பெண் சாரணியம், மாணவர் கடேற் அணி, கூடைப்பந்தாட்டத்திடல், முகாமைத்துவ மேம்பாடு முதலான அனைத்து விடயங்களிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று ஓர் உதாரண கல்லூரியாக இக்கல்லூரி திகழ்கின்றது.

மேலும், இக்கல்லூரியானது தற்போதைய அதிபர் திரு. செ. சேதுராஜா அவர்களின் வினைத்திறன் மிகு முகாமைத்துவ வழிகாட்டலின் கீழ் கல்வி அடைவு மட்டத்தில் வெகு வேகமாய் முன்னேறி வருகின்றது. குறிப்பாக கணிதபாட அடைவு மட்டம் வெகு வேகமாய் உயர்ந்து 75வீதத்தினை அடைந்துள்ளதுடன் ஏனைய பாடங்களின் அடைவுமட்டங்கள் இரு மொழி மூலங்களிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றன. கடந்த க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவரது அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக கணிதம், தமிழ், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் விசேட வகுப்புகள் ஊடாக கற்பிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக மாணவர்களது அடைவுமட்டங்கள் உயர்ச்சி பெற்றன. எமது கணிதபாட ஆசிரியர் குழாத்தினர் அர்ப்பணிப்புடன் இரவுநேர வகுப்புக்களில் கற்பித்து மாணவரது பெறுபேறுகள் உயர உறுதுணையாக இருந்தனர். மேலும் தற்போது அடைவுமட்டம் குறைந்த மாணவர்களுக்கு விசேட மாலைநேர வகுப்புக்கள் அதிபரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்று வருகிறன.

எமது கல்லூரியில் மாணவர்களது நலனோம்பு செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பாடசாலை வேளையில் உடல்நலக்குறைவுக்கு உள்ளாகும் மாணவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பதற்கு மருத்துவ அறை வசதியும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சுகயீனமுறும் மாணவரை வைத்தியசாலைக்கு அல்லது வீட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான முச்சக்கரவண்டி வசதியும் உள்ளது. இதற்காக எமது கல்லூரிக்கு முச்சக்கரவண்டியொன்று செல்லமுத்தூஸ் உரிமையாளர் திரு. சண்முகசுந்தரம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

எமது கல்லூரியானது கல்விசார் போட்டிகள் பலவற்றில் சாதனைகளையும் புரிந்துவருகின்றது. இவ்வருடம் பலமட்டங்களில் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் எமது மாணவர்கள் எட்டு பேர் தேசிய மட்டப்போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் தரம் 10 ஐச் சேர்ந்த செல்வன். சிவசுப்பிரமணியம் தனுசன் தேசிய மட்ட சிரேஷ்ட கணித ஒலிம்பியாட் போட்டியிலே வெற்றி பெற்று இந்தோனேசியாவின் பாலி நகரில் 2011 யூலை 18ம் திகதி முதல் நடைபெறவுள்ள சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எட்டு மாணவர் அடங்கிய குழுவில் முதலாவது மாணவனாக தெரிவு செய்யப்பட்டுச் சாதனை படைத்துள்ளார்.

மேலும் மாகாணமட்ட கணித புதிர்ப்போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பல மட்டங்களிலும் வெற்றிபெற்று சாதனை புரிந்து வருகின்றார்கள். இவ்வருடம் (2011) மாகாண மட்டப் போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்களான செல்வன் கலாமணி மதனாகரன், செல்வி.லிங்கரட்ணம் விதுர்ஷா, செல்வி மனோகரன் துஷிதா, செல்வி தபேந்திரன் அபிஷேகா ஆகிய நால்வர் முதலாமிடத்தினைப் பெற்றுச் சாதனை படைத்ததுடன் இவர்களில் மூவர் தேசியமட்ட கணிதப் புதிர்ப் போட்டிக்குத் தெரிவாகினர். இம்மாணவர்களில் கனிஷ்ட பிரிவில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்ற வட மாகாண அணிக்கு தலைமை தாங்கிய எமது கல்லூரி மாணவி செல்வி அபிஷேகா தபேந்திரன் தங்கப் பதக்கம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். செல்வன் கலாமணி மதனாகரன் மகாண மட்டக் கணிதப் புதிர்ப் போட்டிகளில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக (தரம் 6 இலிருந்து 10 வரை) முதலாமிடத்தினைப் பெற்று வந்துள்ளார் என்பதோடு மாகாண மட்ட விஞ்ஞானப் புதிர்ப் போட்டிகளிலும் இரு தடவைகள் முதலாமிடத்தைப்

பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2010ம் ஆண்டு உங்களுக்குத் தெரியுமா? (Do you know?) மாகாணமட்டப் போட்டியில் வெற்றி பெற்ற ஆறு மாணவர்களில் செல்வன் இராமநாதன் ஸ்ரீதிவாகரன், செல்வி மாதங்கி கிருஸ்ணதாசன் ஆகிய எமது கல்லூரி மாணவர்கள் இருவர் தேசியமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியிலே எமது கல்லூரி மாணவன் செல்வன். அம்பிகாநிதி கோகுலன் 2009ம் ஆண்டு கவிதையாக்கத்திலும், 2010ம் ஆண்டு குறுநாடக ஆக்கத்திலும் தேசியமட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்று சாதனை புரிந்துள்ளார். அத்தோடு 2009 ஆம் ஆண்டின் அகிலஇலங்கை ஆங்கிலதின எழுத்தாக்கத்திறன் போட்டியில் எமது மாணவி செல்வி. துஷிதா மனோகரன் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்று சாதனை படைத்தார். 2011ம் ஆண்டு CIMA Spell Master போட்டியில் எமது கல்லூரி மாணவி செல்வி. ஆதித்தியா நேசராஜா தேசிய மட்டத்தில் அரையிறுதி வரை வெற்றி பெற்று புகழ் சேர்த்தார்.

மொறட்டுவ பல்கலைக் கழக தகவல் தொழினுட்ப பீடம் தனது 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வாண்டு (2011) நடத்திய கட்டுரைப் போட்டிகளில் எமது கல்லூரி மாணவன் செல்வன் வைத்தியசூரர் கோகுலரதன் முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

செல்வி. சாமந்தி நித்தியானந்தன் குண்டுபோடுதல் விளையாட்டு நிகழ்ச்சியில் மாகாணமட்டத்தில் 2008, 2009, 2010, 2011 ஆகிய தொடர்வருடங்களில் முறையே இரண்டாம், முதலாம், இரண்டாம், இரண்டாம் எனும் இடங்களைப் பெற்று தேசியமட்டப்போட்டிகளுக்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.

பாடசாலைகளில் இன்று மிக முக்கியத்துவம் பெறும் சுற்றுச்சூழல் தொடர்பான மதிப்பீட்டில் எமது பாடசாலை மாகாணமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன் 2011 ஏப்ரல் 4ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை இலங்கையில் நடைபெற்ற தென்னாசிய வலயத்தின் சுகாதார வசதிகள் தொடர்பான மாநாட்டில் எமது மாணவிகள் செல்வி. ஆரணி மகாகணபதி, செல்வி. விதுர்சா லிங்கரட்ணம் ஆகியோரோடு எமது ஆசிரியை செல்வி. தயா கந்தசாமி அவர்களும், பலநாட்டுப்பிரதிநிதிகள் கலந்துகொண்ட கருத்தரங்குகளிலும் கண்காட்சிகளிலும் பங்கேற்றுப் பாராட்டுக்களைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

இலங்கையில் ஒரு கல்வி வலயத்திற்கு ஒரு பாடசாலை என்னும் தெரிவு அடிப்படையில் இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு 2009ல் வடமராட்சி வலயத்திலிருந்து எமது பாடசாலையைத் தெரிவு செய்தது. எமது கல்லூரி அதிலிருந்து யுனெஸ்கோ பாடசாலைக் கழகத்தை அமைத்து யுனெஸ்கோ இணைந்த பாடசாலைச் செயற்திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. எமது கல்லூரியில் இயங்கிவரும் ஆண் சாரணர்கள் அமைப்பும் 2008ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பெண்சாரணிய அமைப்பும் சிறப்பாக இயங்கிவருகின்றது. எமது சாரணமாணவர்கள் செல்வன். ஆ. பிரகாஸ், செல்வன். பா. அகிலன் ஆகிய இருவரும் 2010 இல் ஜனாதிபதி சாரணர் விருது பெற்று சாதனைபடைத்தார்கள். இவ்வருடம் (2011) "வளர்ந்துவரும் சாரணசமூகம்" எனும் கருப்பொருளில் அகில இலங்கை ரீதியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் எமது பாடசாலை தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றதுடன் கௌரவ கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களிடமிருந்து எமது மாணவர்கள் விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக பழைய மாணவர் சங்கம் பெரும்பணியாற்றி பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது. எமது பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர், கனடாக்கிளையினர்

பாடசாலையின் தேவையறிந்து உதவி வழங்குவதில் பெரும் பங்காற்றுகின்றனர். எமது கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கக்கிளையினர் எமது மாணவர்களின் தகவல்தொழில்நுட்ப கற்றலுக்காக ஒரு தொகுதி கணினிகளை 2005 இல் அன்பளிப்புச் செய்ததோடு எமது கல்லூரியின் விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற்கான காணியை கொள்வனவையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் எமது விளையாட்டு மைதானம் கணிசமான அளவு விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன் இச்செயற்திட்டம் நிறைவு செய்யப்படும் போது 400m ஓடுதளம் கொண்ட ஒரு தரமான விளையாட்டு மைதானமாக தரமுயரும். மேலும் கல்லூரியின் விளையாட்டுத்துறையை முன்னேற்றி மெருகேற்றும் வகையில் 2008 இல் இவர்களால் சுமார் ஏழு இலட்சம் ரூபா மதிப்புள்ள விளையாட்டு உபகரணங்களும் கோல உடைகளும் வழங்கப் பட்டதுடன் இன்று வரை இவ்உபகரணங்களின் துணை கொண்டே பெருவிளையாட்டுக்கள் நடைபெற்றுவருவதனை நன்றியோடு நினைவு கூருகின்றோம். லண்டனில் வதியும் எமது பழையமாணவன் திரு. இராஜேஸ்வரன் அரவிந்தனால் பாடசாலைக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட NoteBook கணனி அலுவலகத் தேவைகளுக்கு மிகவும் பயனுடையதாக அமைந்துள்ளது.

எமது கல்லூரி மாணவரின் ஆங்கில மற்றும் தகவல்தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர் ஒருவரையும் பயிற்றுவிப்பாளர் ஒருவரையும் நியமித்து கடந்த 2004ம் ஆண்டிலிருந்து அவர்களுக்கு மாதாந்த வேதனைத்தை லண்டனில் வாழும் எமது பழைய மாணவர் திரு. செ. செல்வச்சந்திரன் மற்றும் திரு. செ. இராசேந்திரம் ஆகியோருக்கு எமது கல்லூரிச்சமூகம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. எமது பாடசாலைத்தரவுகளை கணினிமயப்படுத்தும் செயற்றிட்டத்துக்கு லண்டனில் வாழும் எமது பழையமாணவன் திரு. ஆறுமுகம் பார்த்தீபன் உபகரணங்களை வழங்கி உதவியளித்துள்ளதுடன் எமது கல்லூரியின் பரீட்சைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தி வெற்றிகரமாக நிறைவேற்றித் தந்த கல்லூரியியன் பழைய மாணவன் யோ.யோகசீலன் அவர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர்களது காலமறிந்த செயற்பாடுகளால் 2010 ஆம் ஆண்டிலிருந்து எமது கல்லூரியில் மேற்குறித்த வேலைகள் யாவும் கணனிமயப்படுத்தப்பட்டு நடந்தேறி வருகின்றன என்பது சிறப்பம்சமாகும். எமது பாடசாலையின் பல்லூடக எறியி **(Multi Media Projector)** பழுதடைந்திருந்த நிலையில் தகவல் தொழினுட்பக் கற்பித்தலின் போதான அதன் தேவையினை உணர்ந்த லண்டன் பழைய மாணவர் சங்கத்தினர் உடனடியாகவே ஒரு பல்லூடக எறியியினை கொள்வனவு செய்து தந்திருந்தனர். கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட பாரிய அழகான ஆராதனை மண்டபத்தில் மாணவர்கள் அமர்வதற்கு இருக்கைகள் இல்லாத குறையினை நேரில் வந்து கண்டறிந்த லண்டனில் வதியும் எமது பழைய மாணவர்கள் வைத்திய கலாநிதி திருமதி ரஞ்சினி அருள்நந்தி மற்றும் வைத்திய கலாநிதி S.பரமநாதன் ஆகியோர் எழுநூறு இருக்கைகளை நாம் பெறுவதற்கு பழைய மாணவர் சங்கத்தினூடாக உடன் நடவடிக்கை எடுத்து கல்லூரியின் முக்கிய தேவை ஒன்றைப் பூர்த்தி செய்துள்ளனர். அவர்களுக்கு எமது கல்லூரியின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் பாடசாலையின் நிர்வாகத் தேவைக்கான செலவுகளை ஈடுசெய்யும் வகையில் லண்டனில் வதியும் எமது பழையமாணவர் விரிவுரையாளர் திரு. சிதம்பரப்பிள்ளை சண்முகலிங்கம் அவர்கள் வருடாந்தம் ரூபா ஒரு இலட்சம் தருவதாக உறுதியளித்துள்ளதுடன் முதற்கட்டமாக இவ்வருடத்திற்காக ரூபா ஒரு இலட்சத்தை பழைய மாணவர் சங்கத்தினூடாக அனுப்பி வைத்துள்ளார். அவருக்கு எமது நீடித்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம். கல்லூரியின் கவின்நிலை மேம்பாட்டின் ஓர் அங்கமாக பாடசாலை முகப்பில் ஓர் சரஸ்வதி

திருவுருவத்தை லண்டன் பழைய மாணவ சங்கத்தினர் 2008இல் அமைத்துத்தந்துள்ளமை கல்லூரியின்பால் அவர்கள் கொண்டுள்ள அன்பையும் மதிப்பையும் பிரதிபலிக்கின்றது. அவர்களுக்கு எமது நன்றிகளை மனமுவந்த தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் பாண்ட் வாத்திய அணியினருக்கான இசைக்கருவிகள் கொள்வனவிற்கு உதவியதுடன் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையினை நவீன வசதிகள் கொண்டதாக திருத்திப் புதுப்பித்துத் தந்துள்ளனர். இத்துடன் மாணவர் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களையும் பாடக்குறிப்புக்களையும் வேகமாகவும் தெளிவாகவும் அச்சிட்டு மாணவரது கற்றல் கற்பித்தலை மேம்படுத்தவும் பாடசாலையின் ஏனைய பதிப்புத்தேவைகளை நிறைவு செய்யவும் இவர்களால் வழங்கப்பட்ட சுமார் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான பிரதி பண்ணும் இலத்திரனியல் இயந்திரமானது (Digital Duplicator) கல்லூரியின் அதியுயர் சொத்தாகக் கருதப்படுவதுடன் இதன் பயன்பாடுகளும் அளப்பரியனவாகும். அத்துடன் எமது கல்லூரியில் அலுவலக வேலைகளுக்கு முகாமைத்துவ உதவியாளர் இன்மை, நூலகர் இன்மை எனும் குறைபாடுகளை அறிந்து இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் உதவியாளர்களை நியமித்து அவர்களுக்கான வேதனங்களையும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஒருவருக்கான வேதனத்தையும் மாதாந்தம் வழங்கி வருவதனை கல்லூரிச்சமூகம் நன்றியுடன் நோக்குகின்றது. மேலும் கனடா பழைய மாணவர் சஙகத்தின் ஏற்பாட்டிலும் கனடாவில் வாழும் திரு. பிராங் சீவரத்தினம் அவர்களது முன்னெடுப்பிலும் "Home of Hopes" எனும் அமைப்பின் மூலம் எமது கல்லூரிக்கு வழங்கப்பட்ட 22 கணனிகள் மற்றும் ஒரு Printer, ஒரு Scanner என்பன மிகவும் வினைத்திறனுடன் எமது மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு எமது கல்லூரிச்சமூகம் நன்றிகளைத் தெரிவிக்கின்றது. புதிதாக அமைக்கப்பட்ட ஆராதனை மண்டபத்திற்கான மேடைத் திரையமைப்பினையும், திரைச் சேலைகளையும் பெற்றுத் தருவதற்கு பழைய மாணவர் சங்கத்தினூடாக கனடா கிளையினர் உடனடி முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக அது நிறைவு பெற்றுள்ளது. கல்லூரியின் சுற்றுப்புற மேம்பாட்டினை ஏற்படுத்தும் செயற்திட்டத்திற்கு கனடா பழைய மாணவர் சங்கமும் லண்டன் பழைய மாணவர் சங்கமும் நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்ததன் பேரில் ரூபா ஐந்து லட்சம் பெறுமதியான கட்டுமான வேலைகள் பழைய மாணவர் சங்கத்தினால் எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவில் வதியும் பழைய மாணவர் திரு சரவணமுத்து இராஜகோன் அவர்கள் இவ்வருடம் (2011) கல்லூரிக்கு வருகை தந்து புதிதாக அமைக்கப்பட்ட ஆராதனை மண்டபத்திற்கு ஒலியமைப்பு வசதியில்லாத குறையினை இனங்கண்டு அதற்கான உபகரணங்களை வழங்குவதாக உறுதியளித்து அதன்படி ரூபா மூன்று லட்சம் பெறுமதியான உபகரணங்களை அன்பளிப்பு செய்துள்ளார். தேவையும் காலமும் அறிந்து உதவிய அவரிற்கு எமது மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது கல்லூரியில் ஒரு தரமான புகைப்பட மற்றும் வீடியோ கழகத்தை ஆரம்பித்து அதனூடாக பாடசாலையின் தொடர்பாடல் மற்றும் வெளியீட்டு வேலைகளில் மாணவர்களைப் பயற்றுவிப்பதற்கும் உரிய வகையில் பயன் படுத்துவதற்கும் ஏதுவாக எமது பழைய மாணவரான பொறியியலாளர் திரு நடராஜா மனோக்குமாரின் ஏற்பாட்டில் அவரோடிணைந்த பழைய மாணவர்களின் உதவியுடன் தேவையான ஒளிப்படக் கருவிகள் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் பழைய மாணவரான பொறியியலாளர் திரு சங்கரப்பிள்ளை நவநீதனதும் வெளிநாடுகளில் வதியும் ஏனைய 11 மாணவர்களதும் நிதிப்பங்களிப்புடன் பாடசாலையின் ஆண், பெண் மாணவர் தலைவர் களுக்கான மேலங்கிகளை (Coat) சுமார் இரண்டரை இலட்சம் ரூபா செலவில் அன்பளிப்புச்

செய்துள்ளனர் இதனால் எமது மாணவர் தலைவர்களின் தோற்றமும் ஊக்கமும் மேம்பட்டுள்ளன. இவற்றை வழங்கிய பழைய மாணவர்களுக்கும் இதற்கான ஏற்பாடுகளை அயராது மேற்கொண்ட பகுதித் தலைவி திருமதி இரஞ்சினி சிவராஜா அவர்களுக்கும் கல்லூரிச் சமூகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

கல்லூரியின் வளங்களுள் பெரும் பாலானவை எமது மாணவர்களுக்கு மட்டுமன்றி இடர்மிகுந்த காலங்களிலெல்லாம் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு பேருதவியாக அமைந்து வந்துள்ளன. ஆழிப்பேரலைப் பேரனர்த்தம் மற்றும் வன்னி மக்களின் இடப்பெயர்வு என்பவற்றின்போது பாடசாலையின் வளங்கள் முற்றுமுழுதாகவே அத்தகைய நிலைக்குட் பட்டிருந்தன. குறிப்பாக வன்னி மக்களின் இடப்பெயர்வின்போது (2009 ஏப்ரல் - ஜூன்) எமது கல்லூரியின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டு பாடசாலையின் கட்டடங்கள் அனைத்தும் இடம்பெயர்ந்தோர் முகாமாகப் பயன்படுத்தப் பட்டன. அக்காலகட்டத்தில் காலை வேளையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் மாலைவேளையில் நமது கல்லூரியும் இயங்கின. அந்த வகையில் கல்லூரியின் வளங்கள் நமது மாணவர்களுக்கு மட்டுமன்றி நம் சமூகத்திற்கும் பயன்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியின் வரலாற்றில் இழந்துபோன பல வசதிகளும் மறைந்துபோன பல செயற்பாடுகளும் மீண்டும் ஏற்படுத்தப் பட்டுள்ளமையையிட்டு கல்லூரிச் சமூகம் திருப்தியும் பெருமையும் கொள்கின்றது. கல்லூரி வரலாற்றில் முதன்முறையாக சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் "வண்ண இரவுகள்" நிகழ்ச்சி வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான பெருவிளையாட்டுக்களுடன் கடேற் பயிற்சியும் மீண்டும் வினைத்திறனுடன் முன்னெடுக்கப் படுகின்றது.எமது கல்லூரியின் ஆண், பெண் இருபாலாருக்குமான பெரும்பாலான விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் தேசிய மட்டம் வரை பங்குபற்றியும் வெற்றியீட்டியும் சாதனை படைத்தமைக்கு முன்னாள் உடற்கல்வி ஆசிரியர் திரு.இ.இராஜசீலன் பெரும்பங்காற்றினார். சிறந்த முறையில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளையும் ஏனைய விளையாட்டு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து ஓர் உதாரண நிலைக்கு கல்லூரியின் விளையாட்டுத் துறையை மேம்படுத்தினார். அவரது சேவையை கல்லூரிச் சமூகம் நன்றியறிதலோடு பாராட்டுகின்றது. பாடசாலைச் சமூகத்தின் கல்லூரிமீதான அக்கறை அதிகரித்துள்ளது. மாணவர் அனுமதிவீதம் வேகமாக அதிகரித்து வருவதுடன் கல்லூரியின் கீர்த்திநாமமும் அதிகரித்தள்ளது. மாணவர்களுக்கான வசதிகள் மேம்பட்டுள்ளதுடன் நவீன தகவல் தொடர்பாடல் கல்வியில் விரிவாக்கமும் தரமும் மேம்பட்டுள்ளன. மாணவர்களது உடை, ஒழுங்கு, ஒழுக்கம் முதலியவற்றின்மீது அதீத அக்கறை காட்டப்பட்டுள்ளமையால் அவை ஒரு உன்னத நிலைக்கு உயர்ந்துள்ளன. கல்லூரி மீதான அபிமானமும் பற்றுரிமையும் மாணவர்களிடம் அதிகரித்துள்ளமையானது கல்லூரியின் தரமேம்பாட்டுக்கான அறிகுறியாகும். நாடளாவியரீதியில் இக்கல்லூரிக்கென ஒரு தனியான சிறப்புநிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ள இன்றைய நிலையில் இந்த ஆரோக்கியமான சமூக உறவும் முகாமைத்துவ கலாசாரமும் தொடர்ந்து பேணப்படுமாயின் எமது கல்லூரி எதிர்காலத்தில் ஓர் சமநிலை வளர்ச்சிபெற்ற உதாரண பாடசாலையாக அமையும்.

## எமது அதிபர்கள் வரிசையில்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.V.சிதம்பரப்பிள்ளை | - | |
| 02. | திரு.T.சிதம்பரப்பிள்ளை | - | |
| 03. | திரு.S.காசிநாதர் | - | |
| 04. | திரு.S.துரையப்பா | - | |
| 05. | திரு.V.சின்னையா | - | |
| 06. | திரு.R. இராசயினார் | - | |
| 07. | திரு.S.துரையப்பா | - | |
| 08. | Dr.S.சிவப்பிரகாசம் | - | |
| 09. | திரு.A.T.சபாரத்தினம் | - | |
| 10. | திரு. S. இரத்தினசபாபதி | - | |
| 11. | திரு.K.சிவசிதம்பரம் | - | (1967 - 1972) |
| 12. | திரு.V.K.நல்லையா | - | (1973 - 1975) |
| 13. | திரு.K.குணரட்ணம் | - | (1975.05.08 - 1982.07.21) |
| 14. | திரு.S.றோய்காந்தராசா | - | (1982.07.21 - 1991.01.24) |
| 15. | திரு.K.நடராஜா (பதில் அதிபர்) | - | (1991.01.24 - 1991.03.20) |
| 16. | திரு.V.அருளானந்தம் | - | (1991.03.20 - 1992.02.05) |
| 17. | திரு.S.சிற்றம்பலம் | - | (1992.02.05 - 2001.12.02) |
| 18. | திரு.S.சேதுராஜா | - | (2001.12.02 இலிருந்து ) |

## எமது ஆசிரியர்கள் வரிசையில் .....

எமது கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் முழுவரினதும் பெயர்களைப் பெறமுடியாதிருந்த போதிலும் 1975ஆம் ஆண்டிலிருந்து இக்கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றனர். எனினும் 1975 ஆம் ஆண்டில் கற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியர்கள் இக்கல்லூரியில் நியமனம் பெற்ற ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

| இல. | ஆசிரியப் பெருந்தகைகள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | திரு.த. பாலேந்திரன் | 1961 |
| 2 | திரு.க. இரங்கநாதன் * | 1962 |
| 3 | திரு.ஆ. இராசரத்தினம் * | 1963 |
| 4 | திரு.த.சிதம்பரப்பிள்ளை | 1969 |
| 5 | திருமதி. மேரிஅன்னமலர் யுவக்கிம் | 1969 |
| 6 | திரு.ச. றோய்காந்தராஜ் | 1970 |
| 7 | திரு.த. கிட்டினன் | 1970 |
| 8 | திரு.செ. ஏரம்பசாமா * | 1971 |
| 9 | திருமதி.செ. மயில்வாகனம் * | 1971 |
| 10 | திருமதி.நா.செல்வராஜா | 1971 |
| 11 | திரு.S.K. பரம்சோதி | 1972 |
| 12 | திரு.சி.இராமலிங்கதேவர் | 1972 |
| 13 | திரு.பொ. ஆறுமுகம் | 1972 |
| 14 | திரு.சி. அம்பிகாவரன் | 1973 |
| 15 | திரு.க. இராசையா * | 1973 |
| 16 | திரு.சி.தங்கராசா | 1973 |
| 17 | திருமதி.ய. கந்தவனநாதன் | 1973 |
| 18 | திருமதி.மீ. சந்திரசேகரம் | 1973 |
| 19 | திரு.ம. இராமச்சந்திரன் | 1974 |
| 20 | திரு.க. வல்லிபுரநாதன் * | 1974 |
| 21 | திரு.வீ. நடேசு * | 1974 |
| 22 | திருமதி.சு.சறோஜினிதேவி | 1974 |
| 23 | திரு.க. குணரத்தினம் * | 1975 |
| 24 | திரு.க. குணபாலசுப்ரமணியம் | 1975 |
| 25 | திரு.வி.இராமலிங்கம் | 1975 |
| 26 | திருமதி.ச. சிவஞானசுந்தரம் | 1975 |
| 27 | திரு.த. அருமைத்துரை | 1975 |
| 28 | திருமதி.ம. மகேந்திரா | 1976 |
| 29 | திருமதி.சி. சிறீஸ்கந்தராசா | 1976 |
| 30 | திரு.J.C. சிவஞானசுந்தரம் * | 1977 |
| 31 | திரு.சி.நடராசா | 1977 |
| 32 | திரு.ந. அழகரத்தினம் | 1977 |
| 33 | திரு.க.நவரத்தினம் | 1977 |
| 34 | திரு.சா. யோகராசா | 1977 |
| 35 | திருமதி.க.ரகுபதி | 1977 |
| 36 | திருமதி.பி.சண்முகம் | 1977 |
| 37 | திருமதி.க.செல்வரத்தினம் | 1977 |
| 38 | திருமதி.அ. கோமளபுஸ்பராணி | 1977 |
| 39 | செல்வி.வே. புவனேஸ்வரி | 1977 |
| 40 | செல்வி.தே.முருகேசபிள்ளை | 1977 |
| 41 | திருமதி.S. சிவனேசன் | 1977 |
| 42 | திரு.கி. நடராசா | 1978 |
| 43 | திரு.அ. விஜயநாதன் | 1978 |
| 44 | திருமதி.செ. பாலசிங்கம் | 1978 |
| 45 | திருமதி.சி. வேதநாயகி | 1978 |
| 46 | செல்வி.ந. வசந்தி | 1978 |
| 47 | திரு.ச. தேவராஜன் | 1978 |
| 48 | திரு.க.பாலசுப்ரமணியம் | 1978 |
| 49 | திரு.A. தர்மலிங்கம் | 1978 |
| 50 | திரு.P.சிவகுருநாதன் | 1978 |
| 51 | திரு.M. இராமச்சந்திரன் | 1978 |
| 52 | திரு.K.V. நாதன் | 1978 |
| 53 | திரு.S. ஆனந்தராசா | 1978 |
| 54 | திரு.S ஆனந்தராஜா | 1978 |
| 55 | திரு.K. குலசேகரம் | 1978 |
| 56 | திரு.A. எம்பெருமான் | 1978 |
| 57 | திரு.K. இலங்கநாதன் | 1978 |
| 58 | திரு.K.சிதம்பரப்பிள்ளை | 1978 |
| 59 | திருமதி.K.G.மனுநீதி | 1978 |
| 60 | திரு.S.சுந்தரலிங்கம் | 1978 |
| 61 | திரு.K.செல்வரட்ணம் | 1978 |
| 62 | திருமதி.N.பாலேந்திரன் | 1978 |
| 63 | திரு.S. பாலகிருஷ்ணன் | 1978 |
| 64 | திருமதி.S.அருள்லிங்கம் | 1978 |
| 65 | திரு.K.P. அருளானந்தம் | 1978 |
| 66 | செல்வி.M. சின்னையா | 1978 |
| 67 | திரு.S.சிவம் | 1979 |
| 68 | திரு.P. சிவசெந்தில்நாதன் * | 1979 |
| 69 | திரு.M. நிக்ளாப்பிள்ளை * | 1979 |
| 70 | திரு.S. தம்பிராஜா | 1979 |
| 71 | திரு.S. கருணானந்தம் | 1979 |
| 72 | திருமதி.S.புஸ்பலிங்கம் | 1979 |
| 73 | திரு.V. நவரட்ணம் | 1979 |
| 74 | திரு.S. கருணேஸ்வரன் | 1979 |
| 75 | திரு.B. வெற்றிவேல் | 1980 |
| 76 | திரு.S. விநாயகமூர்த்தி | 1980 |
| 77 | திரு.V. கைலாயபிள்ளை | 1980 |
| 78 | திரு.S. மனோகரன் | 1980 |
| 79 | திரு.B. இராமகிருஷ்ணா் | 1980 |
| 80 | திரு.A.K. குணசிங்கராசா * | 1980 |
| 81 | திரு.K. வல்லிபுரநாதன் * | 1981 |
| 82 | திரு.M. புவனேந்திரன் | 1981 |
| 83 | திருமதி.V. மகேந்திரன் | 1981 |
| 84 | செல்விப.செகராசசிங்கம் | 1981 |
| 85 | திரு.K.சிவபாதம் | 1981 |
| 86 | திரு.M.பொன்னம்பலம் | 1981 |
| 87 | திருமதி.S. சங்கரப்பிள்ளை | 1981 |
| 88 | செல்வி.G. நவரத்தினராசா | 1981 |
| 89 | திருமதி.E.M. நவரத்தினராசா | 1981 |
| 90 | செல்வி.V. ராதாசந்திரவதி | 1981 |

| | | |
|---|---|---|
| 91 | திரு.K. சிவானந்தன் * | 1982 |
| 92 | செல்வி.S. பொன்னம்பலம் | 1982 |
| 93 | திருமதி.R.குலவீரசிங்கம் | 1982 |
| 94 | திரு.N. வரதராசா | 1982 |
| 95 | திரு.V. சிவசுப்ரமணியம் | 1982 |
| 96 | திரு.S. பாலேந்திரன் | 1983 |
| 97 | திரு.K. சதாசிவமூர்த்தி | 1984 |
| 98 | திரு.V. வல்லிபுரம் | 1984 |
| 99 | திருமதி.S. பாலேந்திரா | 1984 |
| 100 | திருமதி.S. சிவமூர்த்தி | 1984 |
| 101 | திரு.K.S. குமாரதாசன் | 1984 |
| 102 | திரு.P. உருத்திரராசா | 1984 |
| 103 | திருமதி.K. தங்கலட்சுமி | 1984 |
| 104 | செல்வி.T. சறோஜா | 1985 |
| 105 | திருமதி.P. பாலசுப்ரமணியம் | 1985 |
| 106 | திரு.N. குலேந்திரராஜா | 1985 |
| 107 | திரு.T. நாகேந்திரராசா | 1985 |
| 108 | திரு.V. செல்வராசா | 1985 |
| 109 | திரு.K. குலராஜேந்திரம் | 1985 |
| 110 | திரு.B. வேணுகோபால்வாணிதர்சன் * | 1985 |
| 111 | திருமதி.S. குணரட்ணம் | 1985 |
| 112 | திரு.K. சிதம்பரப்பிள்ளை | 1985 |
| 113 | திரு.R. ஞானசேகரம்பிள்ளை | 1985 |
| 114 | செல்வி.A. கந்தசாமி | 1986 |
| 115 | செல்வி.R.D.குமாரசாமி | 1986 |
| 116 | திருமதி.V. தேவச்சந்திரன் | 1986 |
| 117 | திரு.S. சிவபாதசுந்தரம் | 1987 |
| 118 | திரு.K. ராமஜெயம் | 1987 |
| 119 | திருமதி.J. வாமதேவன் | 1987 |
| 120 | செல்வி.M. நடராசா | 1987 |
| 121 | திரு.V. சிவசுப்பிரமணியம் | 1988 |
| 122 | திரு.V. பாலசுப்பிரமணியம் | 1988 |
| 123 | திரு.V. கிருஷ்ணபிள்ளை | 1989 |
| 124 | திரு.I. செல்வராசா | 1989 |
| 125 | திரு.V. கணபதிப்பிள்ளை | 1989 |
| 126 | திருமதி.R. சோமசுந்தரம் | 1989 |
| 127 | செல்வி.G. சிதம்பரநாதன் | 1989 |
| 128 | செல்வி.Y. கணபதிப்பிள்ளை | 1989 |
| 129 | திருமதி.I. யோகராசா | 1989 |
| 130 | திரு.R. குகதாசன் | 1989 |
| 131 | திரு.A. அரியரத்தினம் | 1989 |
| 132 | திருமதி இ.சிவராஜா | 1989 |
| 133 | செல்வி.S. சதாசிவம் | 1989 |
| 134 | செல்வி.S. சோதிமயம்சோதி | 1989 |
| 135 | செல்வி.B. கிருபாகரன் | 1989 |
| 136 | திரு.R. ராகவன் | 1990 |
| 137 | திரு.K. ஈஸ்வரதேவன் | 1990 |
| 138 | திருமதி.S. இராசசுந்தரம் | 1990 |
| 139 | செல்வி.S. செல்வராணி | 1990 |
| 140 | செல்வி.K. அனுசியா | 1990 |
| 141 | செல்வி.R. வெண்மதி | 1990 |
| 142 | செல்வி.C. தமயந்தி | 1990 |
| 143 | திருமதி.S. பசுபதிராஜா | 1990 |
| 144 | திரு.T. நாகேந்திரராசா | 1990 |
| 145 | திரு.S. மகேந்திரன் | 1992 |
| 146 | திரு.இ. ஸ்ரீரங்கநாதன் | 1992 |
| 147 | செல்வி.ம. செல்லத்துரை | 1992 |
| 148 | திரு.த. பாலகுமார் | 1992 |
| 149 | திரு.பொ. இரட்ணராஜா | 1992 |
| 150 | திருமதி.ம நற்குணலிங்கம் | 1992 |
| 151 | செல்வி.த. குமுதினி | 1992 |
| 152 | திரு.ச. சரவணபவன் | 1992 |
| 153 | செல்வி.S. கணேஷன் | 1992 |
| 154 | செல்வி.வி. இராசரத்தினம் | 1992 |
| 155 | செல்வி.S. சேனாதிராசா | 1992 |
| 156 | செல்வி.ஆ. சசிகலாதேவி | 1993 |
| 157 | செல்வி.பா. கந்தசாமி | 1994 |
| 158 | திரு.K. கிருஷ்ணயோகன் | 1994 |
| 159 | திருமதி.சு. ஸ்ரீபவன் | 1994 |
| 160 | திரு. க. நித்தியானந்தன் | 1995 |
| 161 | திரு.I. சண்முகலிங்கம் | 1996 |
| 162 | திருமதி.ம. விநாயகமூர்த்தி | 1996 |
| 163 | செல்வி.த. தங்கராசா(சற்குணராசா) | 1998 |
| 164 | செல்வி.த. மங்கயற்கரசி | 1998 |
| 165 | திரு.க. கிருஷ்ணகுமார் | 1998 |
| 166 | திருமதி.கௌ. துரைராசா | 1998 |
| 167 | திருமதி.ம. பிரணவன் | 1998 |
| 168 | செல்வி.நி. வியாகேசு | 1998 |
| 169 | திரு.கி. அழகேந்திரராசா | 1998 |
| 170 | செல்வி.ந. ஜெயபாரதி | 1998 |
| 171 | திரு.சு. குகனேசன் | 1998 |
| 172 | செல்வி.எ.எஸ். ஜெயவதி | 1998 |
| 173 | திருமதி.ச. ஆழ்வாப்பிள்ளை | 1998 |
| 174 | செல்வி.ந. ஜெயகௌரி | 1998 |
| 175 | திருமதி.ம. விக்னேஸ்வரன் | 1999 |
| 176 | திருமதி.வ. சுதாஸ் | 1999 |
| 177 | திருமதி.வி. அரியதாஸ் | 2000 |
| 178 | திருமதி.லீ. வேலும்மயிலும் | 2000 |
| 179 | திரு.நா. மகேந்திரன் | 2001 |
| 180 | திருமதி.க. விக்னராசா | 2001 |

| | | |
|---|---|---|
| 181 | திருமதி.J. நடராசா | 2001 |
| 182 | திரு.வே. புவனேந்திரராசா | 2001 |
| 183 | திருமதி.பு துரைசிங்கம் | 2001 |
| 184 | திரு.செ. சேதுராசா | 2001 |
| 185 | செல்வி.சி. லோகேஸ்வரி | 2002 |
| 186 | திரு.இ. இராஜசீலன் | 2002 |
| 187 | திரு.ச. உருத்திரகுமார் | 2002 |
| 188 | திருமதி.சா. சிறீஸ்குமார் | 2002 |
| 189 | திரு.ஆ சிவநாதன் | 2002 |
| 190 | திருமதி.தே. துஷ்யந்தன் | 2002 |
| 191 | திருமதி.S. சுரேஸ் | 2002 |
| 192 | திரு.இ. உதயசங்கர் | 2003 |
| 193 | திருமதி.இ. சிவபாலன் | 2004 |
| 194 | திருமதி.ம. உதயகுமாரன் | 2004 |
| 195 | திரு.S. சண்முகநாதன் | 2005 |
| 196 | திருமதி.வா. ஸ்கந்தபாபு | 2005 |
| 197 | திரு.வீ. சுதர்ஷன் | 2005 |
| 198 | திரு.செ. மனோகரன் | 2005 |
| 199 | திருமதி.AM.J. நாகராஜா | 2005 |
| 200 | செல்வி.க. தயா | 2005 |
| 201 | திரு.சி. தனேந்திரன் | 2005 |
| 202 | திருமதி.சு. செல்வகுமார் | 2005 |
| 203 | செல்வி.பொ. ரஜனி | 2005 |
| 204 | செல்வி.T.பாலச்சந்திரன்(பிரேமச்சந்திரன்) | 2005 |
| 205 | திரு.N. கண்ணதாசன் | 2005 |
| 206 | திரு.கு. தெட்சணாமூர்த்தி | 2005 |
| 207 | திரு.S. சிறீவிமலகாந்தன் | 2005 |
| 208 | திரு.வே. விநாயகமூர்த்தி | 2005 |
| 209 | செல்வி.த. உமா | 2006 |
| 210 | திருமதி.த. தவனேசன் | 2006 |
| 211 | திரு.S. ஞானச்செல்வன் | 2006 |
| 212 | திருமதி.R. நகுலன் | 2006 |
| 213 | செல்வி.S. ராஜினி | 2007 |
| 214 | திருதி.R. சுகேந்திரன் | 2007 |
| 215 | திரு.R. சண்முகதாஸ் | 2007 |
| 216 | செல்வி.வீ. யாழினி | 2007 |
| 217 | திருமதி.R. அருளானந்தம் | 2008 |
| 218 | திரு.P. செல்வகுமார் | 2008 |
| 219 | திருமதி.V. தேவானந்த் | 2008 |
| 220 | திரு.K. அம்பிகைபாகன் | 2008 |
| 221 | திரு.S. அமரஜோதி | 2008 |
| 222 | திரு.T. ரஜனிக்காந் | 2008 |
| 223 | திரு.S. மதுசூதனன் | 2008 |
| 224 | செல்வி த.தபோதினி | 2008 |
| 225 | செல்வி ச.வசந்தி | 2009 |
| 226 | திரு க.உதயசீலன் | 2009 |
| 227 | திருமதி பு.இந்திரநாதன் | 2009 |
| 228 | திரு பொ.வரகராஜா | 2009 |
| 229 | திரு வே.நாகராஜா | 2009 |
| 230 | திரு ப.கேசவன் | 2009 |
| 231 | திருமதி ர.குலவரதராஜா | 2009 |
| 232 | திரு சி.ராஜீவ் | 2009 |
| 233 | திருமதி ம.கண்ணதாசன் | 2010 |
| 234 | திரு நா.மயூரன் | 2010 |
| 235 | திரு க.குணசுந்தர் | 2010 |
| 236 | திருமதி செள.பத்மகுமாரன் | 2010 |
| 237 | திருமதி பி.இராஜசேகரன் | 2010 |
| 238 | திருமதி சு.ஜெயானந்தகுமார் | 2010 |
| 239 | திரு த.ரமேஸ்வரன் | 2010 |
| 240 | செல்வி யோ.வல்லிபுரம் | 2010 |
| 241 | செல்வி யோ.கந்தப்பு | 2010 |
| 242 | திரு தெ.ஈஸ்வரன் | 2010 |
| 243 | திருமதி ச.ராசேந்திரன் | 2010 |
| 244 | திருமதி ந.சுகந்தன் | 2011 |
| 245 | திருமதி வ.புஸ்பராசா | 2011 |
| 246 | திரு வி.மரியதாஸ் | 2011 |
| 247 | திரு நா.பிரபாகரன் | 2011 |
| 248 | திரு கா.சிவநேசன் | 2011 |
| 249 | திரு ச.உதயநாதன் | 2011 |
| 250 | திருமதி கீ.ரவிக்குமார் | 2011 |
| 251 | திரு யோ.வாசுதேவன் | 2011 |

## எமது கல்லூரியில் முன்னர் பயன்பாட்டில் இருந்தவை

கல்லூரி இலச்சினை


புவியியல் மன்றத்திற்கென பயன்படுத்தப்பட்ட இலச்சினை

முன்னைய தொலைபேசி இலக்கம் : 892

## எமது கல்லூரிக்கான காணிக்கொள்வனவு தொடர்பான விபரங்கள்.


எமது கல்லூரிக்கென தற்போதுள்ள காணி 1919 , 1947, 1959 ஆகிய ஆண்டுகளில் மூன்று கட்டங்களாகச் சுவீகரிக்கப்பட்டுள்ளது. அக்காணிகளின் வரைபடங்களும், உரிமையாளர்களின் பெயர் விபரங்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

**கட்டம் – 1**





| இல | காணியின் பெயர் | உரிமையாளரின் பெயர் | அளவு | | |
|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர் | றூட் | பேர்ச் |
| 1 | கடவாயில் பருத்தி | வள்ளியம்மை கைம்பெண் முருகப்பர் | 0 | 0 | 23.4 |
| 2 | அனுமக்கொடியன் சீமா | ஆழ்வார் கணபதிப்பிள்ளை | 0 | 1 | 0.6 |
| 3 | ஒழுங்கை | - ( Crown - முடிக்குரியது ) | 0 | 0 | 2.6 |
| 4 | அனுமக்கொடியன் சீமா | வேதாத்தை பெண் இளையதம்பி சின்னத்தம்பி, நாகநாதர் சண்முகம், கதிர்காமர் முரகப்பர் மற்றுமவேலுப்பிள்ளை ஆறுமுகம் | 0 | 1 | 15.3 |
| 5 | வண்ணன் சீமா | கந்தர் வேலுப்பிள்ளை | 0 | 0 | 20.7 |
| 6 | .- do - | கந்தர் குமாரசாமி, கந்தர் வைத்திலிங்கம், சின்னக்குட்டி பெண் வேலுப்பிள்ளை தெய்வானை பெண் பொன்னம்பலம் | 0 | 1 | 9.4 |
| 7 | .- do - | பிள்ளைநார் கார்த்திகேசு | 0 | 1 | 21.7 |
| 8 | .- do - | வைரவநாதர் கதிரித்தம்பி, கதிரித்தம்பி குமாரசூரியர், கதிரித்தம்பி சிவகுரு | 0 | 1 | 14.4 |
| | | மொத்தம் | 1 | 3 | 28.1 |

## கட்டம் - 2




| காணியின் பெயர் | உரிமையாளரின் பெயர் | அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட் | பேர்ச் |
| | | A | R | P |
| வெல்வத்தை | கந்தையா சுந்தரம்பிள்ளை | 0 | 0 | 6.6 |
| ஆராய்ச்சிக் கிணற்றடி | வல்லிபுரம் செல்லையா | 0 | 0 | 28.1 |
| .- do - | கார்த்திகேசு இராசையா | 0 | 0 | 31.9 |
| திலகுப்பதிராயன் கிணற்றடி | வைரவப்பிள்ளை பொன்னையா<br>வைரவப்பிள்ளை கந்தவனம்<br>கதிரித்தம்பி அம்பலவாணி<br>அப்பர் வள்ளிப்பிள்ளை கைம்பெண் ஆழ்வார் சுப்பர், பானுவதி கைம்பெண் கந்தப்பர் , வல்லியப்பர் கார்த்திகேசு, கந்தையா சுந்தரம்பிள்ளை, வைரவி ஆறுமுகம், வைரவி சண்முகம், கார்த்திகேசு இராசையா, வல்லியப்பர் வீரகத்தி, கதிர்காமு கார்த்திகேசு. | 1 | 3 | 23.5 |
| பொச்சி | கனகரட்ணம் பிள்ளையார் கோயில்<br>(தர்மகர்த்தா நாகலிங்கம் கனகசிங்கம்) | 0 | 2 | 25.1 |
| கடவாயில் பருத்தி கொல்லன் குடியிருப்பு பருத்தியோலை | தம்பு சுந்தரம், வைரவி ஆறுமுகம், கந்தப்பர் கிருஷ்ணபிள்ளை, கந்தையா சின்னையா, சிவகுரு பொன்னையா, கார்த்திகேசு மார்க்கண்டு, கந்தப்பர் வேலுப்பிள்ளை, வல்லியப்பர் சின்னத்தம்பி, வல்லியப்பர் வீரகத்தி, சின்னவி வேலப்பன், வைரவி ஆழ்வாப்பிள்ளை, வேலப்பர் கதிர்காமு, கந்தையா சண்முகம், சின்னையா சுப்பிரமணியம், வேலப்பர் கந்தவனம் | 0 | 2 | 35.3 |
| | மொத்தம் | 3 | 2 | 30.5 |


## கட்டம் – 3




| இல | காணியின் பெயர் | உரிமையாளரின் பெயர் | அளவு | | |
|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர் | றூட் | பேர்ச் |
| 1 | எக்கடியான் | A.பொன்னையா (அல்வாய் தெற்கு)<br>S.முருகேசம்பிள்ளை (அல்வாய் தெற்கு)<br>V.கந்தவனம்(கரவெட்டி வடக்கு)<br>V.முருகேசு (கரவெட்டி வடக்கு)<br>V.சின்னத்துரை (கரவெட்டி வடக்கு)<br>M.மார்க்கண்டு (கரவெட்டி வடக்கு)<br>செல்லம்மா கைம்பெண் செல்லத்துரை<br>N.கோவிந்தராஜா (கரவெட்டி வடக்கு)<br>N.ராமகிருஷ்ணன் (கரவெட்டி வடக் | 0 | 2 | 34.4 |
| 2 | எக்கடியான் | (ஒழுங்கை) -do- | 0 | 0 | 5.9 |
| 3 | வடலித் தோட்டம் & விளாப்பு | வைத்திலிங்கம் நடராசா | 0 | 0 | 26.6 |
| 4 | விளாப்பு & பருத்தியோலை | கந்தவனம் இரத்தினசிங்கம்<br>நாகப்பர் வல்லிபுரம்<br>ஆறுமுகம் வேலுப்பிள்ளை | 0 | 0 | 35 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | எக்கடியான் | கனகரட்ண பிள்ளையார் கோவில்<br>Trustees :-<br>S.தியாகராஜா<br>T.சே.சபாரட்ணம்<br>N.கனகசிங்கம்<br>N.சுப்பிரமணயம் | 0 | 2 | 4.4 |
| 6 | சீமா | K.இராசையா | 0 | 0 | 7 |
| 7 | தேவரவாய்க்கால் | தங்கம்மா பெண் பரிபூரணம்<br>V.பொன்னையா<br>K.வடிவேலு<br>K.ஆறுமுகம் & தெய்வானை பெண் சின்னையா<br>ஆறுமுகம் வேலுப்பிள்ளை<br>கார்த்திகேசு மார்க்கண்டு<br>ஏ.கந்தசாமி ரூ ஏ.கணபதிப்பிள்ளை | 0 | 2 | 35.1 |
| 8 | தேவரவாய்க்கால் | S.வல்லிபுரம்<br>V.தம்பையா<br>S.கேதப்பர்<br>K.தம்பையா<br>K.சின்னையா<br>V.செல்லையா & சின்னம்மா பெண் சுந்தரம்பிள்ளை | 0 | 1 | 20.2 |
| | | மொத்தம் | 2 | 5 | 6.6 |

இவற்றைவிட நான்காவது கட்டமாக எமது கல்லூரிச் சமூகத்தின் விருப்பின்பேரில் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்புச் செய்யும் நோக்கத்துடன் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் நிதி அநுசரணையோடு திரு.க.சந்திரகுமார் மற்றும் அவரது சகோதரர்களுக்குச் சொந்தமான மூன்றரைப் பரப்புக் காணி 2008.06.18 இல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதன் கிடைப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




# எமது சாதனை மாணவர்கள்

| வருடம் | மாணவர் பெயர் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| | **கணிதப் புதிர்ப்போட்டிகள்** | | |
| 2007 | செல்வன் கலாமணி மதனாகரன் | .1ம் இடம் | தேசிய மட்டத்தில் போட்டிகள் நடைபெற வில்லை |
| 2008 | செல்வன் கலாமணி மதனாகரன் | 1ம் இடம் | |
| | செல்வி விதுர்ஷா லிங்கரட்ணம் | 1ம் இடம் | |
| | செல்வி துவாரகா தர்மகுலசிங்கம் | 1ம் இடம் | |
| | செல்வி ஆர்த்திகாயினி சுப்பிரமணியம் | 2ம் இடம் | |
| | செல்வி துஷிதா மனோகரன் | 2ம் இடம் | |
| | செல்வி வினோதா கைலாயபிள்ளை | 3ம் இடம் | |
| | செல்வன் கதிர்காமராஜா பிரதீப் | 1ம் இடம் | |
| 2009 | செல்வன் கலாமணி மதனாகரன் | 1ம் இடம் | |
| | செல்வி விதுர்ஷா லிங்கரட்ணம் | 2ம் இடம் | |
| | செல்வி துஷிதா மனோகரன் | 3ம் இடம் | |
| 2010 | செல்வன் கலாமணி மதனாகரன் | 1ம் இடம் | |
| | செல்வி விதுர்ஷா லிங்கரட்ணம் | 1ம் இடம் | |
| | செல்வி துஷிதா மனோகரன் | 3ம் இடம் | |
| | செல்வி சஞ்சிகா செல்வராஜா | 2ம் இடம் | |
| | செல்வி லக்ஷிப்பிரியா | 3ம் இடம் | |
| 2011 | செல்வன் கலாமணி மதனாகரன் | 1ம் இடம் | |
| | செல்வி விதுர்ஷா லிங்கரட்ணம் | 1ம் இடம் | |
| | செல்வி துஷிதா மனோகரன் | 1ம் இடம் | |
| | செல்வி அபிஷேகா தபேந்திரன் | 1ம் இடம் | 1ம் இடம் |
| | | | |
| | **கணித ஒலிம்பியாட் போட்டி** | | |
| 2008 | செல்வி துஷிதா மனோகரன் | 1ம் இடம் | 6ம் இடம் |
| 2010 | செல்வி விதுர்ஷா லிங்கரட்ணம் | | |
| | செல்வன் யோகலிங்கம் ரகீசன் | | |
| | செல்வி அபிஷேகா தபேந்திரன் | | |
| | | | |
| | **Sri Lankan Mathematics Junior challenge Competition - National Level** | | |
| 2011 | செல்வி ஆர்த்திகாயினி சுப்பிரமணியம் | | |
| | செல்வி துஷிதா மனோகரன் | | |
| | செல்வன் கலாமணி மதனாகரன் | | |
| | செல்வன் விக்னராஜா அஜந்தன் | | |
| | செல்வன் ஆதர்ஷன் | | |
| | செல்வன் யோகலிங்கம் சுஜந்தன் | | |
| | செல்வி விதுர்ஷா லிங்கரட்ணம் | | |
| | | | |
| | **Sri Lankan Mathematics Junior challenge Competition - National Level** | | |
| 2011 | செல்வன்.சிவசுப்பிரமணியம் தனுஷன் | | 1ம் இடம் |
| | செல்வன்.கதிர்காமராஜா பிரதீப் | | |

| | | | |
|---|---|---|---|
| | **தமிழ்த்தினப் போட்டி** | | |
| 2008 | செல்வி சாமந்தி நித்தியானந்தன் (பாவோதல்) | 2ம் இடம் | |
| 2009 | செல்வன் அம்பிகாநிதி கோகுலன் (கவிதையாக்கம்) | 1ம் இடம் | 1ம் இடம் |
| 2010 | செல்வன் அம்பிகாநிதி கோகுலன் (குறுநாடக ஆக்கம்) | 1ம் இடம் | 1ம் இடம் |
| | செல்வி சாமந்தி நித்தியானந்தன் (பாவோதல்) | 2ம் இடம் | |
| | **ஆங்கிலதினப் போட்டி** | | |
| 2008 | செல்வி பவிதா சிவகணேசமூர்த்தி (Oratory) | 2ம் இடம் | |
| | செல்வி துவாரகா தர்மகுலசிங்கம் (Creative Writing) | 2ம் இடம் | |
| 2009 | செல்வி துஷிதா மனோகரன் (Creative Writing) | 1ம் இடம் | |
| | செல்வி அபிநயா சிவானந்தன் (Copy Writing) | 3ம் இடம் | |
| | **சமூக விஞ்ஞானப் போட்டி** | | |
| 2010 | செல்வன் தபேந்திரராஜா அனோஜன் | 2ம் இடம் | |
| | செல்வி துவாரகா தர்மகுலசிங்கம் | 2ம் இடம் | |
| | செல்வி துஷிதா மனோகரன் | 1ம் இடம் | |
| | Sir Oliver Gunatilaka Memorial Award | | |
| 2008 | செல்வன் கிருஷ்ணராஜா சாயிருபன் | 3ம் இடம் | |
| | மென்பொருளாக்கப் போட்டி | | |
| 2008 | செல்வி சஞ்சிகா செல்வராஜா | சிறப்புப் பரிசு | |
| 2009 | செல்வி மயூரா செல்வராஜா | சிறப்புப் பரிசு | |
| 2010 | செல்வி மயூரா செல்வராஜா | சிறப்புப் பரிசு | |
| | செல்வன் ஜெயபாலன் கீர்த்தனன் | சிறப்புப் பரிசு | |
| | **சாரணியம் - ஜனாதிபதி விருது** | | |
| 2010 | செல்வன் பாலகாந்தன் அகிலன் | | |
| | செல்வன் ஆரோக்கியதாஸ் பிரகாஷ் | | |
| | Do You Know Competition | | |
| 2010 | செல்வன் இராமநாதன் ஸ்ரீதிவாகரன் | | |
| | செல்வி மாதங்கி கிருஷ்ணதாசன் | | |
| | Mother Sri Lanka (விவாதம்) | | |
| 2010 | செல்வன் அம்பிகாநிதி கோகுலன் | | |
| | செல்வன் உருத்திரசிவகணேசமூர்த்தி பிரணவதர்சன் | | |
| | செல்வன் பஞ்சலிங்கம் பிரசாத் | | |
| | செல்வன் சுப்பிரமணியம் வினோத் | | |
| | செல்வன் பாலகாந்தன் அகிலன் | | |
| | செல்வன் வல்லிபுரம் பிரகீத் | | |
| | செல்வன் சிவராஜசிங்கம் சிவசங்கர் | | |
| | செல்வன் தனபாலசிங்கம் தனுஷன் | | |
| | CIMA Spell Master | | |
| 2010 | செல்வி ஆதித்தியா நேசராசா | | |
| | மொறட்டுவ பல்கலைக்கழக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பீடத்தின் 10ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட தேசிய மட்ட கட்டுரைப் போட்டி | | |
| 2011 | செல்வன் வைத்தியசூரம் கோகுலதரன் | | 1ம் இடம் |

# நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
## குறுக்குமுகப் பார்வை



இன்றைய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வித்து, அதன் ஆரம்பநிலை, அன்று இயங்கிவந்த மாதிரி பாடசாலை தான். அதை Model School என்று அழைத்தார்கள். ஒரு "ட" வடிவ கட்டிடம் வகுப்புகள் இங்கே தான் நடந்தன. முன்பக்கத்தில் ஒரு கிணறு அதன் பக்கத்தில் ஒரு நெல்லிமரம். அதன் காய்கள் "பச்சைக்கச்சல்" நாங்கள் ஒரு சிறு கூட்டம் நெல்லிக்காய் களவாடப்போவோம். மரத்தில் நிற்கும் பொழுது, ஏதோ மணத்தாற்போன்று தலைமை உபாத்தியார் எங்கிருந்தோ தோன்றி, "யாரடா நீங்கள், வாறன் பொறு" என்று ஒரு தடியுடன் அதட்டுவார். நாங்கள் பயத்தல் மரத்தால் இறங்கி ஓடுவோம்.

அப்பொழுதெல்லாம் "தலைமை உபாத்தியார்" அல்லது "தலைமை ஆசிரியர்" என்ற சொற்பதமே வழக்கத்திலிருந்ததாக ஞாபகம். "அதிபர்" என்ற சொற்பதம் பின்புதான் வழக்கில் வந்தது என்று நினைக்கிறேன். "தலையாட்டி" கணபதிப்பிள்ளை மாஸ்ரர் தலைமை ஆசிரியராக இருந்தது ஞாபகமாக இருக்கிறது.

மாதிரி பாடசாலை ஒரு மத்திய மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டதை அறிந்தேன். நான் வெளியில் நின்று கொண்டுதான் அதன் வளர்ச்சியை கவனித்து வந்தேன். எனது கல்வித்தாய் விக்னேஸ்வராக கல்லூரி ஆங்கிலத்தில் படிப்பதற்காக அங்கு பெற்றோரால் சேர்க்கப்பட்டேன். வித்தியாலயத்தில் Dr. சிவப்பிரகாசம் அதிபராக இருந்தது எனக்குத்தெரியும். திரு. சபாரத்தினம் அவர்கள் உபஅதிபராக இருந்தார்.

திரு.பொன்கந்தையா அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் பெரும் வளர்ச்சி கண்டது. சபாரத்தினம் அவர்கள் அதிபராக இருந்தார். அவர் காலத்தை பாடசாலையின் "பொற்காலம்" என்று துணிச்சலாகக் கூறலாம்.

பின்பு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் கந்தையா அவர்கள் தோல்வியுற்றார். அதைத்தொடர்ந்து அரசியல் நெருக்கீட்டால் பாடசாலையில் பாரியமாற்றம் ஏற்பட்டது. அதிபர், ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள். பாடசாலை அதன் வளர்ச்சியில் இறக்கம் நிற்கவில்லை 2002ம் ஆண்டுமட்டும் தொடர்ந்தது. தற்போதைய அதிபர் திரு.சேதுராசா அவர்கள் பாடசாலையை பாரமெடுத்தபின்தான் பாடசாலை அதன் வளர்ச்சியில் தளிர்விட்டு, கெட்டுவிட்டு, கிளைகள் விட்டு, பரந்துவளரத் தொடங்கிற்று.

பாடசாலையின் இந்த தோற்றம், இன்றைய கல்விநிலை, அதிபர் சேதுராசாவின் தனி முயற்சிதான் முழுக்க முழுக்க காரணமாக இருந்தது என்று என்னால் அடித்துக்கூற முடியும். அவரின் இந்த வெற்றிக்கு அவரின் அணுகுமுறை - ஆசிரியர், மாணவர்கள், ஊர்மக்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்சங்கம், புலம்பெயர்ந்த பழைய மாணவர் சங்கங்கள், கல்விச்சமூகம் ஆகியவர்களும் அதிபர் கொண்ட அணுகுமுறை, தொடர்பாடல் அவர் பாடசாலையின் வளரச்சியில் வைத்த பற்றும் பாசமும், மக்களை ஓர் உலுப் உலுப்பி, உணர்வு பூர்வமான எழுச்சியை, விழிப்புணர்வை, புரிந்துணர்வை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாகத் தான் பாடசாலையின் பல்துறை வளர்ச்சியை அதன் இன்றைய அழகு தோற்றத்தை அவரால் அடைய முடிந்தது.

இப்பாடசாலை அதன் 90ஆவது வயதில் மேலும் வளர்ந்து, விரிந்து நெல்லியடி கிராமத்துக்கும் அதன் ஏந்து கிராமங்களுக்கும் ஒரு அச்சாணியாகத்திகழ வேண்டும். மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

ந. பாஸ்கரன்,
பாடசாலை நலன்விரும்பி

# அபிவிருத்தியை நோக்கி ...

## முன்னாள் செயலாளரின் உள்ளத்திலிருந்து..



யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தனது தொண்ணூறு வயதை நிறைவு செய்துள்ளது. ஆரம்பத்தில் மாதிரிப் பாடசாலையாக 1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்பு 1946ஆம் ஆண்டு ஏழை மாணவர்களும் கற்பதற்காகக் கொண்டு வரப்பட்ட அரச கொள்கைக்கு அமைய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. அந்தக் காலத்திற்கு ஏற்ற உறுதியான அழகிய கட்டடங்கள் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் விவசாய கல்விக்கான வசதிகள் மாணவர்கள் ஆண் பெண் இரு பாலாரும் தங்கிக் கற்கக்கூடிய விடுதி வசதிகளுடன் திகழ்ந்தது.

மிகவும் விருப்புடனும் அக்கறையுடனும் அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலையை தரமாக வளர்த்து புகழ் பரப்பச் செய்தனர். இன்று அரச உயர் பதவிகளில் தொழில் அதிபர்களில் பாடசாலை அதிபர்களில் பலர் அக் காலத்தில் இங்கு கல்வி பயின்றவர்கள் என்பது மிகையாகாது. புல விளையாட்டு வீரர்களை உருவாக்கியது. அக் காலத்தில் கடேற் பயிற்சி வசதிகள் கிடைக்கப் பெற்ற ஒரு சில பாடசாலைகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் ஒன்று. இவை அனைத்தும் ஒரு இடைக்காலத்தில் யுத்தம் ஆரம்பமாகியதும் இல்லாது அழிந்து போயின. பௌதிக வளங்கள் அனைத்துமே அழிந்து போய் விட்டன. கும்பீரமான மேல்மாடிக் கட்டடம் ஆய்வுகூடக் கட்டடம் இராசலிங்கம் மண்டபம் எல்லாமே தரைமட்டமாயின. அனைத்து செயற்பாடுகளும் முடங்கி பாடசாலை முடமாக்கப்பட்டது.

அக்கால கட்டத்தில் பதவியிலிருந்த பல அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் பெரும் பகீரதப் பிரயத்தனத்தின் மத்தியில் பாடசாலை சாக விடாது தங்களால் இயன்றதைச் செய்தனர். அபிவிருத்திகளும் செய்தனர். நலிவுற்றிருக்கும் பாடசாலையை இவர்கள் வளர்த்தெடுக்க முற்பட்ட போது மரத்திலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல சில சுயநலவாதிகளால் தூரநோக்கற்ற அறிவாளிகள் கல்வியியலாளர்கள் சமூக நலன்விரும்பிகள் எனப்படுபவர்களால் பிரதேச வாதம் எனும் நஞ்சு விதைக்கப்பட்டு பாடசாலை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இதன் பிரதிபலனை தற்போது அவர்கள் அனைவரும் உணர்வது அறியக்கூடியதாக உள்ளது. வடமராட்சியில் ஒரு தேசிய பாடசாலை இப் பிரிவினைக்கு வித்திட்டவர்கள் இப்போது எங்கே? அப்பாவிகளாகிய எமது இளம் சந்ததியினர் சுலபமாகப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் வசதிகள் அனைத்தையும் தற்போது பெற்றுக் கொள்ள பெரும் முயற்சி செய்ய வேண்டி உள்ளது. ஆண்மையில் நடைபெற்ற கரவெட்டிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களால் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டது. தேவையை இப்போதுதான் எல்லோரும் உணருகின்றார்கள்.

இவ்வாறெல்லாம் நொய்ந்து தேய்ந்து போய் இருந்த வேளையில் தற்போதைய அதிபர் திரு. செ.சேதுராஜா அவர்கள் 2001.மார்கழியில் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டார். 2002 பங்குனி மாதம் முதலாவது பாடசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டம் கூட்டப்பட்டு நான் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். தொடர்ந்து பத்து வருடங்கள் அபிவிருத்தி சபையில் அங்கத்தவராகவும் பல வருட காலங்கள் செயலாளராகவும் கடமையாற்ற சந்தர்ப்பம்

கிடைத்தது.ஆரம்ப நாட்களில் அபிவிருத்தி பற்றி சிந்திக்க எண்ணிய காலங்களில் அதிபரும் நானும் திரு.சி.தங்கராசா அவர்களும் பல மணித்தியாலங்கள் சில நாட்களில் இரவு பதினொரு மணிக்குப் பின்னும் இருந்து கதைத்துள்ளோம். காலங்கள் பிழையான காலம் அதிபர் அதன் பின்பு தான் வீடு செல்வார். இப்படிப் பல நாட்கள் ஒவ்வொரு விடயத்தையும் செய்ய முன்பு அபிவிருத்திச் சங்க உறுப்பினருடனும் ஆசிரியர்களுடனும் பழைய மபணவர்களுடனும் கலந்து ஆலோசித்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளையே செயற்படுத்தினர்.

பௌதிக வளங்கள் அனைத்திலும் திரு. செ.சேதுராஜா அவர்கள் அதிபராகிய பின்பு தன்னிறைவு காணப்படுகின்றது. முதலில் நூலகத்தை வளமாக மாற்றுவதற்கு நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் நலன் விரும்பிகளை அணுகி நிதி சேகரித்து புத்தகங்க் கொள்வனவு செய்யப்பட்டது. அப்போதைய கல்வி அமைச்சர் நூலகத்தை பார்வையிட்ட பின்பு ஓரளவு தளபாடங்கள் பெற்றுக் கூடியதாக இருந்தது. புலம் பெயர்ந்த பழைய மாணவர்களின் உதவியுடன் கணனிகள் தொலைக்காட்சிகள் தலைமேல்எறியிகள் தொலைபேசிகள் தொலைநகல் நவீன தொழில்நுட்பத்துடன் வகுப்பறை தோறும் ஒலிபரப்பு வசதிகள் மாணவர் அடையாள அட்டை தயாரிக்கும் கருவிகள் நவீன அச்சகப் பிரிவு இது போன்று மேலும் மேலும் பல வசதிகள் கிடைக்கப் பெற்றன.

புதிய ஆராதனை மண்டபம் பூர்த்தியாகி உள்ளது. பல முட்டுக்கட்டைாளுக்கு மத்தியில் பல போராட்டங்களுக்கிடையில் இன்று கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. சுமார் 5 வருட காலங்கள் ஆரம்பத்தில் உலக வங்கி நிதியில் முதல் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. பூரணமடையவில்லை பின்பு வெவ்வேறு நிதி ஒதுக்கீடுகள் வெவ்வேறு கட்டட ஒப்பந்தக்காரர்கள் இப்படியாகக் கட்டி முடிக்கப்பட்டது. இறுதியாக அபிவிருத்தி சபையின் நிதி உதவியுடன் பூரணமாக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர்களின் பங்களிப்புமுண்டு. உடைந்து போன இராஜலிங்க மண்டபத்தின் எஞ்சிய பகுதியில் உள்ளக விளையாட்டரங்கு அமைக்கப்பட உள்ளது.பூர்த்தி செய்யப்படாதிருந்த யுனிசெப் மூன்று மாடிக் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டது. ஒரே நாளில் தேவையான அனைத்து தளபாடங்களும் பெறப்பட்டு கட்டடம் திறப்பு விழா செய்யப்பட்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. "ஐந்து நட்சத்திரத் தரத்தில் பாடசாலைச்சிற்றுண்டிச்சாலை கட்டில்கள் முதலுதவி உபகரணங்களுடன் கூடிய மருத்துவப் பிரிவும் உள்ளது.

மாண்வர் விடுதி புனரமைக்கப்பட்டு NECORD நிதி உதவியில் கட்டில்கள் சமையலறை பாத்திரங்கள் எரிவாயு அடுப்புக்கள் என்பவற்றுடன் சுமார் 25 மாணவர்களுடன் விடுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. யுத்தம் ஏற்பட்டதால் மாணவர்கள் வீடுதளுக்கு அனுமதிக்கப்பட்டதால் விடுதிகள் தற்காலிகமாக இயங்கவில்லை. மீண்டும் விடுதி, விளையாட்டு மைதானம், கிறிக்கெட் ஆடுகளம் அன்பர் ஒருவரின் உதவியால் புனரமைக்கப்பட்டது.இலண்டன் பழைய மாணவரின் உதவியுடன் மைதான விஸ்தரிப்பிற்கு காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இன்னும் சிலவற்றைப் பெற முயற்சிக்கப்படுகிறது.கூடைப்பந்தாட்டத்திடல் அமைக்கப்பட்டது. நுழைவாயில்கள் அழகாக நிறுவப்பட்டன. பாதைகள் தார் போடப்பட்டு இரு மருங்கிலும் பூச்சாடிகள் வைப்பதற்கேற்ப அழகான மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. தேவையான இடங்களிலெல்லாம் பூக்கன்றுகள் பூத்துக்குலுங்குகின்றன. மூன்று மாடிக்கட்டிடத்திற்கு முன்பு வள்ளுவர் சிலை அமைக்கப்படவுள்ளது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் சரஸ்வதி தேவிக்கு அழகிய சிலை வைத்து வழிபாடு நடைபெறுகின்றது. மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கும் ஆசிரியர்களின் மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதற்கும் பெரிய பெரிய கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. பிரபல வர்த்தகர் ஒருவரின் மூலம் முச்சக்கரவண்டி

பெற்றுக்கொள்ளப்பட்டது. மாணவர்கள் கல்வியுடன் தேக ஆரோக்கியம் பெறுவதற்கு விளையாட்டுப்போட்டிகள் சுமார் 27 பிரதான விளையாட்டுக்களில் மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். அனைத்து மாணவர்களிற்கும் மதிய உணவு வழங்கப்படுகின்றது.

கல்வியிலும் அதேயளவு வளர்ச்சி கண்டுள்ளது கண்டு பெருமையடைகிறோம். சாதாரண தரம் உயர்தரம் பரீட்சைகளில் அண்மைக்காலத்தில் நல்ல சித்திகளை பெற்றுள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறை இருந்தும் உள்ள வளத்தடன் ஆசிரியர்களின் விசுவாசம் மிக்க ஒத்துழைப்புடன் கல்விச்செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுத்து வரப்படுகிறது. சர்வதேச மட்டத்தில் நடைபெறும் போட்டிக்கு எமது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கலந்து கொள்ள இருப்பது பெருமைக்குரியது மட்டுமல்ல போற்றுதற்குமுரியது.

வடமராட்சியில் ஒரு தேசிய பாடசாலை அமைக்கவேண்டுமென்பது எமது அவா. வலயக்கல்விப் பணிப்பாளர் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் முன்வைத்த பிரேரணைக்கு சுமார் மூன்று வருட காலத்திற்கு முன்பே அதிபர் அவர்களும் நாளும் அதனை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம். சில முட்டுக்கட்டைகள் இருந்தாலும் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப் படவேண்டுமென்பதில் சலிப்பின்றி முனைந்து வருகிறோம். உயர் பதவிகளில் இருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் உதவ வேண்டியது அவர்களது கடமையாகும்.

இன்னும் எத்தனையோ அபிவிருத்திப் பணிகள் குறிப்பிடப்படவில்லை. இவைகளெல்லாம் எப்படி சாத்தியப்பட்டது. அனைத்தும் அதிபர் திரு செ.சேதுராஜா அவர்கள் பதவியேற்ற பின்பிலிருந்து இந்த நிமிடம் வரை அவரது எண்ணத்தில் உதித்தவை. எல்லோரும் பதவியில் அமரலாம். சம்பளத்துடன் கடமை முடிந்து விட்டது என இருந்து விடலாம். ஆனால் அதிபர் அவர்களோ பூங்கன்றை நட்டாலும் அதன் வளர்ச்சியை நாளுக்கு நாள் கவனித்து பூக்கும் வரை பார்த்திருந்து திருப்தி கொள்பவர். ஒவ்வொரு திட்டமும் செயல் வடிவம் கொடுக்க முன்பு அனைத்து தரப்பினருடனும் கலந்து ஆலோசிக்கும் பண்பு உள்ளவர். அபிவிருத்தி சபையை தலைமை தாங்கி நெறிப்படுத்துபவர். யாப்பு விதிகளை என்றும் மதிப்பளித்து பேணுபவர். அவர் பழைய மாணவர் சங்கத்தை அரவணைத்து நடந்து கொள்வதால் அவர்கள் மூலம் எவ்வளவோ உதவிகளைப் பெற்று பாடசாலை அபிவிருத்திப் பணிகளை செய்து கொள்ள முடிகிறது.

கடந்த பத்து வருடத்தில் அதிபர் திரு செ.சேதுராஜா அவர்களுடன் இணைந்து பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டமை நான் செய்த பாக்கியம் என கருதுகிறேன். சகல துறைகளிலும் பாடசாலை வளர்ச்சியடைந்து வருவது மகிழ்ச்சியாக இருக்கிறது. அதிபர் அவர்களது காலத்தில் தன்னிறைவு பெறும் என நம்புகிறேன். தொடர்ந்து செயலாளராக பதவியிலிருக்க முடியாது போனாலும் எனது சேவை தொடரும்.

தொண்ணூறாவது ஆண்டு விழா சிறப்புற நடைபெறவும், நெல்லிக்கனி மலர் வெளியீடு நன்கு நடை பெறவும் யாஃநெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அகிலமெங்கும் புகழ் பரப்பி மிளிரவேண்டுமெனவும் உளமார வாழ்த்துகிறேன்.

*மு.சுந்தரலிங்கம் JP*
*முன்னாள் செயலாளர்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*

# தொண்ணூறாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு எமது கல்லூரி மாணவர்களிடையே நடத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டிகள்

## பிரிவு : 01 ( தரம் 6 - 8 )

கவிதை : "என் அம்மாவின் கனவுகள்! "
(10தொடக்கம் 12 வரிகள் கொண்ட கவிதை)

கட்டுரை : " எமது கல்லூரித் தாய் "
(150தொடக்கம் 200 சொற்கள் கொண்டதாக அமையவேண்டும்)

சிறுகதை : " மூத்தோரைக் கனம்பண்ணு " என்னும் கருப்பொருள் கொண்டது.
( குறைந்தது 250 சொற்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
சிறுகதைக்கான தலைப்பினை போட்டியாளரே தீர்மானிக்க முடியும்)

## பிரிவு : 02 ( தரம் 9 - 11 )

கவிதை : " கல்வி அழகே அழகு! "
(10தொடக்கம் 20 வரிகள் கொண்ட மரபுக் கவிதை / புதுக் கவிதை)

கட்டுரை : " ஒழுக்கமும் ஒழுங்கும் உயர்வின் திறவுகோல் "
(200தொடக்கம் 300 சொற்கள் கொண்டதாக அமையவேண்டும்)

சிறுகதை : " வாழ்க்கை நம் கையில் " என்னும் கருப்பொருள் கொண்டது.
( குறைந்தது 350 சொற்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
சிறுகதைக்கான தலைப்பினை போட்டியாளரே தீர்மானிக்க முடியும்)

## பிரிவு : 03 ( தரம் 12 - 13 )

கவிதை : " வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்வதற்கே! "
(16தொடக்கம் 25 வரிகள் கொண்ட மரபுக் கவிதை / புதுக் கவிதை)

கட்டுரை : " கல்வியும் எமது கலாசாரமும் "
(300தொடக்கம் 400 சொற்கள் கொண்டதாக அமையவேண்டும்)

சிறுகதை : " அறிவாயுதம் " என்னும் கருப்பொருள் கொண்டது.
( குறைந்தது 400 சொற்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
சிறுகதைக்கான தலைப்பினை போட்டியாளரே தீர்மானிக்க முடியும்)

## கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான போட்டிகள்

*கவிதை : " நாமார்க்கும் குடியல்லோம் "*
*( 20 – 25 வரிகள் கொண்ட மரபுக் கவிதை / புதுக் கவிதை)*

*சிறுகதை : " பள்ளியுறவுகள் " என்னும் கருப்பொருள் கொண்டது.*
*( குறைந்தது 400 சொற்கள் கொண்டது - சிறுகதைக்கான தலைப்பினை போட்டியாளரே தீர்மானிக்க முடியும்)*

## திறந்த போட்டிகள்

கவிதை : " எல்லோரும் இன்புற "
(20 தொடக்கம் 25 வரிகள் கொண்ட மரபுக் கவிதை / புதுக் கவிதை)

சிறுகதை : " தூரநிலா " என்னும் கருப்பொருள் கொண்டது.
( குறைந்தது 400 சொற்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
சிறுகதைக்கான தலைப்பினை போட்டியாளரே தீர்மானிக்க முடியும்)

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**90 ம் ஆண்டு விழாவை முன்னிட்டு எமது கல்லூரி மாணவர்களுக்கான எழுத்தாக்கப் போட்டிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| | | **கட்டுரை** | | |
| | இடம் | பெயர் | சு.எண் | தரம் |
| | | தரம் : 6,7,8 | | |
| 1 | முதலாம் இடம் | செல்வி.பாலச்சந்திரன் தேவப்பிரியா | 14246 | 8 A |
| | இரண்டாம் இடம் | செல்வன்.தேவகுமாரன் செந்தில்குமரன் | 14488 | 7 A |
| | முன்றாம் இடம் | செல்வி.சிவசுப்பிரமணியம் அபிநயா | 14252 | 8 A |
| | | தரம் : 9,10,11 | | |
| 2 | முதலாம் இடம் | செல்வி.தர்மகுலசிங்கம் துவாரகா | 13869 | 10 A |
| | இரண்டாம் இடம் | செல்வன்.குணேந்திரசீலன் சக்தீசன் | 14050 | 9 A |
| | முன்றாம் இடம் | செல்வன்.கிருஸ்ணராஜா சாயிரூபன் | 13868 | 10 A |
| | | தரம் : 12, 13 | | |
| 3 | முதலாம் இடம் | செல்வி.வானுஜா கஜேந்திரன் | 13983 | 13 M |
| | இரண்டாம் இடம் | செல்வி. ஆதித்தியா நேசராசா | 13234 | 13 M |
| | முன்றாம் இடம் | செல்வி.ஞானகௌரி செல்வராசா | 13238 | 13 B |
| | | **கவிதை** | | |
| | | தரம் : 6,7,8 | | |
| 4 | முதலாம் இடம் | செல்வி.பரமேஸ்வரன் வைஸ்ணவி | 14693 | 6 A |
| | இரண்டாம் இடம் | செல்வி கிஷாணி பபூகரன் | 14691 | 6 A |
| | முன்றாம் இடம் | செல்வி டயானி கருணதாஸ் | 14557 | 7 C |
| | | தரம் : 9,10,11 | | |
| 5 | முதலாம் இடம் | செல்வி.துஷாரா சத்தியசீலன் | 13684 | 11 A |
| | இரண்டாம் இடம் | செல்வன் சிறிதரன் கார்த்திக் | 13932 | 10 A |
| | முன்றாம் இடம் | செல்வி மாதுளா கிருஷ்ணராஜா | 13694 | 11 A |
| | | தரம் : 12, 13 | | |
| 6 | முதலாம் இடம் | செல்வி. வானுஜா கஜேந்திரன் | 13983 | 13 M |
| | இரண்டாம் இடம் | செல்வி. கலைவாணி விஜயராசா | 13220 | 13 B |
| | முன்றாம் இடம் | செல்வி. விநோதா கைலாயபிள்ளை | 13230 | 13 M |
| | | **சிறுகதை** | | |
| | | தரம் : 6,7,8 | | |
| 7 | முதலாம் இடம் | தேவகுமாரன் செந்தில்குமாரன் | 14488 | 7A |
| | இரண்டாம் இடம் | ஸ்ரீதும்பரலிங்கம் கிஷானி | 14494 | 7A |
| | முன்றாம் இடம் | முரகதாஸ் கார்த்திகா | 14279 | 8A |
| | | தரம் : 9,10,11 | | |
| 8 | முதலாம் இடம் | சாமந்தி நித்தியானந்தன் | 13674 | 11A |
| | இரண்டாம் இடம் | கலைமகள் தேவகுமாரன் | 14061 | 9A |
| | முன்றாம் இடம் | துளசிகா கிருஷ்ணமூர்த்தி | 13648 | 11A |
| | | தரம் : 12, 13 | | |
| 9 | முதலாம் இடம் | செல்வி. ஆதித்தியா நேசராசா | 13234 | 13 B |
| | இரண்டாம் இடம் | செல்வி. பர்மினா குமாரவேல் | 13175 | 13 M |
| | முன்றாம் இடம் | செல்வி.ஷாகிர்த்தியா சிறீஸ்குமார் | 13409 | 12 B |

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## தொண்ணூறாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பழைய மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கான எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

| பழைய மாணவர்களுக்கான போட்டி | | | | |
|---|---|---|---|---|
| | பெயர் | முகவரி | இடம் | தலைப்பு |
| கவிதை:- | **செல்வி தனந்தினி சிற்றம்பலம்** | முடக்காடு நெல்லியடி கிழக்கு, கரவெட்டி | 1ம் இடம் | நாமார்க்கும் குடியல்லோம் |
| | கீழ்க்கரவை கி.குலசேகரன் | 19/4 ஆதர்சிறிசேன மாவத்தை , அப்புத்தளை | 2ம் இடம் | |
| | ஆனந்த மயில் முல்லைதிவ்யன் | கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை. | 3ம் இடம் | |
| சிறுகதை :- | **க.பரணீதரன்** | கலையகம், அல்வாய் வடக்கு, அல்வாய் | 1ம் இடம் | வேர் கொண்ட உறவு |
| | செல்வி தனந்தினி சிற்றம்பலம் | முடக்காடு,நெல்லியடி கிழக்கு. கரவெட்டி | 2ம் இடம் | மிண்டும் பள்ளிக்கு போகலாம் |
| | வல்லிபுரம் பிரகீத் | கூழாவடி, புலோலி வடக்கு, பருத்தித்துறை | 3ம் இடம் | மீண்டும் வருமா |
| **திறந்த போட்டிகள்** | | | | |
| கவிதை :- | **கு.யோகேந்தினி** | வளர்மதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி. | 1ம் இடம் | எல்லோரும் இன்புற்றிருக்க |
| | கௌதமி யோகநாதன் | சுதுமலை வடக்கு, மானிப்பாய். | 2ம் இடம் | |
| | உதயகலா நவநீதன் | சங்கானை மேற்கு, சங்கானை. | 3ம் இடம் | |
| சிறுகதை :- | **அ.விஸ்ணுவர்த்தனி** | கரணவாய் வடமேற்கு, கரணவாய். | 1ம் இடம் | நாதியில்லாப் பிறவியிலே |
| | தனந்தினி சிற்றம்பலம் | முடக்காடு,நெல்லியடி கிழக்கு. கரவெட்டி | 2ம் இடம் | அப்பா வருவாரா |
| | உதயகலா நவதீசன் | சங்கானை மேற்கு, சங்கானை. | 3ம் இடம் | யன்னல் நிலவு |

## எழுத்தாக்கப் பொட்டிகளுக்கான அனுசரணையாளர்கள்


பழைய மாணவர் மற்றும் திறந்த போட்டிகள்

**சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை**

**நெல்லியடி**

பாடசாலை மாணவருக்கான போட்டிகள்

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**

**நெல்லியடி**

## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
## தொண்ணூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு
## நடத்தப்பட்ட விளையாட்டுச் சுற்றுப் போட்டி முடிவுகள்

**யாழ் மாவட்டத்தின் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டம்**

**அநுசரணை : நெல்லியடி கிளினிக்**

| | | |
|---|---|---|
| 1 | முதலாம் இடம் | யா/இளவாலை கென்றியரசர் கல்லூரி |
| | இரண்டாம் இடம் | யா/சென்.பற்றிக்ஸ் கல்லரி |
| | முன்றாம் இடம் | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |

**யாழ்மாவட்டத்தின் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டம்**

**அநுசரணை : ESP & Co.**

| | | |
|---|---|---|
| 2 | முதலாம் இடம் | யா/தெல்லிப்பளை யூனியன் கல்லரி |
| | இரண்டாம் இடம் | யா/வட. இந்து மகளிர் கல்லூரி |
| | முன்றாம் இடம் | யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி |

**வடமராட்சியின் நிறுவனங்களுக்கிடையேயான மென்பந்து கிறிக்கெற்**

**அநுசரணை : செல்லமுத்தூஸ்**

| | | |
|---|---|---|
| 3 | முதலாம் இடம் | சிலிங்கோ அதுரன்ஸ், நெல்லியடி |
| | இரண்டாம் இடம் | பொலிஸ் நிலையம், நெல்லியடி |
| | முன்றாம் இடம் | இராணுவ அணி. வல்வெட்டித்துறை |

**ஆண்களுக்கான மரதனோட்டப் போட்டிகள்**

**அநுசரணை : கணேசன் ஹாட்வெயர், இந்திரா கபே**

| | | |
|---|---|---|
| 3 | முதலாம் இடம் | ரஜீகரன் , குடத்தனை வடக்கு, குடத்தனை |
| | இரண்டாம் இடம் | கி. ஜெயந்தன், பண்டத்தரிப்பு |
| | முன்றாம் இடம் | ப.ஜெயானந்தன் ,கோணடாவில் |

**பெண்களுக்கான போட்டிகள்**

**அநுசரணை : ESOFT Computer Studies**

| | | |
|---|---|---|
| 3 | முதலாம் இடம் | நா. சுமதி, சண்டிலிப்பாய் |
| | இரண்டாம் இடம் | சி.நவரஞ்சினி, கரவெட்டி கிழக்கு |
| | முன்றாம் இடம் | சி.டிலேஸ்னா, வட இந்து மகளிர் கல்லூரி |

**தொண்ணூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட**
**எழுத்தாக்கத்திறன் போட்டிகளில்**
**முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட கட்டுரைகள்**

## எனது கல்லூரித்தாய்

கல்வி என்பது மனிதனுக்கு அறிவூட்டும் ஒளிவிளக்கு போன்றது.மனிதரிடத்திலுள்ள அறியாமையை போக்கி நல்வழி காட்ட வல்லது.வாழ்வில் எந்தவொரு விடயமாக இருப்பினும் நல்வழி காட்டுதல் இல்லாவிடின் பெறக்கூடிய நன்மைகளையும் பயன்களையும்பெற முடியாது.கடலில் சென்றவர்களுக்கு எப்படி கரையில் உள்ள கலங்கரை விளக்கு வழிகாட்டி சரியான திசையை சொல்வது போல் சமுதாயத்தில் ஏற்றம் பெற சரியான வழிகாட்டி அவசியம். மன்னர்களுக்கு அமைச்சர்கள் வழிகாட்டியாக இருப்பதுபோல் சமுதாயத்தில் குறிப்பாக நல்ல கல்வியை தேர்ந்தெடுத்து படித்து பயன் பெற ஆதரவுடன் கூடிய வழிகாட்டி அவசியம். அதுவே கல்லூரி ஆகும்.

இவ்வுலகில் எம்மைப் பெற்று அன்புடன் வளர்த்து வழிகாட்டும் தாய்க்கு நிகரானவள்தான் கல்லூரித் தாய். எமது தாய் எமக்கு நல்வழி காட்டுவது போல் கல்லூரிகளும் தாய்க்குத் தாயாக இருந்து நல்வழி புகட்டுகின்றன.

அழகிய அமைதியான சூழல் அமையப் பெற்று கல்வியில் பரிணாம வளர்ச்சியைக் கண்டுகொண்டிருந்த இப் பாடசாலை வடமராட்சி மக்களிற்கு கல்வியையும் அதனோடு இணைந்த இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் போதிப்பதற்காக யாழ் வடமராட்சியின் மையப்பகுதியில் உள்ள நெல்லியடியில் மாதிரி அரசாங்க பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.எனது கல்லூரித்தாயாகிய யாஃ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகும்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய இலவசக் கல்வியின் தந்தை C.W.W கன்னங்கரா அவர்களின் சிந்தனையில் உதித்ததும் கிராமப் புறங்களில் உள்ள நுண்ணறிவு மிக்க மாணவர்களை பொதுக் கல்விக்குள் அரவணைத்து நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 54 மத்திய மகா வித்தியாலயங்களில் ஒன்றாக இக்கல்லூரி 1946 இல் தரமுயர்த்தப்பட்டது.

இக் கல்லூரியில் 1950ஆம் ஆண்டுகளில் மாணவர் விடுதி, விளையாட்டு மைதானம்இ ஆய்வுகூடங்கள்இ பண்ணைகள் எனப் பல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு நாட்டின் நாலா புறங்களிலும் இருந்து ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயிலும் ஓர் கல்லூரியாக உயர்ந்து நின்றது. இக் கல்லூரியில் கல்வி பயின்ற பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல உயர் பதவிகளை வகித்து வருகின்றன. இன்றும் பலர் வைத்தியராகவும் ஏனைய தொழிற்துறை விற்பனர்களாகவும் கடமை ஆற்றி வருகின்றனர்.பல திறன் மிக்க புகழ் பூத்த அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவையினால் உரம் பெற்று நிமிர்ந்து நின்ற இக்கல்லூரியானது இப் பிரதேசத்தில் ஏற்பட்ட போர்ச் சூழலினால் பெரும் அனர்த்தங்களை சந்திக்க நேர்ந்தது.1987ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் அனர்த்தத்தினால் இக் கல்லூரியின் அடிக்கட்டுமாணங்களில் பெரும்பாலானவை அழிவுக்குள்ளாகின.

அதனைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டு மகளிர் பிரிவு தனியான மகளிர் கல்லூரியாக உருவாகியமையால் இக் கல்லூரியில் மாணவர்தொகை குறைவடைந்து கல்விச் செயற்பாடுகள் நலிவடைய நேரிட்டது.அதன் பின்னர் கடமையாற்றிய அதிபர்களினதும் முயற்சியினாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினாலும் பாட விதான, இணைப்பாட

விதான செயற்பாடுகள் மெல்ல மெல்ல மேல் நிலை அடைந்தது.இன்று சுமார் 1200 மாணவர்களும் 50 ஆசிரியர்களும் பணியாளர்களும் சிறப்பாக இயங்கி வருகின்றனர்.பாட விதான செயற்பாடுகளுடன் இணைந்து சாரணியம் விளையாட்டு தலைமைத்துவம் ஆக்கற்செயற்பாடுகள் சுற்றுலா போட்டிநிகழ்வுகள் போன்ற இணைப்பாடவிதான

செயற்பாடுகளும் ஒன்று சேர்த்து வழங்கி வருகின்றது.இதனால் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியுலகத்திற்கு செல்கின்ற போது அனைத்து விடயங்களிலும் சீரான முறையில் செயற்படக்கூடியவராக தன்னை மாற்றிக் கொள்ள முடியும்.

இன்று மாணவர் ஆசிரியர்களுக்கான கணினிப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது. 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இக்கல்லூரியானது ஓர் நவோதய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டதுடன் சிறப்பான நூலக வசதியினையும் விஞ்ஞான ஆய்வு கூடங்களையும் கணினி ஆய்வு கூடங்களையும் கொண்டு சிறப்பாக செயலாற்றி வருகிறது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் நலம்விரும்பிகள் முதலானநோரின் உதவியுடன் கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாடுகள்முன்னெடுத்து வருகின்றன தற்போது தி.செ.சேதுராஜா அவகள் 2002 முதல் அதிபராக கடமையாற்றி வருகிறாவ

தற்போத 90வது ஆண்டில் காலடி வைத்திருக்கும் எமது பாடசாலையின் பணிகள் வாழ்க! வளர்க!

கல்லூரி தாயை வளம்படுத்துவோம்

பயன் பல பெறுவோம்.

செல்வி பாலச்சந்திரன் தேவப்பிரியா

தரம் 8A

## ஒழுக்கமும் ஒழுங்கும் உயர்வின் திறவுகோல்

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு மகத்தான மனிதப் பண்பாக அமைவது ஒழுக்கமும், ஒழுங்குமேயாகும். மண்ணில் மானிடர்களாகப் பிறந்த எம் ஒவ்வொருவரினதும் சமயரீதியான நோக்கம் இறைவனை அடைவதேயாகும். அவ்வாறான மகத்தான பேற்றைப் பெறுவதற்கு சிறந்த வழித்துணையாக ஒழுக்கமும், ஒழுங்குமே அமையும். ஆறறிவைப் பெற்றுவிட்ட நாம் அறிவின் படி நடத்தல் வேண்டும். நன்நடத்தைக் கோலங்களே அறிவு வளர்ச்சிக்கும், அழியாப் புகழிற்கும் அரும்பெருஞ் செல்வங்களாகத் திகழ்கின்றன. அரிய பண்பான ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்போமானால் அகிலத்தையும் வென்று விடலாம்.

உடல் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக உணவு அமைகின்றது. உயர்ந்த வாழ்விற்குத் திறவுகோல்களாக ஒழுக்கமும், ஒழுங்குமே அமைகின்றது. ஒழுக்கமும், ஒழுங்கும் ஒருங்கே அமையப் பெற்ற மனித இனத்திலே தான் மானிடப் பண்பு தலையோங்கி நிற்கும். ஆணவமும், கோபமும் அழிவையே தரும். ஆனால் ஒழுக்கமும், ஒழுங்கும் ஆக்கபூர்வமான உயர்வைத் தரும்.

மனிதர்களாகப் பிறந்த நாம் வெறும் வாய் வார்த்தையின் மூலம் உணர்ந்த பிறவிகள் என சொல்லிக் கொள்வதில் எந்தவித அர்த்தமோ, பெருமையோ இல்லை. சிறந்த பண்புகளில் மேலோங்கி நிற்கும் உண்மையான ஒழுக்கத்தையும், ஒழுங்கையும் பேணி நிற்பவர்களே சிறந்த மனிதர்களாகக் கொள்ளப்படுவர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவப்

பெருந்தகையின் விலைமதிப்பில்லா பொன்மொழி. ஒருவனிடத்தில் உள்ள ஒழுக்கமானது அவனது உயிரினை விடவும் மேலாகக் கருதப்படும். ஒழுக்கத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்கள் தான் வாழ்வில் உண்மையான வெற்றியினைக் கண்டவர்கள். மகாத்மா காந்தி, நேரு, நெல்சன் மண்டேலா, போன்ற அனைத்து உலகம் போற்றும் மகான்களும் ஒழுக்கத்தின் வழியே தடம் பதித்தவர்களேயாவர். அவர்களது வாழ்வின் வெற்றிகளும், சாதனைகளும், அவர்கள் கடைப்பிடித்த சிறந்த மானிடப் பண்புகளின் கொடைகள் எனக் கூறுவதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. வாழும் போது சிறந்த மானிடப் பண்புகளான ஒழுக்கத்தையும், ஒழுங்கையும் கடைப்பிடித்து வாழ்வதே உண்மையான மனித வாழ்க்கையாகும்.

ஒரு மாணவன் தன்னை ஒரு மாணவன் என அடையாளங் காண்பிப்பதற்கு வெறும் கல்விப்பெறுபேறு மட்டும் போதாது. கல்வியோடு சேர்த்து அவன் ஒழுக்கத்தையும் பெற்றிருக்க வேண்டும். ஒழுங்கு பேணப்படும் இடத்திலேயே ஒழுக்கம் பெறப்படுகின்றது. ஓர் விடயம் ஒழுங்கு முறைப்படி நடக்கின்றது என்றால் தான் அங்கே ஒழுக்கம் நிறைந்து காணப்படுகின்றது எனக் கூறலாம்.

மாணவர்கள் தமது சிறுவயதிலிருந்தே ஒழுக்கம் உடையவர்களாக தம்மை மாற்றிக் கொள்ளப் பழக வேண்டும். ஒழுக்கமும், ஒழுங்கும் உள்ள இடத்தில் தவறுகள் நடப்பது அதிசயம் என்று தான் கூற வேண்டும். பாடசாலையில் மாணவர்கள் ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். பாடசாலை ஒழுங்கு விதிகளிற்கேற்ப நடக்க வேண்டும். ஒரு தனி மனித வாழ்வில் முக்கியமான பருவம் மாணவப்பராயமேயாகும். அவ்வாறான பருவம் சிறந்த ஒழுக்கத்திலும், ஒழுங்கிலும் தலை தூக்கி நின்றால் வருகின்ற காலத்தில் நமது நாட்டிற்குச் சிறந்த ஆட்சித்தலைவர்கள் கிடைப்பார்கள். பாடசாலையில் மாணவர்கள் ஒழுக்கசீலர்களாகத் திகழ்வதற்கு வழித்துணையாக அதிபரும், ஆசிரியர்களும் இருக்க வேண்டும். பாடசாலைச் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தால் அங்கே ஒழுக்கம் உயர்ந்து நிற்கின்றது என்பதில் எந்த ஐயமுமில்லை. மாணவர்கள் பாடசாலைக்கு சரியான முறையில் சமூகமளிக்க வேண்டும். சுறுசுறுப்பான ஒரு மாணவனாக பாடசாலை வளாகத்தில் இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கும், அதிபருக்கும், ஏனைய பாடசாலை அங்கத்தவர்களுக்கும் மதிப்பளிப்பது மாணவர்களாகிய எமது இன்றியமையாத கடமையாகும்.

பாடசாலை மட்டுமல்லாது, வேறு பல நிறுவனங்களிலும் கூட மனிதன் ஒழுக்கமும், ஒழுங்கும் உடையவனாகத் திகழ வேண்டும். ஒருவனது ஒழுக்கத்திற்கும், ஒழுங்குக்கும் ஏற்றவாறே அவனுக்கு உயர்வு அமையும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு ஒழுக்கம் தலையாய பண்பாகும்.

போர்க்களத்தில் கூட வெற்றி பெறுபவனை விடவும், தளராத மனதோடும், ஒழுக்கத்தோடும் நின்று போராடுகின்றானோ அவன் தான் சிறந்த மாவீரனாகக் கருதப்படுவான். ஒரு சிறந்த குடிமகனுக்கு உண்மையான அழகு சட்டத்திற்கு கட்டுப்பட்டு, ஒழுங்குகளுக்கு உட்பட்டு நடப்பதேயாகும். வாழ்விலே முன்நோக்கி ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதற்கும் சிறந்த பண்புகளான ஒழுக்கமும் ஒழுங்குமே வழித்துணையாய் நிற்கும்.

உலக மக்கள் அனைவராலும் போற்றப்படக்கூடிய தலைமைத்துவப் பண்பானது ஒழுக்கத்தின் பால் ஒழுகுவதன் மூலமே வளர்க்கப்படுகின்றது. சிறந்த தலைவர்கள் என்பதற்கு உண்மையான அடையாளச் சின்னம் ஒழுக்கமும், ஒழுங்குமேயாகும். நாட்டின் சிறந்த

மேன்மை மிகு தலைவர்களும், அறிஞர்களும் அவர்களது பண்பின் வாயிலாகவே அடையாளங் காணப்படுகின்றனர். சிறந்த ஒழுக்கத்தையும், ஒழுங்கையும் உடையவர்களாக வாழ்வதற்கு, நற்பண்புகளில் சிறந்து விளங்கும் பெரியார்களின் கீழ் ஒழுக வேண்டும். வாழ்வில் எந்த ஒரு இலட்சியத்தையும் அடைவதற்கு ஒழுக்கசீலர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

ஒழுக்கம் இல்லாதவரிடத்து மானிடப் பண்பு நிறைந்து இருக்காது. ஒழுக்கமிலாதவர்கள் வாழ்வில் வெற்றி பெற்றாலும் அவர்களது வெற்றி நிலைக்காது. பொருட்செல்வங்களிலோ, குலங்களிலோ உயர்ந்து காணப்படுவது உண்மையான உயர்வல்ல. எந்தப் போகங்களினாலும் கிடைக்கப்பெறாத சிறந்த உயர்வானது தலையாய மனிதப் பண்பான ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் கிடைக்கும்.

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மக்களும் ஒழுக்கத்தோடும், ஒழுங்கோடும் திகழ்வார்கள் எனின் நாட்டில் எந்த வித இடர்ப்பாடுகளும் ஏற்படாது. அவ்வாறு இல்லாவிடின் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படும் நிலைக்கு உள்ளாகுவார்கள்.

பாடசாலைகளில் கல்வியோடு சேர்த்து ஒழுக்கமும் ஊட்டப்பட வேண்டும். மாணவர்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைவதற்கு ஒழுக்கமும், ஒழுங்குமே திறவுகோல்களாக அமையும். அர்த்தமுள்ள வாழ்வை வாழ்வதற்கு ஒழுக்கமும், ஒழுங்குமே சிறந்த மானிடப் பண்புகளாகும். எனவே மாணவர்களாகிய நாமும் ஒழுக்கத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடித்து வாழ்வில் உயர்வு காண்போமாக.

செல்வி.செல்வகுலசிங்கம் துவாரகா

தரம் 10A

# கல்வியும் எமது கலாசாரமும்

இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய உலகம் அன்றாடம் பல்வேறு வகையான மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது. அனைத்து துறைகளிலும் அதீதமான வளர்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. புதிய கண்டுபிடிப்புக்கள் பல அன்றாடம் இடம்பெறுகின்றன. இவை அனைத்திற்குமே கல்வியின் வளர்ச்சியே பிரதான காரணம் எத்துறையாயினும் அத்துறையிலே பாண்டித்தியம் பெற்ற ஒருவனால் மட்டுமே அத்துறைசார்ந்த அதீத அறிவும் திறமையும் காணப்படும் ஒருவன் கல்வி கற்றால் மட்டுமே அவனால் இவ்வுலகில் இன்று வாழலாம் என்றொரு நிலை இன்னும் தூரத்தில் இல்லை.

கல்வியறிவு பெற்ற நாள் முதல் தான் ஆதிகால மனிதன் தன்னுடைய மிருகத்தனமான குணங்களில் இருந்து மாற்றம் பெற்றான். அவன் தனது நடையுடை, பாவனை அனைத்தையும் மாற்றி இன்றுள்ள நாகரிகமான மனிதனாக மாறினான். கால ஓட்டத்தின் காரணமாக அவன் பெற்ற அனுபவக்கல்வியும், பின்பு அவன் பெற்ற ஏட்டுக்கல்வியும் தான் அவனை ஏனைய விலங்குகளில் இருந்து வேறுபடுத்தி காட்டியது. கல்வியறிவு பெற்ற காரணமாகத்தான் ஆதிகால

மனிதன் ஆடம்பரவாழ்வைத்தேடி புறப்பட்டான். அவனது தேடலின் விளைவினால் தான் இன்று நாம் பல்வேறு வகையான தொழிநுட்பங்களின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

கல்வி என்பது தனியான ஏட்டறிவு மட்டும் அல்ல, அனுபவ அறிவும் கல்வி தான். நாம் தமிழர் , நம் தாய்மொழி தமிழ் என்பதை நாம் அறிந்து கொண்டது கூட கல்வியால் தான். இன்று நாம் பல்வேறு பாடங்களை கற்கிறோம். அப்பாடங்களில் இருந்து பல்வேறு வகையான அறிவுகளை பெற்றுக்கொள்கிறோம். ஆனால் எங்களுக்கு தெரியாமலே எங்களுடைய கலாசாரமும் ஏட்டறிவின் மூலம் எமக்கு புகட்டபடபடுகின்றது. எவ்வாறெனின் உதாரணமாக நாம் சிறுவயது முதல் சைவசமயம் என்னும் பாடத்தை கற்கிறோம். அதில் கோயிலுக்கு இவ்வாறுதான் செல்லவேண்டும், அங்கே என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் கற்றுக் கொள்கிறோம். இவ்வாறு அனைத்து மதம் சார்ந்த பத்தகங்களினூடும் அந்தந்த மதங்கள் இனங்களுக்குரிய கலாசாரங்கள் போதிக்கப்பட்டுவருகின்றன.

அடுத்து நாம் இன்றைய பாடசாலைகளை நோக்குவோமாயின் அங்கு ஏட்டுக்கல்வி மட்டுமன்றி அனுபவக்கல்வியும் தாராளமாக வழங்கப்பட்டு வருகின்றது. கிறிஸ்தவ பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் கிறிஸ்தவ விழாக்கள், இஸ்லாமிய பாடசாலைகளில் இஸ்லாமிய விழாக்கள், இந்து பாடசாலைகளில் இந்து சமய விழாக்கள் பாரம்பரிய முறைகளின் படி அவர்களின் கலாசாரத்தை பேணிப்பாதுகாக்கும் பொருட்டுகொண்டாடப்படுகின்றன. இதன்மூலம் ஒரு மாணவன் தன்னுடைய மதம், இனத்தின் பாரம்பரியம், கலாசாரம் என்பவற்றை அறிந்து தன்னுடைய அடுத்த தலைமுறையினருக்கு அதனை தெரியப்படுத்துகிறான். இதன் மூலம் ஒரு இனத்தின் பாரம்பரியம் அழியாமல் பேணிக்காக்கப்படுகின்றது.

நாம் தேடிக்கற்பதன் மூலம் பல்வேறு வகையான விடயங்களை அறிந்து கொள்கிறோம். கல்வி எனும் ஒரு துறை உள்ள படியால் தான் இன்று ஆராய்ச்சிகள் பல நடைபெறுகின்றன. ஒருவன் தன்னுடைய கல்வியறிவை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளுகின்ற தேடல் பல அழிந்து போன கலாசாரப்பாரம்பரியம் கொண்ட இனங்களை அறிந்து கொள்ள உதவியது. உதாரணமாக அன்றைய வரலாற்றாசிரியர்கள் தங்களுடைய தேடலினால் கலை கலாசாரப்பாரம்பரியம் மிக்க மொசப்பத்தேமியா, ரைகிறிஸ் நாகரீகங்களையும், நம் நாட்டில் பலாங்கொடை மனிதனைப்பற்றியும் கண்டறிந்தார்கள். இதனால் அன்றைய நாளில் எம்நாட்டின் பொருளாதார நிலை , கலாசாரம், வளர்ச்சி என்பன பற்றி இன்று நாம் அறிந்து கொள்கிறோம்.

எந்தவொரு விடயமாயினும் அதில் சிறிதளவு தீமையாயினும் காணப்படும். அந்தவகையில் கல்வி ஒருவனுக்கு அவனது கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு என்பவற்றை எடுத்து விளக்குகின்றது. அதே கல்வியைகற்ற ஒருவன் தனது நாட்டை விட்டு வெளியேறி தன்னுடைய மேற்படிப்பை வெளிநாடுகளிலும் மேற்கொள்வதுண்டு. அப்படி வெளிநாட்டில் கல்வி கற்கும் போது அவன் அந்த நாட்டின் கலாசாரத்திற்கு அடிமையாகி விடுகிறான். அவன் தாய் நாட்டிற்கு திரும்பும் போது அவன் மேல்நாட்டு கலாசாரத்தை தன்னுடைய நாட்டிலும் பின்பற்றுகிறானேயன்றி அவன் தன்னுடைய சொந்த பாரம்பரியத்தை மறந்துவிடுகிறான். இதனால் இன்று எத்தனையோ இனங்கள் தம்முடைய தனித்துவத்தை இழந்துள்ளன.

இன்று நம் நாட்டில் பலர் கல்விகற்று அதுவும் இலவசமாக கல்வி கற்று ஒரு வைத்தியராக , பொறியியலாளராக உருவெடுத்து பின் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளை தமது கலாசாரத்தை விடுத்து ஏனைய நாட்டின் கலாசார முறைப்படி கல்விகற்பித்து கொள்கின்றனர். இன்று எத்தனையோ தமிழ் பெற்றோர்களின் பிள்ளைகள் தமது தாய்மொழி என்னவென்று கூடதெரியாத ஒருநிலையில் இருக்கின்றனர். இது அனைத்திற்கும் காரணம் கூட கல்வியின் வளர்ச்சிதான். அதன் வளர்ச்சியால் தான் மனிதன் குடிபெயர்ந்து தனது தேடலுக்கு விலையாக தனது பாரம்பரியக் கலாசாரத்தை விற்கிறான்.

கல்தோன்றி மண்தோன்றும் முன்பிருந்தே தோன்றிய பல இனங்கள் அடையாளமின்றி அழிந்து போவதற்கு காரணம் மனிதனின் கல்விசார்பான தேடல் தான். தான் தேடும் பொருளுக்கு விலையாக தனது கலாசாரம், பண்பாடு என்பவற்றை தருவதால் அவை இன்று வேரற்று போய்க்கொண்டிருக்கின்றன. அதனை விட அன்று நம்நாட்டின் கல்விமுறையில் மாணவர்களின் தேடல் முக்கிய பங்காற்றுகிறது. அதனால் மாணவர்கள் பல மணிக்கணக்கான நேரங்களை இணையத்தளங்களில் செலவிடுகின்றனர். இன்று கல்வியின் வளர்ச்சியால் அதீத வளர்ச்சி கண்ட துறைகளில் தொழிநுட்பதுறையும் உண்டு. அதன் விளைவினால் தான் இன்று அனைத்து விடயங்களும் இணையத்தளங்களினூடு முதலில் வெளியிடப்படுகின்றன. அதனால் மாணவர்கள் தமது பெரும்பாலானளவு நேரத்தை இணையத்தளங்களில் செலவிடுகின்றனர்.

இவ்வாறு இணையத்தளங்களில் உள்ள மாணவர்கள் தவறான வழிகளில் செல்லும் வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றது. இன்றைய இளைஞர் யுவதிகள் தம்முடைய தேடல்களை தவறான வழிகளில் மேற்கொள்கின்றனர். இணையத்தில் மாணவர்களையும் ஏனைய பாவனையாளர்களையும் தவறான வழிகளில் வழிநடத்தவென்று பலர் காத்திருக்கின்றனர். இதனால் பல கலாசார சீர்கேடுகளும் இடம்பெற்றமை அனைவரும் அறிந்ததே. அதனை விட இத்துறை சார்ந்த சில வல்லுனர்கள் கூட அவற்றை தவறான வழிகளில் பயன்படுத்தி வருகின்றமை அனைவரும் அறிந்ததே. இன்று மாணவர்கள் குறிப்பாக உயர்தரப்பிரிவினர் தமது அதிகளவான நேரங்களை facebook ல் மட்டுமே செலவிடுகின்றனர். இவ்வலையமைப்பை உறவுகளை மேம்படுத்திக்கொள்ள உதவினாலும் கூடவே கலாசாரத்தை சீரழிக்கும் விடயங்களையும்தமக்குள் வைத்து இன்றைய இளைஞர் சமுதாயத்தை மேலைத்தேய நாகரீக மோகத்துக்குள் சிக்கவைத்து தமக்கென உள்ள தனித்துவமான பாரம்பரியங்களை மழுங்கடிக்கும் படி செய்கிறது.

நாம் நாளைய தலைவர்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடலாகாது. நாம் அன்னப்பட்சியைப்போன்று தீயவற்றை விலக்கி நல்லனவற்றை மட்டும் கண்டறிந்து செயற்படுதல் அவசியம். நாம் கற்கும் கல்வி நம்முடைய பாரம்பரியத்தை வளர்த்துக்கொள்ளவும் தனித்துவமான எமது கலாசாரத்தை பேணிக்கொள்ளவும் நாம் கற்கும் கல்வியை திறவுகோலாக பயன்படுத்த வேண்டும். இன்றைய கல்விமுறை மூலம் எமது நாட்டின் தேசிய கலாசாரம் அனைத்து மாணவர்களையும் சென்றடையும் படி செய்யப்பட்டுள்ளது. எமது தாய்நதட்டின் பெருமையினை காப்பது தனயர்கள் எங்களின் தலையாய கடமை ஆகும். ஆகவே எமது கல்வியினூடு புகட்டப்படும் எமது கலாசாரப்பாரம்பரியத்தை வளர்த்து அடுத்த தலைமுறையினரும் அறிந்து பின்பற்றும்படி செய்தல் வேண்டும். கல்விகற்று எமது தேசத்தின் பாரம்பரியங்களை அழியாது பேணுவோமாக.

செல்வி வானுஜா கஜேந்திரன்
தரம் 13M

## தொண்ணூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட எழுத்தாக்கத்திறன் போட்டிகளில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட கவிதைகள்

### என் அம்மாவின் கனவுகள்

பத்து மாதம் காத்திருந்து
புத்திரியைப் பெற்றெடுத்து

பாரினில் அவள் பூத்திட
பலராலும் போற்றிவிட

நெஞ்சத்தில் நீதயுடன்
உள்ளத்தில் உண்மையுடன்

ஆலயத்தில் சேவகியாய்
ஆண்டவியின் காதலியாய்

மக்களின் மைத்துணியாய்
மகாநாட்டின் ராணியாய்

உலகத்தில் உத்தமியாக
வாழ்ந்திடுவாள் என்று நினைத்தார்

ஆனால் காளயனாய் மாறி
கனவாக மாற்றி விட்டேன்.

செல்வி பரமேஸ்வரன் வைஷ்ணவி
தரம் 6A

### கல்வி அழகே அழகு!

கல்வியின் மேன்மையில் பிறக்கும் அழகு
கற்றவர் போற்றிட வந்த அழகு
நல்லவராக்கியே நம்மை என்றும்
நானிலம் போற்ற வைக்கும் அழகு
இல்லை என்றவர் நம்மை நன்றாய்
ஏற்றமுற வைக்கும் அழகு
அல்லல் அகற்றி நித்தம் எம்மை
ஆனந்தமாக்கும் அரிய அழகு
வல்லமை உற்றே தினம் இந்த
வையகத்தில் வாழ வைக்கும் அழகு
தொல்லைகள் தந்தவரும் எம்மோடு இணைந்து
தோழமை கொள்ள வைக்கும் அழகு
எல்லைகள் கடந்தும் என்றும் எம்மை
புகழுடையச் செய்யும் கல்வி அழகு
ஒல்லையில் கல்வியை ஒருங்கே கற்றால்
ஒய்யார வாழ்வைக் காட்டும்
சொல்லவும் முடியாத கல்வியின்அழகு
சொக்கவும் வைக்குமே இதன் அழகே!

செல்வி.துஷாரா சத்தியசீலன்
தரம் 11A

### வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்வதற்கே

சூழுகின்ற துயரறுத்து
சுடரவேண்டும் நம் வாழ்வு
வாழுகின்ற வாழ்க்கைக்கு
வனப்பு வந்து கூடணேடும்
தாழுகின்ற எண்ணங்கள்
தலையறுத்து எழவேண்டும்
நாளுமிந்த மியிலே
நம் வாழ்வு நிமிர வேண்டும்
தோன்றிற் புகழுடன் தோன்றுக
துணிந்தன்று கூறுனார் வள்ளுவர்
வான்தொடும் புகழுடன் வாழ்ந்திட
வையகத்தில் எழுபவர் அதைக்கொள்வர்
தேன் பொழில் வாழ்வினில் தேசத்தில்
திசையெங்கும் நாம் பொலிதல் வேண்டும்
நான் ஏதுமிந்த உலகிற்குசெய்வேன் என்ற எண்ணம்
நானிலம் பயனுற நன்மைகள் காட்டும்
நாளுமிந்த வாழ்க்கையினை
நல்லபடி வாழுவோம்
ஆளும் திறனறிந்து எங்கும்
அரசோச்சி நிற்போம்
வாழுகின்ற வாழ்க்கையினை
நல்வழிகளால் வெல்லுவோம்
யாருமே தூற்றாது யாவருமே ஏற்றிட
யாதுமாகி எழுவோம் வாழ்க்கை வாழ்வாங்கு
வாழவே என்று...!

செல்வி.வானுஜா கஜேந்திரன்
தரம் 13M

**தொண்ணூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட**
**எழுத்தாக்கத்திறன் போட்டிகளில்**
**முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட சிறுகதைகள்**

## மூத்தோரைக் கனம் பண்ணு

அன்று ஒரு நாள் கடும் மழை பெய்து கொண்டிருந்தது. ஒரு பெரியவர் நாடியில் கையூன்றி முதியோர் இல்லத்தில் இருந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தார். அவருடைய கண்களிலும் மழை பெய்து கொண்டிருந்தது போல நீர் வடிந்தது. அவருடைய பழைய நினைவுகள் அவர் கண் முன்னே வந்து சென்று கொண்டு இருந்தது.

ஒரு நாள் அதி காலையில் அப் பெரியவர் பத்திரிகை வாசித்துக் கொண்டு தனது மருமகளிடம் ஒரு தேனீர் எடுத்துக் கொண்டு வரும்படி கூறினார். இதனைக் கேட்ட மருமகள் சமையலறைக்குள் சென்று தனது கணவரிடம் அதாவத அப் பெரியவரின் மகனிடம் இவருடன் பெரிய தொல்லையாகிவிட்டது என்றாள். அதற்கு ஏன் என்ன நடந்தது இப்போது எதற்கு கோபிக்கிறாய் என்று அப் பெரியவரின் மகன் கேட்டான். உங்கள் அப்பா ஒரு வேலையும் செய்யாமல் இருக்கிறார். அவரை முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுங்கள் குடும்பச் செலவாவது குறையும் என்றாள். அவர் இங்கிருந்தால் உனக்கென்ன? எனக் கேட்டான் அப் பெரியவரின் மகன். தான் வேலை செய்வதை விட்டுவிட்டு என்னிடம் வேலை வாங்குகிறார் என்றாள் மருமகள்.

இவற்றையெல்லாம் அப் பெரியவர் ஒழிந்து நின்று கேட்டுக்கொண்டுதான் இருந்தார். அப்பெரியவர் தன் மகனிடம் சென்று நான் இங்கிருப்பது தொல்லை தான் நீ என்னை முதியோர் இல்லத்தில் சேர்த்து விடு எனக் கூறினார். அதற்கு அவர் மகன் அவள் தான் புத்தி கெட்ட தனமாக கூறுகிறாள் என்றால் நீங்களும் அப்படிக் கூறினால் நான் என்ன செய்வது? என்றான். நீங்கள் சேர்க்காவிட்டால் நானே முதியோர் இல்லத்தில் இவரைச் சேர்த்து விடுவேன் என்றாள். இவளின் அக்கிரமம் தாங்க முடியவில்லை. நானே கொண்டு போய் சேர்த்து விட்டு வருகின்றேன் எனக் கூறி முதியவரை அழைத்தான் மகன். முதியவர் முதியோர் இல்லத்திற்குச் செல்லத் தயாராகினார். அவர் மகனோ அவரைக் கவலையுடன் முதியோர் இல்லத்திற்கு அனுப்பினான். மருமகளோ தொல்லை நீங்கியது என்ற சந்தோசத்தில் வீட்டினுள்ளே சென்றாள். முதியவர் மனம் நொந்து கொண்டே முதியோர் இல்லத்தை அடைந்தார்.

இவ்வாறு அப்பெரியவரின் மனதில் பழைய ஞாபகங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன. நான் அவர்களுடன் இருப்பதும் தொல்லை தானே என நினைத்தார். எவ்வாறு மரங்களும் இலைகளை பச்சையாக இருக்கும் போது வைத்திருக்கும் ஆனால் அவை தேவையற்றுப் போன பின் அவற்றை உதிர்த்துவிடும். அதே போலத் தான் மனித வாழ்க்கையும் என நினைத்து கண்களிலிருந்து வரும் நீரைத் துடைத்து சற்றுத் திரும்பிப் பார்த்தார். என்ன ஆச்சரியம் அங்கே அவருடைய மகன் மருமகள் பேரப்பிள்ளைகள் அவரை அழைத்துச் செல்வதற்கு வந்து நின்று கொண்டிருந்தார்கள். மருமகள் மனம் மாறியதையிட்டு பெரியவர் மகிழ்ச்சியுடன் மறுபடியும் வீட்டிற்குச் சென்றார்.

தேவகுமார் செந்தில்குமரன்
தரம் 7A

# ஊனத்திலும் உயர்வு!

உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள நான் விரும்புறன். ஆனால் உங்களை எஙங்கையொ பார்த்த மாதிரி இருக்கு. நான் பந்தலயில இருக்கிறன். உங்கட பெயர் என்னண்ணு தெரிஞ்சுக்கலாமா? ஆமா பாலசிங்கம் திவ்யா.நான் இப்படி இருக்கிறன்னா அதுக்கு காரணம் என் குரு தான். நான் பரமானந்தா ஆச்சிரமத்தில் இருக்கும் போது எனக்கு கல்வி கற்று தந்தவர். ஏன் நீங்கள் உங்கட அப்பம்மாவோட இருக்கல்லயா? அது ஒரு பெரிய கதை ம்..... நான் அதை தெரிஞ்சுக்க விரும்புறன்.

எங்க கிராமம் பெரிய கிராமம் இல்லை. ஒரு பத்து தெரு ஒரு தெருவில் ஆறேழு குடிகள். எங்க பாத்தாலும் பச்சைப் பசேல் என்ற புல் வெளிகள். கோடையின்னா பட்டினி மாறினா கும்மாளம் தான். மின்சார வசதி இல்லை. பெரிய முதலாளிகள் எங்க ஊர் நிலத்தை வாங்கி விவசாயம் செய்வாக் நாங்களும் அங்க வேலை செய்வம். கிட்டத்தட்ட ஒரு அடிமை வாழ்க்கை தான். யாரைப்பாத்தாலும் இடுப்பில ஒரு பை தூக்கியிப்பாக. அது வெத்திலப் பை. எங்க முதலாளிக்கு ஒரு இருபத்தைந்து வயசு இருக்கும். நான் சொன்னா நீ நம்ப மாட்டாய்.. எங்கம்மா முதலாளியைத்தான் கலியாணம் செய்ஞ்சா. அவை கலியாணம் செய்து இரண்டு வருடத்தில நான் பிறந்தேன்.

எனக்கு கஸ்ட காலமோ எங்கம்மா விட்ட பிழையோ எங்கப்பன் செஞ்ச தப்போ எனக்கு அப்படு ஒரு அசம்பாவிதம் நடந்திச்சு. எனக்கு அப்ப ஒரு வயசு. நானு அம்மா அப்பா எங்க குலசாமி நாச்சியம்மையை வணங்கிட்டு எங்கட புகை விடுற காரில அப்பா ஆமை வேகத்தில ஓட்ட அம்மாவும் நானும் பின்னுக்கு இருந்துக்கிட்டு வந்தம். அப்ப... அப்ப... ஐயோ என்னால முடியலலயே. ஆன்ரி உங்களுக்கு என்னாச்சு? எனக்கு ரொம்ப பயமா இருக்கு ஆன்ரி. இந்த தண்ணியை கொஞ்சம் குடியிங்க. எனக்கு அச்சம்பவத்தை நினைத்தாலே ஏதோ செய்யும். அது என்னன்னு எனக்குப் புரியல. நான் ஒரு டொக்ரராக இருந்தும் சீ ...... எனக்கு வெட்கமாக இருக்கு. ஆனால் பயமாகவும் இருக்கே.... ஆன்ரி நீங்க ஒர் டாக்டர் உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. கொஞ்ச நேரம் கண்ணை முடுங்க எல்லாம் தானா மறைஞ்சு போகும். கவிதா உன்னை எண்ணி நான் பெருமைப்படுறன். அங்கால என்ன நடந்ததுன்னு சொல்லவே இல்லையே?

சொல்லுறன் கேளு மிகவும் வேகமாக புயல் போல ஒரு சுமை வண்டி வந்து எங்கள் காரை மோதியது. அச் சம்பவத்தால் தான் எனது இரண்டு கால்களையும் இழந்தேன். இரண்டு மாதத்தில் என் பெற்றோர் குணமாயினர். ஆனாலும் என்னை அவர்கள் கவனிப்பதே இல்லை. இது நடந்து ஒரு வருடத்தில் என்னம்மாவிற்கு ஒரு பிள்ளை பிறந்தது. அது தான் எனக்கொரு தம்பி பிறந்தான். காலஞ்செல்லச் செல்ல அம்மாவிற்கு திவ்யா என்ற பிள்ளை கூட தனக்க இருக்கு என்ட நினைப்பு போனது. அப்பா கூட அப்படித்தான்.

ஐயோ பாவம் நீங்கள் காலேலாது பிறகு என்ன செஞ்சனீங்கள்? நான் கொஞ்ச நாளா எங்கட ஊருக்கு சீ சொல்லவே.... என்றாலும் சொல்லத்தானே வேணும். பிச்சையெடுத்து தின்னன். எங்க வீட்டை வாறவேட்ட அம்மா என்னை பிள்ளையின்னு சொல்ல மாட்டா. ஆனால் எனக்குத் தெரியும் அப்பாவிற்குப் பயந்து தான் அம்மா அப்படிச் செய்தா. ரகசியமா ஒவ்வொரு நாளும் இரவு அப்பாக்குத் தெரியாம தம்பீட்ட சாப்பாடு இனிப்பு தண்ணி எல்லாம் கொடுத்து விடுவா. என்னெண்டாலும் தான் பெத்த மூத்த பிள்ளையெண்ட பாசம் இருந்திருக்கும். இப்படி ஒரு நாள் அம்மா சாப்பாடு கொடுத்து விட அப்பா கண்டு அம்மாவின் கையில் சூடு போட்டதை நான் மறவேன். நான் இருந்தால் தானே அம்மாவிற்கு கரச்சல் எண்டு நான் எங்கட கிராமத்தை விட்டு வெளியே வந்திட்டன்.

நங்கள் எப்படி இப்படி ஒரு நல்ல நிலைக்கு வந்தீங்க? உங்களுக்கு கடவுளின் ஆசியும் இருந்திருக்கு. இல்லையெண்ணா கடவுள் இருந்திருக்கார். அது உண்மை. ஒரு மனிதனை எவ்வளவு சோதிக்க முடியுமோ அவ்வளவிற்கு என்னை சோதித்திட்டார். நான் வீட்டை விட்டு வெளியில் வந்து சிவன் கோவிலில் பிச்சை எடுத்தன். அப்ப என் வயசு பத்து. என்னை ஒரு காவிச் சட்டை போட்ட நெற்றியில நீறு தரித்த பெரிய சடாமுடி வளர்த்தவர் தூக்கிட்டு நல்ல உணவு கொடுத்தார். சட்டை புதுசு வாங்கித் தந்தார். எனக்கு எல்லாம் அப்ப ஆச்சரியமாக இருந்தது. என்னைப் போலஒரு நூா பிள்ளைகள் அந்த ஆச்சிரமத்தில் இருந்தவை. அப்ப நான் என் மனசைத் தேத்தினன்.

செல்வி.சாமந்தி நித்தியானந்தன்

தரம் 11A

---

## தவமாய்த் தவமிருந்து...

ஏதோ இனம் புரியாத சுகம் என் மனதை ஆட்கொண்டிருந்தது. கூடவே ஆவலும் இடம் பிடித்திருந்தது. எனது இருக்கைகள் முட்படுக்கைகளாய் இருந்தது. எப்போது விடியும்? எப்போது போய்ச் சேர்வேன்? என அங்கலாய்த்தது மனம். அப்பா.....அப்பா..... நித்திரையில் முனகிய என் மகனைத் தட்டிக் கொடுத்தேன். இவனைப் போன்று சிறுவனாக இருக்கும் போது நான் செய்தவைகளை எண்ணும் போது ..... அது அழகிய காலம்! சிறுவனாக இருக்கும் போது இருந்த சந்தோசமும் நிம்மதியும் இப்போது நினைத்துப் பார்க்குமளவு கூடியில்லை. அந்தளவிற்கு இன்று காலச்சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கின்றோம். ஓய்வெடுக்கக் கூட நேரமில்லை. அந்தளவு வேலைப் பழு நிறைந்துவிட்டது. எப்படித்தான் இயந்திர வாழ்க்கையில் உட்பட்டு வசதி மிகுதியில் வாழ்ந்தாலும் அன்றைய சந்தோசங்கள் இன்றில்லை.

வயல் வெளிகளை வருடி வரும் தென்றலும் ஆங்காங்கு எழுந்து நின்று உயிரைக் காத்து நிற்கும் கோயில்களின் மணியோசைகளும் துள்ளிக்குதித்து மகிழும் குளங்களும் இன்றைய இயந்திரங்களுக்கு ஈடாகுமா? இவையெல்லாம் கொடைகள். என் மனக் கண்களில் என் சிறுபராய நினைவுகள்........ சுற்றும் முற்றும் எங்கே பார்த்தாலும் பச்சைப்பசேலென காற்றில் ஆடியசையும் நெற்கதிர்களில் சூரிய ஒளி பட்டு பொன் போன்று ஒளிரும் அழகே அழகு. அந்த வயல்வெளிகளைத் தாண்டி ஒரு சிறிய வீடு, என் வீடு. இன்று போல் அன்று மின்சாரம் இல்லாமல் இருக்கலாம் ஆனால் சூரியக் கதிர்கள் எங்கள் வீட்டிற்கு வருவதற்கு தவறுவதில்லை, மின்விசிறி இல்லாமல் இருந்திருக்கலாம் ஆனால் சில்லென்ற தென்றல் என் வீட்டோடு குடிகொண்டிருந்தது.என் நண்பர்கள் தத்தித் தாவும் ஆட்டுக்குட்டிகள். என் துணை என் தாத்தா தான். வாழ்க்கையில் எனக்கு ஏதும் இல்லையென்று நான் கவலைப்பட்டது கிடையாது காரணம் என் தாத்தா.

கிராமத்து வாழ்க்கை அது. அந்த சுகம் என்றைக்கும் கிடைக்காது. இவற்றிற்கும் மேல் என் பள்ளிக்கூடம் .பள்ளிக்கூடம் என்று சொல்வதை விட ஆலயம் என்று சொல்லத்தான் எனக்கு விருப்பம். உண்மையிலே அது கலைக்கோயில் தான். எனக்கு படிக்கிறதென்றால் கொள்ளைப்பிரியம். பள்ளிக்கூடத்துக்கு போய் நண்பர்கள், ஆசிரியர்களைக் காண்பதில் பேரின்பம். பெரிய பெரிய இடங்களில் இருந்தெல்லாம் பிள்ளைகள் வந்து படிக்கிற இடம். எனக்கும் ஆசை தான் கஸ்டப்பட்டு தாத்தா என்னையும் அங்கே கொண்டே சேர்த்து விட்டார். ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு அடித்தளமிடும் காலம் பள்ளிக்காலம். நல்ல பாதை காட்டி, அதில் நாம் பயணித்து எம்மை வெற்றியடையச் செய்வது பாடசாலை. என் வாழ்க்கையிலும் மிகப்பெரும் பாலமாய் இந்தப் பாடசாலை அமையப் போவது அன்று எனக்கு தெரியவுமில்லை. புரியும் பக்குவமில்லை. எப்பவும் விளையாட்டுத்தான். குறும்புதான். ஆனால் படிப்பில் என் கவனம் குறைவதுமில்லை .

பணக்காரன், ஏழை ,உயர்வு, தாழ்வு இந்தக் கதைகளுக்கு அங்கே இடமில்லை . எவராயினும் சரி அங்கு கல்லூரி அன்னையின் பிள்ளைகள் தான். சகோதரனாய் ,நண்பனாய் புதிய புதிய உறவுகளைக் கண்டு கொண்டோம் . ஒவ்வொரு ஆசானும் மனதிலே தெய்வங்களாய் நிறைந்திருந்த காலம். மாதா,பிதா,குரு, நண்பன் என அனைத்துமாய் வழிநடாத்தும் அவர்களைக் காணத் தவித்திருப்போம் விடுமுறைக்காலங்களில். சிலவேளைகளில் நான் ஏதும் இல்லாதவனாய் இருக்கும் போது ஓடி வந்து உதவும் நண்பர்களை என் வாழ்க்கையில் கண்டேன் . இவ்வாறாக என் பாடசாலை எனக்குத் தந்த இன்பங்கள் எண்ணற்றவை. நினைக்கும் போதே உச்சி குளிரும்.

வளர வளர என் குறும்புகளும் குழப்படிகளும் என்னில் மறையத் தொடங்கியது. என்னைக் கஸ்டப்பட்டு வளர்க்கும் தாத்தாவை நல்ல நிலையிலே வைத்து பார்க்க வேணும் என்பது தான் என் விருப்பமாயிருந்தது. என் வாழ்க்கையிலே நான் பெற்ற அரும்பெருஞ் செல்வங்கள் என் தாத்தாவும், என் கல்லூரியும் தான். அதற்காக நான் கடவுளுக்கு எத்தனை கோடி நன்றிகள் சொல்லினும் தீராது.

இப்படியிருக்க ஒரு நாள் பாடசாலை நேரம், பாடம் நடந்து கொண்டிருந்தது. எங்கட வீட்டுக்கு பக்கத்து வீட்டு நடேசு மாமா அதிபரோடு கதைச்சுப்போட்டு என்னை வீட்டை கூட்டிக் கொண்டு போட்டார். எனக்கு விசயம் ஒன்றும் புரியவில்லை. ஒரு நாளும் இப்படி வந்து கூட்டிக் கொண்டு போனதேயில்லை. எனக்கு பயமாக இருந்தது. நான் உயர்தரம் படித்துக்கொண்டிருந்தேன். எங்கள் ஆசிரியர்கள் எங்கள் வகுப்பு மேல் சிறந்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தார்கள். அந்தளவிற்கும் எங்கள் வகுப்பு ஊக்கமும் ஆக்கமும் நிறைந்த வகுப்பாயிருந்தது. எங்களுக்கும் அது உற்சாகத்தை அளித்தது. வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்பதில் நாங்கள் துடிப்போடு இருந்தோம். எங்கள் ஆர்வத்திற்கேற்ப எங்கள் ஆசான்களும் எம்மை வழிகாட்டினார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக இப்படி ஒரு சோதனை வருமென நான் நினைக்கவேயில்லை.

நான் வீட்டுக்கு போன போது ஒரே ஆட்கள். எனக்கு என்ன செய்யிறதென்டே தெரியேல. உள்ளே தாத்தா கிடத்தப்பட்டிருந்தார். என்னால் தாங்கவே முடியவில்லை, நம்பவும் முடியவில்லை.கத்தினேன், கதறினேன் என் ஆசை நிராசையானதை எண்ணித்துடித்தேன். என்னைத் தனிக்கவிட்டுச் சென்று விட்டதை எண்ணும் போது என் மனம் கதிகலங்கியது. வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்த உணர்வு எனக்கு. எனக்கு தாய் தந்தையைத் தெரியாது. தாயாய், தந்தையாய்,உற்றாராய், உறவினராய் எனக்கிருந்த ஒரே சந்தோசம் தாத்தா தான்...... என் மனவேதனை என்னை நிலைகுலையச் செய்தது. இனி யாருக்காக இருக்கவேண்டும் என்ற எண்ணம் என் மனதில். என் கலக்கம் என்னைத் தடுமாறச் செய்தது.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் அவன் கஸ்டப்பட்டு மனக்குழப்பத்தில் இருக்கும் போது அவனை சரியாக ஆட்கொள்பவர் இறைவன், நான் படித்திருக்கின்றேன் . நான் துயருற்றிருக்கும் போது என்னை ஆட்கொண்டவர்கள் என் ஆசான்கள், அதிபர், நண்பர்கள் தான். 'வாழ்க்கை என்பது போராட்டம் தான் அதில் மூழ்கி எழும் போது தான் சுவாரஸ்யமே. எல்லாருக்கும் எல்லாம் நினைச்சபடி நடந்திட்டா பிறகு வாழ்க்கையில் அர்த்தமே இருக்காது. நாம் நினைக்கிறது நடக்கணும். நீ படித்து பெரிய ஆளாக வரவேணும். கலங்காதே, காலம் தான் உன் காயத்துக்கு மருந்து. உனக்கு பக்கபலமாக நாங்கள் எல்லோரும் இருப்போம். உனது இந்த போராட்டத்தில் நீ வெற்றி பெற உனது கல்வியும், அறிவும் தான் ஆயுதமாக இருக்கும். வேறெந்த குழப்பமும் உனக்கு வேண்டாம்.' அன்றைய வார்த்தைகள் இன்றும் கூட என் மனதில் அலைகளாய் உருண்டோடிக்கொண்டிருக்கின்றன. அந்த சொற்களுக்குத்தான் எவ்வளவு வலிமை? என் மனதை திடப்படுத்தி இன்று நான் பெரும் பொறியியலாளராக இருக்கின்றேன் என்றால் அது என் பாடசாலை எனக்கு ஆற்றிய உதவி அல்லவா? எனக்கு மட்டுமல்ல என்னைப் போன்ற எத்தனையோ பேரின் வாழ்க்கையில் பிரகாசத்தை ஏற்படுத்தியது இந்தப் பாடசாலை. 'வைத்த காலைப் பின் வையாது வாழ்விலே முன்னேறுவோம்......' அந்த வரிகள் இன்னும் என் மனதில் ஆழமாய் பதிந்து கிடக்கின்றது. மறக்கமுடியுமா உயிருள்ளவரை?

'அப்பா...' திடுக்கிட்டவனாய் நினைவுக்கு வந்தேன். இன்று என் கலைக்கோயிலுக்கு தொண்ணுாறு வயது. இன்று என் குடும்பத்துடன் தரிசிப்பதற்கு செல்கிறேன். எத்தனை வருடங்களின் பின் மீண்டும் என்னை வளர்த்தெடுத்த தாயைப் பார்க்க..... என் மனதில் சந்தோசம் , உற்சாகம். என் மகனை விரைவாக அழைத்தவாறே ஆவலில் துள்ளிக்குதித்தேன்.

வளர்த்தெடுத்து,பெரும் நிலையில் எனை நிறுத்தி பூரித்திருக்கும் என் அன்னையை நாடி பறக்கின்றேன் சிட்டாய்.....பல நாளிருந்த தவத்தின் பலனாக.

ஆதித்தியா நேசராசா

தரம் 13 B (EM)

**தொண்ணூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களிடையே நடத்தப்பட்ட எழுத்தாக்கத்திறன் போட்டிகளில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட ஆக்கங்கள்**

## வேர் கொண்ட உறவுகள்
## (கருப் பொருள் - பள்ளி உறவுகள்)

க.பரணீதரன்
அல்வாய் மேற்கு,
அல்வாய்

பத்து வருடங்களுக்கு பின்னர் இலங்கைக்கு வருவது எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

உறவுகள், நண்பர்கள் எமது கிராமம் என அனைத்தையும் காணப் போகின்றேன் என்ற மகிழ்ச்சி என் மனதில் நிறைந்திருக்க, கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கினேன்.

என்னை வரவேற்க என மாமி குடும்பத்தினர் யாழ்ப்பாணத்திலிருந்து "ஹயஸ்" வாகனம் ஒன்றில் வந்திருந்தார்கள்.

மாமாவின் தலையில் மட்டுமன்றி மாமியின் தலையிலும் முன்னையதை விட வெள்ளை முடியே அதிகமாக காணப்பட்டது. அன்பான உறவுகள் பற்றிய விசாரணைகளோடு யாழ் நோக்கி வந்து கொண்டிருந்தோம்.

புத்தளம் பாதையூடாக எமது "ஹயஸ்" வந்து கொண்டிருந்தது.

எல்லாமே மாறிப் போயிருந்தது....

வன்னியை அண்மித்துக் கொண்டிருக்கும் போது .... மாமியின் குரல் என்னை அழைத்தது.

"தம்பி தவராசா, வெளியாலை கண்ணாடிக்காலே பார், உந்த அவலங்களை ..........."

கண்ணாடியை இழுத்து வெளியே என் பார்வையை படர விட்டேன்.

என்ன கொடுமை வீடுகள் எல்லாம் நிலத்துடன் தூள் தூளாக .......... மரங்கள் எல்லாம் கருகி ........... பனைகள் எல்லாம் தலைகள் இன்றிய முண்டமாக ........ மிதிவெடி அபாய அறிவிப்புடனான பலகைகளுடன் வயல்வெளிகள்.... மனிதர் அற்ற வனாந்தரப் பூமியாக..... எனது நிலம் .... ஒரு வித பயம் எனக்கு பற்றிக் கொள்கின்றது.

என்ன கொடுமை.... பொருள், மரம், வீடு, கோயில் என எல்லாம் சிதைந்து உள்ளதே.... அப்படியாயின் மனிதர் எப்படி சிதைந்து இருப்பினும் என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை....

முறிகண்டியில் நின்றது எமது வாகனம் ....

பழைய முறிகண்டியை பார்த்தால் காணவில்லை! கோவிலிருந்த அந்த குடிசையையும் அந்த மரத்தையும் காணவில்லை. புதிதாக அமைக்கப்பட்ட முறிகண்டி கோவில் ......

முறிகண்டியானை வணங்கிக் கொண்டு வரும் போது.... அந்த குரல் என்னை அழைத்தது... ஐயா தர்மம் பண்ணுங்கைய்யா... ஐயா பார்த்தா படிச்சா பெரியாள் மாதிரி கிடக்கு கால் இல்லை ஐயா தர்மம் பண்ணுங்க....

அந்தக் குரலின் ஈன ஒலி என் காதை குடைந்தது."மணிபேர்ஸை" எடுத்தபடி அந்த ஈன ஒலி வந்த பக்கமாக திரும்பி அருகில் சென்றேன்.

முழங்காலிற்கு கீழ் அரைவாசி இல்லை.... அழுக்குப்படிந்த அவன் சேட்டில் பல கிழிசல்கள், ஒரு சிறு துண்டுச் சாரம் இடுப்பில் .... கையில் பத்துப் பதினைந்து சில்லறைக் குற்றிகள்....

நூறு ரூபாய்த் தாளை எடுத்து அவன் கைகளில் கொடுப்பதற்காக அவன் கையைத் தொடுகின்றேன். அந்த கையை பற்றியதும் என்னை அறியாத ஓர் உணர்ச்சி .... நிமிர்ந்து பார்க்கின்றேன் சிவகுமார்.... சிவகுமா....

சிவா... சிவா...டேய் .... என்னைத் தெரியலையா.... டேய் ... குழறிய படி அப்படியே அவனைக் கட்டிக் கொள்கின்றேன்.

மச்சான் டேய்... தவம் தானே.... டேய்.... என்றவாறு என்னை இறுகக் கட்டிக் கொண்டான்.

சிவகுமார் என் நண்பன். எங்கள் உறவு ஆரம்பித்தது எங்கள் பள்ளியில் தான்....

அப்பா... அம்மா... இல்லாது மாமியின் வளர்ப்பில் மாமியின் வளர்ப்பில் வளர்ந்த எனக்கு அன்புத் தேவை அதிகமாகவே வேண்டியிருந்தது. மாமிக்கும் நான்கு பிள்ளைகள் பாவம் அவா அவர்களோடு என்னையும் கவனிக்க என்ன செய்வா?......

என் மீது அன்பை பொழிபவர்களை காணும் போது என் மனம் குளிரும். என் ஆனந்தத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

பள்ளியில் ஆசிரியர்கள் சினக்கின்ற போது நான் அழ ஆரம்பித்து விடுவேன். அப்போது எல்லோரும் என்னை பார்த்து சிரிப்பார்கள்.... அந்த சமயத்தில் என் கைகளைப் பற்றி .... என் கண்ணைத் துடைத்து விட்ட அந்த பிஞ்சுக் கை ..... சிவகுமாருடையவை.

ஏன்டா அழுகிறாய்.... ஆறாம் வகுப்பு படிக்கிற உனக்கு வெட்கமில்லையாஅழ ..... எதற்கும் அழாதே.... ஆசிரியர் எங்கடை நன்மைக்கு தானே பேசுகிறார். நீ வீட்டுப் பாடங்களை ஒழுங்காக செய்து வந்தால் ஏன் ஆசிரியர் திட்டப் போறார். நீ ஒழுங்கா வீட்டுப் பாடங்களை செய்து வா.... என்ற அவனது அன்பான வார்த்தைகளோடு எங்கள் நட்பு ஆரம்பித்தது.

அவனது நட்பு கிடைத்ததும்..... என்னில் பல மாற்றங்கள்......

வெகு கெட்டிக்காரன் ஆன சிவா ...... எனக்கு நண்பனாக கிடைத்தமையை இட்டு நான் மகிழ்ந்தன். சிவா எனக்காக இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட தூதன் என்றே நான் கருதினேன். எனக்கு பாடங்களை விளங்க வைப்பது தொடக்கம், வீட்டு சாப்பாடு தருவது வரை என் சுக துக்கம் அனைத்திலும் அவன் பங்கு தான் அதிகம்.

சிவகுமார் – தவராசா என்றால் எமது பாடசாலையில் எல்லோருக்கும் தெரியும். படிப்பிலும் சரி, நட்பிலும் சரி எங்களை மற்றவர்கள் மிஞ்சாத வகையில் செயற்பட்டோம்.

உயர்தரத்தில் நான் கணிதப்பிரிவுக்கு படிக்க செல்ல, அவன் உயிரியல் பிரிவிற்கு படிக்க சென்றான். அவனுக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்வது என்றால் அலாதி பிரியம். டாக்டராக வந்தால் மக்கள் சேவை செய்யலாம் என்பது அவன் எண்ணம்....

இருவரும் நன்றாக படித்தோம்..... எமது ஆசிரியர்களின் வழிகாட்டல் எங்கள் மீதான அதிபரின் நம்பிக்கை... எதையும் வீணாக்காது படித்தோம்...

பரீட்சை நேரம் .... சிவகுமாரின் அம்மா திடீரென இறந்து விட்டார். அவனது பாசமிகு தாயின் இழப்பு அவனை முற்றாக குழப்பியது..... அவன் பரீட்சை எழுதவே விரும்வில்லை....

" நீ எழுதாவிடின் நானும் எழுத மாட்டேன்" என்ற என் சொல்லுக்காக எழுதினான்.

எனக்கு கம்பஸ் செல்லக் கூடிய அளவுக்கு பெறுபேறு வந்தது. அவனுக்கு சாதாரண பெறுபேறும் வந்தது. அவன் அதையிட்டு கவலை கொள்ளவில்லை. ஆனால் என்னால் தாங்க முடியவில்லை..... நானு

கம்பஸ் போக மாட்டேன் என அடம் பிடித்தேன்.

"நண்பா உன் வாழ்வில் ஒரு மகிழ்ச்சியான பெரும் திருப்பம் வந்திருக்கிறது". நீ இஞ்சினியராக வந்து பார்

நீ சந்தோஷமாக வாழ்வாய் ............. நீ கம்பஸ் போ...... என என்னை விடாப்பிடியாக அனுப்பினான்.....

கம்பஸ் வாழ்க்கை அவனுக்கும் எனக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்தியது..... கடிதத் தொடர்பு மட்டுமே எமக்கு இடையில் இருந்தது. அவன் "Social Worker" ஆக வன்னியில் வேலை செய்வதாக கூறியிருந்தான்....

படிப்பு முடிய மேற்படிப்புக்கு நான் வெளிநாடு செல்ல அவனுடனான தொடர்பு நாட்டு சூழ் நிலையால் தடைப்பட்டது.

அவனை நினைத்து பல நாட்கள் ஏங்கினேன். ஆனால் என் படிப்பின் அதிகம் என்னை அவன் பாலான நினைவைக் குறைத்தது.

டேய் மச்சான் என்னடா கோலம் இது..... இப்படி உன்னைப் பார்க்கவா நான் இங்கு வந்தேன்.... என்று அவனைக் கட்டி அழத்தொடங்கினேன்.

என்னை விடடா ..... டேய் எவ்வளவு பெரியாளாக வந்திட்டாய் உன்னை பார்க்க எவ்வளவு சந்தோசமாய் இருக்கு எப்படியடா இருக்கிறாய்..... மனுசி ..... பிள்ளைகள்... எங்கையடா? அவன் எந்த வித மனச் சலிப்பும் இல்லாமல் பள்ளியுறவில் இருந்த பாசத்தோடு என்னை தழுவிய படி கேட்டான்.....

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த நிலையிலும்....

சிவா உனக்கு என்ன நடந்ததுடா?

அது போரில போச்சுடா..... குடும்பம் பங்கரோட போச்சு... அதை விடு என் கதை முடிஞ்ச கதை.....

டேய் நீ வானில் எங்களோட வா கெதியா ஏறு என்று கைத்தாங்கலாக அழைத்தேன்.

இல்லையடா ...... விடு என்னை ... இந்த இடத்தில ...... என்ர குடும்பம் வாழ்ந்த இடத்தில் இருக்கிற உணர்வினை விட்டு விட்டு வர முடியாதடா. என்னை மன்னித்துக் கொள்ளடா.... எனக்கு இப்ப இதுதான் ஆறுதலடா.....

எனக்காக.... வாடா....

"ப்ளீஸ்டா" ...... என் மனநிலையைப் புரிந்து கொள் என்று விம்மினான்.

என் கண்களில் நீர் உடைப்பெடுத்தது.....

ஐயாயாயிரம் காசை அவன் கையில் திணித்து விட்டு. "ஹயஸ்" இல் ஏறி வந்தேன்.

என் மனதில் ஏற்பட்ட மாற்றத்தை என்னால் இறக்கி வைக்க முடியவில்லை.

அவனுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உணர்வோடு என் சிந்தனையை படர விட்டபடி வீடு வந்தேன்.

வீட்டிலும் கலகலப்பின்றி சோகமாக இருந்த என்னைக் கண்டு மாமி குடும்பத்தினர் கவலையாக போய்விட்டது. "விதியாரை விட்டுது,நாங்கள் கவலைப்பட்டு என்ன செய்ய முடியும்" என்று மாமி சொன்னார்.

விதியையும் வெல்லும் பள்ளி நட்பின் இறுக்கம் என்னுள் ஆழ வேரூன்றத் தொடங்கியது. சிவாவிற்காக என்ன செய்யலாம் என்ற திட்ட வரைபு ஒன்று பற்றி ஆழமாக சிந்திக்க தலைப்படடேன்.

*****

# பழைய மாணவர் கவிதைப் போட்டி - முதலாம் இடம்

செல்வி தனந்தி சிற்றம்பலம்

## நாமார்க்கும் குடியல்லோம்

பாரினில் வந்துதித்தோம் மானிடராய்
பேருலகையே மாற்றியமைக்கும் வல்லுனராய்
இருளில் ஒளியாய் குழப்பத்தில் தெளிவாய்
உலகின் தலைவிதியையே மாற்றியமைக்கும் மானிடா
உரக்கச் சொல் "நாமார்க்கும் குடியல்லோம்"

பேரழிவுகள் வந்திடலாம்
பெரும்புயல் தான் வீசிடலாம்
இயற்கை தன்னை மாற்றிக் கொள்ளலாம்
இரக்கமின்றி சூறையாடலாம்
எழுதாத சரித்திரத்தை எழுதிட
எழுந்து வா மானிடா. "நாமார்க்கும் குடியல்லோம்"

இனம் என்ன? மதம் என்ன?
இயந்திர வாழ்க்கை தன்னில்
இயலாமை என்றொன்றில்லை - நீ துணிந்து விட்டால்
வானம் உன் வசப்படும்
காலம் உனக்காக காத்திருக்கும்
காலனையும் வென்றிடலாம் - "நாமார்க்கும் குடியல்லோம்"

அச்சம் என்பது நமக்கில்லை - நமக்கு
அடிமையென நினைப்பவர்களை
துச்சமென தூக்கியெறி தூரத்திலே
துக்கம் பல சேர்ந்திடலாம் நம்மை
துவண்டு விடச் செய்திடலாம் - ஆனாலும்
உரக்கச் சொல் மானிடா "நாமார்க்கும் குடியல்லோம்"

**தொண்ணூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட**
**திறந்த எழுத்தாக்கத்திறன் போட்டிகளில்**
**முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட ஆக்கங்கள்**

## நாதியில்லாப் பிறவியிலே

(கருப்பொருள் : தூரநிலா)

அ.விஸ்ணுவர்த்தனி
கரணவாய் வடமேற்கு,
கரணவாய்

குமரனின் முகம் என்றும், பெரிய ஒரு சோகத்தை மூடி மறைத்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய கவனம் முழுக்க அவன் மீது தான் பதிகின்றது. பாடத்தை ஒழுங்காக நடத்த முடியவில்லை. இன்று அந்த பாடத்தை எப்படியாவது படிப்பித்து முடிக்க வேண்டுமே என்ற கட்டாயத்தின் பேரில், என்னை நானே சமாளித்து ஒருவாறு பாடத்தை முடித்து விடடேன்.

இரண்டாம் வகுப்பிற்கு, வகுப்பாசிரியராக இருப்பதால், எல்லாப் பிள்ளைகளிடமும் நான் அன்பாகவே பழகுவேன். பிள்ளைகளும் என்னை ஆசிரியர் என்ற வகையில் பாராமல் உறவினராக நினைத்து என்னிடம் பழகுவார்கள். பெரும்பாலும் வகுப்பிலுள்ள அனைத்து பிள்ளைகளைப் பற்றியும் அறிய முடிந்தாலும் குமரனைப் பற்றிய விடயம் எதனையும் என்னால் அறியமுடியவில்லை. இதுவரை என் வகுப்பு மாணவர்களின் நடத்தை எவையும் என்னை பெரிதாக பாதித்ததில்லை. ஆனால், குமரனைப் பார்க்கும் போது அவன் எதற்காகவோ ஏங்குவது போன்ற பரிதாப நிலையை தினமும் அவன் கண்ணில் பார்க்க முடிந்தது.

வகுப்பிலும் அவன் யாருடனும் அதிகமாக கதைக்க மாட்டான். விளையாடவும் போவதில்லை. பாடநேரங்கள் தவிர மற்றைய நேரங்களிலெல்லாம் மேசையில் அப்படியே படுத்து விடுவான். மற்றப் பிள்ளைகள் என்னிடம் வலியவந்து பழகுவது போல் குமரன் ஒரு நாளுமே என்னிடம் வந்தது கிடையாது. “ரீச்சர்” என என்னை கூப்பிட்டதைக் கூட என் காதுகள் கேட்டதில்லை. ஏதும் கேட்கவென நான் அருகஜல் சென்றால் பயந்து நடுங்குவான்.

இப்போதெல்லாம், இரண்டாம் வகுப்பிற்கு பாடம் எடுக்க செல்வதென்றால், எனக்கு அது ஒரு மன உளைச்சலாக இருந்தது. இரண்டாம் வகுப்பு என்றவுடனேயே குமரனின் முகம் தான் ஞாபகத்திற்கு வரும். அவனின் இந்த நிலைக்கான காரணத்தை பல நாட்களாக என்னால் அறிய முடியவில்லை.

இந்த ஆண்டிற்கான, முதல் தவணைப் பரீட்சை முடிந்ததும், மாணவர் தேர்ச்சி அறிக்கையை மாணவர்களின் கையில் வழங்காமல் பெற்றோரை அழைத்து வழங்க வேண்டும் என்ற நியதி என்னுடைய பாடசாலையில் இருந்தது.

விடுமுறை நாளிற்கு முதல் நாள், எல்லா மாணவர்களிடமும் இது பற்றிய விபரத்தை கூறிவிட்டேன்.

விடுமுறை நாளன்று அனேகமான மாணவரின் பெற்றோர் வந்திருந்தனர். அவர்களிடம் பிள்ளைகளின் கல்வி நிலை பற்றிக் கூறி தேர்ச்சி அறிக்கைகளை கையளித்தேன். சில மாணவர்களின் பெற்றோர், தம்மால் பாடசாலைக்கு வந்து அறிக்கை பெற்றுக் கொள்ள முடியாமைக்கு தகுந்த காரணம் கூறி பிள்ளைகளிடம் கடிதம் அனுப்பியிருந்தனர். அவர்களுக்கும், 'றிப்போட்டை கொடுத்த பிறகு, ஒரு றிப்போட் எஞ்சியிருந்தது.அது குமரனின் றிப்போட் உடனேயே, குமரனை என்னருகில் வரும்படி அழைத்தேன். அவனின் நடையிலும், உடலிலும் நடுக்கம் தெரிந்தது. அவனது பயத்தினை என்னால் உணர முடிந்தது.

எனது கேள்வி, குமரனின் மனதை பாதிக்க கூடாதே என்ற எண்ணத்துடன், இத்தனை நாட்களாக என் மனதில் இருந்த நெருடலிற்கான விடையும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் என் கேள்விக் கணைகளை தொடுத்தேன்.

"குமரன் உங்கடை றிப்போட் வாங்க, ஏன் அம்மா, அப்பா வாங்க வரேல்லை..."

"அம்மம்மா வாறெனண்டு சொன்னவா ரீச்சர்...."

'வயது போன காலத்திலை அம்மம்மா பாவம் தானே, அம்மாவை வரச் சொல்லியிருக்கலாமே"

"அம்மாவும், அப்பாவும், தங்கச்சியும் செத்துப் போட்டினம் ரீச்சர்" என்று கூறிய படியே, அவன் விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டான்.

இப்படியான ஒரு விடயத்தை நான் இவ்வளவு காலமும் அறியாமல் இருந்து விட்டேனே என என்மீது எனக்கு கோபம் வந்தது. 'பாடசாலை இறுதி நாளில் குமரனின் மனதை கிளறி அவனை மனம் வருந்தச் செய்து விட்டேனே என எனக்கு வேதனையாக இருந்தது.

குமரன் விக்கெலெடுத்து அழுதபடியே எனக்கு பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தான். எனக்கு ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது. அவனை என் அருகாக அழைத்து கண்களை துடைத்து விட்டு, ஆறதல் படுத்தி, அவனது 'றிப்போட்' அவன் கையில் கொடுத்தி அனுப்பி வைத்தேன்.

எனது வேலைகளையெல்லாம் முடித்து விட்டு, நான் வகுப்பறையை விட்டுச் செல்லும் நேரம் பார்த்து, ஒரு வயதான அம்மா என வகுப்பறையை நோக்கி வருவது தெரிந்தது. இவர் தான் குமரனின் அம்மம்மாவாக இருக்க வேண்டும். என நினைத்து அவரை வரவேற்கிறேன்.

"வீட்டு வேலைகளெல்லாம் முடிச்சு வர பிந்திப் போச்சு ரீச்சர்" என்ற படி தன் பேரனைத் தேடுகின்றார். குமரன் தன் அம்மம்மா அருகில் வந்து நிற்கின்றான். இப்பொழுது அவனது முகத்தில் சிறு புன்னகை அரும்புகிறது. குமரனின் இச் சிறுபுன்னகை எனக்கும் மன ஆறுதலைத் தருகின்றது.

"எப்படி ரீச்சர், என்ர பேரன் ஒழுங்கா படிக்கிறானே"

"பறவாயில்லை ஆனால் வீட்டிலை இன்னும் கொஞ்சம் கவனம் எடுங்கோ அம்மா"

வீட்டில் நான் தான் பிள்ளையை கவனிக்கிறது. எனக்கு வயசும் போட்டுது படிப்பிக்க எனக்கும் இரவில் கண் தெரியாது. நீங்கள் தான் ரீச்சர் எப்படியும் பிள்ளையை படிப்பிச்சு முன்னுக்கு கொண்டு வந்துவிட வேண்டும்.

கேட்கலாமோ கேட்கக் கூடாதோ என்ற மனப் போராட்டத்தின் பின் இக் கேள்வியை கேட்டேன்.

"குமரன் அம்மா, அப்பாவை என்னெண்டு இழந்தவர்...."

"அது விதி ரீச்சர், பாவம் இந்தக் குழந்தை பிறந்து மூன்றாவது வருடமே தாய்,தேப்பனை பறிகொடுத்திட்டு நிக்குது" என்ற படி தன் சேலைத் தலைப்பால் கண்ணையும், மூக்கையும் துடைத்த படி மீண்டும் தொடர்கிறாள்.

"குமரன் பிறந்து மூன்று வருடத்தால், அவனுக்கு ஒரு தங்கச்சி கிடைத்தது. அதற்கு ஒரு நேத்திகடன் செய்ய வேண்டு என்று இவன்ட அப்பா கிளிநொச்சியிலிருக்கிற தங்களுடைய பரம்பரைக் கோயிலுக்கு குடும்பத்தோடு போக வெளிக்கிட்டவர். நல்ல காலம், குமரனை நான் என்னோடை மறிச்சிட்டன். அந்தப் பிள்ளை பிறந்த நேரமோ தெரியேல்லை, உந்த சண்டைக்குள்ளை மாட்டுப்பட்டிட்டினம். சண்டையிலை செல்லடிக்குள்ளை தான் என்ர குடும்பம் பலியாக வேண்டும் என்ட விதி போல......." என்ற படி குமரனை தன்னோடு அணைத்துக் கொள்கிறாள்.

குமரனின் மனதில் இப்படியானதொரு பாதிப்பு இருந்திருக்குமென, நான் ஒரு நாளும் நினைத்ததில்லை.

தினமும் வகுப்பில் அவன், மனம் சோர்வடைந்து இருப்பதற்கு தன் பெற்றோரை இழந்தமை தான் காரணமாக இருக்க வேண்டுமென, என் உள்மனம் கூறியது. ஆனாலும் அவன் கண்களில் தெரியும் ஏக்கம் எதற்காக....? என்று என்னை நானே கேட்டபடி, குமரனின் அம்மம்மாவிடம் கேட்டேன்.

"குமரனிற்கு பெற்றோர் இல்லாத படியால் அவன் இதுவரை காலமும் பாசத்திற்காக ஏங்கியிருப்பான் நீங்கள் அவனிட்டை குறைவைக்காமல் அன்பாக நடந்து கொள்ளுங்கோம்மா ஏனெண்டால் இது அவன்ர படிப்பை பாதிக்கும் என்றேன்.

"என்ர பேரனிற்கு தாய்,தேப்பன் இல்லாத குறை தெரியக் கூடாது என்று தான் என்னால் முடிஞ்ச வரை அன்பு காட்டி அவனை வளர்க்கிறேன். ஆனாலும் அவன் எதிர் பார்க்கிறது என்னட்டை கிடைக்கேல்லை போல....

குமரனின் ஏக்க உணர்வை தவிர்க்க அவனது அம்மம்மாவும் பெரும் பாடு படுகின்றார் என்பதை அவரின் பேச்சிலிருந்து விளங்கிக் கொள்ள முடிந்தது.

"குமரனுக்குத் துணையாக வீட்டில் வேற யாரும் இல்லையோ வேறு யாரும் இருந்தால், அவனிடம் பாசமாய்ப் பழகினால், குமரன் மாறிடுவான், சந்தோஷமாய் இருப்பான்."

"நீங்கள் சொல்றதும் சரிதான்ரீச்சர்" இப்ப என்னோட இருக்கிறது என்ர கடைசி மகள் மட்டும் தான் அவளும் கலியாணம் செய்து புருஷன் பிள்ளைகள் என்று இருக்கிறாள். ஆரம்பத்தில் அவள் தான் குமரனையும் கவனித்தவள். இப்ப அவளுக்கு மூன்று பிள்ளைகள் எல்லாம் சின்னஞ் சிறுசுகள் தன்ர பிள்ளைகளை கவனிக்கவே, ஒரு நாள் போதாது.

பிறகு எப்படி அவள் குமரனைக் கவனிக்கிறது. இதுமட்டுமல்ல, குமரனை வீட்டிலை வைச்சிருக்கிறது

மகளின் புருஷனிற்கு அவ்வளவு பிடிப்பில்லை. அவர் வேலையாலை வீட்டுக்கு வரும் போது தன்ர பிள்ளைகளுக்கு ஏதாவது தின் பண்டங்களோ விளையாட்டுச் சாமான்களோ வாங்கிக் கொண்டு வருவார். குமரனிற்கு எதுவும் குடுக்க மாட்டார். அதோடை அவர் தன் பிள்ளைகளோடு சந்தோசமாக கொஞ்சி விளையாடுறதை, குமரன் ஏக்கத்தோடு தூரத்திலிருந்து பார்க்கிறதை நானே என் கண்ணால் எத்தனையோ தரம் பாாத்திருக்கிறேன். மருமகனிட்டை சரிபிழை ஏதும் சொல்லேலாது. உடனே சண்டைக்கு வநமது விடுவார்........... என்று குமரனின் அம்மம்மா பெரும் மூச்சொன்றை விட்டபடி கூறி முடித்தார்.

குமரனைப் பற்றி அறிய வேண்டும் என்ற ஆவலில் நான் நேரம் போவதே தெரியாமல், குமரனின் அம்மம்மாவிடம் கதைத்துக் கொண்டிருந்தேன் என்பதை பாடசாலை முடி வடைவதற்காக ஒலித்த மணியை என் காதில் கேட்டபின் என்னால் உணர முடிந்தது.

விடுமுறை நாட்களில் கூட குமரனின் நினைவு எனக்கு அடிக்கடி வந்து போயிற்று. இருபத்தியொரு நாள் முடிந்து பாடசாலை தொடங்கும் நாளிற்காக காத்திருந்தேன்.

பாடசாலை தொடங்கும் நாளும் வந்தது. அதிபரின் அறையில் கையெழுத்தை வைத்து விட்டு எனது வகுப்பறையை நோக்கி விரைந்தேன்.

மாணவர்கள் எல்லோரும், வகுப்பறையை கூட்டி, கதிரை, மேசைகளை அடுக்கிக் கொண்டு இருந்தனர்.

அவர்களிடையே என் கண்கள் குமரனை தேடின. அவனை காணவில்லை. எட்டு மணியாவதற்கு என்னும் பத்து நிமிடம் இருப்பதால் அவன் வருவானென்று எனக்கு நானே கூறிய படி வாசற்பக்கத்தையே பார்க்கின்றேன்.

காலைப் பிராாத்தனையும் முடிந்து பிள்ளைகளெல்லோரும் வகுப்பறைக்கு செல்கின்றனர். நானும் என்னுடைய வகுப்பறைக்கு செல்கின்றேன்.

அங்கும் குமரன் இல்லை. என்னுடைய மனம் பொறுமையிழந்து மற்ற பிள்ளைகளிடம் கேட்கின்றேன்.

" குமரன் இண்டைக்கு ஏன் வரேல்லை."

"அவன்ர அம்மம்மா செத்துப் போயிட்டா ரீச்சர் அதனால் அவனை கொண்டு போய் அனாதை இல்லத்தில்-விட்டிட்டினமாம். என்று ஒரு மாணவன் கூறினான்.

என் மனம் ஏதோ ஒன்றை இழந்தது போல் உணர்ந்தேன். பிறந்ததிலிருந்து குமரன் பாசத்தை ஒருநாளும் அனுபவித்ததில்லை. அதையென்றுமே கடவுள் அவனுக்கு தூரமாகவே வைத்திருக்கின்றாரே.... அவனுக்கு அது என்றுமே கிடைக்காதா என்று என் மனம் ஏங்கத் தொடங்கியது.

*****

# திறந்த கவிதைப் போட்டி - முதலாம் இடம்

கு.யோகேந்தினி
வளர்மதி
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

## "எல்லோரும் இன்புற்றிருக்க ..................."

எல்லோரும் இன்புற்றிருக்க வழி காண்போம் !
இதயத்தால் எல்லோரும் இணைந்தொன்றாய் வாழ்வோம் !
பொல்லாத்தனங்களினை ஒழிக்க வழி காண்போம் !
பொதுவுடமைக் கொள்கை வழி நின்று வெற்றி காண்போம் !
நல்லோரின் நட்பென்றும் நமக்கிங்கு வேண்டும் !
நாவடக்கம் நமக்கென்றும் இருந்திடவே வேண்டும் !
வல்லவராய், நல்லவராய் நாம் வாழ வேண்டும் !
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திடவே வேண்டும் !


மற்றவரின் துன்பத்தில் நாம் பங்கு கொள்வோம் !
மற்றவர்க்கு உதவுவதில் நாம் மகிழ்வு கொள்வோம் !
கற்றவர்கள் வார்த்தை வழி நாம் நடந்து கொள்வோம் !
காலத்தை பொன்னாக மதித்தென்றும் வாழ்வோம் !
பெற்றதாய் நாட்டிற்கு பெருமைகளைச் சேர்ப்போம் !
பேதங்களை மறந்து பேரன்பு கொள்வோம் !
வற்றாத வளங்களெலாம் சேர வழி காண்போம் !
வாழ்வுயர நாமுழைத்து வெற்றி பல காண்போம் !

மதங்களெலாம் கூறுகின்ற நெறிமுறையில் நடப்போம் !
மனிதரெல்லாம் ஓர் இனமே என்றிங்கு நினைப்போம் !
நிதமிங்கு உண்மையினைப் பேசி நன்மை செய்வோம் !
நிலமிசையில் நேர்மை வழி நடந்தின்பம் காண்போம் !
அதர்மத்தை விட்டொழித்து அகிம்சை வழி நடப்போம் !
அடுத்தவர்க்கும் இருப்பதனைக் கொடுத்திங்கு வாழ்வோம் !
உதயனவன் உலகிற்கு உதவுவது போலே !
உயிருள்ளவரை பிறர்க்கு உதவியுமே வாழ்வோம் !

நன்றி.

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## முப்பரிமாணத் தோற்றம் - 2011




1. இரு மாடிக் கட்டடம்
2. கலையரங்கு
3. "ட" மண்டபம்
4. கற்றல் வள நிலையம் (நூலகம், ஆய்வுகூடம், த.தொ.தொ.நு.அலகு )
5. ஆண்கள் விடுதி
6. மைதான விஸ்தரிப்பிற்கென கொள்வனவுசெய்யப்பட்ட காணி
7. விளையாட்டு மைதானம்
8. திறந்தவெளி மேடை
9. செயற்பாட்டறைத்தொகுதி
10. மலசலகூடம் (பெண்கள்)
11. பெண்கள் விடுதி
12. கூடைப்பந்தாட்டத்திடல்
13. விவசாயநிலம் (பண்ணை)
14. விவசாய ஆய்வுகூடமும் வகுப்பறைகளும்
15. பௌதிக, இரசாயன ஆய்வுகூடங்கள்
16. கந்தையா மண்டபம்
17. சிற்றுண்டிச்சாலை
18. சைக்கிள் தரிப்பிடங்கள்
19. மலசலகூடம் (ஆண்கள்)
20. அதிபர் விடுதி
21. ஆசிரியர் வள நிலையம் (வடமராட்சி வலயம்)
22. பிரதான நீர்த்தாங்கி
23. மலசலகூடத் தொகுதி (பழையது)
24. அழிவுற்ற நிலையிலுள்ள கட்டடம் (ஆய்வுகூடம்)
25. அழிவுற்ற நிலையிலுள்ள கட்டடம் (இராஜலிங்கம் மண்டபம்)

# கல்லூரியின் விளையாட்டு அணிகள் - 2011


19 வயது பூப்பந்தாட்ட அணி


17 வயது வலைப்பந்தாட்ட அணி


17 வயது கரப்பந்தாட்ட அணி


19 வயது கிறிக்கற் அணி


19 வயது உதைபந்தாட்ட அணி


15 வயது வலைப்பந்தாட்ட அணி


15 வயது கரப்பந்தாட்ட அணி


19 வயது சதுரங்க அணி


15 வயது சதுரங்க அணி


15 வயது "கரம்" அணி

# கல்லூரியின் விளையாட்டு அணிகள் - 2011


17 வயது உதைபந்தாட்ட அணி


19 வயது உதைபந்தாட்ட அணி


19 வயது எல்லே அணி


19 வயது கிறிக்கற் அணி


19 வயது சதுரங்க அணி


15 வயது சதுரங்க அணி


19 வயது கரப்பந்தாட்ட அணி


19 வயது "கரம்" அணி

# கல்லூரியின் விளையாட்டு அணிகள் - 2011


15 வயது "கரம்" அணி


19 வயது "கரம்" அணி

# கல்லூரியின் மாணவர் மன்றங்கள் - 2011


இந்து மன்றம்


கிறிஸ்தவ மன்றம்


கூற்றாடல் குழு


தகவல் தொடர்பாடல் மன்றம்


உயர்தர மாணவர் மன்றம்


உயர்தர விஞ்ஞான மன்றம்


உயர்தர கலை வர்த்தக மன்றம்


இடைநிலை மாணவர் மன்றம்

வகுப்பு மாணவர் தலைவர்கள்



"பாண்ட்" வாத்திய அணி - ஆண்கள்



"பாண்ட்" வாத்திய அணி - பெண்கள்



## 'கடேற்' மாணவர் அணி



## சாரணர் அணி - ஆண்கள்



## சாரணர் அணி - பெண்கள்



# கல்லூரியின் மாணவர் மன்றங்கள் - 2011



இடைநிலை கணித விஞ்ஞான மன்றம்



இடைநிலை ஆங்கில மன்றம்



கனிஷ்ட மாணவர் மன்றம்



கனிஷ்ட கணித விஞ்ஞான மன்றம்



கனிஷ்ட ஆங்கில மன்றம்

# தொண்ணூறாவது ஆண்டுவிழா சுற்றுப்போட்டிகள்



உதைபந்தாட்டம்



உதைபந்தாட்டம்



உதைபந்தாட்டம்



உதைபந்தாட்டம்

## கல்லூரியின் காட்சிகள்

கல்லூரிச் சுற்றுப்புறங்களின் அழகுத் தோற்றங்கள்
















நினைவில் நிற்கும் அதிசய மரங்கள்




வலைப்பந்தாட்டம்


வலைப்பந்தாட்டம்


வலைப்பந்தாட்டம்


கிரிக்கெற்


கிரிக்கெற்



கிரிக்கெற்


மரதன் ஓட்டம்



மரதன் ஓட்டம்




மரதன் ஓட்டம்


மரதன் ஓட்டம்


மரதன் ஓட்டம்

# புதிய கலையரங்கு திறப்பு விழா - 2011.07.04



நிகழ்வுகளின் பதிவுகள்


இல்ல மெய்வன்மைப் போட்டிகள் – 2009


இல்ல மெய்வன்மைப் போட்டிகள் – 2009


வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தோர் முகாமாக எமது கல்லூரி (2009 ஏப்ரல்–ஜூன்)


வட. மத்திய மகளிர் கல்லூரியில் இடம்பெயர்ந்து இயங்கிய எமது கல்லூரியின் வகுப்புக்கள்





சர்வதேச ஆசிரியர் தினம் – 2009


பரிசளிப்பு விழாவின்போது விருந்தினர்களுடன் ஆசிரியர் குழாம்



பரிசளிப்பு விழா - 2008 (2009.10.31)

நிகழ்வுகளின் பதிவுகள்




கிறிக்கற் போட்டியில் சம்பியன்களாக



இல்ல மெய்வன்மைப் போட்டிகள் - 2010



கலைமகள் சொரூபம் திறப்புவிழா



மரம் நடுகைத் தினம்



நவோதயா வாரத்தில் கல்விக் கண்காட்சி




வடமராட்சிப் பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு அஸ்கிரிய பீடாதிபதியின் வருகை

நிகழ்வுகளின் பதிவுகள்



புனரமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை திறப்பு நிகழ்வு



முதலுதவி அறைத் திறப்பு நிகழ்வு





இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பிரகாசிக்கும் மாணவர்களைக் கௌரவித்த வண்ணமாலைப்பொழுது



ர்வதேச ஆசிரியர் தினம் - 2010



சர்வதேச ஆசிரியர் தினம் - 2010



மந்திகை ஆதாரவைத்தியசாலையில் சிரமதானம்




தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும்
13 வயது பெண்கள் அணி

# கல்விச் சுற்றுலா - 2010

நிகழ்வுகளின் பதிவுகள்


கல்விச் சுற்றுலாவின்போது "பின்னவல" யானைகள் சரணாலயத்தில் மாணவர்கள்


கல்விச் சுற்றுலாவின்போது கேகாலை சென்மேரிஸ் தமிழ் வித்தியாலயத்தில் அமைச்சர், நகரபிதா உள்ளிட்ட பிரமுகர்கள்



றம்பொடை ஆஞ்சநேயர் கோயில்



மலைநாட்டின் வீதியோரம்


திருக்கோணேஸ்வரம்


சிகிரியா


பௌத்த அருங்காட்சியகம்


தம்புள்ள பொற்கோயில்


கீரிமலை

நிகழ்வுகளின் பதிவுகள்


மரநடுகைத்தினத்தில் பயிர் விதைகள்வழங்கப்படுகின்றன


கலையரங்கின் வேலைத்திட்டங்கள் தொடர்பாக
ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்கள்


மாணவருக்கான மூக்குக் கண்ணாடி வழங்கல்


மைதான விஸ்தரிப்பிற்கான முதலாவது காணிக்கொள்வனவு


பழைய மாணவர்களுடனான சந்திப்பு


பிரியாவிடை பெற்றுச்செல்லும் முன்னாள் பிரதியதிபர்


கரவெட்டி பிரதேச செயலகத்தின் விளையாட்டுவிழா
கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது
விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர்


வடமராட்சி வலய மாற்றுவலுவுள்ள மாணவர்களின்
விளையாட்டு நிகழ்வு கல்லூரி மைதானத்தில்

நிகழ்வுகளின் பதிவுகள்



சரஸ்வதி பூசை - விஜயதசமி விழா 2010



ஒளி விழா - 2010



கணித விஞ்ஞான மன்றத்தினால் வெளியிடப்பட்ட "சிந்தனை" சஞ்சிகையின் முதற்பிரதியை அதிபரிடமிருந்து பெறும் முன்னாள் பிரதி அதிபர்



கல்லூரியிலேயே அச்சிடப்பட்ட "சிந்தனை" சஞ்சிகை மாணவரின் கைகளாலேயே நூலுருப்பெறுகிறது.





இல்ல மெய்வன்மைப் போட்டிகள் - 2011




தரம் 6 புதிய மாணவர் வரவேற்பு நிகழ்வு - 2011



சுகாதாரத்தியில் அரச அங்கீகாரம் பெற்ற புத்தகப் பைகள் மாணவருக்குப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

## நிகழ்வுகளின் பதிவுகள்


சித்திரபாட வகுப்பறை


“ட” மண்டபத்தில் பரீட்சை


கல்லூரி மைதானத்தில் பயிற்சியளிக்கப்படும் “கடேற்” மாணவர்கள்


பின்னணி இசையோடு தினமும் நடைபெறும் காலைநேர உடற்பயிற்சி


பின்னணி இசையோடு தினமும் நடைபெறும் காலைநேர உடற்பயிற்சி

# கல்விச் சுற்றுலா – 2010

நிகழ்வுகளின் பதிவுகள்



கல்விச் சுற்றுலாவின்போது "பின்னவல" யானைகள் சரணாலயத்தில் மாணவர்கள்



கல்விச் சுற்றுலாவின்போது கேகாலை சென்மேரிஸ் தமிழ் வித்தியாலயத்தில் அமைச்சர், நகரபிதா உள்ளிட்ட பிரமுகர்கள்



றம்பொடை ஆஞ்சநேயர் கோயில்



மலைநாட்டின் வீதியோரம்



திருக்கோணேஸ்வரம்




சிகிரியா



பௌத்த அருங்காட்சியகம்



தம்புள்ள பொற்கோயில்



கீரிமலை

# நிகழ்வுகளின் பதிவுகள்



வானியல் இரவுப் பாசறை - 2011




மகாஜனா கல்லூரியின் நூற்றாண்டு விழா
உதைபந்தாட்டப் போட்டிகளின் சம்பியன்களாக
எமது கல்லூரி



நடமாடும் பல்மருத்துவ சேவையின்போது
மாணவன் ஒருவருக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது



முன்னாள் ஆசிரியையான திருமதி நவரத்தினம் அவர்களால்
வறிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 100,000/- நிதியினை
பெற்றோரிடம் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு





கல்லூரிக்கு வருகைபுரிந்த நகைச்சுவைத்தென்றல் திண்டுக்கல் ஐ.லியோனியின் பட்டிமன்றக் குழுவினர்



வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில்
கௌரவ ஆளுநர் அவர்களுடன் கல்லூரிச் சமூகத்தினரின் சந்திப்பு



கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினர்
ஆசிரியர்களுடன் கலந்தாய்வு

## கல்லூரியின் காட்சிகள்

### புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலையரங்கின் உட்புறத்தோற்றம்



2009இல்



2011 இல் அழகுப் பொலிவுடன்

### கந்தையா மண்டபமும் உள்ளக வீதியும்



2010 இல்



2011 இல் அழகுக் கட்டுடன்

### கலையரங்கும் பல்நோக்கு அறைகளும் கொண்ட கட்டடச் சுற்றுப்புறம்



2006 இல்



2011 இல்

### சிற்றுண்டிச்சாலை




2010 நடுப்பகுதி வரை



2010 இல் புனரமைக்கப்பட்டபின்





யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் அழிவடைந்த முன் கட்டிடம்

கல்லூரியின் காட்சிகள்

தெற்குப்புற வாயிலும் முகப்புக் கட்டடமும் (NECORD)



2003 இல் விருந்தினர் அழைப்பின்போதான பின்னணியில்



2011 இல்

பிரதான நுழைவாயில் பகுதி




2006 இல்



2011 இல் அழகுப் பொலிவுடன்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலையரங்கும் முற்றமும்



2009இல்



2011 இல் அழகுப் பொலிவுடன்


சிரேஷ்ட மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு – 2011


கோட்டமட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் - 2011

நிகழ்வுகளின் பதிவுகள்


கல்லூரியில் அமைந்துள்ள முதலுதவி அறையில் மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை


மாணவர்களுக்கான வீதிப்போக்குவரத்து நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்




கனடா பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் 'Home Of Hopes' நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 22 கணனிகள் கையளிக்கப்படும் நிகழ்வு


லண்டன் பழைய மாணவரால் மடிக்கணனி அன்பளிப்பு


கனடா பழையமாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் பெறப்பட்ட Digital Duplicator இயந்திரம்



# தொலைநோக்குள்ள ஆசிரியர்கள் - இன்றைய தேவை

**பேராசிரியர். கலாநிதி . மா.கருணாநிதி**
கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

நீண்டகால அமைதியற்ற சூழ்நிலைமைகளின் பின்னர் யாழ்ப்பாணச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வென்றெடுப்பதில் அச்சமூகத்தின் முக்கியமான தொகுதியினர் என்ற வகையில் ஆசிரியர்களுக்கும் பெரும் பங்குண்டு. பாடசாலைக்கும் சமூகத்துக்கும் உறவுப்பாலமாக விளங்கும் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் இடைவினைத்தாக்கங்கள் சமூகமேம்பாட்டுக்கு உதவும் வழிவகைகள் பற்றிய கருத்துக்களை ஆசிரியர்களுடைய தொழில்சார் வகிபங்குகளுடன் இணைந்தவகையில் நோக்குதல் இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

ஆசிரியர்களின் உயர்தொழில் அபிவிருத்தி என்னும் நோக்கில் அவர்களது கல்வித் தகைமையையும் தொழில்சார் பயிற்சிகளையும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் இலங்கையின் கல்விமுறைமையில் ஏற்பட்டுள்ள விரிவாக்கத்தின் காரணமான சாதகமான செல்நெறிகளைப் பெற்றுள்ளன. பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் முறைசார் உயர்பட்டப் படிப்புகள், தேசிய கல்வி நிறுவகம், ஆசிரியர் கல்விக் கலாசாலைகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் முதலிய நிறுவனங்கள் வழங்கும் ஆசிரியர் கற்கைநெறிகள் மற்றும் பயிற்சிநெறிகளில் பெருந்தொகையான அசிரியர்கள் இலகுவாகப் பங்குபற்றி வருகின்றனர். இன்றைய ஆசிரியர் பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கான அடிப்படைக் கல்வித் தகைமை க.பொ.த. உயர்தரமாக இருக்கின்ற போதிலும் கணிசமான ஆசிரியர்கள் பட்டதாரிகளாகவும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளாகவும் இத்தொகுதியில் இடம்பெறுதல் கல்வியமைப்பின் முன்னேற்றத்திற்கான குறிகாட்டியாக உள்ளது. ஆயினும் ஆசிரியர்களுடைய அறிவும் ஆற்றலும் திறனும் சமுதாய அபிவிருத்தி என்னும் நோக்கில் எவ்வளவுதூரம் பயன்படுகின்றது என்பது இங்குள்ள எழுவினாவாகும்.

**கல்விக்கான தலைமைத்துவம்**

நீண்டகாலம் பிரச்சினைகள் நிலவிய ஒரு பிரதேசத்தில் கல்விலைமை சீர்குலைந்து காணப்படும் என்பது பல்வேறுநாடுகளின் வரலாறுகளிலிருந்து நாம் கற்றறிந்த பாடமாகும். ஆத்தகைய பிரச்சினைகளிலிருந்தும் மீண்டெழக்கூடிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வது எமது நிகழ்ச்சிநிரலாக இருத்தல் வேண்டும். நீண்டகாலக் கல்விப்பாரம்பரியத்தைக் கொண்ட யாழ்ப்பாணச் சமூகம் இன்று மிகவெகுவாகப் பின்தள்ளப்பட்டுள்ளது. 1970களுக்கு முன்னருள்ள காலப்பகுதியில் வழமையான கல்விச் செயற்பாடுகளையும் பொதுப்பரீட்சை முடிவுகளையும் பொறுத்தவரையில் யாழ்ப்பாண மாவட்டம் தனிப்பெருஞ் சிறப்பைப் பெற்றிருந்தது. பல்கலைக்கழகங்களில் பொறியியல், மருத்துவம் மற்றும் விஞ்ஞானத்துறைகளில் இம்மவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களே பெருந்தொகையாக இடம்பெற்றிருந்தனர். இலங்கையிலுள்ள முழுத்தமிழ்ச் சமூகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இது அமைந்தது.

புல்கலைக்கழக அனுமதி தொடர்பான தரப்படுத்தல்கள் மற்றும் மாவட்டப் பங்கீட்டு முறையின் அறிமுகங்களுடன் அவற்றின் பொருந்தாத் தன்மையினால் பல முரண்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. இன்று பல்கலைக்கழக அனுமதியில் திறமை யடிப்படைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்ற பொழுது ஏனைய மாவட்டங்களுடன் கடுமையான போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்தகைய போட்டிச்சூழல் விஞ்ஞானத்துறையில் மட்டுமல்லாது ஏனைய வணிகம் மற்றும் கலைத்துறை சார்ந்தும் உயர்மட்டத்திலுள்ளது என்பதனை நாம் எல்லோரும் அறிந்துள்ளோம். இந்நிலைமையை எதிர்கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாக மாணவர்களை ஆயத்தஞ் செய்வதற்கேற்ற தனிமனித மற்றும் தொழில்சார் ஆற்றலுள்ளவர்களாக ஆசிரியர்கள் விருத்தியுற வேண்டுமெனச் சமூகம் எதிர்பார்க்கின்றது. ஆசிரியர்கள் தமது வழமையான வகிபங்குகளுடன் இணைந்த வகையில் சமுதாய மாற்றங்களை எதிர்கொண்டு அதனை விளைதிறனுடன் கூடியவகையில் முன்னோக்கி நகர்த்திச் செல்லக்கூடிய எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் பாரிய பொறுப்பை ஏற்க வேண்டியவர்களும் ஆசிரியர்களே.

இலங்கையின் புதிய கல்விமுறையில் அறிமுகமாகியுள்ள கற்றல்-கற்பித்தல் செயல்முறைகளில் ஒவ்வொரு மாணவரும் அவருக்குரிய ஆற்றலுக்கான தேர்ச்சி மட்டங்களை அடைய வேண்டும். ஒரு மாணவரின் அபிவிருத்தியை நியமஞ்சார்ந்த முறையில் ஏனைய மாணவருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் முறையல்ல இது. இன்றைய சிக்கலான சமூக அமைப்பில் புதிய தராதரங்கள் வலியுறுத்தும் அடிப்படைகளில் மாணவர்கள் எல்லோரும் உண்மையான கல்வியைப் பெறவேண்டுமானால் வகுப்பறையில் ஆசிரியர் புதிய உபாயங்களை மேற்கொள்ளதுல் அத்தியாவசியமாகிறது. ஆசிரியர்கள் தகவல்களை வழங்குபவர் என்ற நிலையிலிருந்து வெகுதூரம் விருத்தியடைதல் வேண்டும். மாணவர்களின் பல்வகைப்பட்ட கற்றல் தேவைகளுகமைய ஆசிரியர்களின் பதிற்குறிகள் இடம்பெற வேண்டிய வழிமுறைகளை மாணவரின் முன்னேற்றங்கருதி, அவர்களுடைய அடைவுகளை மேம்படுத்தக்கூடிய விதத்தில் மிகக் கவனமாகக் கட்டியெழுப்புதல் இன்றைய தேவையாகும். ஆசிரியர்கள் தாம் பெற்றுக்கொள்ளும் தகைமைகளையும் பயிற்சிகளையும் பயன்படுததி கற்றலுக்கான தலைமைத்துவத்தை வழங்க ஆயத்தமால் வேண்டும். பாடசாலைகளில் அருகிவருகின்ற இத்தகைய பண்புகளைத் துரிதமாக மீளக்கட்டியெழுப்புதல் அத்தியாவசியமானதாகும்.

1996 இல் UNESCO கல்வி பற்றிய சர்வதேச மகாநாட்டில் 45வது அமர்வில் மாறிவரும் உலகில் ஆசிரியரின் வகிபங்குபற்றி ஆராய்ந்த போது ஆசிரியர் பணியின் தராதரமானது கற்பித்தலுக்கான நிலைமைகளிலும் பார்க்க சமூகத்தில் அவருக்குள்ள அங்கீகாரத்திலேயே தங்கியிருந்தன ( UNESCO, 1996) என்பதை எடுத்துக்காட்டியிருந்தது. இதன் பின்னர் வந்த அறிக்கைகள் பலவற்றிலும் மாறிவரும் சூழமைவில் தனிமனிதன் மற்றும் சமூகத்தின் மேம்பாடு குறித்த விடயங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதைக் காணலாம். மேலும், அண்மைய தசாப்தங்களில் பல நாடுகளிலும் ஆசிரியர் மத்தியில் ஒழுங்குணர்வு வீழ்ச்சியடைந்து செல்வதையும் அந்த அறிக்கைகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஆசிரியர்கள் தொடர்பான சமூக அங்கீகாரமும் ஒழுங்குணர்வு சீர்குலைதலும் மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் மட்டுமன்றி ஆசிரியர்களிடத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று அல்லது நான்கு தாசாப்தங்களுக்கு முன்னர் ஆசிரியர்களுக்கு சமூகத்தில் ஒரு தனிப்பெறுமானம் இருந்தது அக்காலச்சூழலில் ஆசிரியர்களாக வந்தவர்களின் சமுதாய நோக்கும் அர்ப்பணிப்பும் உயரிய மனப்பாங்குகளும் அவர்களுக்கு உயர் அந்தஸ்தினை வழங்கியிருந்தது. இன்று சகல தொழில்களையுந்தேடி ஒன்றுங் கிடைக்காதவிடத்து இறுதிப் புகலிடமான ஆசிரியர்தொழில் மாறியுள்ளமையால் முன்னையவர்கள் போன்ற எதிப்பார்ப்புகளைப் பின்னையவர்களிடம் எதிர்பார்க்க முடியவில்லை.. இன்றைய ஆசிரியர்கள் மத்தியில் தன்னம்பிக்கை குறைதல், தற்றிறன் குறைதல், ஆகியவற்றோடு

நிறுவனங்களில் வேலைநிலைமைகளில் உண்டாகும் மாற்றங்கள். வேலைப்பளு அதிகரிப்பு என்றவாறு பல காரணங்களை முன்வைப்பதன் மூலம் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் ஊக்கமும் குறைந்து செல்கின்றன. ஆசிரியர்கள் தமது வழமையான வேலைகளில் ஈடுபட முயற்சிக்கின்றனரேயொழிய தொழில்சார் பண்புகளுக்கு அப்பால் சமுதாய நோக்குடையவர்களாகத் விரிவுபடுத்திக் கொண்டு கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கும் அணியினராகத் தம்மை மாற்றிக்கொள்ள முற்படுவதில்லை.

**பாடசாலைக் கலாசார மேம்பாடு**

எமது பாடசாலைகளில் கல்விக் கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் அதனை உறுதிசெய்வதற்கும் பாடசாலைக் கலாசாரத்தில் ஆசிரியர்கள் கவனஞ்செலுத்துதல் அவசியத் தேவையாகும். புாடசாலைகளின் கலசாரப் பெறுமானங்கள் சிதைவடைந்து செல்கின்றமை இன்று எழுந்துள்ள இன்னொரு குற்றச் சாட்டாகும். புாடசாலைக் கலாசாரத்தின் சீரழிவுகள் சிறந்த கற்றல் சூழலை வழங்கக்கூடிய ஆற்றலைப் பாதித்துவருகின்றன. பாடசாலைகளின் தொலைநோக்கும் பணியிலக்கும் அவற்றையொட்டி எழுதப்படுகின்ற மகுட வாசகங்களுக்கும் இசைவான செயற்பாடுகள் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுவதில்லை. “ஒரு நிறுவனத்திலுள்ள உறுப்பினர்கள் தமக்கிடையில் பகிர்ந்துகொள்ளும் நம்பிக்கைகள் மற்றும் நிறுவனம் பற்றிய அடிப்படை எடுகோள்கள் கலாசாரம்” என Schien (1985) என்பாரும், பாடசாலைக் கலாசாரம் என்பது ஒரு நிறுவனத்திலுள்ளவர்களின் சமூகப் பழக்க வழக்கங்கள், பெறுமானங்கள், நம்பிக்கைகள், நடத்தைகள், வகுப்பறைக் கவிவு நிலைமைகள் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் என்பவற்றைக் கருதுமென Westoby (1988) என்பாரும் தெரிவித்துள்ளனர். பாடசாலை ஓர் முறைசார் நிறுவனம் என்ற வகையில் சமூகத்தின் கலாசாரத்தினைப் பேணுவதற்கும் அக்கலாசாரத்தை அடுத்த பரம்பரையினருக்கு உரிய முறையில் கையளிப்பதிலும் பெரும்பங்குண்டு. அவற்றையிட்டு இடம்பெறவேண்டிய ஊக்குவிப்புகள், ஆளுகை, வகைசொல்லல் முதலிய விடயங்களும் முக்கியமானவை.

ஆசிரியர்கள் உயர்தொழில் சமூகம் என்ற வகையில் கலசாரத்தைப் பேணுபவர்கள் என்னும் வகிபாகத்தையேற்று பாடசாலைக் கலாசாரத்தையும் சமூகத்தின் கலாசாரத்தையும் மேம்படுத்துதல் இன்றைய தேவையாகும். ஆசிரியர்கள் சிலரின் சிந்தனையில் வகுப்பறையில் கற்பித்தல் மட்டும் உயர்தொழில் அந்தஸ்தினை மேம்படுத்திவிடும் என்ற கருத்து நிலவி வருகின்றது. இவ்வாறான சிந்தனைகள் உயர்தொழில் சார்பாக ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடிய பின்னூட்டல்களைத் தடுத்துவிடுகின்றன. மற்றும் அவர்களின் வகைசொல்லற்ற செல்நெறியையும் மேம்படுத்துகிறது. ஆரோக்கியமான முறையில் இடம்பெறும் ஒத்துழைப்புக் கலாசாரம் பாடசாலைக் கலாசாரத்தினை மேம்படுத்துகிறது. ஒத்துழைக்கும் காலாசாரம் விரிவடையும்போது தொழில் அந்தஸ்திலும் முன்னேற்றங்கள் உண்டாகும்.

பாடசாலைக் கலாசாரம் காலமாற்றத்துடன் இணைந்து மாற்றம் பெறுமாயினும் அத்தகைய மாற்றமானது பாடசாலையில் ஏற்பட்டுவரும் பதிய மாற்றங்களுடன் தொடர்புபடுத்தப்படுதல் வேண்டும். இதனால் அக மற்றும் பறரீதியாக எழுந்துவரும் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்ட மாணவர் சமூகம் உருவாக வழிகோலலாம். மாணவர்கள் மத்தியில் பாடசாலைக் கலாசாரத்தையும் சமூகக் கலாசாரத்தையும் மதிக்கும் குணவியல்புகள் உருவாக்கும் நோக்கில் கலாசாரத்துக்கான தலைமைத்துவத்தை வழங்கக்கூடியவர்களாக ஆசிரியர்கள் தம்மைத் ஆயத்தஞ் செய்துகொள்ள வேண்டும்.

**சுயமதிப்பீடு**

விளைதிறனுள்ள பாடசாலைகள் தொடர்பான ஆராய்ச்சிகள் பல தனியாள் மற்றும் நிறுவன அபிவிருத்திக்கு சுயமதிப்பீடுகள் அவசியமானவையெனச் சுட்டிக்காட்டுகின்றன.

பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் உருவாகின்ற மாற்றங்கள் ஆசிரியர்கள் அறிய வேண்டிய விடயங்களிலும் அனுபவங்களிலும் மாற்றங்களை உருவாக்கும். இத்தகைய அனுபவங்கள் திறனாய்வுடன் கூடியனவாக அமையும்பொழுது, மேலும் பல விடயங்களைக் கற்கும் ஆவல் தூண்டப்படுகிறது. இலங்கையின் கல்வி முறைமையில் ஆசிரியர்கள் தொடர்பான மதிப்பீடுகள் இடம்பெறுத வேண்டுமென எடுத்துக் கூறப்படுகின்ற போதிலும் அம்மதிப்பீடுகள் தொடர்பான கருத்துகளும் மனப்பாங்குகளும் அதனை ஊக்குவிப்பதாக இல்லை.

உடன்பாடான முறையில் அபிவிருத்தியடைந்து செல்லும் பாடசாலைகளில் ஆசிரியர்கள் சுயமதிப்பீட்டில் ஈடுபடுவர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. ஓர் ஆசிரியர் தமது கற்பித்தல் பணிகள், பாடசாலையின் ஏனைய செயற்பாடுகளில் பங்கேற்றல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல், தமது அடைவுகள் பற்றி ஆக்கபூர்வமான முறையில் மதிப்பீடுகளை மேற்கொள்வாராயின் அவருடைய உயர்தொழில் அபிவிருத்திக்கும் அது வழிகோலும். சுயமதிபீடுகள் எப்பொழுதும் தலையீடுகளை ஊக்குவிப்பதுடன், நிலைமாற்றங்களிலும் உரிய பாதிப்புகளை உருவாக்கும். ஆசிரியர்கள் மேற்கொள்ளும் சுயமதிப்பீடுகளை அவதானிக்கும் மாணவர்களும் தமது பணிகள்பற்றிய மதிபீடுகளை செய்யத் தூண்டப்படுவார்கள். காலப்போக்கில் இது அவர்களுடைய வாழ்க்கைப் பழக்கமாகவும் உருப்பெற்றுவிடும்.

**ஆராய்ச்சியும் சமுதாய அபிவிருத்தியும்**

***"எனக்கு எது தெரியாது மற்றும் எவற்றில் நான் தேர்ச்சியடையவில்லை என்ற எனது அறியாமைபற்றி நன்கு அறிந்திராவிட்டால் என்னால் கற்பித்தலில் சரிவர ஈடுபடமுடியாது" (Freire,1996).***

ஆசிரியர் ஒருவர் உயர்தொழில்சார் நடத்தையுடன் கூடியவராக இருப்பதற்கு கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் தேவையான விடயங்கள் பற்றி விசாரணை செய்பவராக இருத்தல் வேண்டும். ஆசிரியர் ஓர் ஆராய்ச்சியாளராகச் செயற்படும் பொழுது விசாரணைகள் தூண்டப்படுவதுடன் அதன் பிரதிபலிப்புகள் அவருடைய செயற்பாடுகளிலும் தெரியவரும். யாழ் குடாநாட்டில் ஆராயப்பட வேண்டிய கல்விசார் பிரச்சினைகள் பல உள்ளன. இப்பிரச்சினைகள் தொடர்பாக வெளியார் கவனமெடுப்பார்கள் என நம்பிக்கை கொள்ளத்தேவையில்லை

இதுவரை காலமும் கல்வி தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதிலே பல்கலைக் கழகங்களும் கொள்கை வகுப்பில் ஈடுபடும் சிறுவனங்களுமே பெருமளவில் ஈடுபட்டுவந்துள்ளன. பல்கலைக்கழக ஆராய்ச்சிகள் பெருமளவில் பட்டப் படிப்புத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் அமைந்தமையால் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருந்தாத் தன்மைகள் அவற்றுள் காணப்பட்டன. அண்மைக்கால அனுபவங்கள் என்ற வகையில் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழு போன்ற கொள்கை வகுப்பாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் காணப்படும் முன்மொழிவுகள் அந்தந்தப் பிரச்சினைகள் தொடர்பாக விசேடமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை அடிப்படையாகக் கொண்டே அமைந்தன என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

யாழ்மாவட்டப் பாடசாலைகளில் நிலவிவருகின்ற கற்றல் கற்பித்தல் தொடர்பான பிரச்சினை நன்கு அறிந்தவர்கள் அவ்வப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களைவிட வேறு எவரும் இருக்கமுடியாது என்பதால் அவர்களுடைய உயர்தொழில்சார் விருத்தியில் ஆராய்ச்சி தொடர்பாகவும் ஈடுபட்டு ஆராய்ச்சிக் கலாசாரமொன்னினை விருத்திசெய்ய வேண்டும்.

ஆராய்ச்சி தொடர்பாக, யாழ் மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் கல்வி தொடர்பான விடய் ஆராய்ச்சிகளுடன் மட்டும் நின்றுவிடாமல் தமது அனுபவங்களை சமூகப் பிரச்சினைகளை ஆராய்தலிலும் இணைத்துக் கொள்ளலாம். அபிவிருத்தி தொடர்பான சமகாலச் சூழமைவு என்னவெனில் அறிவினையும் அனுபவங்களையுங்

கொண்டு விளைதிறன்மிக்க சமூக அபிவித்தித் திட்டங்களை உருவாக்கமுடியாது. பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனமானது (OECD) உண்மையான அபிவிருத்திக்குரிய திட்டங்கள் ஆராய்ச்சியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பொழுதே அவை வெற்றிதருகின்றன என்னுங் கருத்தினை அண்மையில் வலியுறுத்தி வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெறுமதிமிக்க வளங்கள் பல இன்னும் அறியப்படாமல் உள்ளன. அறிந்த வளங்கள்கூட உத்தமநிலையில் பயன்படவில்லை. நிவளம், நீர்வளம், கடல்வளம் மற்றும் காட்டுவளங்கள் தொடார்பான ஆய்வுகள் துரிதமாக மேற்கொள்ளப்படுதல் முக்கியமானது. இவ்விடயத்தில் பாடசாலைகளில் விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞான பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் பங்களிப்பினைப் புறந்தள்ளிவிட முடியாது. சமுதாயநலன் மேம்பாடு கருதி இவ்வாசிரியாகள் ஆராய்ச்சிப் பணிகளில் சிரத்தையுடன் ஈடுபடுதல் வேண்டும். இதற்குப் பல்கலைக்கழகங்களின் வழிகாட்டல்களை பெறலாம் அல்லது பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்படலாம். மேலும் பாடசாலைகளில் உயர்தரங்களில் கற்கும் மாணவர்களுக்கும் உரிய திசைமுகப்படுத்தல்களை வழங்கி ஊக்குவிக்கலாம். உதாரணமாக யாழ்ப்பாண விவசாயிகள் செறிவான பயிர்ச்செய்கை நுட்பங்களில் தேர்ச்சி பெற்றவர்கள். போரின் பின்னரான காலப்பகுதியில் விரிவான பயிர்ச்செய்கையையும் ஊக்குவித்தல் வேண்டும என்ற நிலை தோன்றியுள்ளது. இத்துறையில் புதிய நுட்பங்களைக் கையாளுந் திறன்களை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்கள் உதவலாம். இது போன்று தரைக்கீழ் நீர் தொடர்பான ஆராய்ச்சிகள் கடல்வள ஆராய்ச்சிகள், உப உணவுப் பயிர்ச்செய்கை முதலிய விடயங்களிலும் ஈடுபடலாம்.

**மாணவர்களின் அடைவுமட்டத்தினை மேம்படுத்துதல்**

யாழ்மாவட்டத்தின் நகரப்பகுதிகளில் அடைந்துள்ள பெரிய பாடசாலைகள் பொதுப்பரீட்சைகளில் பெற்றுக் கொள்ளும் பேறுபேறுகளுடன் மட்டும் நாம் திருப்தியடைந்துவிட முடியாது. கொழும்புப் பல்கலைக் கழகத்திலுள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் 2003ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொண்டு வருகின்ற மாணவர் அடைவுபற்றிய தேசிய மட்டத்திலான கணிப்பீடுகள் யாழ்மாவட்டப் பாடசாலைகளின் பின்தங்கிய நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன. இந்த ஆய்வுகள் மாதிரிகளின் அடிப்படையில் நிகழும் ஆய்வாக இருந்தாலும் அவற்றுள் அடங்குகின்ற யாழ்ப்பாண மாவட்டத்துப் பாடசாலைகளின் வினையாற்றல் மிகக்குறைந்த மட்டத்தில் இருக்கின்றமை பகுப்பாய்வுகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.. குறிப்பாக, இரண்டாம் வகைப் பாடசாலைகள் வெகுதூரம் பின்தங்கியுள்ளன. கல்வியமைச்சின் ESDFP அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் i கல்வியில் சமவாய்ப்பினையும் நியாயத்தன்மையையும் உறுதிசெய்வது தொடர்பான கருத்துகளை எடுத்துக்கூறுகிறது.

இலங்கையின் கல்விக்கொள்கையில் நீண்ட காலமாகப் பேசப்பட்டுவரும் இக்கொள்கையை நடைமுறைப்படத்துவதன் சாத்தியக்கூறுகள் பற்றி வெகுவாகச் சிந்தித்தல் வேண்டும். கல்விவாய்ப்பினைப் முழுமையாக அடைதல் ஒரு முடிவுறாத விடயம் என்பததைப் பல ஆய்வுகள் வெளிக் கொணா்ந்துள்ளன. இத்தருணத்தில் சகல வளங்களும் கிடைக்கின்ற நிலையிலேதான் அடைவுமட்டத்தை உயர்த்தலாமென நினைக்காமல் பொருத்தமான குறுங்கால மற்றும் நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்து மாணவர்களின் அடைவுமட்டத்தினை மேம்படுத்தும் நோக்கில் பணியாற்றுவது இன்றைய தேவையாகும்.

சமுதாயநலன் மேம்பாட்டில் அக்கறை கொள்ளாத ஆசிரியர்கள் சமுதாயப் பெறு மாணங்களை இழந்துவிடுவர். ஆசிரியர்கள் தமது சமூகம் சார்ந்த கணிப்பினையும் அந்தஸ்தையும் மேம்படுத்தும் நோக்கில் தொலைநோக்குடையவர்களாகச் செயற்படுவதுடன் தமது நாளந்த வகிபாகங்களுடன் சமுதாய நோக்கிலான வகிபங்குகளையும் ஏற்றுச் செயற்பட வேண்டும் என்பதைச் சமூகம் எதிர்பார்க்கின்றது

*****



## உலக நிதி நெருக்கடி : குற்றம் கூறப்படவேண்டியது கணிதத்தையா?

# World Financial Crisis: Is Maths to blame?

## ஓர் விடய ஆய்வு: Lehman Brothers இன் முறிவு – ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட மிகப்பெரிய வங்குரோத்து.

**Dr. S. Srisatkunarajah[a], Mr. A. Laheetharan[a], Mr. J. Robinson[b].**
[a] Department of Mathematics and Statistics, [b] Department of Human Resource Management, University of Jaffna.

தற்போதய காலப்பகுதி (2008-2011) நிதிச் சந்தைக்கான வளமற்ற காலமாகக் காணப்படுகிறது. நிதி நிறுவனங்களின் வீழ்ச்சிகளையும் அதேவேளை அவற்றை ஸ்திரப்படுத்த உலக அரசுகள் மேற்கொள்ளும் கடுமையான முயற்சியையும் நாம் பார்த்திருக்கின்றோம். இதற்கு யாரைக் குற்றம் சாட்டுவது? ஊடக அறிக்கைகளின்படி இரு சந்தேக நபர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறார்கள். சந்தைகளின் தீர்மானங்களின் பின்னால் தகவல்களையும் உத்திகளையும் வழங்குகின்ற நிதிக் கணிதவியலாளர்கள் (financial mathematicians), விரைவான இலாபத்தையும் வருட இறுதியில் மிகை ஊதியத்தையும் மட்டும் கருதுகின்ற பேராசைபிடித்த வங்கியாளர்கள், ஆகிய இருசாராரும் குற்றம் சாட்டப்படுகின்றனா.

### நிதிச் சந்தைகளில் கணிதவியலின் பங்கு

நாம் வங்கிகளில் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது பெரும்பாலனோர் நிதிக் கணிதத்துடன் நேரடியாக தொடர்புபடுத்தப்படுகின்றனர். வங்கி முகாமையாளர்கள் கடன் பெறுனரை எவ்வளவு தூரம் தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதைவிட புள்ளிவிபர மாதிரிகளை (statistical models) அடிப்படையாகக்கொண்டே கடன் தீர்மானங்களை இப்பொழுது மேற்கொள்கிறார்கள். கடந்த கால வாடிக்கையாளர்களின் கடந்தகாலத் தரவுகளை (விண்ணப்பப் படிவத்திலுள்ள தரவுகள் மற்றும் கடந்தகாலத்தில் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்ற தரவுகள்) அடிப்படையாகக் கொண்டு சிலர் கடனை மீளச் செலுத்த இடர்படுவார்களா அல்லது கடனை மீளச்செலுத்தாது விடுவார்களா என்பதை எதிர்வு கூறுவதற்கு **புள்ளிவிபர மாதிரிகள்** உருவாக்கப்பட முடியும். தீர்மானத்தில் தனிநபர் சார்ந்த மதிப்பீடுகளின் பங்கினை இவை மட்டுப்படுத்துவதன் ஊடாக சிறந்த தீர்மானத்திற்கு வழிவகுக்கின்றது. மேலும் இம்மாதிரிகள் காலத்துக்குக் காலம் மேன்மைப்படுத்தப்படுவதனால் தனிப்பட்ட ரீதியில் நிகழ்காலத்தில் தொடர்புபட்டிருக்கும் வாடிக்கையாளர்களின் மதிப்பீடுகளைக் காட்டிலும் கடந்தகால எல்லா வாடிக்கையாளர்களின் நடத்தை அனுபவங்களிலிருந்தும் பெற்ற தரவுகளை மையப்படுத்தி தீர்மானம் எடுக்க முடிவதால் முகாமையாளர் சிறந்த தீர்மானத்தை எடுப்பதற்கு இது சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. வாடிக்கையாளர் ஒருவர் கடனை மீளச் செலுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றாரா அல்லது இல்லையா என்பதை முன்னுணர்வதற்கு இந்த மாதிரிகள் சிறப்பாகப் பயன்படுகின்றன. இருப்பினும் ஒரு

வாடிக்கையாளர் உயர் இடரில் (high risk) இருக்கிறார் என்பதை மாதிரி எதிர்வு கூறும் போதும் வங்கியாளர் ஒருவர் தனது சுயலாபத்திற்காக (போனஸ்) அப்படியானவருக்கு கடன் கொடுக்க முடிவு செய்வதன் மூலம் வங்கி இடரை எதிர்கொள்வதைத் தடுப்பதில்லை. எனவே மாதிரிகளுக்கிடையிலான வேறுபாட்டினையும் மாதிரிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதனையும் நாம் அறிந்திருக்க வேண்டியிருக்கின்றது.

உலகலாவிய ரீதியில் உருவாகியிருக்கும் நிதி நெருக்கடிக்கு பல்வேறு பகுதியினர் குற்றம் சாட்டப்படுகின்றனர். இருப்பினும் சர்வதேச சந்தைகளில் விற்கப்படும் நிதிக் கருவிகளில் ஒன்றான பெறுதிகள் (derivatives) மீதே மிகப் பெருமளவான குற்றங்கள் சுமத்தப்படுகின்றன.

**பெறுதிகள் என்றால் என்ன?**

முக்கியமான மாறிகளின் பெறுமதிகளில் சார்ந்திருக்கின்ற பெறுமதியினைக்கொண்ட நிதிக் கருவிகளே பெறுதிகள் என சுருக்கமாகக் கூறப்படுகின்றது. உதாரணமாக இந்த முக்கியமான மாறிகளாவன தங்கத்தின் விலையிலிருந்து பனிச் சறுக்குப் பகுதியில் விழுகின்ற பனியின் அளவு போன்ற ஏதுவாகவும் அமையலாம். பொதுவாக முக்கியமான மாறிகளாக பங்குகள் அல்லது பணப் பெறுமதி போன்ற வியாபாரச் சொத்துக்களின் பெறுமதி காணப்படுகின்றது. எவ்வாறு இந்தப் பெறுதிகள் செயற்படுகின்றன, எவ்வாறு விலையிடப்படுகின்றது என்பதை எவை தீர்மானிக்கின்றன என்பவற்றை விளங்கிக் கொள்வதற்கு நிதிக் கணிதவியலாளர்கள் மாதிரிகளை உருவாக்குகிறார்கள்.

**முன்னோக்கிய ஒப்பந்தங்கள் Forward (Futures) Contracts**

முன்னோக்கிய ஒப்பந்தங்கள் என்பன ஓர் சாதாரண பெறுதி வகைகளாகும். எதிர் காலத்தில் ஓர் குறித்த நேரத்தில் ஓர் குறித்த விலையில் சொத்துக்களை வாங்குவதற்கான அல்லது விற்பதற்கான ஓர் ஒப்பந்தமே இதுவாகும். முன்னோக்கிய பரிமாற்றத்தில் நுழையும்போது, எதிர்காலத்தில் ஓர் குறிப்பட்ட சொத்தினை ஓர் தீர்மானிக்கப்பட்ட விலையில் எதிர்காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் வாங்குவதற்கு ஒரு தரப்பினர் உடன்படுகின்றார். அதேவேளை பரிமாற்றத்தின் மறு பகுதியிலுள்ள மறு தரப்பினர் அதே திகதியில் அதே விலையில் குறித்த சொத்தை விற்க உடன்படுகின்றனர். குறித்த சொத்து வாங்கப்படுகின்ற/விற்க்கப்படுகின்ற விலை விநியோக விலையாகும். ஒப்பந்தத்தின் பெறுமதி கொள்கையளவில் இரு தரப்பினருக்கும் பூச்சியமாக இருக்க வேண்டுமென்பதற்காக இவ்விலை தெரிவுசெய்யப்படுகின்றது.

முன்னோக்கிய ஒப்பந்தங்களின் இலாபம் (payoff) விநியோகிக்கின்ற திகதியில் குறித்த சொத்தின் உண்மையான விலையில் தங்கியுள்ளது. உதாரணத்திற்கு 100 பன்றிகளை ஒவ்வொன்றும் 300

டொலர் விலையில் வருட இறுதியில் விற்பதற்கு சம்மதிக்கின்ற ஓர் முன்னோக்கிய ஒப்பந்தத்தில் நான் நுழைவதாகக் கருதிக் கொள்க. (எந்தப் பன்றியும் என்னிடம் இல்லை எனவும் நாம் கருதிக்கொள்வோம்). வருட இறுதியில் பன்றியின் விலை 350 டொலர் ஆக இருந்தால் நான் இந்த முன்னோக்கிய பரிமாற்றத்தில் நட்டமடைவேன். ஏனென்றால் பன்றிகளை விநியோகிப்பதற்கான எனது கட்டுப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொன்றும் 350 டொலர் விலையில் நான் அவற்றை வாங்கவேண்டும். அந்த விநியோகத்தின்போது ஒவ்வொரு பன்றிக்கும் 300 டொலர் பெறுவதுடன் மொத்தமாக 5000 டொலர் (100 x (350 – 300)) மற்றும் விநியோகச் செலவும் எனக்கு நட்டமானதாக அமையும். மறுபுறத்தில் பன்றி ஒன்றின் விலை 250 டொலர் ஆக குறைவடைந்தால் நான் 5000 டொலர் இலாபமடைவேன்.

பொதுவாக, K என்பது பன்றியின் விநியோக விலையாகவும் S என்பது பன்றியின் நடைமுறை விலையாகவும் இருந்தால் ஒரு பன்றிக்கான முதலீட்டின் மீதான இலாபம் பின்வருமாறு இருக்கும் (நான் பன்றிகளை குறித்த விலையில் விற்பதற்கு இணங்கியிருந்தால்) (short position).


$$K - S$$


அதேபோல், குறித்த விலையில் நான் பன்றிகளை வாங்க இணங்கியிருந்தால் முதலீட்டின் மீதான வருவாய்

$$S - K$$

ஆகக் காணப்படும் (long position).

இந்த முதலீட்டின் மீதான வருவாய் கீழ்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.




*உரு 1: முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்தான வருவாய்.*

**எவ்வாறு நாம் விநியோக விலையினைத் தீர்மானிக்கிறோம்?**

காசானது வருடத்திற்கு **5%** இல் வைப்பிடப்படலாம் அல்லது கடனாகப் பெறப்படலாம் எனக் கருதிக்கொள்க. பன்றி ஒன்றின் தற்போதைய விலை 300 டொலர் ஆகவும் பன்றி ஒன்றின் முன்னோக்கிய விலை 330 டொலராகவும் இருந்தால் நாம் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்.

1. 300 டொலரை 5% வட்டிக்கு ஓராண்டுக்கு கடனாகப் பெறுதல்.
2. பன்றி வாங்குதல்.
3. ஒரு வருடத்தில் ஒரு பன்றியை 330 டொலருக்கு விற்கின்ற ஒரு குறுங்கால முன்னோக்கிய ஒப்பந்தத்தில் நுழைதல்.
4. வருட இறுதியில் அந்தப் பன்றியினை 330 டொலராக விற்றால் அத்துடன் 300 டொலர் கடனையும் 15 டொலர் வட்டியையும் திருப்பிச் செலுத்துதல்.

நாம் இடரற்ற இலாபமாக 15 டொலரை இலாபமாக உருவாக்கியிருக்கிறோம். உண்மையில் 315 டொலருக்கு மேற்பட்ட எந்தவொரு விநியோக விலையும் (இந்தத் தந்திரோபாயத்தை பயன்படுத்தும்போது) இலாபத்தை உருவாக்கும். அதேபோல விநியோக விலை 315 டொலருக்குக் குறைந்தால் நாம் பின்வருவனவற்றை மேற்கொள்ள முடியும்.

1. பன்றியினை 300 டொலருக்கு விற்றல் (ஒன்று வைத்திருப்பதாகக் கருதுக).
2. 300 டொலரை 5% வட்டிக்கு ஓராண்டுக்கு வைப்பிலிடுதல்.
3. ஒரு வருடத்தில் விநியோக விலையில் பன்றிகளைக் கொள்வனவு செய்வதற்கான முன்னோக்கிய ஒப்பந்தத்தில் நுழைதல்.
4. வருட இறுதியில் விநியோக விலையில் அப் பன்றிகளை வாங்குதல்.

விநியோக விலை 315 டொலரைவிட குறைவாக இருக்கும் வரைக்கும் இடரற்ற இலாபம் உருவாகின்றது. கோட்பாட்டின் அடிப்படையில், 315 டொலருக்கு சமனற்ற எந்த முன்னோக்கிய விலையிலும் பன்றிச் சந்தையில் முதலீட்டாளர்கள் நன்மையினைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பர். இந்த வியாபார செயற்பாடு (முந்நூற்றி பதினைந்து டொலர் தவிர்ந்த) **arbitrage** எனக் கொள்ளப்படும். ஏனைய விலைகள் arbitrage க்கான சந்தர்ப்பத்தை வழங்குவதனால் இது arbitrage அற்ற விலை எனக் கொள்ளப்படும்.

இவை அனைத்தும் எங்களுக்கு எதைச் சொல்லுகின்றன? முதலாவதாக இந்த முன்நோக்கிய பரிமாற்றச் செலவு எந்தவொரு தரப்பினருக்கும் ஏற்படுவதில்லை. இரு தரப்பினரும் பொருத்தமான கடன் பெறுதல்/ கடன் கொடுத்தல் மூலம் எந்தவித இழப்புக்களும் இன்றி பாதுகாப்பாக பரிமாற்றத்திற்கு இணங்குகிறார்கள். இரண்டாவதாக இரு தரப்பினருக்கிடையிலான மொத்த வருமானம் அந்தப் பணத்திலிருந்து உழைக்கின்ற வட்டியாக இருக்கும், (மேற்குறித்த உதாரணத்தில் 15 டொலராகும்). எவ்வாறிருப்பினும் ஒரு தரப்பினரின் வருமானம் எதிர்த் தரப்பினரின் இழப்பாக இருக்கும். அதனால்தான் ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் ஒவ்வொரு தோல்வியாளர்கள் காணப்படுவர். முன்னோக்கிய பரிமாற்றமானது எதிர்கால அனுமானத்தை முன்னுணர்வை அடிப்படையாக்க் கொண்டதாக அமைகின்றது என்பதனை இது காட்டுகின்றது. முன்நோக்கிய பரிமாற்றத்தின் அனுமானத் தன்மையினை இது விளக்குவதோடு செலவற்ற நிலையில் பெருந்தொகையான ஒப்பந்தங்களினுள் நுழைவதிலுள்ள இடரின் தன்மையினையும் இது விளக்குகிறது.

இந்த நிலையில் இவ்வாறான ஒப்பந்தங்களில் ஏற்படும் இடர்த் தன்மையைக் குறைப்பதற்கு வேறுபட்ட வழிகள் காணப்படுகின்றன. இதுவே "கெட்ஜிங்" (hedging) என அழைக்கப்படுகின்றது.

சொத்துக்களுடன் இணைந்துள்ள இடர்த் தன்மையைக் குறைக்கும் நோக்கத்துடனேயே பெறுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக பெறுதிகளை வாங்குவதனூடாக முதலீட்டைப் பாதுகாக்க முற்படும்போது முதலீட்டாளரின் உண்மையான முதலீட்டில் நட்டம் ஏற்பட்டாலும் அவை முதலீட்டாளருக்கு நன்மையினைப் பெற்றுத்தரும்.

எண்ணற்ற வேறுபாடுள்ள பலவகையான பெறுதிகள் காணப்படுகின்றன. அவற்றில் பலவும் அடிப்படையில் சொத்துக்களின் அல்லது மாறிகளின் புதுமையான வடிவங்களாகும்.

ஒரு கம்பனியின் கடன் பெறுதி அக் கம்பனியின் கடன் பெறுமதியில் தங்கியுள்ளது. பொதுவாக ஒரு கடன் சார்ந்த பெறுதி ஒரு காப்புறுதி வகையாக இருக்கின்றது.

நீங்கள் கம்பனி A யிற்கு d = $1000 பெறுமதிக்கு 3 வருடத்துக்கு கடனை வழங்கியிருந்தால் ஒரு கடன் பெறுதியினைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அதனை மீட்க முடியாது போகலாம் என நீங்கள் கவலைப்படுகிறீர்கள். இவ்வாறான சாத்தியத்திற்கெதிராக காப்புறுதி செய்துகொள்வதற்கு நிறுவனம் B யிடமிருந்து ஒரு கடன் பெறுதியை பெற்றுக்கொள்ளமுடியும். இதற்காக நிறுவனம் B யிற்கு குறிப்பிடத்தக்க பெறுமதியை P = $30 (ஒரு காப்புறுதி கட்டணம் போல ஒரு வருடத்திற்கு $ 10 என்ற தவணைக் கட்டணங்கள்) செலுத்துவீர்கள். நிறுவனம் A 3ம் வருட இறுதியில் அத்தொகையை திருப்பிச் செலுத்தவில்லை எனின் நிறுவனம் B அதற்குப் பதிலாக $1000 ஐ உங்களுக்கு வழங்கும். நிறுவனம் B அத்தொகையை செலுத்தவேண்டியிருந்தாலோ அல்லது செலுத்தாது விட்டாலோ கடன் பெறுதியிலிருந்தான அவர்களுடைய இலாபம் பின்வருமாறு

**இலாபம் = (திருப்பிச் செலுத்துவதற்குரிய நிகழ்தகவு) x P - (திருப்பிச் செலுத்தாதற்குரிய நிகழ்தகவு) x d**

எனவே நீண்டகாலத்தில் திருப்பிச் செலுத்தாதற்குரிய சாத்தியம் மிகவும் குறைவாக இருந்ததால் நிறுவனம் B ஒரு லாபத்தினை உருவாக்கிக்கொள்ள முடியும். இதன் காரணமாகவே கடன் பெறுதி பிரபல்யம் அடைந்திருக்கின்றது. கடன் திருப்பிச் செலுத்தப்படாத சூழ்நிலை ஒன்று உருவாகும்போது இதனைக் கொள்வனவு செய்பவர்களுக்கு இது ஒரு காப்புறுதிக் கொள்கையாக அமையும். கடனை பலர் திருப்பிச் செலுத்தமுடியாத தன்மை இல்லாதபோதும் சந்தை அவற்றிற்கெதிராக வளர்ச்சியடைகின்றபோது இதனை விற்பனைசெய்கிறவர்கள் இலகுவாக இலாபத்தைப் பெறக்கூடிய தன்மை சந்தையில் காணப்படுகின்றது.

நடைமுறையில், கடன் பெறுதிகள் பாரியளவிலான கடன்களை ஒன்று திரட்டுவதற்கும் சந்தையில் இக் கடனோடு இணைந்துள்ள கடன் இடரை பகிர்ந்துகொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. இந்த நிதிசார் உற்பத்திகள் ஒரு சில கடன்கள் மட்டும் திருப்பிச் செலுத்தப்படாதிருந்தபோது ஒரு நல்ல வருவாயை பெற்றுக்கொடுத்தது. ஆனால் கடன் பெறுதிச் சந்தை வளர்ச்சியடைந்தபடியால் பாரியளவான கடன்கள் (100% உம் சொத்துக்களின் பெறுமதிக்கு ஈடு வைப்பது போன்ற உயர் இடரைக்கொண்ட கடன்கள் அல்லது கடனைத் திருப்பி செலுத்த முடியாத நிலையில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் கடன்கள்) கடன் பெறுதிகளில் உள்ளடங்க ஆரம்பித்தது. அத்துடன் அதிகளவிலான மக்கள் கடனை மீளச் செலுத்தமுடியாத நிலைக்கு வந்தபோது அதன் விளைவுகள் சந்தை முழுவதும் உணரப்பட்டது. எனவே இங்கு கணிதவியலாளர்களின் கணக்கு தவறியதா? உண்மை அதுவல்ல. அவர்களுடைய மாதிரி உருவாக்கிய தரவுகளின் அடிப்படையில் மட்டுமே கணிதவியலாளர்கள் தகவல்களை வழங்கமுடியும். **மாதிரி எடுகோள்கள் (இந்த பெறுதிகளை விலையிட பயன்படுத்திய) ஒரே நேரத்தில் அதிகளவான கடன்களைச் செலுத்த முடியாத நிலைக்காக உயர் சாத்தியத் தன்மையினை அனுமதிக்கவில்லை. ஆனால் அதுவே நடந்தது.**

## Collapse of Lehman Brothers - **லேமன் பிறதர்ஸ் உடைய சரிவு**

### அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய வங்குரோத்துநிலை

2001ஆம் ஆண்டின் பிரகாசமான காலைப்பொழுதில் ஒரு முதலீட்டுத் திட்டம் Lehman Brothers இன் தலைமை நிர்வாகியின் மேசைக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் ஆதன கட்டிடச் சந்தையில் முதலீடு செய்யச் சிபார்சு செய்வதாகவும், அப்படி முதலீடு செய்யும் போது எப்போதும் இறுதியில் வங்கி இலாபமடையத் தக்கவாறு கணித மற்றும் பௌதீகவியல் கலாநிதிப் பட்டதாரிகளால் வடிவமைக்கப்பட்டதாகும். தலைமை அதிகாரி திட்டத்தின் மீது நல்ல நம்பிக்கை அடைந்த நிலையில் அடுத்துவரும் 5 வருடங்களில் பில்லியன் கணக்காக அமெரிக்க டொலர்களை வங்கி கடனாகப் பெற்றுக் கொண்டு ஆதன கட்டிட சந்தையில் முதலீடு செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆதனகட்டிட சந்தையின் செழிப்புநிலை நடுத்தர நிறுவனமாக இருந்த Lehman Brothers ஐ உலகில் நான்காவது பாரிய முதலீட்டு வங்கியாக மாற்றியது.

ஆனால் ஆதன கட்டிட சந்தை வீழ்ச்சி ஆரம்பித்தபோது கலாநிதிகளால் ஆரம்பத்தில் எடுக்கப்பட்ட எடுகோள்கள் ஒவ்வொன்றாக முறிந்தது. தவறான முதலீடு காரணமாக 6.3 பில்லியன் டொலர்கள் வியத்தகு நட்டம் ஏற்பட்டது. செப்ரெம்பர் 15, 2008 இல் Lehman Brothers வீழ்ச்சி அடைந்து முறிந்தது. இது அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய வங்குரோத்து நிலையாகும்.

**பண உருவாக்க மாதிரி**

நீங்கள் Lehman Brothers இல் பணிபுரிவதாகவும் ஒரு நாள் காலை HSBC வங்கியிலிருந்து தொலைபேசி அழைப்பொன்றைச் செவிமடுத்ததாகக் கருதிக்கொள்க.

வருடமொன்றிற்கு 100 வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளராரும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை எங்களிடமிருந்து கடனாகப் பெறுகின்றார்கள். ஆவர்கள் ஏதாவது தவறிழைப்பின் அதனை ஈடுசெய்வதற்கு நாங்கள் அவர்களிடமிருந்து காப்புறுதி ஒன்று பெற விரும்புகின்றோம். ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திலும் 3% தவறு இருப்பதாக மதிப்பிடுகிறோம். காப்புறுதி செலவு எவ்வளவாக இருக்கும்?

நீங்கள் இலகுவாக அதனைக் கணிப்பிட முடியும். 100 வாடிக்கையாளர்களில் ஒவ்வொருவரும் 3% தவறு இழைப்பதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. ஆகவே நீங்கள் அடுத்த வருடத்தில் மூன்று வாடிக்கையாளர்கள் தவறிழைப்பதாக எதிர்பார்க்கின்றீர்கள். அதாவது நீங்கள் அடுத்த வருடம் 3 மில்லியன் டொலர்கள் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. வட்டி வீதம் ஒவ்வொரு வருடமும் 3% ஆக இருப்பதாக கருதுக. அடுத்த வருடப் பெறுமதி 3 மில்லியன் டொலராக இருக்கும், எனவே. தற்போதைய பெறுமதி $3/(3/100+1) = 3/1.03 = 2.91$ மில்லியன்.

ஆகையால் HSBC வங்கி ஆகக்குறைந்தது காப்புறுதிக்கு 2.91 மில்லியன் செலுத்த வேண்டியிருக்கும். வெளிப்படையாக கூறினால் Lehman Brothers ஒரு நன்கொடை நிறுவனமாக தொழிற்படுவதில்லை. ஆகவே அவர்கள் பணத்தை உருவாக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் 2.91 மில்லியனை உடைய ஒவ்வொரு ஒப்பந்தத்துக்கும் விலையை 2 மடங்காக 5.82 மில்லியனாக உயர்த்தி சராசரியாக 2.91 மில்லியன் டொலர்களை இக் காப்புறுதி ஒப்பந்தங்கள் மூலம்பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பார்கள். இவ்வகையான காப்புறுதி CDS (credit default swap) எனப்படும்.

தொலைபேசியை துண்டித்த பிறகு நீங்கள் பத்து கடனாளிகள் தவறிழைத்தால் என்ன நடக்கும் என்று சிந்தித்தால் கவலைப்பட வேண்டியிருக்கும். ஏனெனில் நீங்கள் பின்பு 10 மில்லியன் டொலர் திரும்ப செலுத்த வேண்டியிருக்கும். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு ஈட்டுக் கடன் கட்டுப்பாட்டினை (CDO) முன் வைப்பதாக யோசிக்கலாம். இதன் பிரகாரம் பத்து தவறுக்கு மேல் நிகழ்ந்தால் நீங்கள் அதில் பத்து தவறுகளுக்கு மட்டும் செலுத்த வேண்டியிருக்கும் மிகுதியை நான் செலுத்த வேண்டிவரும். பத்து தவறுக்கு குறைவெனில் நீங்கள் எல்லா தவறுக்கும் செலுத்த வேண்டியிருக்கும். அனேகமான சந்தர்ப்பங்களில் பத்து தவறுகள் ஏற்படாது என்று ஆகும் போது CDO மூலம் ஒரு சதமும் நட்டம் ஏற்படாது. மிகவும் பாதுகாப்பான இலாபம் என்று ஆகின்றது.

**ஒரு பாதுகாப்பான முதலீடு போல தோன்றும் இடர்? இரண்டு தடவை சிந்திப்பது நல்லது.**

ஆம். இது நியாயமானதல்ல. உண்மையில் வங்கி வடிவமைப்புக்களை விட ஈட்டுக்கடன் கட்டுப்பாடுகள் (CDO) அதிக இடரானவை. ஆனால் Lehman Brothers அதிக முதலீட்டாளர்களைப் போன்று இந்த இடரை அறிந்திருக்கவில்லை. மூல மாதிரிக்கு (original model) திரும்பிச் செல்வோம். தவறுக்கான

முதலாவது காரணம். ஒவ்வொரு முதலீட்டாளரும் கடனை செலுத்த முடியாத நிலைக்கு 3% சந்தர்ப்பத்தையே கொண்டிருக்கின்றனர் என்று எடுகோள் கொண்டமையாகும். எப்படி நாம் இதை அறிய முடியும்? இது வரலாற்றுத் தரவிலிருந்துதான் பெற்றிருக்க வேண்டும். 1920களின் பாரிய பொருளாதார மந்தத்திலும் கூட அங்கு வீட்டு விலைகளுக்கு தேசியரீதியில் விலையில் வீழ்ச்சி இருந்திருக்கவில்லை என்பது பிரச்சனையாக இருக்கின்றது. ஆகவே வீட்டு விலைகள் அதிகரித்தமை ஒரு நல்ல காலப்பகுதி என்ற அடிப்படையில் கடன் பெறுநரின் கடன் திரும்ப செலுத்தாமலிருக்கும் சந்தர்ப்பம் கணிக்கப்பட்டது. எப்படியிருப்பினும், 2007 இல் வீட்டு சந்தை வீழ்ச்சியுற்றது. அப்போது பல முதலீட்டாளர்களுடைய சொத்துக்கள் அவர்கள் எதிர்காலத்தில் செலுத்த வேண்டியிருக்கின்ற கடனினுடைய பெறுமதியை விட குறைவாக இருந்தது. ஆகவே அவர்களில் பலர் கடனை செலுத்த மறுக்கின்றார்கள். நிலைமை மோசமாவதற்கு இந்த கடன் பெறுநர்களின் 22% மானோர் பாரியளவான கடன் பெறுவோர்கள் ஆக இருந்தமையே இந்த மோசமான நிலமைக்கு காரணம். அவர்கள் குறைந்த வருமானத்தையும் கொண்டிருந்தார்கள். வங்கிகள் அவர்களுக்கு பணத்தைக் கடன் கொடுப்பதற்கு பயப்படவில்லை. ஏனெனில் அவர்கள் கடன் செலுத்த தவறினால் கூட காப்புறுதி நிறுவனங்கள் அவர்களுக்கு திரும்பச் செலுத்தும் என்பனவாகும். பாரியளவு கடன் பெறுநர்களுடைய பிரவேசம் இதற்கு முன்பில்லாதளவு அதிக இடரை கடன் வழங்கலில் உருவாக்கியது.

உண்மையில் அமெரிக்காவில் கடன் செலுத்தா நிலமைக்கான சாத்தியம் 2007 இலிருந்து மாதிரியில் எடுகோள் எடுத்தபடி 3% இலிருந்து நான்கு மடங்காக பெருகி இருந்தது. அதாவது 3% இலிருந்து 12% ற்கு உயர்ந்திருந்தது. இது நான்கு மடங்கு இடரை உருவாக்கியது. இது Lehman Brothers போன்ற முதலீட்டாளர்கள் எதிர்பார்த்ததை விட நான்கு மடங்கு கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்பதை கருதுகின்றது. உண்மை நிலமை அதை விட மோசமானதாக இருக்கின்றது. ஏனெனில் CDS மற்றும் CDO வை விட அதிக சிக்கலான நிதிசார் உற்பத்திகளினுடைய இலாபத்தன்மை சாத்தியத்தன்மையிலும் பார்க்க நியம சாத்தியத்தன்மையின் வர்க்கத்தில் தங்கியிருக்கலாம். தற்போது 0.03 லிருந்து 0.12க்கு கடன் செலுத்தாத நிலையின் சாத்தியத்தன்மை அதிகரிக்கின்றது, அதாவது சாத்தியத்தன்மையின் வர்க்க அதிகரிப்பானது 0.0009 லிருந்து 0.0144க்கு ஆகும்.

மேலும் இரண்டாவது தவறிற்கான நுட்பமான சந்தர்ப்பம் எப்போதும் காணப்படுகின்றது. அதை ஆராய்வோம் வங்கிக்கு CDO காப்புறுதிகளை விற்பதிலிருந்து நீர் பணத்தை உருவாக்க முடியுமா என்பது கடன் பெறுநர் பணத்தை திருப்பி செலுத்துவார்களா என்பதில் தங்கியிருக்கின்றது. இது பொருளாதாரத்தில் தங்கியிருக்கின்றது. ஆகவே பொருளாதாரம் வீழ்ச்சியடையுமானால் நீர் பணத்தை இழக்க அதிக சந்தர்ப்பம் இருக்கிறது. நீர் ஒரு துடிப்பான முதலீட்டாளராக இருந்தால் நீர் பங்குச்சந்தையிலும், CDO விலும் முதலிட்ட பணத்தை இழக்கிறீர். மறுபுறத்தில், பணத்தை CDO வில் செலவு செய்ததற்குப் பதிலாக நீர் ஜேர்மனி உலக கிண்ணத்தில் வெற்றி பெறலாம் என பந்தயம் செய்கிறீர் எனக் கொள்க. இந்த நேரம், உமது பணமெல்லாவற்றையும் நீர் இழப்பதற்காக சந்தை வீழ்ச்சியும் உலக கிண்ணத்தில் ஜேர்மனி தோல்வியடைவதும் தேவை. ஆகவே ஜேர்மனிக்காக பந்தயம் பிடிப்பதை விட CDO வின்

மீது முதலீடு செய்வது இடரான தெரிவாக இருக்கின்றது. சந்தை மீது CDO தங்கியிருப்பதன் காரணமாக எழும் மேலதிக இடரை கணக்கில் எடுக்காததே அவர்களது மாதிரியில் காணப்படும் தவறாகும்.

இந்த இரண்டு தவறுகளுமே CDO இல் இடரினை உண்டுபண்ண போதுமாக இருந்தது. உண்மையில் இந்த தவறுகளின் அடிப்படையில் அமெரிக்கா வங்கியின் செல்வம் சம்பந்தமான முகாமைத்துவப் பிரிவால் (Merril Lynch) வழங்கப்பட்ட ஊனுழு வினுடைய 27/30 % மிகவும் கடுமையான தவறைக் கொண்டவையாக இருந்திருக்கின்றன.

### Lehman Brothers வீழ்ச்சி

Lehman Brothers, CDO வின் மீது மிகப் பாரிய மூலதனத்தை செய்ய தீர்மானித்தபோது அதனுள் மறைந்திருந்த இடரினை அறிந்திருக்கவில்லை. இது கடனுக்கு உரிமை வீதம் 35:1 வீதமாக கூட இருந்தது. அது ஒவ்வொரு 36$ க்கும் 1$ மட்டுமே அதனுடைய வங்கிக் கணக்கில் இருந்தது. மிகுதி 35$ களையும் வேறு எங்கேயோ இருந்து கடனாகப் பெற்றிருந்தது. இதனது பரீட்சை மீதியிலிருந்து (balance sheet) 3% ஆன பணம் மட்டுமே நட்டமாகின்றது எனக்கருதும் போது, இது கொண்டிருந்த எல்லாப் பணத்தையும் இழந்ததினை இது குறிக்கின்றது. உண்மையில், ஊனுழு (ஈட்டுக் கடன் கடப்பாடுகள்) மூலம் ஏற்பட்ட பாரிய இழப்பு, டுநாஅயெ டீசழவாநசள பரீட்சை மீதியின் 3% விட கூடவாக இருந்த வேளையில் (கம்பனியின் உண்மையான சொத்து 3% ஏனையவை முதலீட்டாளர்களிடம் இருந்து பெறப்பட்டவை), முதலீட்டாளர்கள் கம்பனியில் நம்பிக்கை இழக்கத் தொடங்கியவுடன் கடனைத் திரும்பக் கேட்டார்கள். Lehman எப்பொழுதும் குறுங்கால கடன்களில் தங்கியிருந்தபடியால் இதனுடைய கடன் வழங்குனர்கள் (முதலீட்டாளர்கள்) தமது பணத்தை மிக விரைவாக பெற்றுக் கொள்ள அழுத்தம் கொடுத்தார்கள். இந்த நிலைமையில் வங்கியானது பணத்தை முதலீட்டாளர்களுக்கு திருப்பிக் கொடுக்க முடியாமல் திணறியது. Lehman Brothers திருப்பிக் கொடுக்கக்கூடியதாக இருந்ததை விட கூடுதலான பணத்தை கடனாகப் பெற்றிருந்தமையாலும் உடனடியாக வைப்பக்களை மீளச் செலுத்த முடியாமல் இருந்த நிலையினால், இவ் வங்கி நன்கு மாட்டிக் கொண்டது. இவ்வேளை 15.09.2008, முன்பு ஒருபோதுமில்லாதளவு உலகின் நான்காவது மிகப்பெரிய முதலீட்டு வங்கி முறிவடைந்தது.

* * * * *

**ஒவ்வொருவருக்கும் அறிவு இருக்கிறது; பொறுப்புணர்ச்சி இருக்கிறது ;**

**செயல் திறமை இருக்கிறது ; வாழ்வின் அனுபவம் இருக்கிறது ;**

**இதை ஒத்துக்கொள் ;**

**பிறரை மேய்ப்பதோ, அடக்கி ஆள்வதோ இன்ப ஊற்றைக் கெடுத்துவிடும்.**

**நலம் செய்வதோடு விட்டுவிடு.**

**அதற்குப் பதில் எதிர்பார்ப்பதை மறந்துவிடு.**

**- யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி -**

# ஆசிரியரும் தலைமைத்துவமும்



பேராசிரியர் : சபா ஜெயராசா.

ஆசிரியத்துவத்தின் உன்னதம் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளலோடு இணைந்தது. தலைமைத்துவம் பற்றிய விளக்கங்கள் பன்முகமானவை. பல்வேறுகண்ணோட்டங்களின் அடிப்படையிலே தலைமைத்துவம் விளக்கப்படுகின்றது. தலைமை நிலையும் முகாமை நிலையும் வேறுபடுத்தி நோக்கப்படும் பொருது, முகாமையாளர் சரியாகச் செய்வார். ஆனால் தலைவர் சரியானதைச் செய்வார் என்று விளக்கப்படும்.

தலைமைத்துவம் ஒரு செயல்முறை. பாடசாலையில் அது மாணவர் மீது செல்வாக்கை ஏற்படுத்தும் செயல்முறையாகின்றது. அந்தச் செயலமுறையின் வழியாகக் கற்றலின் இலக்குகள் எட்டப்படும். ஆசிரியர் மாணவர் மீது செல்வாக்கை ஏற்படுத்துதல் போன்று மாணவரும் ஆசிரியர் மீது செல்வாக்கை ஏற்படுத்துவர். அந்நிலையில் ஆசிரியர் தலைவராக மட்டுமன்றி இணைந்து கற்பவராகவும் செயற்படுவார்.

தலைமைத்துவம் பற்றிய உறுபண்புகளை (TRAITS) அறிந்திருத்தல் முதற்கண் சிறப்பிடம் பெறுகின்றது. உறுபண்பின் வகைகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் அதிக வலுக்கொண்ட உறுபண்புகளாகப் பின்வருவன அமைகின்றன.

(1) நுண்மதியாற்றல்.
(2) தன்னம்பிக்கை.
(3) செயல் துணிவு.
(4) ஒருங்கிணைவெழுகை. (INTEGRITY)
(5) சமூகமயப்படும் தன்மை.

மேற்குறித்த உறுபண்புகளை வளர்த்துக் கொள்ளல் ஆசிரிய வாண்மையை வலுப்படுத்திக் கொள்வதற்குத் துணைசெய்யும். தன்னிடம் மேற்குறித்த பண்புகள் உள்ளனவா என்பதை அறிதலும், அவற்றை வளர்த்துக் கொள்ளலும் சிறந்த ஆசிரியத்துவத்தில் இடம்பெறல் வேண்டும். தலைமைத்துவம் என்பது ஆசிரியரிடத்துமட்டுமின்றி மாணவரிடத்தும் வளர்த்துக் கொள்ளப்படவேண்டியுள்ளது. அந்நிலையில் உறுபண்புகள் பற்றிய தகவல்களையும் மாணவருக்கு வழங்குதல் வேண்டும்.

தலைமைத்துவ ஆக்கத்தை திறன்கள் (SKILLS) வழியாக நோக்கும் முறைமையும் வளர்ச்சியடைந்துள்ளது. அவ்வகையில் மூன்று திறன் அணுகுமுறை சிறப்பாக சுட்டிக்காட்டப்படத்தக்கது. குறித்துரைக்கப்படும் மூன்று திறன்களும் வருமாறு.

(1) தொழில்நுட்பத்திறன்.
(2) மனிதத்திறன்.
(3) எண்ணக்கருசார்ந்ததிறன்.

ஆசிரியத்துவத்தில் வலியுறுத்தப் படும் சிறப்பத்திறனாகக் கற்றல் கறிபித்தல் இடம் பெறுகின்றது. திறன்களைப் பயன்படுத்தி கற்றலையும் கற்பித்தலையும் முன்னெடுக்கும் பொழுது வளமானதும் உயிர்ப்பு மிக்கதுமான தலைமைத்துவநிலை வகுப்பறையிலே தோற்றம் பெறும். மாணவருடன் இங்கிதமாகப் பழகுதலும், கற்றல் கற்பித்தலை மேம்படுத்தும் இடைவினைகளை மேற்கொள்ளலும்,கல்வி இலக்குகளை நோக்கி மாணவரை அழைத்துச் செல்லம் மாணிடத்திறன்களில் உள்ளடங்குகின்றன.

எண்ணங்களுடன் தொழிற்படுதலே எண்ணக்கரு சார்ந்த திறன் எனப்படும். திறன்களை அடிப்படயாகக் கொண்ட மாதிரிகை (MODEL) ஆக்கமும் நிகழ்த்தப்பட்டுள்ளது. பிரச்சினை விடுவித்தல், சமூத்தீர்மானிப்புத்திறன், அறிவு என்ற மூன்று திறன்களையும் மூலாதாரமாகக் கொண்டு அந்த மாதிரிகை உருவாக்கப்பட்டுள்ளது.

தலைமைத்துவம் தொடர்பான சந்தர்ப்பநிலை அணுகுமுறையும் ஆசிரியவாண்மை மேம்பாட்டுக்குப் பயனுடையது. அது பணிப்பு நிலையானதும் ஆதரவு நிலையானதும் என்ற இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே அவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஆசிரியர் தேவைக்கேற்றபடி பணிப்பு நிலையிலோ அல்லது ஆதரவு நிலையிலோ தொழிற்படல் வேண்டும். மாணவர்களின் தேவைகளையறிந்து ஆசிரியர் தொழிற்படுவதற்குரிய வழிகாட்டலை சந்தர்ப்ப அணுகுமுறை வலியுறுத்துகின்றது.

ஆசிரியத்துவமும் தலைமைத்துவம் தொடர்பான அணுகுமுறையில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது சூழமைவுச் செப்பக் கோட்பாடு (CONTINGENCY THEORY) ஆகும்.வகுப்பறைச் சூழமைவுக்கு ஏற்றவாறு வினைத்திறன் மிக்க வகையில் இயைபு கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தலை இக் கோட்பாடு வலியுறுத்துகின்றது. சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான முறையிலே சரியான வழியில் ஆசிரியர் தமது செயற்பாட்டு எழுநடையை (STYLE) முன்னெடுத்தல் வேண்டும். எழுநடை என்பது செயற்பணிநிலைப்பட்ட ஊக்கல் தழுவியதாக அல்லது தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஊக்கல் தழுவியதாக அமையலாம்.

தலைமைத்துவம் தொடர்பான ஆய்வில் வழி இலக்குக் கோட்பாடும் (PATH GOAL THEORY) சிறப்பிடம் பெறுகின்றது. இலக்குகளை எட்டுவதற்கு மாணவர்களை ஊக்கல் நிலைக்கு உள்ளாக்குதல் இங்கே வலியுறுத்தப்படுகின்றது. மாணவர்களூடாகவே இலக்குகளை நோக்கிய பாதையில் நகர்ந்து செல்ல வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஆசிரியத் தலைமைத்துவத்தின் நடத்தைகளை அடியொற்றிப் பின்வரும் வகைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

(1) பணிப்புத் தலைமை.
(2) ஆதரவுத் தலைமை.
(3) பங்குபற்றும் தலைமை.
(4) அடைவுகளை அறிபரவல் செய்யும் தலைமை.

வெவ்வேறு வகையான தலைமைத்துவ வகிபாகங்கள் மாணவரிடத்து எவ்வகையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன எனறு அறிந்து பொருத்தமான நடத்தையை ஆசிரியர் ஒழுங்கமைத்துக் கொள்ளல் வேண்டும். ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான செயற்பணிகள் நிலைப்பட்ட இயங்கும் முறைமைக்கு இந்த அணுகுமுறை வழிகாட்டுகின்றது.

செல்லும் வழியோடும் அடையும் இலக்குகளோடும் ஊக்கலை இணைத்துத் தொழிற்படல் இங்கே வலியுறுத்தப்படுகின்றது. மாணவர் ஒவ்வொருவரிடத்தும் ஊக்கலை உருவாக்கிச் செல்லும் பாதை முழுவதும்

ஊக்கலை வழங்கி இலக்குகளை அடைந்து கொள்ளல் வேண்டும். செல்லும் வழியின் செயற்பாடுகள் வினைத்திறன் கொண்டவையாக இருந்தால் இலக்குகளை எளிதில் அடைந்துவிடலாம்.

தலைமைத்துவக் கோட்பாட்டில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது ஆசிரிய மாணவ பரிமாற்றக் கோட்பாடாகும். இது தலைவர் ஊறுப்பினர் பரிமாற்றக் கோட்பாடு (LEADER MEMBER EXCHANGE THEORY) என்றும் அழைக்கப்படும். ஆசிரியர் மாணவர் இடைவினைகளுக்கு இங்கே முக்கியத்துவம் தரப்படுகின்றது.

முயற்சிக்கு இங்கு முன்னுரிமை தரப்படுகின்றது. அதிக முயற்சி அதிக பயனைத் தரும். பயனுள்ள இடைவினைகளினதும் கருத்துப் பரிமாற்றங்களினதும் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. வகுப்பறைகளிற்கு உள்ளே நிகழும் இடைவினைகள் மட்டுமன்றி வெளியே நிகழும் இடைவினைகளும் வலியுறுத்தப்படுகின்றன. அதாவது உட்குழுவுக்கு இடையிலான ஊடாட்டங்களும் வெளிக்குழுக்களுடான ஊடாட்டங்களும் வலியுறுத்தப்படுகின்றன.

இக் கோட்பாடு பயனுள்ள தொடர்பாடலை வலியுறுத்துகின்றது. கற்பித்தல் என்பது ஆசிரியரால் நடத்தப்படும் ஒருபக்க தொடர்பாடலாக மட்டுமன்றி மாணவரையும் உள்ளடக்கிய இருபக்கத் தொடர்பாடலாக எழுச்சிபெறல் வேண்டும்.

ஆனால் அந்தத் தொடர்பாடல் தரச்சிறப்புக் கொண்ட தொடர்பாடலாக இருத்தல் முக்கியமானது. அவற்றின் வழியாக மாணவர் வலுவூட்டல் நிலைக்கு உள்ளாக்கப்படுவர்.

பரிமாற்றம் பல பரிமாணங்களைக் கொண்டது. அறிவு மற்றும் எழுச்சிகளை பரிமாற்றம் செய்தலோடு பின்னூட்டல்களைப் பெற்று கற்றல் கற்பித்தலை வளம்படுத்துவதற்கும் இந்த அணுகுமுறை துணைசெய்கின்றது.

கல்வித் தலைமைத்துவத்தில் சமகாலத்திலே வலியுறுத்தப்படும் முக்கியமான கருத்து நிலைமாற்று ஆசிரியத்துவம் ஆகும். இது நிலைமாற்றுத் தலைமைத்துவம் (TRANSFORMATIONAL LEDERSHIP) என்று கூறப்படும். இது புதியவகைத் தலைமைத்துவம் ஆகும். மாணவரை வளமான ஏற்புடைமைக்கு நிலைமாற்றம் செய்யும் செயற்பாடுகள் இந்த அணுகுமுறையிலே வலியுறுத்தப்படுகின்றன.

பாடஅறிவு, செயலறிவு, மனவெழுச்சிகள், அற ஒழுக்கங்கள் முதலாம் துறைகளில் மேலான நிலைகளை அடையச் செய்யும் செயற்பாடுகளை ஆசிரியர் முன்னெடுத்தல் வேண்டும். இந்நிலையிலே சிறப்பு வகையான செயல்முறைக்கோலங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

நிலைமாற்றுத் தலைமைத்துவம் என்ற எண்ணக்கருவை 1973 ஆம் ஆண்டிலே டவுன்ரன் என்பவர் உருவாக்கினார். பரிமாற்றுத்தலைமைத்துவத்தையும் நிலைமாற்றுத் தலைமைத்துவத்தையும் பேர்ண்ஸ் என்ற சமூகவியலாளர் வேறுபடுத்திக் காட்டினார். பரிமாற்றுத் தலைமைத்துவத்தில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நிகழும் மாற்றங்கள் குவியப்படுத்தப்படுகின்றன. நிலைமாற்றுத் தலைமைத்துவத்தில் மாணவரின் தேவைகளும் ஊக்கல்களும் கவனத்திலே கொள்ளப்பட்டு அவர்களின் முழு நிறைவான உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக் கொண்டுவருவதற்கு ஆசிரியரால் பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

நிலைமாற்றுத் தலைமைத்துவத் திற்கும் உன்னதிகை (CHARISMATIC) த் தலைமைத்துவத்திற்குமிடையே தொடர்புகள் உண்டு. பின்பற்றுவோரிடத்து உணர்நத

இலட்சியங்களை உருவாக்கும் ஆற்றலும் அவர்களிடத்து ஆழ்ந்த நம்பிக்கை கொள்ளலும் உன்னதிகைத் தலைமைத்துவத்திலே காணப்படும். நிலைமாற்றுத் தலைமைத்துவத்திலும் பின்பற்றுவோரின் தன்னிலை எண்ணக்கருவை சிறப்பு நிலைக்கு மாற்றம் செய்தல் முன்னெடுக்கப்படுகின்றது. உயர்ந்த இலக்குகளை மாணவரிடத்து முன்னெடுத்துச் சென்று அவர்களை அந்நிலைக்கு உருமாற்றுதல் முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது நேர்நிலை மாற்றங்களை உருவாக்குதல் எழுச்சி கொள்கிறது.

நிலைமாற்றுத் தலைமைத்துவம் பின்வரும் காரணிகளை உள்ளடக்கியது.

(1) உன்னதமான செல்வாக்குகள்.
(2) உற்றெழும் ஊக்கல்.
(3) நுண்மதி சார்ந் தூண்டல்.
(4) தனிநபர்களை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளல்.

மேற்குறித்த காரணிகளை உள்ளடக்கி நிலைமாற்றுத் தலைமைத்துவம் இணக்கப்படுகின்றது. மாற்றங்களை உருவாக்குதலும், வளர்த்தெடுத்தலும் நிலைநிறுத்தலும் மன்னெடுக்கப்படுகின்றன. நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் வேளை ஆசிரியரின் பாத்திமாதிரிகை (ROLE MODEL) கவனத்திற்குரியதாகின்றது. அந்நிலையிலே ஆசிரியர் புத்தாக்கம் செய்யும் சமூகப்பொறியாளராக மாறிவிடுகின்றார். அதாவது ஆசிரியர் மாற்றத்தை உருவாக்கும் முகவராகிவிடுகின்றார்.

வகுப்பறையை ஒரு செயற் குழுவாகக் (TEAM) கருதி "செயற்குழுத் தலைமைத்துவம்" விளக்கப்படுகின்றது. செயற்குழுவாகிய வகுப்பறையின் ஆற்றுகைத் திறனை மேம்படுத்தல் இவ்வகை ஆசிரியர் தலைமைத்துவத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

செயற்குழுத் தலைமைத்துவத்தின் சிறப்பார்ந்த பரிமாணங்களாக நெறிகை (Monitorin) செய்தல், செயற்பாட்டை முன்னெடுத்தல் முதலியவை அமைந்திருக்கும். தகவல்களைத் தொடர்ச்சியாகத் திரட்டுதல், அவற்றிலிருந்து செயற்பாடுகளிற்கான கட்டமைப்புகளை அமைத்தல், தடைகளை நீக்கி முன்னேறிச் செல்லல் முதலியவை நெறிகையில் அடங்கும்.

தெளிவான குறிக்கோள்களை அமைத்தல், பெறுபேறுகள் தரும் கட்டமைப்பை உருவாக்கதல், செயற்குழு உறுப்பினர்களாகிய மாணவரைத் தேர்ச்சியுள்ளவர்களாக மாற்றுதல், ஒன்றுபடும் கவிநிலையை ஏற்படுத்துதல், உன்னதமான தராதரங்களை ஏற்படுத்துதல், புறநிலை ஆதரவைப் பெறுதல் முதலியவை இவ்வகைத் தலைமைத்துவத்தில் இடம்பெறும்.

மேற்கூறிய தலைமைத்துவக் கோட்பாடுகள் தவிர உளவியக்கவியல் (PSYCHODYNAMIC) அணுகுமுறையை அடியொற்றியும் தலைமைத்துவம் நோக்கப்படுதல் உண்டு. சிக்மன்பிராய்ட, கார்ல் யுங் முதலியோரின் உளவியற் சிந்தனைகளை அடியொற்றி இந்த அணுகுமுறை உருவாக்கப்பட்டுள்ளது. தலைமைதாங்குபவரின் உளவியற் கோலமும் அவர் மேற்கொள்ளும் கருத்தேற்றங்களும் சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றன.

தலைமைத்துவம் தொடர்பாக மேலை நாட்டிலே உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் எழுகுழாத்தினரது (ELITE) மனோபாவங்களை அடியொற்றியே உருவாக்கப்பட்டுள்ளன. புலமை நிலை ஆய்வுக்கு அவை பயன்படுமளவிற்கு வறிய வளம் குன்றிய, பாகுபாடுகளிற்கு உட்படுத்தப்பட்ட சூழலில் அவற்றின் பயன்பாடு கேள்விக்குரியதாகவே மாறுகின்றது. அந்நிலையில் பிரதிகூலமடைந்த சூழலுக்குரிய தலைமைத்துவக் கோட்பாட்டின் ஆக்கமே எமது சூழலுக்குரிய தேவையென மேலெழுகின்றது.

* * * * * * *

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வளர்ச்சியில் யப்பானிய ஐவிதி (5S) கோட்பாடுகளின் பங்கு



வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

பின்னணி

அண்மையில் மத்திய சுகாதார அமைச்சினால் இலங்கையிலுள்ள அரச மருத்துவ நிறுவனங்களிடையே ஓர் தரநிர்ணய போட்டி நடாத்தப்பட்டது. இப்போட்டியில் மத்தியதர வைத்தியசாலைகள் (பொது மற்றும் ஆதார வைத்தியசாலைகள்) பிரிவில் போட்டியிட்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரண்டாம் இடத்தைப் பிடித்து வெள்ளிப்பதக்கத்தை சுவீகரித்தது. தென்பகுதிகளிலுள்ள பெரும்பாலும் அனைத்து வளங்களும் நிறைந்த வைத்தியசாலைகளுடன் போட்டியிட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இப்பரிசை தட்டிச்சென்றது மிகப்பெரியதோர் சாதனை. இவ்வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது கடந்த வருடம் இவ்வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட யப்பானிய "5S" கோட்பாடுகளின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட தரமேம்பாட்டு திட்டமே. இவ்வைத்தியசாலையில் எவ்வாறு யப்பானிய "5S" கோட்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதை இக்கட்டுரை விளக்க விழைகின்றது.

அறிமுகம்

இலங்கையில் முதன்முதலாக ஓர் அரச வைத்தியசாலையில் 1995ல் கொழும்பிலுள்ள காசல்வீதி மகப்பேற்று மருத்துவமனையிலேயே யப்பானிய "5S" கோட்பாடுகளின் அடிப்படையில் தரமேம்பாட்டுத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டபின் அவ்வைத்தியசாலையின் சேவையின் தரம் உயர்ந்தது. அதன் நன்மதிப்பு வளர்ந்தது. பல தரநிர்ணய போட்டிகளில் பங்குபற்றி விருதுகள் பல கிடைத்தன. இவ்வைத்தியசாலையை முன்னுதாரணமாககொண்டு இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பல அரச வைத்தியசாலைகள் இத்திட்டத்தை தமது வைத்தியசாலைகளிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தின. கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்த சூழல் நிலவியமையால் இத்திட்டத்தை எமது பிரதேசங்களில் அமுல்படுத்த சாதகமான சூழல் இருக்கவில்லை. தற்போது ஓர் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் யாழ் மாவட்டத்தில் முதற்கட்டமாக பரீட்சார்த்தமாக மூன்று மருத்துவ நிறுவனங்களில் 2010ல் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தினோம்: யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. இம்மூன்று நிறுவனங்களிலும் இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன் முதல் இரு நிறுவனங்களும் தேசிய மட்டத்தில் பரிசுகளையும் தட்டிச்சென்றுள்ளன.

திட்ட அறிமுகப்பயிற்சி

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கட்கு இத்திட்டம் பற்றிய அறிமுகப்பயிற்சியை இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தை (SLIDA) சேர்ந்த நிபுணர் திரு. திலகசிறி அவர்களை இங்கேயே அழைத்துவந்து ஏற்பாடு செய்தோம். அடுத்த

கட்டமாக வைத்தியசாலையின் வெவ்வேறு பிரிவுகளிலிருந்தும், தரங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 30 உத்தியோகத்தர்கள், ஊழியர்களை கொழும்பிற்கு மேலதிக பயிற்சிக்காக இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்திற்கு (SLIDA) அழைத்துச் சென்றோம். இக்குழுவினர் களப்பயிற்சியாக இத்திட்டம் முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலையான காசல்வீதி மகப்பேற்று வைத்தியசாலையையும் பார்வையிட்டனர். தொடர்ந்து பல கட்டங்களாக அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்கட்கும் தொடர் மீள்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

குழுச்செயற்பாடு

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் முதற்படியாக வைத்தியசாலையின் ஒவ்வொரு பிரிவிலும் ஓர் செயல் முன்னேற்ற குழு (Work Improvement Team) அமைக்கப்பட்டது. இக்குழுவில் அப்பிரிவில் பணியாற்றும் வைத்தியர்கள் முதல் தொழிலாளர்கள் வரை பங்குபற்றுவர். ஒவ்வொரு குழுவிற்குமான பெயரையும், இலச்சனையையும் குழுவே தெரிவுசெய்யும். குழுவிற்குள் ஓர் சிறிய நிர்வாக அமைப்பு சுழற்சி அடிப்படையில் தெரிவு செய்யப்படும். இக்குழு வாரத்திற்கு ஒருதடவை கூடி தமது பிரிவில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியும் தமது பிரிவின் சேவையை மேம்படுத்துவது பற்றியும் கூடி ஆராய்ந்தனர். தமது பிரிவின் தேவைகளையும் தாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் இனங்கண்டுகொண்டனர்.

இக்குழுச்செயற்பாட்டின் மூலம் வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு மனப்பாங்கு மறக்கப்பட்டு ஒற்றுமையான குழுமனப்பாங்கு (Team Sprit) வளர்க்கப்பட்டது. தரமேம்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் குழுக்களிடையே ஓர் ஆரோக்கியமான போட்டி ஏற்பட்டது. இதன் மூலம் வைத்தியசாலையின் சேவையின் தரம் துரிதமாக முன்னேறியது.

இக்குழுக்களின் செயற்பாட்டை ஒன்றிணைத்து வழிகாட்ட வைத்திய அத்தியட்சகரின் தலைமையில் நிறுவன மட்டத்தில் தரமுகாமைத்துவ குழு (Quality Management Team) அமைக்கப்பட்டது. அக்குழுவில் செயல்முன்னேற்ற குழுக்களின் பிரதிநிதிகள் அங்கத்தவர்களாக இருந்தனர். இக்குழுவின் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணியாற்றினார். இக்குழு நிறுவனமட்டத்தில் பல்வேறு பிரிவுகளின் தேவைகளை, பிரச்சனைகளை இனங்கண்டு இத்திட்ட அமுலாக்கலை நெறிப்படுத்தியது.

திட்ட அமுலாக்கம்

இதன் பின்னர் தரமேம்பாட்டுத்திட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் நிறுவனத்தின் உற்பத்தி திறனை அதிகரிப்பதும், சேவையின் தரத்தை மேம்படுத்துவதாகும். இதற்கான ஓர் திறவுகோலாக யப்பானிய "5S" ஐவிதிக்கோட்பாடுகள் அமைகின்றன. தற்போது யப்பானிய ஐவிதி (5S) கோட்பாடுகள் எவ்வாறு இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதை பார்ப்போம்.

## S1-Seiri (Sort Out)

யப்பானிய ஐவிதி(5S) கோட்பாட்டின் முதல் விதி – வேலைத்தலத்திலுள்ள பொருட்களை தரம் பிரித்து தேவையற்ற பொருட்களை வேலைத்தலத்திலிருந்து அகற்றுதல்.

இதன் அடிப்படையில் பாவிக்க முடியாத பொருட்கள் யாவும் அழிக்கப்பட்டன. திருத்தக்கூடிய பொருட்கள் திருத்தப்பட்டன. பாவிக்கக்கூடிய நிலையில் இருந்த மேலதிக பொருட்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டன அல்லது வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டன.

மேலும் நிறுவன மட்டத்தில் தேவையற்ற அல்லது பாவிக்கமுடியாத பொருட்களை சேகரித்து வைக்க ஓர் விசேட களஞ்சியம் (Unserviceable article stores) அமைக்கப்பட்டது. இதன் மூலம் வைத்தியசாலையின் எப்பிரிவிலும் ஓர் பொருள் பாவனைக்கு உதவாததாக காணப்படின் உடனடியாக இக்களஞ்சியத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இதன்மூலம் சகல பிரிவுகளிலும் தேவையற்ற பொருட்கள் யாவும் அகற்றப்பட்டு தேவையான பொருட்கள் மட்டுமே காணப்பட்டன.

யப்பானிய ஐவிதிக் கோட்பாடுகள் எமது வேலைத்தலத்திற்கு மட்டுமல்ல எமது வீட்டிற்கும் அன்றாட செயற்பாடுகளிற்கும் பயன்தரவல்லன. உதாரணமாக முதலாவது ஐவிதியான Seiri யை எமது கைப்பை, மேசை அலுமாரி, கோவைகள்,

அலுவலக பை, குளிர்சாதனப்பெட்டி, கைத்தொலைபேசி, கணனி போன்றவற்றில் அடிக்கடி பிரயோகித்தால் எமது வேலைகளை இலகுவாகவும், விரைவாகவும், வினைத்திறனுடனும் நிறைவேற்றலாம்.

## S2 – Seiton

முதல் ஐவிதியின்படி தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டபின் வேலைத்தலத்தில் தேவையான பொருட்கள் மட்டுமே எஞ்சியிருக்கும். இரண்டாவது ஐவிதியின்படி தேவையான பொருட்கள் யாவும் உடனடியாக எடுக்கக்கூடிய வகையில் ஓர் ஒழுங்கமைப்பில் வைக்கப்படவேண்டும். அதாவது ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இடம் ஒதுக்கப்படவேண்டும். (A place for everything Everything is in it's place). ஒவ்வொரு பொருளையும் 30 செக்கன்களுக்குள் எடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

வைத்தியசாலையின் மருந்துகள் யாவும் கொள்கலங்களில் தெளிவாக பெயர்கள் எழுதப்பட்ட சுட்டித்துண்டுகள் ஒட்டப்பட்டன. மருந்துகள் அகரவரிசைப்படி (alphaphetical order) அடுக்கிவைக்கப்பட்டன. பேனை, பென்சில், stepler, துளையிடு கருவி, கணிப்பான், கத்தரிக்கோல் போன்ற உபகரணங்கள் மேசை லாச்சியில் றெஜிபோமினால் தயாரிக்கப்பட்ட விசேட தளத்தில் வைக்கப்பட்டன. திறப்புகள் யாவும் இலக்கமிடப்பட்டு பெயரிடப்பட்ட திறப்பு பதாகையில் (Key Board) வைக்கப்பட்டன. கோவைகள் அலுமாரிகளில் தெளிவாக பெயரிடப்பட்டு இலக்கமிடப்பட்டு ஓர் கிரமமான முறையில் அடுக்கிவைக்கப்பட்டன.

நோயாளர்களும் பார்வையாளர்களும் வைத்தியசாலையின் பிரிவுகளை இலகுவில் அடையாளம் காண வைத்தியசாலை முன்றலில் தளவரைபடம் (Layoutplan) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சகல பிரிவுகளுக்கும் பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டு வழிகாட்டு பதாகைகளும் (Direction board) பொருத்தப்பட்டுள்ளன. மின்விளக்குகள், மின்விசிறிகளின் ஆளிகளை உடனடியாக அடையாளம் காணும்பொருட்டு மின்குமிழ்கள், மின்விசிறிகள் ஆகியவற்றிற்கும் அவற்றின் ஆளிகட்கும் சம இலக்கமிடப்பட்டுள்ளன.

பொருட்களை இலகுவாகவும் உடனடியாகவும் எடுக்க வசதியாக அவை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டன.

1. அடிக்கடி தேவைப்படுவன – அவை அருகில் கைக்கெட்டிய தூரத்தில் வைக்கப்படவேண்டும்.
2. இடைக்கிடை தேவைப்படுவன – சற்று தூரத்தில் வைக்கலாம்.
3. எப்போதாவது தேவைப்படுவன – தொலைவில் தனியாக வைக்கலாம்.

இரண்டாவது ஐவிதியை கடைப்பிடிப்பதன் மூலம் நேரத்தை பெருமளவில் மீதப்படுத்தலாம். பெரும்பாலும் எமது நேரத்தை பொருட்களை தேடுவதிலேயே செலவிடுகிறோம். இந்நேரத்தை மீதப்படுத்தி ஆக்கபூர்வமான பணிகளில் செலவிடலாம்.

## S3 – (Shine)

எமது வேலைத்தலத்திலுள்ள அனைத்து பொருட்களையும் கிரமமாக மிக சுத்தமாக பேண வேண்டும். வைத்தியசாலையில் உள்ள நிலம், சுவர், கதவு, யன்னல், தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள், மின்விளக்குகள், மின்விசிறிகள், மலசல கூடங்கள், சுற்றாடல் யாவும் பூரணமாகவும் ஒழுங்கான கிரமமான முறையிலும் சுத்தம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனை கண்காணிக்க சோதனைப்பட்டியல்கள் (Check lists) பயன்படுத்தப்படுகின்றன.

## S4 – Seiketsu (Standardization)

மேலே கூறப்பட்ட முதல் மூன்று ஐவிதிகளும் சகல பிரிவுகளிலும் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதே நான்காவது ஐவிதியாகும். இதற்கென சில நியமங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக வைத்தியசாலையில் சில நிறங்கள் விசேட அர்த்தங்களாக பாவிக்கப்படுகின்றன.

- சிவப்பு - அசுத்தம், வெறுமையானது
- மெல்லிய நீலம் - சுத்தமானது, பூரணமானது
- கடும் நீலம் - சுத்தமானதும், கிருமித்தொற்று நீக்கப்பட்டதும்
- மஞ்சள் - கிருமித்தொற்றுள்ளது
- பச்சை – பாதுகாப்பானது
- கறுப்பு – பொதுவானது

நோயாளர் தள்ளுவண்டில்கள் (stretchers), சக்கர நாற்காலிகள் (wheel chairs) போன்றவற்றிற்கு நீலநிற வர்ணம் அடிப்பகுதியில் பூசப்பட்டிருப்பின் அவை கிருமித்தொற்று அற்ற சத்திரசிகிச்சை கூடம், பிரசவ விடுதி போன்ற இடங்களில் பாவிக்கப்படுவதென்று அர்த்தப்படும். சிவப்பு வர்ணம் பூசப்படின் இவற்றிற்கு வெளியே பாவிக்கப்படுவதென்று அர்த்தம்.

இதே போல திண்மக்கழிவுகள் வர்ணம் பூசப்பட்ட வாளிகளில் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படுகின்றன.

- கறுப்பு வாளி – பொதுவான கழிவுகள் (கடதாசி, உணவுவகைகள் )
- மஞ்சள் வாளி – கிருமித்தொற்றுள்ள கழிவுகள்

ஊசிகள் போன்றன, கூர்மையான ஆயுதங்களை சேகரிக்க தனியான ஒருவாளியும் பயன்படுத்தப்படும்.

### S5 – shitsuke

மேலே கூறப்பட்ட நான்கு விதிகளையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்த தொடர்ச்சியாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கட்கு பயிற்சிகள் வழங்குவதே ஐந்தாவது விதியாகும். புதிதாக இணைந்துகொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்படவேண்டும். பழையவர்கட்கும் மீள்பயிற்சி வழங்கப்படவேண்டும்.

### யப்பானிய ஐவிதிக் (5S) கோட்பாட்டின் நன்மைகள்

1. நிறுவனத்தின் உற்பத்திதிறன் அதிகரிக்கும்
2. நிறுவனத்தின் சேவையின் தரம் உயரும்
3. நிறுவனத்தின் செலவீனம் குறைவடையும்.
4. வீண்விரயங்கள் குறையும்.
5. பாவனையாளரின் திருப்தி அதிகரிக்கும்.
6. நிறுவனத்தின் நன்மதிப்பு உயரும்.
7. ஊழியர்களின் தொழில்சார் திருப்தி (Job satisfaction) உயரும்.
8. நிறுவனத்தின் சேவைக்குறிகாட்டிகள் மேம்படும்.
9. நிறுவனம் அழகாகவும் துப்பரவாகவும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் காட்சிதரும்.
10. பாவனையாளர் சேவையைப்பெற காத்திருக்கும் நேரம் குறையும்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் யப்பானிய ஐவிதிக் கோட்பாடுகளை அமுல்படுத்திய பின்னர் அனுபவரீதியாக மேற்கூறிய அனுகூலங்களை உணர முடிந்தது.

### வெற்றிக்கான காரணங்கள்

- <u>சிறந்த தலைமைத்துவம்</u>

இவ்வைத்தியசாலையில் தர மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியபோது ஆரம்பகாலத்தில் வைத்திய கலாநிதி ஜெயராசா அவர்களும் பின்னர் வைத்திய கலாநிதி க.நந்தகுமார் அவர்களும் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி இத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தினர்.

- <u>சமூகப்பங்களிப்பு</u>

இவ்வைத்தியசாலையின் வளர்ச்சியில் சமூகம் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. உள்நாட்டிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழும் பலர் பல வழிகளிலும் அபிவிருத்திக்கு உதவினர். பலர் கட்டிடங்களை புனரமைக்க உதவி புரிந்தனர். பலர் மருத்துவ உபகரணங்களையும், தளபாடங்களையும் வழங்கியுள்ளனர். தனியே அரச உதவிகளில் மட்டும் தங்கியிராது சமூகம் வழங்கிய பங்களிப்பு குறுகிய காலத்தில் இவ்வைத்தியசாலை துரிதமாக வளர்ச்சியடைய காரணமாக அமைந்தது.

- <u>வைத்தியசாலை அபிவிருத்திசபை</u>

சமூகத்திற்கும் வைத்தியசாலைக்கும் இடையே பாலமாக நின்று வைத்தியசாலை அபிவிருத்திசபை இவ்வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றியது. இச்சபையில் இப்பிரதேசத்தைச்சேர்ந்த கல்விமான்கள், அரச அதிகாரிகள், வங்கியாளர்கள், வர்த்தகர்கள்,

சமூகப்பெரியோர்கள் எனப் பலர் அங்கம் வகித்தனர். ஒருபுறம் வைத்தியசாலை பற்றிய மக்களின் அபிப்பிராயத்தையும், எதிர்பார்ப்புகளையும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எடுத்துரைத்தனர். மறுபுறம் வைத்தியசாலையின் தேவைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களது பங்களிப்பை ஊக்குவித்தனர்.

- பொதுசன தொடர்பாடல்

ஓர் வைத்தியசாலையின் பௌதீக வளங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது கடினமான பணியல்ல. ஆனால் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி பொதுமக்களுடனான பொதுசனதொடர்பாடலை மேம்படுத்துவது கடினமானபணி. இதற்காக நாம் கடுமையாக உழைத்தோம். பல தடவைகள் பயிற்சிகள் வழங்கினோம். உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நோயாளர்களுடன் அன்பாக பண்பாக தொடர்பாடி சிறந்த கனிவான சேவையை வழங்க வேண்டும் என எதிர்பார்த்தோம்.

இறுதியில் இதற்கென "நோயாளர் பராமரிப்பில் எங்கள் தசவேதம்" என்ற ஊழியர்கட்கான நடத்தை வழிகாட்டி ஒன்றை உருவாக்கினோம்.

"நோயாளர் பராமரிப்பில் எங்கள் தசவேதம்."

1. புன்னகை செய்வோம்.
2. வணக்கம் செலுத்துவோம்.
3. அன்பாக, பண்பாக பழகுவோம்.
4. நோயாளியின் வலியை உணர்ந்து கொள்வோம்.
5. நோயாளர்களுக்கு ஆதரவாக இருப்போம்.
6. நோயாளியின் குறைகளை பொறுமையுடன் கேட்போம்.
7. நோயாளிக்கு நம்பிக்கையூட்டுவோம்.
8. எமது கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்ந்துகொள்வோம்.
9. எமக்கு கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்களை சரியாக மேற்பார்வை செய்வோம்.
10. எமது சேவையின் தரத்தை தொடர்ந்து மேம்படுத்துவோம்.

இந்த வழிகாட்டி வெளிநோயாளர் பிரிவிலும், சகல விடுதிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆரோக்கியமான வைத்தியசாலை சூழல்

வைத்தியசாலை முழுவதும் மரங்கள் நடப்பட்டு பசுமையாக மனதிற்கு ரம்மியமாக காட்சி தருகின்றது. காலையிலும், மாலையிலும் சகல விடுதிகளிலும் பக்திப்பாடல்கள் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. சகல விடுதிகளிலும் வெளிநோயாளர் பிரிவிலும் நோயாளர்களின் பொழுது போக்கிற்காக தொலைக்காட்சிகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் நோயாளர்கள், ஊழியர்கள் நலன்கருதி நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அன்றாட தினசரிகளும் கதைப்புத்தகங்களும் பாவனைக்குள்ளன. சிறுவர்களுக்கென ஓர் கண்கவர் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. இவை யாவும் ஓர் நோயாளிக்கு மனதிற்கு இதமான ஓர் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தி நோயாளியின் உளநலத்தை மேம்படுத்தி உடல் நலத்தை விரைவாக சீராக்க உதவும்.

மேலும் நோயாளிகட்கு சுத்தமான, சுவையான உணவுகள் பரிமாற்றப்படுகின்றன. மலசலகூடங்கள் யாவும் கிரமமான முறையில் பலதடவைகள் சுத்திகரிக்கப்பட்டு சுத்தமாக பேணப்படுகின்றன. விடுதிகளிலும், சகல பிரிவுகளிலும் நோயாளர்கட்கு பாதுகாப்பான, சுத்தமான குடிநீர் வசதி வழங்கப்படுகின்றது. நோயாளர்கள் தமது ஆன்மீக உணர்வுகளை பூர்த்தியாக்க வைத்தியசாலை வளாகத்தில் இந்துக்கோவிலும், கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன.

- <u>பொதுமக்களின் கருத்தறிதல்</u>

பொதுமக்களின் கருத்துக்களைப்பெற வெளிநோயாளர் பிரிவில் ஆலோசனைப்பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. நோயாளர் கருத்துக்கணிப்பு ஒன்றும் நடாத்தப்பட்டது. மேலும் வைத்தியசாலை அபிவிருத்திசபை உறுப்பினர்கள் மூலமாக பொதுமக்களின் கருத்துக்கள் அறியப்படுகின்றன. பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் சேவையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- <u>விசேட தேவைக்குட்பட்டோர், முதியோருக்கான விசேடவசதிகள்</u>

இவர்களுக்காக வெளிநோயாளர் பிரிவிலும், மருந்து வழங்கும் பிரிவிலும் தனியான பிரிவு அமைக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் சேவை வழங்கப்படுகின்றது. விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கு வெளிநோயாளர் பிரிவிலும், விடுதிகளிலும் விசேட வசதிகளுடன் கூடிய தனியான மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- <u>சமூகப்பொறுப்பு</u>

வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது நிறுவனம் சார்ந்த சேவைக்கு மேலாக தமது சமூகப்பொறுப்பை உணர்ந்து சமூகப்பணிகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். ஒவ்வொரு வருடமும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இரத்ததானம் செய்து சமூகத்திற்கு முன்மாதிரியாக திகழ்கின்றனர். இப்பிரதேசத்தில் எங்காவது அவசர மருத்துவநிலைக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அவசர அம்புலன்ஸ் சேவையை (110) முதலுதவியுடன் வழங்கி வருகின்றனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ள சிறுவர்கட்கு நன்கொடைகளை வழங்கியுள்ளனர். மரநடுகை மூலம் சமூகத்திற்கு முன்னுதாரணமாக வைத்தியசாலை வளாகத்தை பசுமைச்சோலையாக மாற்றியுள்ளனர்.

- <u>ஊழியர்நலன் பேணல்</u>


ஊழியர்கள் மனநிறைவாக இருந்தால்தான் சிறப்பான சேவையை வழங்கமுடியும். இதனை கருத்திற்கொண்டு வைத்தியசாலை ஊழியர்நலன்புரிச்சங்கம் ஊழியர்களின் சேமநலன்களை மேம்படுத்த பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஊழியர்கட்கு இலகுகடன்கள் வழங்கப்படுகின்றன. ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களின் இழப்பின் போது இழப்பீட்டுதொகை வழங்கப்படுகின்றது. ஊழியர்கள் ஓய்வுபெற்று இடமாற்றமாகிச் செல்லும் போது கௌரவிக்கப்பட்டு ஊக்குவிப்புத்தொகை வழங்கப்படுகின்றது.

ஊழியர்களின் உடல் ஆரோக்கியம் பேண பல்வேறு விளையாட்டு குழுக்கள் அமைக்கப்பட்டு விளையாடி வருவதுடன் பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றனர். ஊழியர்களிடையே ஒற்றுமை மனப்பாங்கை வளர்க்க பல்வேறு பண்டிகைகள், விழாக்கள் ஒரு குடும்பமாக கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்களில் ஊழியர்களின் கலைத்திறன்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கப்படுகின்றது. ஊழியர்களிடையே நேர்மறையான நல்ல மனப்பாங்கை வளர்க்கும் பொருட்டு பல பயிற்சிகள் விரிவுரைகள் ஏற்பாடுசெய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் ஊழியர்கள் நல்ல மனநிறைவுடன் தமது பணிகளை ஆற்றிவருகின்றனர்.

**முடிவுரை**

யப்பானிய ஜவிதி(5S) கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஓர் நிறுவனத்தின் சேவையை மேம்படுத்தமுடியும். அதன் நன்மதிப்பை உயர்த்தமுடியும். இதனை ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறையின் அனுபவம் ஊடாக கண்கூடாக கண்டோம். யப்பானிய ஜவிதிகள் நிறுவனங்கட்கு மட்டுமல்ல எமது இல்லங்கட்கும், அன்றாட செயற்பாடுகட்கும் பயன்தரவல்லன. குறைந்த வளங்களுடன் அதிகூடிய பயன்களைப்பெற யப்பானிய ஜவிதிகள் என்றும் எமக்கு கைகொடுக்கும்.

* * * * *



# "Impossible" is Impermanent

**I.C. Ambihavaran**

(Ex. Sectional Head Science J/Nelliady MMV
Ex. Senior In service Advisor – Science,
Jaffna Region-Education Department
Ex. President J/Nelliady MMV. O.S.A, Canada
Parton J/Nelliady MMV O.S.A. Canada)

*What seemed impossible in the past has become possible at present and what seems impossible at present may one day turn out to be possible in the future. Imagine how modern day televisions, computers, internet and iPods would have seemed at the turn of the twentieth century.*

*In 1825, French philosopher Auguste Comte, in his "cours de Philosophic" declared that it was impossible for science to determine what the stars were made of. Just a few years after he made this statement, physicist, using spectroscopy, informed that the sun was made of hydrogen and revealed that by analysing the spectral lines from stars emitted billions of years ago, it is possible to determine the chemical nature of the universe.*

*A few decades back, a geography teacher would have ruled out the fact that South America and Africa, which fit together like a jigsaw puzzle in the world map, were once together as one vast continent arguing that if it was so, there could not have been such a strong force to separate them thus far. But now we know that through plate tectonics, continents do move.*

*Surprisingly, even some of the great scientists of the nineteenth century declared some technologies as impossible, which were later proved to be possible and achievable*

*Lord Kelvin, the most prominent physicist, (who is buried next to Isaac Newton in Westminster Abbey)ruled out the possibility of any "heavier than air" devices such as aeroplanes. Lord Rutherford, who discovered the nucleus of an atom, dismissed the possibility of building an atomic bomb. Chemists of 19th century strongly believed that gold cannot be produced from other metals. But today, with atom smashers, lead atoms, in principle, can be turned into gold. Even Einstein wrote a paper in 1939 concluding that black holes would never form. But today, the Hubble Space Telescope and the Chandra X-ray Telescopehave revealed thousands of black holes in space.*

*Some geologists and Darwinian biologists believe that the Earth is a billion years old. But scientist like Lord Kelvin said that a molten Earth would cool down in 20 to 40 million years and so it was impossible for it to be a billion years old. But the discovery of radioactive decay by Madame Curie and others, explained how the*

*center of the Earth, could be kept molten for billions of years by same (radio activity).*

*In the 1920s and 30s, Robert Goddard, the founder of modern rocketry was criticised heavily by even the editor of New York Times. He ridiculed Goddard thus: "Professor Goddard does not know the relation between action and reaction and the need to have something better than a vacuum against which to react. He seems to lack the basic knowledge ladled out daily in high schools." Many others like him believed that since there was no air in space to push against, rockets were impossible. But today even a child knows about the role of rockets in space technology.*

*In the 1930s, Einstein who came out with his famous equation E=mc2 seems to have believed that an atomic bomb was impossible. His reasoning was that the energy released by a single nucleus was too insignificant to consider for such an enormous amount of energy required for an atomic bomb. It would be quite surprising to know that the concept of the atomic bomb was conceived in the imaginative mind of a famous novelist H.G. Wells in his book, "The World Set Free," in which he predicted the development of the atomic bomb. Inspired by his idea, Leo Szilard hit upon the idea of magnifying the power of a single atom through a series of reactions in chains. He inferred that by splitting a single uranium nucleus, through a chain reaction, energy may be increased many trillion times. His series of experiments, and negotiations with Einstein and then U.S. President Franklin Roosevelt led to the Manhattan Project which produced the atomic bomb.*

*Many more such instances of the "impossible" of the past could be cited, if not for lack of space. Coming to the point of the "impossible" at present, only three "impossible" out of many have been discussed here, again for the same reason of space availability.*

*Captain Kirk (a character in the T.V. series "STAR TREK") quite often orders his crew to "Shield Up!" He means the force field, which in this science fiction refers to a thin, invisible, yet impenetrable barrier which deflects lasers and rockets alike. In this show, whenever power is used up in the force fields. The "Enterprise" suffers many damaging blows until it surrenders to the enemy. This is a fictional concept which seems impossible in reality considering the known laws of physics. None the less, the idea of the above protection shield must have been built up from Faraday's force fields in which lines of force permeate space, Einstein was so inspired by Faraday's force fields that he wrote his theory of gravity in terms of the same (force fields). In fact, Faraday's force fields have driven modern civilization from electric bulldozers to today's computer, internet and iPods'.*

*Physicist Michio Haku, the cofounder of the string field theory, says in his book, "Physics of the Impossible", that plasma may be used to mimic some of the properties of the force field. Plasma is the fourth state of matter (solids, liquids and gases are the other three) that forms the most common matter in the universe (but rarely found in earth). Plasma is a gas of ionized atoms. Since they are electrically charged, they can easily be manipulated by electric and magnetic fields.*

*If a gas is heated to a very high temperature, plasma may be obtained and it can then be moulded and shaped by magnetic and electric fields. For example, it can be shaped in the form of a window or a sheet. Besides, this can*

*be used to separate a vacuum from ordinary air. In fact, the plasma window was invented by physicist Ady Herschovitch in 1995 at the Brook Laven National Laboratory in Long Island, New York. He developed this to weld metals using electron beams. Welding metals by electron beams is faster, cleaner and cheaper than that is done by acetylene flames. But the problem with the electron beam welding is that it has to be done in a vacuum of the size of a room. Plasma windows have wide applications in space technology and industry. However, the plasma window mentioned above is not impenetrable as portrayed in "STAR TREK". Yet, hopefully in the future such types of impenetrable strong plasma windows may be possible.*

*In the movie, "BACK TO THE FUTURE", Michael J. Fox rides a "hover board" which floats over streets. Given the laws of physics as we know them today, such an antigravity device is impossible. But magnetically enhanced hover boards and hover cars could become a reality in the future. Using the laws of repulsion between two like poles, magnetic levitation (floating) could be achieved. Already there are many nations such as United Kingdom, Germany, Japan, Korea that have built magnetic levitation trains (maglev trains) that hover above rail road tracks using magnets. Most of the trains were designed for low velocities. In Shanghai, maglev trains travelled at 268 miles per hour, where as in Japan, it attained a velocity of 361 miles per hour. But these trains were very expensive. One way to increase efficiency is to use super conductors, which lose electrical resistance when they are cooled down to near absolute zero. Super conductivity was discovered in 1911 by Heike Onnes. The practical difficulty here is that it is very expensive to immerse large magnets in containers of super cooled liquid. But one day, with room temperature super conductors, the flying cars seen in "Back to the Future", "Minority Report" and "Star Wars" might become a reality.*

*The other "impossible" device to be finally discovered is the invisibility as portrayed in "Star Trek IV, The voyage Home", "The invisible Man", "The Lord of the Rings (Harry Potter Books) and in ancient theology (Even in our Hareschandran play, Chandravathy wears a "Thalikkody" which is visible only to her husband Harischandran).*

*We say now that the invisible cloak or ring is impossible because they violate the laws of optics. But today, new advances in "meta materials" may lead to a major overhaul of the theory of optics. "What are these meta materials? They are substances that have optical properties not found in nature. Meta materials are created by embedding tiny implants with a substance that force electromagnetic waves to bend in unorthodox ways"*

*Further research work to be done by physicists may one day make the invisible cloaking or ring possible. With these above impossible at present, the reader is left to ponder and probe with the probabilities of the chances of the other "impossibles" turning into "possible" in the future.*

* * * * *

<u>*Bibliography*</u>

*Physics of the impossible by Michio Kaku*
*Impossibility- the fruits of service and the science of limits – Oxford University Bees*
*The science of Star Wars- New York, St Martin's Press.*

# நலமுடன் வாழ்வோம்



**Dr. வே. கமலநாதன்.**
யாழ். போதனா வைத்தியசாலை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமும் என்பது ஆன்றோர் வாக்கு. ஒரு மனிதன் தன் வாழ்வுக்காலத்தில் நோய் இல்லாமல் இருப்பது சிறப்பானதாகும். ஏனெனில் இன்று பலவிதமான நோய்கள் மனிதரைப் பீடித்திருக்கின்றன. இதனால் மக்கள் மத்தியில் ஒருவிதமான பயஉணர்வும் தற்போது காணப்படுகின்றது. சிலநோய்கள் உயிர்க்கொல்லி நோய்களாக உருவெடுத்து மனிதவாழ்வையே சிதைத்து விடுகின்றன. சிலநோய்கள் தீராத நோய்களாக மனிதனின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதோடு மட்டுமன்றி மனஉளைச்சலையும் ஏற்படுத்துகின்றன. ஒரு குடும்பத்தலைவன் நோயினால் பீடிக்கப்படும் போது அக்குடும்பத்தின் பொருளாதாரப் பின்னணி நலிவடைகின்றது. ஒட்டுமொத்தத்தில் நோய் என்பது உடலை மட்டுமன்றி உளத்தையும் சமூகத்தையும் பாதிக்கின்றது.

மனிதஉடலானது பல்வேறு தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டது. இதற்காக பல்வேறு தொகுதிகள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக குருதிச்சுற்றோட்டத்தொகுதியில் காணப்படும் இதயமும், குருதிக்கலன்களும் உடலிலுள்ள பல்வேறு இழையங்களுக்கு குருதியை எடுத்துச்செல்ல உதவுகின்றன. அதேபோல நரம்புத்தொகுதியின் ஒரு கூறான மூளையானது உயர்தொழிற்பாடுகளான புத்திக்கூர்மை, ஞாபகசக்தி, சிந்தனை போன்றவற்றிற்குப் பொறுப்பாகவிருப்பதுடன், புலனுணர்வுகளை ஆளுகின்ற அங்கமாகவும் பங்காற்றுகின்றது. உடற்தொழிற்பாடுகளில் ஏதாவது ஒரு காரணியினால் பாதகமான மாற்றங்கள் ஏற்படுகின்ற போது அது நோய் நிலைமையாக கருதப்படுகின்றது. அப்பாதகமான மாற்றங்களுக்கான காரணி ஒரு நோய்க்கிருமியாக இருக்குமானால் அவ்விதமான நோய்கள் தொற்றுநோய்கள் (Communicable Disease) என அழைக்கப்படுகின்றன. இந்நோய்க்கிருமிகள் பல்வேறு வகைப்படுகின்றன.

01. பற்றீரியா (Bactgeria)
02. வைரஸ் (Virus)
03. புரோட்டோசோவா (Protozoa)

**பற்றீரியா நோய்கள் (உ+ம்)**

| நோய்க்காரணி | நோய் |
|---|---|
| 01. Salmonella typhi | Typhoid |
| 02. Streptococcus prienmonia | Pneumonia |
| 03. Mycobacterinm tuberculosis | Tuberculosis |

**வைரஸ்நோய்கள் (உ+ம்)**

சின்னமுத்து (Measles)
கூகைக்கட்டு (Mumps)
கொப்புளிப்பான் (Chicken ox)

டெங்குக்காய்ச்சல் (Dengue fever)

**புரோட்டோசோவா நோய்கள் (உ+ம்)**

| **நோய்** | **நோய்க்காரணி** |
|---|---|
| மலேரியா | Plasmodium vivax |
| அமீபா வயிற்றுளைவு | Entameoba histolytica |

தொற்றுநோய்கள் பல்வேறு காரணிகளால் பரப்பப்படுகின்றன. உணவு, நீர், சுவாசத்துணிக்கைகள், நுளம்பு இதைவிட உடலின் தொழிற்பாடுகளில் அல்லது கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுகின்றநோய்கள் Non communicable Disease எனப்படும். இவை ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றுவதில்லை. உதாரணமாக வெல்லநீரிழிவு (Diabetes Mellitus) இன்சுலின் என்ற ஓமோன் சுரப்பு குருதியில் குறைவடைவதனால் குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்தல் ஆகும். எமது உடலிலுள்ள சதையி என்ற அங்கமே இன்சுலின் சுரப்புக்குப் பொறுப்பாக இருக்கின்றது.

சில நோய்கள், ஒரு குழந்தை தாயின் கருப்பையிலிருந்து வெளியேறுகின்ற போதே (பிரசவத்தின் போது)
காணப்படுகின்றன. இவை பிறப்பு ரீதியான நோய்கள் என அழைக்கப்படும். (congential disease)
உ+ம்
congential heart diesease இதயச்சோணை அறையில் ஏற்படும் துவாரம்.

சிலநோய்கள் பெற்றோரிலிருந்து பிள்ளைகளுக்கு பரம்பரையலகுகளினால் கடத்தப்படுகின்றன. இவ்வாறான நோய்கள் பரம்பரை நோய்கள் என அழைக்கப்படுகின்றன.

01. நிறக்குருடு (Colour blindness)
02. ஈமோபீலியா (Haemophilia) (குருதியுறையா நோய்)

சிலநோய்கள் போசணைக்கூறுகளின் அளவு உடலின் குறைவடைவதனால் ஏற்படுகின்றன. இவை குறைபாட்டு நோய்கள் (Defeciency disease) என அழைக்கப்படுகின்றன.
உ+ம் குருதிச்சோகை (Anaemia)

கலப்பிரிவில் ஏற்படும் அசாதாரண மாற்றங்களினால் ஏற்படும் நோய் நிலை புற்றுநோய் எனப்படும்.
உ+ம் களத்தில் ஏற்படும் புற்றுநோய்.

எமது உடலின் தொற்றுநோய் நிலமை பின்வரும் காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

01. உடலின் போசணை (Nutirtion)
02. நோய் எதிர்ப்பு சக்தி (Immunity)
03. நோய்க்கிருமியின் வீரியம் (Pathogenicity of micro organism)

தொற்றுநோய்க்கிருமியின் வீரியமானது உடலின் பாதுகாப்புப்பொறிமுறையை மிஞ்சுகின்ற போது உடலில் நோய் நிலமை ஏற்படுகின்றது. பொதுவாக தொற்றுநோய்களால் எமக்கு ஏற்படும் அபாயங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் சிறந்ததாகும்.

01. தொற்றுநோய்கள் பற்றிய பூரண அறிவைக் கொண்டிருத்தல்.
02. போசாக்குள்ள உணவுகளை உட்கொள்ளுவதன்மூலம் உடலின் பாதுகாப்புப் பொறிமுறையை மேம்படுத்துதல்.
03. நடைமுறை வாழ்வில் சுகாதாரப்பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல்.
04. தனியார் சுகாதாரத்தைப் பேணுதல்.
05. நோய் பரப்பும் காரணிகளைக் கட்டுப்படுத்தல்.
    a. கொதித்தாறிய நீரைப்பருகுதல்.
    b. சுத்தமான தொற்றுநீக்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளுதல்.
    c. பொது இடங்களில் தும்மும் போதும் இருமும் போதும் கைக்குட்டையை உபயோகித்தல்.
    d. நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்.
06. சமுதாயத்தில் தொற்றுநோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

இன்று எமது நாட்டிலும் Non communicable disease ஆன வெல்லநீரிழிவு, உயர்குருதியமுக்கம், மாரடைப்பு நோய்கள் ஏற்படுகின்ற தன்மை அதிகரித்திருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. இதற்கான அடிப்படைக் காரணங்களாக பின்வருவனவற்றைக் கருதலாம்.

*01. அதிக கொழுப்பு நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல்.*

*02. சரியான உடற்பயிற்சியின்மை.*

*03. இயந்திரமயமான வாழ்க்கைமுறை.*

*04. அதிகளவு உளநெருக்கடிகளுக்கு உள்ளாதல்.*

*05. அதிகளவு மதுபானம் அருந்துதல்.*

*06. புகைப்பிடித்தல்.*

*07. இலகுவாக உணர்ச்சிவசப்படல்.*

*08. அதிக உடற்பருமன்.*

மேற்கூறிய காரணிகளிலிருந்து விடுபட்டு எமது வாழ்க்கைமுறையை அமைத்துக் கொள்வோமாக இருந்தால் அவ்வாறான நோய்களிலிருந்து தப்பிக்கொள்ள முடியும்.

ஒரு குழந்தை தாயின் வயிற்றிலே கருத்தரித்து அதன் இறப்புக்காலம் வரையில் நோய் ஏற்படுவதற்கான தகவைக்கொண்டிருக்கின்றது. இருப்பினும் எம்மில் பலர் எவ்விதமான நோயினாலும் பீடிக்கப்படாமல் தமது வாழ்வுக்காலத்தைச் சிறப்பாக முடித்துக் கொள்கின்றனர். நிறைவாக நாமும் நமது சமுதாயமும் நோய் நொடியின்றி வாழ்வதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து அதனைப்பின்பற்றி நலமோடு வாழ்வோமாக.

* * * * *

உனக்கு முன்னும் பின்னும் சூழ்ந்தும் ஊடுருவியும் செயலாற்றிக்கொண்டிருப்பது இயற்கையின் பேராற்றல்.

இது அறிவுடன்கொண்டு அண்டம் ஏராக ஒழுங்கு தவறாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றது.

மனிதச் செயல் ஒவ்வொன்றுக்கும் தக்க விளைவை இன்பமாகவோ துன்பமாகவோ

அளித்துக்கொண்டிருக்கின்றது. இந்த உண்மையை மறவாதே!

இப்பேராற்றலை மதித்து உனது செயலில் அளவு, முறை, ஒழுங்கு இவற்றைக் கடைப்பிடி!

இதுவே உயர்ந்த தெய்வ வழிபாடாகும்.

அப்பேராற்றலோடிணைந்த மனம் அந்தப் பேராற்றலை என்றும் உணர்ந்த அதனை நம்பிக் கொண்ட உள்ளம்

என்றும் வெற்றியும் மகிழ்ச்சியும் அமைதியும் பெற்று நிறைவு நிலையிலிருந்த வரும்.

பிறவியின் நோக்கமும் ஈடேறும்.

"வாழ்க வளமுடன்"

**– யோகிராஜ்**

**வேதாத்திரி மகரிஷி**

# தமிழ்மொழியை பிழையற எழுதுதல்



கி. நடராசா.

இன்றைய நவீன யுகத்தில் மொழி வளரும் வேகம் எல்லையற்றது. தமிழ் மொழியைத் தமிழென வழங்குவதுடன் திருப்தியடையாமல் செந்தமிழ், நற்றமிழ், செம்மொழி என்றெல்லாம் கூறி மகிழ்கின்றோம். மாசற்று எல்லா இலக்கண இயல்பும் உற்று இலங்கும் தமிழ் என்பதே செந்தமிழ் என்பதற்கும் நற்றமிழ் என்பதற்கும் பொருளாகும். எமது மொழியின் சிறப்பைக் குலைக்கும் செயல்கள் அதனைக் காட்டு மொழியாகவும் ஆக்கிவிடும். தவறான வழியில் மொழியைப் பயன்படுத்திச் செல்லும் ஒரு சிலரால் மொழியின் தூய்மை கெட்டுவிடுகின்றது.

உண்ணும் உணவில் ஒரு கல் இருந்தால் அது உணவின் சுவையைக் கெடுத்து எமக்குத் தொல்லைதருகின்றது. அதுபோல தமிழ்மொழியில் நாம் எழுதும் ஒரு வாக்கியத்தில் உள்ள பிழையும் எமக்குத் தொல்லை தரும். தமிழ்ச் செய்யுட்களில் உள்ள பிழைகளைக் கண்டு அதனைப் பொறுக்க முடியாமல் சீத்தலைச் சாத்தனார் எழுத்தாணியால் தம் தலையில் குத்திக் கொள்வாராம். எழுத்தாணி தலையைக் குத்திப் புண்ணாக்கி சீழ்வடியச் செய்தமையால் அவர் தலை சீழ்தலையாயிற்று. இதன் விளைவாக சீழ்தலைச்சாத்தனார் என்னும் பெயர் சீத்தலைச்சாத்தனார் என மருவியது. பிழை இல்லாமல் தமிழைக்காக்க வேண்டும் என்னும் கொள்கையினையே சாத்தனாரின் பெயர்க்காரணம் சாற்றுகின்றது.

நக்கீரர் வரலாறும் இது போன்றதே. சிவபெருமான் எழுதிக்கொடுத்த "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் பாடல் குற்றமுடையது என்று நக்கீரர் கூறினார். அதில் யாப்பு, அணி, சொல், எழுத்து இவை போன்ற குற்றம் எதுவுமில்லை. ஆனால் பொருட்குற்றம் உள்ளது என்று கூறி தள்ளிவிட்டார். சிவன் நேரே வந்து வாதிட்ட போதும், நெற்றிக்கண்ணை சற்றே காட்டி அச்சுறுத்திய போதும், **"நேயனே சுற்றம் முற்றும் எங்கணும் எங்கணும் நெற்றிக்கண்ணே ஆயினும் குற்றம் குற்றமே"** என்று அஞ்சாது கூறினார். இவ்வகையில் நம்மொழியில் குற்றம் தோன்றாமல் காக்க வேண்டியது நம்கடமையாகும்.

ஐரோப்பியர் நம் நாட்டிற்கு வருவதன் முன்னர் வடமொழியின் தாக்கத்தினால் தமிழ்மொழியின் எழுத்து வழக்கு சீரழிந்தது. சோழர்கால கல்வெட்டுக்களில் கணக்கற்ற பிழைகள் இருப்பதாக கவிஞர் முடியரசனார் குறிப்பிட்டுள்ளார் வடமொழியில் புணர்ச்சி ஓசை வழிப்பட்டது. ஆனால் தமிழ்ப்புணர்ச்சி கருத்து வேறுபாட்டை தருவதாக அமைந்தது என்பதை

எவரும் உணரவில்லை. இன்று ஆங்கிலமொழி வசன கட்டுக்கள் தமிழில் பேசுவதும் எழுதுவதும் தோன்றியதனால் பலதவறுகள் எம்மொழியில் ஏற்படலாயிற்று. எமது இடைநிலைக் கல்வியில் மொழிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் விடும் தவறுதல்களும் பிழையான தமிழ்ப் பிரயோகங்களுக்குக் காரணமாயிற்று. தமிழ் மொழியின் ஒலி வேறுபாட்டை அறிந்து கொள்ளாமையே இதற்குக் காரணமாகும். பாடசாலைகளில் மொழி உச்சரிப்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்குமாயின் தவறுகள் ஏற்பட நியாயமில்லை.

மொழி மனிதனின் பண்பாட்டு உருவாக்கத்திற்கும் கருத்துப்புலப்பாட்டிற்கும் பயன்படும் முக்கிய கருவியாகும். மனிதன் தனது எண்ணங்கள், உணர்வுகள், தகவல்களை பிறர் அறியச்செய்யும் போது தவறு ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும்.

விளம்பரங்களில் இருந்து பத்திரிகைத் தாள்வரையிலும், பாடசாலை முதல் அரச நிறுவனங்கள் வரை வெளிவரும் செய்திகளில் இருந்தும் ஒரு சில உதாரணங்களைக் குறிப்பிட்டு பிழைகளையும் அவற்றைக் களைந்தெறியும் முறைமைகளையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

**பிரதி ஞாயிறு தோறும் மேலதிக வகுப்புகள் நடைபெறும்.**

இது தவறு, "பிரதி" என்பதற்கும் "தோறும்" என்பதற்கும் ஒரே பொருள் தான். எனவே இரண்டில் ஒரு சொல் இருந்தால் போதும். ஞாயிறு தோறும் என எழுதுவது சரியான தொடர். பிரதி ஞாயிறு என எழுதினாலும் சரியானதே. ஆனால் "பிரதி" என்பது வடசொல் என்பதை நினைவிற் கொள்க.

**இக்கவிஞரின் பாடல்கள் பாராட்டப்பட்டது.**

இவ்வாக்கியம் தவறானது. எழுவாய்க்கு இயைபாக பயனிலை அமையவில்லை. பாடல்கள் என்பது பன்மை பாராட்டப்பட்டது என்பது ஒருமை. பன்மைக்குப் பன்மை முடிவு வேண்டும். அதனால் "இக்கவிஞரின் பாடல்கள் பாராட்டப்பட்டன" என அமைதல் வேண்டும். அல்லது "இக்கவிஞரின் பாடல் பாராட்டப்பட்டது" என அமைதல் வேண்டும்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.**

இது ஒரு பத்திரிகைச் செய்தி. இவ்வாக்கியத்தில் உள்ள மிகப்பெரிய தவறு "மோசமான ஆசிரியர்" என்ற தொடராகும். கருத்துப்புலப்பாட்டிற்காக எப்படியும் எழுதலாம் என்று நாம் நினைக்கக்கூடாது. மோசமான ஆசிரியர் என்று ஆசிரியரை இழிவுபடுத்துவது போல அமைகின்றது. இது போன்று கல்வித்திணைக்களத்திலிருந்து வரும் கடிதங்களில் **மேலதிக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர்** எனக்குறிப்பிட்டிருப்பதையும் நாம் பார்த்திருக்கின்றோம். இதனை வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் என திருத்தம் செய்ய வேண்டும்.

**வருடாந்த பரிசளிப்புவிழா - வருடாந்த மெய்வல்லுநர் போட்டி**

இவ்வாறு பாடசாலைகளில் இருந்து வரும் அழைப்பிதழ்களில் காணப்படுகின்றன. வருடாந்த என்ற சொல் வருடத்தின் இறுதி நாளைக் குறிப்பிடுகின்றது. ஆதலினால் பரிசளிப்புவிழா மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி இடம்பெறுமாயின் அது சரியானதே. இவ்வாறு எழுதிக்கொள்ளாது பரிசளிப்புவிழா - 2011என எழுதுவது பொருத்தமானது.

தசரதனது மகன் இராமன்.

இது தவறு. தசரதன் + அது என்பதில் அது என்பது அஃறிணைக்குரியது. தசரதனது நாடு தசரதனது மாளிகை என எழுதுவது சரி. ஆனால் தசரதனது மகன் தசரதனது மனைவி என்று எழுதுதல் பிழையாகும். தசரதனுக்கு மகன் என்று எழுதுவதே சரி. தற்காலத்தில் "தசரதனுடைய மகன்" என்றும் "தசரதனின் மகன்" என்றும் எழுதுவதை சரியானது என ஏற்றுக்கொள்கின்றனர்.

இந்தபடம் வெற்றிபெறும்

இவ்வாறு எழுதுவது தவறு. இந்தபடம் என்று எழுதப்பட வேண்டும். அந்த, இந்த என்னும் சுட்டுப்பெயர்களின் பின்பும், எந்த என்ற வினாப்பெயரின் பின்பும் சந்தி மிகும். உ+ம் அந்தக்காடு, இந்தப்பத்திரிகை, எந்தப்பொருள்.

நடக்கக்கூடாதது நடந்து விட்டது

இது தவறு. நடக்க என்பது அகர ஈற்று வினைஎச்சம். அகர ஈற்று வினை எச்சங்களின் பின் சந்திமிகும். அதனால் "நடக்கக்கூடாதது நடந்துவிட்டது" என்று எழுதுவதே சரி.

அமைச்சர் தனது தொகுதிக்குச்சென்றார்

இது தவறு. அமைச்சர் "அர்" விகுதி பெற்ற மரியாதை ஒருமைப்பெயர். தனது என்று எழுதுவது தவறு. தமது என்று எழுதுவதே சரி. கம்பர் தனது இராமாயணத்தை அரங்கேற்றினார் என எழுதுவது தவறு. கம்பர் என்று எழுவாய் அமைந்தால் அதற்கான தற்சுட்டுப்பெயர் தமது என்பதாகும். கம்பன் என எழுவாய் அமைத்தால் தனது என்று குறிப்பிடலாம்.

ஹபரணையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரைப் பொலிசார் கைது செய்தனர்

இவ்வாக்கியத்தில் பல தவறுகள் உள்ளன. நடமாடுதல் என்பது நடனமாடுதலைக்குறிக்கும். இதனை நடந்து திரிந்த என மாற்றிக் கொள்ள வேண்டும். நபர் என்பது ஒருவரையே குறித்து நிற்பதால் அச்சொல் இடம்பெறவேண்டிய அவசியமில்லை.

விளம்பரங்களில், செய்தித்தாள்களில், நூல்களில், அலுவலக கடிதங்களில் பிழைகள் மலிந்துவிட்டன.

"தாய் சேயைக் காப்பது போல
தாய்மொழியைக் காத்திடுவோமா"

என்று வாணிதாசன் கூறியது போல நமது இளைஞர் சமூகத்தவர் இதனைக் காத்திட வேண்டும்.

* * * * *

**தனி மனிதர்களால் சமுதாயமும், சமுதாயத்தால் தனி மனிதர்களும் காக்கப்பெறுகின்றனர். எனவே சமுதாயப் பொதுவான திட்டங்களும் நோக்கமும் ஒவ்வொரு தனி மனிதனுடைய நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஏற்றதாக இருக்க வேண்டும். தனி மனிதர் ஒவ்வொருவருடைய ஆற்றலும் தன்னலத்தைப் பேணுவதோடு சமுதாயத்திற்கும் ஆக்கம் தருவதாக இருக்கவேண்டும்.**

**- யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி -**

# யாழ்ப்பாணத்தமிழர்களின் தனித்துவத்துக்கு சான்றாக இன்னும் தேசவழமைச்சட்டம்



**அ.க.நடராசா**
(B.Dev.S.J.P.U.M.)
**சட்டத்தரணி**
**பிரசித்த நொத்தாரிஸ்**

தேசவழமைச்சட்டம் யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்ட தமிழர்களுக்கு பொருந்தும் சட்டமாகும். இது டச்சுக்காரரர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது மக்களின் பழக்க வழக்கங்களையும் அவர்களது நடைமுறைகளையும் ஆராய்ந்த போது அவர்கள் சிறப்பான சட்டதிட்டங்களுக்கமைவாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களது வாழ்க்கை முறை சொத்து அடுத்துறல் திருமணமுறைகள் இவற்றை மையமாகக் கொண்டு அவர்களது சட்டதிட்டங்களையும் வாழ்க்கைமுறையையும் குழப்பக்கூடாது என்பதற்காக தேசவழமைச் சட்டத்தை உருவாக்க டச்சுக்காரரர் தமிழ் முதலியார்கள் பண்டிதர்களின் உதவியை நாடினார்கள்.

யாழ்ப்பாணத்து தமிழர்கள் இந்தியாவின் கேரள நாட்டிலிருந்து வந்தவர்களென்றும் யாழ்ப்பாணத்து தமிழர்களது பழக்க வழக்கங்கள் உணவுமுறை இவைகளும் கேரள நாட்டவர்களது பழக்கவழக்கங்கள் வாழ்க்கைமுறைகளும் ஒன்றுபட்டிருந்ததை அவதானித்து அக்காலத்து முதலியார்கள் பண்டிதர்கள் கேரள நாட்டிற்கு சென்று அங்குள்ள வழமைகளையும் ஆராய்ந்து தேசவழமைச்சட்டத்தை தொகுத்தனர்.

தேசவழமைச்சட்டமானது ஆள்சார், ஆள்புலம்சார் சட்டமாகும் யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்ட தமிழர்கள் யாபேருக்கும் இது பொருந்தும் அவர் கொழும்பில் வசித்தாலென்ன கண்டி காலியில் வசித்தாலென்ன யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்டவர் யாழ்ப்பாணத்தில் ஆதனங்கள் இருக்கிறது என்பதை நிரூபித்தால் அவர் தேசவழமைக்குட்பட்டவரென்று கருதப்படுவோர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆதனங்கள் யாவும் தேசவழமைச்சட்டத்திலே ஆழப்படுகின்றன. இதனாலே தான் தேசவழமைச்சட்டமானது ஆள்சார் ஆள்புலம்சார் சட்டமாகக் கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்து தமிழர்களுக்கு இச்சட்டம் பொருந்தும் எனும் போது யாழ்ப்பாணத்து தமிழர் யார் என்பதை இலங்கை உயர்நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. மன்னாரில் வாழும் தமிழர்கள் வவுனியாவில் வாழும் தமிழர்கள் முல்லைத்தீவில் வாழுகின்ற தமிழர் இவர்களெல்லாம் தேசவழமை பொருந்தும் என்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்ப்போமாயின் வடமாகாணத்து தமிழர்கள் வடமாகாண ஆதனங்கள் (காணிகள்) யாவுக்கும் தேசவழமைச்சட்டம் பொருந்தும்.

**தேசவழமைச்சட்டத்தின் சிறப்பியல்புகள்**

01. மற்றைய இடங்களில் இல்லாத சில சிறப்பு அம்சங்கள் தேசவழமைச்சட்டத்தில் உள்ளது. முன்வாங்குரிமைச்சட்டம்' இது சொரியலாக உள்ள காணியை கூட்டுப்பங்காளர் காணி விற்பவரின் இரத்த உறவினர் தவிர்ந்த வேறு எவருக்கும் விற்பனை செய்வதை தடுக்கிறது. அப்படி விற்பனை செய்தால் கூட்டுப்பங்காளன் உரிய பணத்தை நீதிமன்றில் செலுத்தி ஆதனத்தை பெற்றுக்கொள்ளலாம். விற்பனை செய்பவர் தேசவழமை முன்வாங்குரிமைச்சட்டம் பிரிவு 5க்கு அமைவாக அக்காணி அமைந்துள்ள உள்ளூர் ஆட்சி மன்றங்களில் 21 நாட்களுக்கு விற்பனை சம்பந்தமான அறிவித்தல் போட்டு காணியை யாருக்கும் விற்பனை செய்யலாம். கூட்டுப்பங்காளர் கேட்குமிடத்து அவர்களுக்கே கொடுக்கவேண்டும். இவ்விதம் அறிவித்தல் போட்டு கூட்டுப்பங்காளர் கேட்காதவிடத்து யாருக்கும் காணி விற்பனை செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் தேசவழமைச்சட்டத்தினால் காணி வாங்கமுடியாதுள்ளது என்பது தவறு. அதுவும் செரியல் காணிக்கே இச்சட்டம் பொருந்தும் நிந்தமான பிரிவிடல் செய்யப்பட்ட காணிகளுக்கு முன்வாங்குரிமை பொருந்தாது.

**ஒற்றிமுறைமை** :- பண்டைக்காலம் தொட்டு வழங்கி வருகிறது கொடுக்கும் வட்டிக்குப்பதிலாக பிரயோசன வருமானங்களை பணம் கொடுப்பவர் ஆண்டு அனுபவிக்கலாம். இதற்கு கால எல்லை இல்லை. ஒற்றிபெற்று ஆட்சியிலிருப்பவர் ஆட்சியுரிமை கோரமுடியாது.

**திருமணமுறை** :- தேசவழமைச்சட்டத்தால் ஆளப்படுபவர்கள் இந்து முறைப்படி செய்யும் திருமணங்கள் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. திருமண நிகழ்வில் ஐயர் சமூகமாக இருக்கவேண்டும். கூறை தாலிகட்டுதல் முறைப்படி இருத்தல் வேண்டும். இவைகள் நிரூபிக்கும் பட்சத்தில் இந்து முறைத்திருமணம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் காணிகளுக்கு வேலி அடைத்தல் பயன்தரு மரங்களை வீட்டில் உண்டாக்குதல் தானாகவளரும் மரங்கள் இவைகள் சம்பந்தமாக சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. தேசவழமைச்சட்டத்தில் உள்ள பெரும் பகுதி தற்போது வழமையில் இல்லை. பெரும்பாலான பொதுச்சட்டங்கள் தற்போது வழக்கில் உள்ளன.

சொத்துக்களை

(1) கொள்விலை (அறுதி)

(02) நன்கொடை

(3) சீதனம்

(4) முதுசொம்

(5) உரிமை என வகைப்படுத்தலாம்.

**அறுதி** :- எனும் போது தகுந்தவிலை கொடுத்து ஒருவரது சொத்தை மற்றவர் வாங்குவதாகும். திருமணத்துக்கு முன்னர் வாங்குவது திருமணத்துக்குப் பின்னர் வாங்குவது திருமணத்துக்கு யார் வாங்கினாலும் அது அவர்களுக்குரிய தனிப்பட்ட சொத்து திருமணத்துக்குப் பிறகு திருமணம் வலிதாக இருக்கும் போது வாங்கிய சொத்துக்கள் தற்போதைய தீர்க்கப்பட்ட வழக்குகளின் படி கணவன் மனைவி இருவருக்கும் சமபங்காக உள்ளது. ஒருவர் இறப்பின் மற்றவருக்கும் அவரின் அரைவாசிப்பங்கில் அரைவாசி சென்றடைகிறது. எனவே இருப்பவர்களுக்கு 3/4 பங்கும் பிள்ளைகளுக்கு பிள்ளைகள் இல்லாதவிடத்து அவரது சந்ததிக்கு 1/4 ஆக அடைகிறது. இதைத்தேடிய தேட்டம் என்பார்கள்.

**நன்கொடை** :- பெற்றோரால் பிள்ளைகளுக்கு குறிப்பாக ஆண்பிள்ளைகளுக்கு உறவினர்களாலும் ஏனையோராலும் அன்பு பட்சத்தின் நிமித்தம்

கொடுப்பது நன்கொடையாகும். இந்நன்கொடை சொத்து வாங்கியவர் பிள்ளையில்லாமல் இறந்தால் கொடுத்தவர் உயிருடன் இருந்தால் அவர்களுக்கும் அவர்கள் இல்லாதவிடத்து அவர்களது சந்ததியினருக்கும் சென்றடையும்.

**சீதனம்** :- திருமணநேரத்தில் பெற்றோராலோ சகோதரங்களாலோ பெண்ணிற்கு கொடுக்கப்படும் சொத்து இது. பெண்ணின் தனிப்பட்ட சொத்து இதில் கணவனுக்கு பராமரித்து அனுபவிக்கும் உரிமையோ தவிர வேறு எவும் இல்லை. தம்பதியினருக்கு பிள்ளைகள் இல்லாதவிடத்து தாய்வீட்டு சீதனம் தாய்வீட்டிற்கே சென்றடையும்.

**முதுசொம்** :- பெற்றோர்கள் சொத்தை கையளியாமல் விட்டு இறந்தால் அச்சொத்து பிள்ளைகளுக்கு சென்றடையும். இதை முதுசொம் என்பார்கள். பெண்பிள்ளைகள் திருமணம் செய்து பெற்றோரிடமிருந்து சீதனம் பெற்றிருந்தால் அவர்களுக்கு முதுசொத்து சென்றடையாது.

**உரிமை** :- பெற்றோர்கள் தவிர்ந்து ஏனையோரால் (உதாரணமாக சகோதரன் சிறிய தகப்பன் பெரியதகப்பன்) இவர்களுக்கு சந்ததியின்றி இறக்கும் போது அவர்களிடமிருக்கும் கையளிக்காத சொத்து உறவினருக்கு உரிமை என்ற ரீதியில் வந்தடையும்.

தேசவழமைச்சட்டத்தால் ஆளப்படும் பெண்கள் காணிவிற்கவோ சட்ட சம்பந்தமான விடயங்களில் கணவனின் சம்மதமின்றி செயல்படமுடியாது. தனக்குரிய தனிப்பட்ட சொத்துக்களை கைமாற்றுகிலும் கணவனின் சம்மதம் தேவை. அத்தியாவசிய தேவைக்காக தனிப்பட்ட சொத்தை கைமாற்ற மனைவி முற்படி கணவன் சம்மதம் கொடுக்காவிடின் மாவட்ட நீதிமன்றில் மனைவி மனுச்செய்து நீதிமன்ற அனுமதி பெற்று கைமாற்றலாம். பெரும்பான்மை இனமக்கள் தேசவழமைச்சட்டத்தினால் யாழ்ப்பாணத்தில் காணி வாங்கமுடியாது. அதை நீக்கவேண்டுமென்றும் ஒருபகுதியினர் தேசவழமைக்குட்பட்ட பெண்களில் தாங்கள் கணவனின் சம்மதமின்றி சொத்து விடயங்களில் செயல்பட முடியவில்லை. தேசவழமை கையளிக்க வேண்டுமென முயற்சிக்கிறார்கள். எது எப்படி இருந்தபோதும் யாழ்ப்பாணத்து தமிழர்களின் தனித்துவத்துக்கு சான்றாக இருப்பது தேசவழமைச்சட்டமே.

* * * * *

*மனித மனத்தை அதன் குழந்தைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் வளர்ச்சியடைந்த நிலையிலும் ஆய்வதால் கிடைக்கும் அறிவே கல்வியின் உண்மையான அடிப்படையாகும். கல்வியின் கருவியாகிய மனத்தைப் புறக்கணித்து, புத்தகப் படிப்பிற்கு மட்டுமே உதவும் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த எந்தக் கல்வி முறையுமே, சிறப்பான ஆற்றல்களைக் கொண்ட முழுமையான மனத்தை உருவாக்குவதற்கு மாறாக புத்தி வளர்ச்சியைத் தடை செய்து சீர்குலைக்கவே செய்யும். ஏனெனில் கல்வியாளர் கையாள்வது, ஓவியனோ சிற்பியோ கையாள்வதைப் போன்ற உயிரற்ற பொருளன்று. மட்டற்ற நுண்மையையும் உணர்ச்சிக் கூர்மையையும் கொண்டதோர் உயிருள்ள ஜீவனாகும்.*

- ஸ்ரீஅரவிந்தர் -



# சக்திமிகு பாடசாலை முகாமைத்துவம்

# *Dynamic School Managment*

**திரு.செ.சேதுராஜா**
*அதிபர்,*
*யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.*

*இன்றைய உலகில் கல்வியின் எல்லைகளும் இலக்குகளும் விரிவடைய கல்விக்களநிலைச் செயற்பாடுகளும் கல்விசார் தொழில்நுட்பமும் அவற்றின் அளவிலும் தரத்திலும் அதிகரித்துச் செல்கின்றன. இலங்கையின் பொதுக்கல்விக் கட்டமைப்பில் பாடசாலைகளின் செயற்பாடுகளே மனிதவள அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைகின்றன. அடிப்படைக்கல்வியென்பது மாணவனின் எதிர்கால வாழ்க்கையினை நிர்ணயிக்கும் நிபந்தனையாக உள்ளது. இன்றைய நிலையில் பயனுறுதிமிக்க பாடசாலைகள் மனிதவாழ்வுக்கான பயிற்சிக்களங்களாக மிளிர்கின்றன. ஆற்றல்மிக்க ஆசிரியர்கள் மாணவர்களது மகிழ்ச்சிகரமான மனிதவாழ்க் கைப்பாணிக்கு அவர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுகின்றனர்.*

*இலங்கையின் கல்வி வரலாற்றில் கல்வி முகாமைத்துவக்கட்டமைப்புக்களும் நிர்வாக உத்திகளும் காலத்திற்குக்காலம் ஏற்படும் மாறுதல்களுக்கும் தேவைகளுக்குமேற்ப மாற்றமடைந்து வருகின்றபோதும் பாடாசலைகளின் பிரத்தியேகமான முகாமைத்துவக் கலாசாரங்களே நிலைத்து நின்று நினைவுகூறப்படுவதனையும் விதந்து பேசப்படுவதனையும் காணலாம். பாடசாலைகளின் பண்பாடு, கலாசாரம், பாரம்பரியம் என்பன அதிறகல்வி பயிலும் மாணவர்களது வாழ்க்கை கோலங்களாகப் பரிணமிக்கின்றன. கல்விக்கொள்கைக்கும் அவற்றின்வழி தோன்றும் குறிக்கோள்களும் இலக்குகளும் பாடவிதான மாற்றங்களினூடாக காலத்திற்குக் காலம் வேறுபட்டுச் செல்லினும் பாடசாலை செல்லுதல்* (Schooling) *என்னும் அம்சமானது மாணவரிடம் மறைக்கலைத்திட்டமாக அமுலாகி மனிதவாழ்வுக்குத் தேவையான அடிப்படைப் பண்புகளையும் திறன்களையும் அவர்களிடம் வளர்க்கின்றது. ஒழுங்கு, ஒழுக்கம், நேரந்தவறாமை, கட்டுப்பாடு, கடமைகளுக்கு மதிப்பளித்து ஒழுகுதல், கட்டளையிடுவதற்குத் தகுதியுடையவராதல், குழுவாகத் தொழிற்படுதல், நிறுவனமேன்மை மனப்பாங்கு முதலான வாழ்வியல்திறன்களை அறிமுகப்படுத்தி மாணவர்களிடம் அவற்றை வளர்த்தெடுக்கும் கருவூலம் பாடசாலைகளின் அன்றாடச் செயற்பாடுகளேயாகும். இத்தொழிற்பாடுகள் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடுவதுடன் காலகதியில் அப்பண்புத்தத்துவங்களே பாடசாலைகளின் கலாசாரமாகிவிடுகின்றன.*

*பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வியின் தரமும் மாணவர்களிடம் வளர்த்தெடுக்கப்படும் வாழ்க்கைத்திறன்களும் தேர்ச்சிகளும்*

அவ்வப்பாடசாலைகளின் கீர்த்தி நாமங்களுக்கு (Good well) அடிப்படையாக அமைகின்றன. பாடசாலைகளின் பயனாளிகளாகவும் பங்காளிகளாகவும் சுற்றுத்தொடராக நடிபங்காற்றும் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், உதவிவழங்கும் நிறுவனங்கள், அரசியல்வாதிகள் முதலான பகுதியினரைக் கொண்ட பாடசாலைச் சமூகம் பாடசாலைகளின் கீர்த்தி நாமங்களுக்கும் சாதனைகளுக்கும் பக்கபலமாக விளங்குகின்றன. பாடசாலை வளங்களையும் பாடசாலைச் சமூகத்தினையும் பயன்படுத்தி அதே பாடசாலைச் சமூகத்திற்கு உச்சப்பயனளிக்கும் தரமான கல்வியினையும் வாழ்க்கைத்திறன்களையும் வழங்கவேண்டிய பொறுப்பும், கடப்பாடும் பாடசாலை முகாமைத்துவத்திற்கேயுரியனவாகும். பாடசாலை முகாமையாளரான அதிபரின் திறனிலும், தூரநோக்குகளிலும் அறிவியல் சார்ந்த முகாமைத்துவ அணுகுறைகளிலுமே பாடசாலைகளின் வெற்றி தங்கியுள்ளது. பாடசாலைச் சமூகத்தின் நிகழ்கால, எதிர்கால வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்யவல்ல செயற்பாடுகளைக் கொண்ட பாடசாலை சக்திமிகு பாடசாலைகள் (Dynamic Schools) எனலாம். தனது கல்விச் சமூகத்தின் பொருளாதார, அறிவியல், மானிடப்பண்பியல், ஆன்மீகம்சார்ந்த தேவைகளை நிறைவுசெய்யக்கூடிய திறன்களை உருவாக்கும் பாடசாலை முகாமைத்துவம் சக்திமிகு பாடசாலை முகாமைத்துவம் (Dynamic School Managment) எனப்படும். இலங்கையில் நீண்டகாலமாக பாடசாலைகளின் தரத்திலும் வளநிலையிலும் கீர்த்தி நாமங்களிலும் இருந்துவரும் ஏற்றத்தாழ்வுகள், பன்முகத்தன்மைகள் காரணமாக பாடசாலை சமூகங்களிடையே உருவான ஏற்றத்தாழ்வுகளை நீக்கி அனைத்து நிலைமைகளிலும் சமமான உயரளவான தரத்தினை உருவாக்கும் கல்விமுயற்சிகள் இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களாகத் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் பாடசாலைகளிடையேயான ஏற்றத்தாழ்வுகளும் இருமைத்தன்மையும் தொடர்ந்து வளர்ந்து முனைப்படைந்து வருகின்றன. இலங்கையில் இருபத்தோராம் புதிய நூற்றாண்டின் ஆரம்பம் முதல் கல்வியின் தரமேம்பாட்டினை முதல் நோக்காகக் கொண்ட கல்வி முயற்சிகள் கோட்பாட்டு ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் கல்வியானது ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசமாக வழங்கப்படுகின்ற போதிலும் கல்வியின் தரத்தைப் பொறுத்தமட்டில் இருமைத்தன்மை நீடித்த வண்ணமேயுள்ளது. வசதிபடைத்தோரும் கல்விகற்கும் பாரம்பரியமுடையோரும் எவ்வகையிலாவது ஒப்பீட்டடிப்படையில் தரம் கூடிய கல்வியைத் தமது பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் அதேவேளை ஏழைமக்களும் கல்வியில் எவ்வாறு கவனம் கொள்வது என்பதனை அறியாத மக்களும் தமது பிள்ளைகளுக்குத் தரமான கல்வியைப் பெற்றுக்கொடுக்கத் தவறுகின்றனர். இலங்கையில் தற்போது 10,429 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 9,678 பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகளாகும். ஏனைய பாடசாலைகள் 751ஆகும். இவற்றில் மொத்தமாக 4,098,000 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு 219,000 ஆசிரியர்கள் கல்விகற்பித்து வருகின்றனர். மாணவ ஆசிரியர்கள் விகிதம் சராசரி 19:1 ஆகும். கல்வியை விரிவாக்கும் கொள்கைக்கமைவாக கல்வி வழங்கும் நிறுவனங்களினதும் கல்வி வழங்கும் பணியாளர்களதும் கல்வி பெறும் பயனாளிகளதும் தொகை எண்ணிக்கையளவில் அதிகரித்துள்ள போதிலும் கல்வியைத் தரரீதியில் நோக்குகின்ற

போது முனைப்பான ஏற்றத்தாழ்வுகளே வெளிப்படையாகத் தென்படுகின்றன. கொள்கையளவில் கல்வியில் சமத்துவமும் சமசந்தர்ப்பமும் வலியுறுத்திப் பேசப்படுகின்ற போதிலும் நடைமுறையில் நகரப்புறப் பாடசாலைகளில் அல்லது வசதிவாய்ப்புக்கள் அதிகமுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் கிராமப்புற அல்லது நகர் ஒதுக்குப்புற வசதிகுறைந்த பாடசாலைகளில் கல்விக்கான வசதிவாய்ப்புக்கள் குறைவாகவேயுள்ளன.

மாணவர்களது பாடஅடைவு மட்டம் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் பங்குபற்றித் தேர்ச்சி பெறும் வாய்ப்புக்கள், பௌதிக மற்றும் மனிதவளச்செறிவுடைய பயிற்சிகள் என்பவற்றில் வளர்ச்சியடைந்த பாடசாலைகள் தொடர்ந்தும் முன்னிலை பெற வளர்ச்சி குன்றிய பாடசாலைகளில் இவற்றின் நிலை தொடர்ந்தும் பின் தங்கியிருக்கும் நிலைகள் பொதுவாகவே காணப்படுகின்றன. நாடுகளிடையே பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் காணப்படுகின்ற “நாசச்சக்கரம்” போன்று இலங்கையின் கல்வித்துறையிலும் வளர்ச்சிகுன்றிய பாடசாலைகளிலே இந்த “நாசச்சக்கர: விளைவு முனைப்படைந்து காணப்படுகின்றது. வளப் பற்றாக்குறை, தேர்ச்சி மிக்க ஆசிரியர்களின் பற்றாக்குறை, அதிபர்களது முகாமைத்துவத்திறன் குறைபாடு, கல்வியில் கவனம் குறைவான வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் உள்ளீடு, அடைவுகுறைவான மாணவர்களின் அனுமதி, கல்வி நிர்வாகத்தினரின் கவன வீச்சுக்குள் அகப்படாமை, பெரிய, வசதியான பாடசாலைகளின் கீர்த்திநாமக்கவர்ச்சி முதலான காரணிகளால் வசதிக்குறைவான பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்ந்தும் பின்தங்கியிருக்க வேண்டியுள்ளது.

இலங்கையின் அனைத்துப் பாடசாலை - களிலும் ஒரேவிதமான கல்வித் தரத்தினை வளர்த்தெடுப்பதற்கான அரச முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் கல்வியில் தனியார் துறைக்குரிய பண்புகள் அதிகரித்து, உண்மையாகவே வசதியான மற்றும் நடுத்தர வருமான வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காகத் தரம் நாடிப் பணம் செலவு செய்யத் தயாராக இருப்பதனால் அப்பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் தரவளர்ச்சியுடையனவாகும் வாய்ப்புள்ளது. இன்று இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் இவ்வாறான பாடசாலைகள் தத்தம் அளவில் சக்திமிகு பாடசாலைகளாகத் தோற்றமளிக்கின்ற மயக்க நிலை காணப்படுகின்றது. அத்துடன் பொதுப்பரீட்சை முடிவுகளும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் மிகுந்த நிதிமூலத்துடனும் அதிக பயிற்சி வசதிகளுடனும் முன்னெடுக்கப்படும் இணைப் பாடவிதானப் போட்டிகளில் பெறப்படும் வெற்றி அடைவுகளும் பாடசாலைகளின் சக்தியினை வெளிக்காட்டும் சுட்டிகளாகக் கொள்ளப் படுகின்றன. இச்சுட்டிகளின் புள்ளிவிபரக் கணக்குகளை தார்மீகம் சார்ந்த மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்துதல் சாலச்சிறந்ததாகும். இவ்வாறான போக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் நேரான உந்துதல்களை உண்டுபண்ண வல்லனவாய் இருப்பினும் இதன் மறுபக்க விளைவுகள் வறிய, வளங்குன்றிய பாடசாலைகளின் வளர்ச்சியில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக்கூடும். இவ்வறிய வளங்குன்றிய பாடசாலைகளின் வளர்ச்சிகள் முறையான மதிப்பீட்டுக்கோ மதிப்பளிப்பிற்கோ உட்படுத்தப்படுவதில்லை என்னும் விமர்சனம் கல்வி நோக்குடையோரிடையே தொடர்ந்து இருந்து வருகின்றது. வர்த்தக உலகில் பல் தேசியக்

கம்பனிகளில் காணப்படும் போட்டி மற்றும் தனியுரிமைப் பண்புகள் போன்று பெரிய பாடசாலைகளிடையேயும் போட்டாபோட்டி நிலைமைகள் காணப்படுகின்றன. இது கல்வியின் ஏற்றத்தாழ்வற்ற தரமேம்பாட்டுக் கொள்கைக்கு இடையூறானதாகும். இவ்வாறாகக் கல்வியின் பொது இலக்குகளுக்கும் குறிக்கோள்களுக்கும் மாறான செயற்பாடுகளுடன் கல்வி அபிவிருத்தி நோக்கி கலந்து முன்னெடுக்கப்படும் பாடசாலைகளின் முகாமைத்துவ நடவடிக்கைகள் அதிபர்களது திறன்களையும் முகாமைத்துவ வலுவினையும் வெளிப்படுத்தும் காட்டிகளாக குறுகிய கருத்தில் இன்று பார்க்கப் படுகின்றன. இவ்வாறான குறுக்கு நோக்கில் பாடசாலைகளைச் சக்திமிகு பாடசாலைகளாக வளர்த்தெடுக்கும் முனைப்பில் அதிபர்கள் தொழிற்பட்டுவருவதனை கல்வியில் தரமேம்பாட்டிற்கான உத்வேகமாகக் கொள்வது கடினம். பாடசாலைகளின் சக்திமிகு முகாமைத்துவம் என்பதன் உண்மையான நோக்குப்பற்றிய தெளிவு பாடசாலைச் செயற்பாடுகளுடாக வெளிப்படுத்தப்படுவதனை உறுதிசெய்ய வேண்டியது மிகமிக அவசியமாகின்றது.

பாடசாலை முகாமைத்துவத்தில் மனிதவள முகாமைத்துவமென்பது மற்றெல்லா நடவடிக்கைகளை விடவும் முக்கியத்துவம் உடையதாகும். பாடசாலைகளில் மேற்கொள்ளப் படவேண்டிய ஏனைய கல்வி நடவடிக்கைகள் யாவும் மனிதவள முகாமைத்துவத்தின் பலம் மற்றும் பலவீனங்களினால் தாக்கமடைகின்றன. இன்றைய கல்வி இலக்குகள் எய்தப்படுவதனை நோக்காகக் கொண்ட கல்வி முகாமைத்துவச் செயற்பாடுகளில் பாடசாலை முகாமைத்துவ மென்பது மனிதவளத்தினூடாக மனிதவளத்தினை அபிவிருத்தி செய்கின்ற சக்திமிகு களநிலைச் செயற்பாடாகும். எனவே பாடசாலைப் பணியாளர்களது குறிப்பாக ஆசிரியர்களது தரத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் பாடசாலைகளை அதிபர்கள் சக்திமிகு பாடசாலைகளாக வலுவூட்டலாம்.

பாடசாலை அதிபர்கள் பின்வரும் முகாமைத்துவச் செயற்பாடுகள் மூலம் தமது பாடசாலை சக்திமிகு பாடசாலையாவதற்கான அடிப்படையினை ஏற்படுத்தலாம் என இனங்காணப்பட்டுள்ளது.

01. பிரச்சினை தீர்த்தலுக்கான நிறுவனச் சூழலினையும் அறிகைக் கட்டமைப் பினையும் இலக்கு நிர்ணயித்தலையும் ஆசிரியர்களினூடாக மேற்கொள்வதனை உறுதிப்படுத்தல்.
02. அனைவரதும் பங்களிப்புடனான தீர்மான மெடுத்தல் பொறிமுறையினை உருவாக்குதல்.
03. சகபாடிகளினூடனான தொடர்புகளையும் தொடர்பாடலினையும் பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
04. ஆசிரியர்களை ஏற்றுக்கொள்ளலும் அவர்களுக்கு மதிப்பளித்தலும்.
05. சகல முன்னேற்ற முயற்சிகளும் செயற்பாடுகளும் நிலைபெறுவதற்கான சகல வளங்களையும் தொழில்நுட்ப ஆதரவுகளையும் பெற்றுக்கொடுத்தல்.
06. உண்மையான வாண்மைவிருத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்தல்.

இந்த ஆறு அடிப்படை முகாமைத்துவக் கருமங்களையும் பாடசாலையின் அதிபர் சரிவர மேற்கொள்வாராயின் பாடசாலையின் கல்வித்தரமும் கலாசாரப் பண்புகளும் மேலோங்கி சக்திமிகு பாடசாலை உருவாக வழியேற்படும். இவ்வாறான முகாமைத்துவப்பொறிமுறை, நுட்பங்கள் பின்பற்றப்படும் போது ஏனைய கல்வி

வளங்கள், சேவைகள் முதலியன இவற்றிற்குத் துணையாகப் பிரயோகிக்கப்படலாமே தவிர தனியாக அவற்றை ஏற்பாடு செய்வதன் மூலம் மாத்திரம் கல்வியில் எதிர்பார்க்கும் தரத்தினை எய்திவிட முடியாது.


இன்று இலங்கையில் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதனை முன்னிலைப் படுத்தி கல்வி முயற்சிகள் முன்னெடுக்கப் படுவதனை அவதானிக்கலாம். "தரமான வாழ்வுக்குத் தரமான கல்வி" என்னும் சுலோகம் முனைப்புற்று புதிய கல்விச்சீர்திருத்தச் செயற்பாடுகள் செறிவாக முன்னெடுக்கப் படுகின்றன. பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வியானது மாணவர்களிடம் அறிவினையும் அதனைப் பிரயோகிக்க வேண்டிய திறன்களையும் வாழ்க்கைக்கான தேர்ச்சிகளையும் அனுபவப் பயிற்சிகளினூடாக வழங்கி ஆளுமைமிக்கதும் நடைமுறை உலகிலும் எதிர்கால வாழ்விலும் பொருளாதாரவலுக்கொண்ட, மானிடப்பண்புமிகு ஆளணியை உருவாக்கும் இலக்குகளை நோக்கி நகர்த்தப்படுகின்றது. இக்கல்வி இலக்குகள் எவ்வாறெனினும் அடையப்படவேண்டியவை என்பதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை யாயினும் இந்த இலக்கு நோக்கிய செயற்பாடுகளுக்கான களநிலை வசதிகள், வளங்கள் போதுமானவையா? அன்றியும் பிரயோகிக்கப்படும் வளங்களிலிருந்து உரிய பயன் கிடைக்கின்றதா? என்பதும் இன்று விமர்சனத்துக்கு உரியனவாயுள்ளன.

இலங்கையின் பொதுக்கல்வித்துறையில் பாடசாலைக்கல்வி நடவடிக்கைகளும் பொது மதிப்பீட்டு முறைகளும் நவீன கல்வி இலக்குகள் நோக்கி ஓரளவு மாற்றமடைந்துள்ள போதிலும் பொதுப்பரீட்சைகள் சார்ந்த மதிப்பீட்டு முறைகள் இன்னமும் பெரும்பாலும் அறிதல் சாரந்தவையாக -வேயுள்ளன. பாடசாலைகளில் மாணவர்கள் பெறுகின்ற ஒழுக்க விழுமியப்பண்புகளோ அல்லது மானிடக்கலாசார வெளிப்பாடுகளோ இதுவரை மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டு சான்றிதழ்படுத்தப்படாமை ஒரு பெரும் குறைபாடாகும். மாணவர்களுக்கு அறிவையூட்டும் செயற்பாடுகளை பாடசாலைகள் மாத்திரமன்றி தனியார் கல்வி நிலையங்களும் தனிப்பட்ட போதனாசிரியர்களும் மேற்கொள்கின்றனர். ஆனால் மாணவர்களது முழுநிறைவான ஆளுமை விருத்திக்குரிய அனுபவங்களை மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து மாத்திரமே பெறவேண்டியுள்ளது. மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் பெறுகின்ற அதிகூடிய பெறுபேறுகளுக்காக அனைத்துத் தரப்பாரும் உரிமை கோருகின்ற அதே வேளை அவர்களது ஒழுங்கு, ஒழுக்கம், வாழ்க்கைத் தேர்ச்சித்திறன்கள் முதலானவற்றிலான குறைபாடுகளுக்கு எத்தரப்பாரும் பொறுப்புக்கூற முன்வருவதில்லை. மாணவர்களது உண்மையான வாழ்க்கைக்குரிய நலன் சார்ந்த விடயங்களில் போதியளவான வினைதிறன் வெளிப்பாடுகள் காணப்படாமை அவதானிக்கப் பட்டுள்ளது.

பாடசாலைகள் சக்திமிகு பாடசாலைகளாக மாற்றமடைந்தால் மாத்திரமே இவை சாத்தியமாகும். பாடசாலைகள் தேவையான வளவசதிகளுடனும் ஆளணிவளத்துடனும் சிறப்பான முகாமைத்துவக் கலாசாரத்துடனும் காணப்பட்டால் மாத்திரமே கல்வியின் இன்றைய இலக்குகளை அடைய முடியும். இவற்றில் ஒரு சிலவற்றை மாத்திரம் கொண்டிருப்பதானது பூரண சக்திமிகு பண்பாகாது. ஆரோக்கியமானதும் நிலைத்துநிற்கும் அபிவிருத்திப் பாங்கினைக் கொண்டனவுமான சக்திமிகு பாடசாலைகளின் உருவாக்கத்திற்கு வினைத்திறனும் விளைதிறனும் மிக்க முகாமைத்துவமே வழிசமைக்கும்.

* * * * *

# பாடசாலை மேம்பாடும் பெற்றோர் பங்களிப்பும்



**கலாநிதி.த.கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம்

மாணவர்களின் கல்வி அடைவுகளிலும் அவர்களின் வினையாற்றல்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் பலவற்றுள் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக, பிள்ளை விருத்தி, பிள்ளையின் கல்வி அடைவு என்பவற்றில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், கல்விசார், விருத்திசார் பிரச்சினைகள் ஏற்படாது தடுத்தலிலும் அப்பிரச்சினைகளுக்கான பரிகாரம் காண்பதிலும் பெற்றோரின் ஈடுபாடு (Parental involvement) இன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. அதிகரித்து வரும் கல்விச் செலவினங்களும் மாணவர் அடைவுப் புள்ளிகளின் வீழ்ச்சியும் பணித்துறைப்பண்பு நிறைந்த நிறுவனங்கள் மீதான நம்பிக்கையீனமும், இன்று பெற்றோரின் உரிமைகள், பொறுப்புகள், பெற்றோரின் தாக்கம் என்பவற்றின் மீதான எமது கவனத்தை மீள் குவிப்புச் செய்துள்ளன.

**கூட்டிணைந்து கற்கும் சமுதாயமாகப் பாடசாலை**

பாடசாலை மேம்பாடு என்பது ஒரு தொடருறு செயற்பாடாகக் கொள்ளப்பட வேண்டும். பாடசாலைகளில் மாணவர்கள் எல்லோரும் உயர்நிலையை அடைவதனை உறுதி செய்ய வேண்டும். இவ்வகையில், பாடசாலையின் பங்குதாரரான மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம் மற்றும் தொடர்புடைய நிறுவன உத்தியோகத்தர்கள் என பலரும் கூட்டாகச் சேர்ந்து பாடசாலைகளில் சிறந்த கற்றல் நிகழ்வதற்கான சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் பாடசாலைக்கான உருவகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கூட்டிணைந்து கற்கும் ஒரு சமுதாயமாக (a collaborative learning society) பாடசாலையை உருவகித்துக் கொள்ளலானது கற்பித்தலை அல்லாது கற்றலை பாடசாலைகளில் முதன்மைப்படுத்துவதோடு, சிறந்த கற்றல் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாட்டுக்குப் பலரது கூட்டிணைவு அவசியம் என்பதையும் சுட்டுகின்றது.

**பெற்றோர் பங்களிப்பினால் விளையும் அநுகூலங்கள்**

பாடசாலையின் முக்கிய பங்குதாரரான பெற்றோரின் பங்களிப்பினால் விளையும் அநுகூலங்கள் தொடர்பான பல ஆய்வாதாரங்களை நாம் இன்று பட்டியலிடலாம்.

- (பிள்ளைகளின்) பாடசாலைக் கல்வியில் ஈடுபாடு காட்டும் பெற்றோரின் பிள்ளைகளின் கல்வி அடைவும் அறிகை விருத்தியும் உயர்வாக உள்ளன.
- பெற்றோர் - பிள்ளை உறவு வலுவாக உள்ளபோது பிள்ளைகளின் செயற்பாடுகளில்

பெற்றோர் அதிக அளவில் பங்குபற்றுகின்றனர்.

- பாடசாலை - பெற்றோர் உறவு வலுவாக உள்ளபோது பாடசாலையுடன் பெற்றோர் கொள்ளும் தொடர்புகளின் எண்ணிக்கை உயர்வாக இருப்பதோடு, பிள்ளை விருத்திபற்றியும் கல்விச் செயன்முறை பற்றியும் பெற்றோர் சிறந்த விளக்கத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.
- பெற்றோர் - பாடசாலை பிணைப்பு உயர்வாக உள்ளபோது வீட்டில் தமது பிள்ளைகளுக்கான ஆசிரியர்களாகவும் பெற்றோர் செயற்படுவதோடு, மீள்வலியுறுத்தல் செய்யக்கூடிய நேரான வழிவகைகளையும் வடிவங்களையும் அவர்கள் பயன்படுத்துவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**பாடசாலை - பெற்றோர் பங்காண்மை**

பங்காண்மை (Partnership) என்பது இன்று பிரபல்யம் பெற்றுவரும் ஒரு பதமாகும். வர்த்தகம்சார் பங்காண்மை, விருத்திசார் பங்காண்மை, பாடசாலை - பெற்றோர் பங்காண்மை என்றவாறு பங்காண்மை முதன்மைப்படுத்தப்படுவதை நாம் காணலாம். ஆயினும், பங்காண்மை என்பதனை சரியாக அர்த்தப்படுத்திக் கொள்ளாதவரை பங்காளிகளிடையே கூட்டிணைவு ஏற்படுவது சாத்தியமற்றதாகும்.

பல சந்தப்பங்களில் ஆசிரியர் வகிபாகம் 'பெற்றோரின் இடத்தில் ஆசிரியர்கள்' (en loco parentis = in place of parents) என சட்டரீதியாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால், ஆசிரியர்கள் பலர் இச்சொற்றொடரைத் தப்பர்த்தம் செய்து கொண்டு, பிரதியீட்டுப் பெற்றோராகவே தம்மைக் கருதிக கொள்கின்றனர். இவ்வாறு தம்மைக் கருதிக் கொள்ளும் ஆசிரியர்கள் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் மூன்றாம் தரப்பினராகவே பெற்றோரைக் கருதுகின்றனர். ஆண்டொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகளில் மாணவர்கள் பற்றிய வரையறையுள்ள சில தகவல்களை வழங்கி பெற்றோரைச் சாந்தப்படுத்துவது மட்டுமே தமது கடமை எனவும் இவர்கள் எண்ணுகின்றனர். மாணவர்களின் உயர் சாதனைகளைத் தமது கற்பித்தலின் பெறுபேறுகளாகக் கொள்ளும் இந்த ஆசிரியர்கள், மாணவர்களிடத்து நடத்தைசார் பிரச்சினைகளையும் பிறழ்வுகளையும் காணுமிடத்து அவற்றுக்காகப் பெற்றோரையே குறைகூறுகின்றனர்.

பங்காண்மை என்ற பதத்தை விளங்கிக்கொள்வதும் அதனை நடைமுறைச் சாத்தியம் மிக்கதாகக் காண்பதும் இலகுவான ஒன்றன்று. ஆயினும், பங்காளிகள் கூட்டிணைந்து தொழிற்படும்போது, அது பங்காண்மையை விருத்தி செய்து கொள்வதற்கான முதற்படியாக அமையும். தமது பிள்ளைகளின் அநுபவங்கள், விருப்புகள், மனப்பாங்குகள், ஆர்வங்கள் போன்றவை குறித்து பெற்றோர் பெற்றிருக்கும் அறிவானது ஆசிரியர்களுடன் பகிரப்படவேண்டும். அதே வேளை மாணவர் விருத்தி குறித்து ஆசிரியர்கள் தொடர்ச்சியாகப் பதிவு செய்து கொள்ளும் அவதானிப்புகளும் பதிவுகளும் பெற்றோருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, பாடசாலைச் செயற்பாடுகளில் பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்யும்போதே பாடசாலை மீதான பெற்றோரின் பிடிமானத்தை அதிகரிக்கச் செய்து பங்காண்மையையும் அர்த்தம் பெறச் செய்ய முடியும்.

**பெற்றோர் ஈடுபாட்டின் விளைவுகள்.**

பிள்ளைப் பராமரிப்பு, கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் ஈடுபாடு கொள்ளும் பெற்றோர் தம்மைப் பற்றி நேர்மனப்பாங்கை விருத்தி செய்து, சுய நம்பிக்கையையும் அதிகரிக்கச் செய்து தமது சுயவிருத்தியை அதிகரிக்கச் செய்யக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றுவதையும் காணக் கூடியதாக உள்ளதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பாடசாலையில் ஈடுபாடு காட்டும் இவர்கள், பாடசாலை குறித்தும் பாடசாலை ஆளணியினர்

குறித்தும், பாடசாலையில் ஈடுபாடுகொள்ளாத பெற்றோரை விட, அதிக அளவில் நேர் மனப்பாங்கைக் கொண்டிருக்கின்றனர். அத்தோடு பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சமூகத்தின் ஆதரவைப் பெறுவதில் ஆர்வம் காட்டி, ஏனைய சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் களாகவும் உள்ளனர்.

**பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கான விளைதிறன்மிக்க அணுகுமுறைகள்**

வகுப்பறை, பாடசாலை என்பவற்றுக்குப் பெற்றோர் வருகை தரல், பெற்றோருடனான கூட்டங்கள், பெற்றோருக்கான பட்டறைகள் (work-shops), பெற்றோர் ஆசிரியர் மகாநாடுகள் போன்றன பிள்ளைகளின் கல்வியிலும் பாடசாலையிலும் பெற்றோர் பங்கு பற்றுவதற்கு ஆர்வமூட்டும். பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்தும் மாணவர் முன்னேற்றம் குறித்தும் எழுத்து மூலமானதும் வாய்மொழி மூலமானதுமான தகவல்கள் பெற்றோருக்குப் பயனுள்ளவையாக அமையும். வகுப்பறைச் செயற்பாடுகளிலும் பெற்றோர் கூட்டங்களிலும் கொள்கைத்திட்ட அமர்வுகளிலும் கலந்துகொள்வதில் பெற்றோர் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதையும் கல்விசார் விடயங்கள், தனியாள்சார் விருத்தி என்பன சம்பந்தமான கூட்டங்களில் உயர்விருப்பைப் பெற்றோர் காட்டுகின்றனர் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்வதிலுள்ள பிரச்சினைகள்**

- மாணவர் கல்வியிலும் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களிலும் பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்வதிலுள்ள பிரச்சினைகளையும் அவ்வாறு ஈடுபாடு கொள்ளச் செய்வதிலும் ஆசிரியர்கள் தயக்கம் காட்டுவதற்கான காரணங்களையும் பின்வருமாறு பட்டியலிடலாம் என ஆய்வுகள் சுட்டுகின்றன.
- பெற்றோரை எவ்வாறு ஈடுபடுத்தலாம், அவர்களின் வகிபாகத்தை எவ்வாறு நிபுணத்துவம் வாய்ந்ததாகப் பேணலாம் என ஆசிரியர்கள் அறியாதிருத்தல்.
- மாணவர்களைக் குழுவாகக் கருதும் தமது கரிசனையை, பெற்றோரின் அதிக ஈடுபாட்டினால் தனிப்பட்ட ஒவ்வொருவர் மீதும் அவர்கள் காட்டும் கரிசனை பாதித்துவிடுமோ என ஆசிரியர்கள் ஐயுறவுகொள்ளல்.
- பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்யும் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் அதிக நேரத்தை 'விழுங்கிவிடும்' எனவும் 'பெற்றோருக்குக் கற்பித்தல்' எனும் இலக்கு நோக்கித் தம பொறுப்புகளைத் திசை திருப்பிவிடும் எனவும், பிள்ளைகளுடன் எவ்வாறு தொழிற்படுவதெனப் பெற்றோர் அறியமாட்டார்கள் என்பதனால் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் எனவும் ஆசிரியர்கள் அச்சம் கொள்ளல்.
- பெற்றோர் தாம் ஒப்புக்கொண்டவற்றை நிறைவேற்றுவார்களா எனவும் இரகசியமான தகவல்களைப் பாதுகாப்பார்களா எனவும் அதிக நுணுக்கம் காட்டுவதைத் தவிர்த்துக் கொள்வார்களா எனவும் சந்தேகம் கொள்ளல்.
- தரங்குறைந்த மொழியையும் கற்பித்தல் முறைகளையும் உத்திகளையும் பெற்றோர் பயன்படுத்துவர் என எண்ணுதல்.

பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்வதில் ஆசிரியர்கள் தயக்கம் காட்டும் அதேவேளை, பாடசாலை மீதான தமது கரிசனை, தமது முறைப்பாடுகள், தேவைகள் போன்றவை பாடசாலைகளில் பணித்துறை ஆட்சிப்பண்பு காரணமாக தட்டிக் கழிக்கப்படுவதாகவும் தமது ஆர்வம் குறைக்கப்படுவதாகவும் பெற்றோர் குறைகூறுகின்றனர் என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

**பெற்றோர் ஈடுபாடு காட்டும் வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டங்களின் பண்புகள்**

பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்வதில் எதிர்நோக்கும் சிரமங்களுக்கும் அப்பால், பெற்றோரின் ஈடுபாட்டினால் விளையும் பயன்கள் காரணமாக, வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபாடு கொள்வதில் பெற்றோரிடையே தொடர்ச்சியான நாட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் அடிப்படைகளாக அமையக்கூடிய இந்நிகழ்ச்சித்திட்டங்களின் பண்புகளை இரு தலைப்புகளின் கீழ் நோக்க முடியும்.

1 பெற்றோர் குறித்து மேற்கொள்ளப்படும் எடுகோள்கள்
2. இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கோட்பாடுகள்.

**பெற்றோர் குறித்த எடுகோள்கள்**

- பிள்ளைகளின் விருத்திக்கும் கல்விக்கும் பெற்றோர் செய்யும் பங்களிப்புக்கும் அதிக அழுத்தம் கொடுத்தல்.
  - இது, பெற்றோர் தமது பங்களிப்புக் குறித்து திருப்திபெறவும் மேலும் அதிக ஈடுபாடுகொள்ளவும் வழிசமைக்கும். தாம் பங்களிப்புகளை மேலும் செய்ய முடியும் என்ற பெற்றோரின் நம்பிக்கையானது, தாம் பங்களிக்கக்கூடிய தமது திறன்களையும் முறைகளையும் குறித்து பரிசீலிக்கச் செய்யும்.
- பாடசாலைக்கு வெளியே வீட்டிலும் வெளியிடங்களிலும் தமது பிள்ளைகள் கொண்டுள்ள தொடர்புகள், நாட்டங்கள், அனுபவங்கள் என்பன குறித்த பல தகவல்களைப் பெற்றோர் தரமுடியும்.
  - இத்தகவல்கள், பிள்ளைகள் பற்றி ஆசிரியர்கள் அதிக விளக்கம் பெற உதவுவதோடு, விளைதிறன் மிக்க கற்பித்தலுக்கும் உதவும்.
- பெற்றோர் - பிள்ளை தொடர்புகள் தனிப்பட்டவையாகவும் அகவயமானவையாகவும் நீண்ட கால நோக்கிலானவையாகவும் விளங்குகின்றன. அதேவேளை, ஆசிரியர் - பிள்ளை தொடர்புகள் ஆட்சார்பற்றவையாகவும் புறவயமானவையாகவும் குறுங்காலத்துக்கு உரியவையாகவும் உள்ளன.
  - இந்த வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளல் வீட்டு வேலைகளையும் செயற்பாடுகளையும் திட்டமிடவும் அவற்றின் செயன்முறைகளை பெற்றோர் கண்ணோட்டத்தில் நோக்கவும் ஆசிரியர்களுக்கு உதவும்.
- பெற்றோர் தமது பிள்ளைகள்மீது உண்மையான கரிசனையைக் காட்டுகின்ற போதிலும் பாடசாலைக்கூட்டத்துக்குச் சமுகமளிப்பதைவிட தாம் வீட்டில் பிரயோசனமாகக் கழிக்கக் கூடிய வேலைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளல் அவசியமானது.
- பெற்றோருக்கு விருப்பம் உள்ளபோதும் எவ்வாறு தமது பிள்ளைகளுக்கு உதவுவது என்று அறியாதவர்களாக உள்ளனர் என்பதை உணர்ந்து இலக்குகளையும் குறிக்கோள்களையும் பெற்றோருக்கு எடுத்துக்கூறி, பிள்ளையுடன் எவ்வாறு பெற்றோர் தொழிற்படவேண்டும் என்று வழிவகைகளையும் சொல்லிக்கொடுக்கக் கூடியவர்களாக ஆசிரியர்கள் விளங்கவேண்டும்.

**வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் படுத்துவதற்கான கோட்பாடுகள்**

- இலக்குகள் நோக்கங்கள் என்பவற்றை செயல் நடவடிக்கைகளுடன்பொருந்தச் செய்தல்
- ஆசிரியர் குழுவின் திறன்களை யதார்த்த பூர்வமாகக் கருத்திற்கொண்டு, இருக்கின்ற ஏனைய வளங்களையும் கருத்திற் கொள்ளல்.
- நெகிழ்வானதும் ஆக்கபூர்வமானதுமான செயல் நடவடிக்கைகளுக்கூடாக பெற்றோரின் தேவைகள் மீது கரிசனை காட்டல்.

■ பெற்றோரிடமிருந்தான எதிர்பார்ப்புகளையும் பெற்றோரின் வகிபாகங்களையும் பொறுப்புகளையும் தெரிவித்தல்

■ தீர்மானம் மேற்கொள்ளலில் பெற்றோரை ஈடுபடுத்துவதோடு, நிர்வாகம்சார் தீர்மானங்களையும் அவர்களுக்கு விளக்கி, பகுத்தறிவு பூர்வமாக தீர்மானம் மேற்கொள்வதற்குப் பெற்றோருக்கு உதவுதல்.

■ பிரச்சினைகளை எதிர்பார்க்கும் அதேவேளை தீர்வுகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்தல்

-இவ்வகையில்பிரச்சினை விடுவிப்பதற்கான கொள்கைகளையும் முறையியலையும் பெற்றோருக்கு அறியத்தருவதோடு, தவறுகள் ஏற்படினும் பெற்றோரைக் குறை சொல்லாதிருத்தல்.

■ உயர்வானதும் அதேவேளை உத்தமமானதுமான ஈடுபாட்டில் நாட்டம் கொள்ளல்.

- பெற்றோர் ஈடுபாடு என்பது அதிகநேரத்தையும் முயற்சியையும் சக்தியையும் வேண்டி நிற்பது என்பதை உணர்ந்து கொள்ளல்.

**பெற்றோர்- பாடசாலை உறவை மேம்படுத்துவது தொடர்பான முக்கிய வினாக்கள்**

பெற்றோர் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைக் கட்டியெழுப்புவதற்கு ஆதாரமான வினாக்கள் பலவற்றை எம்மிடம் நாமே எழுப்பி அவற்றுக்கான விடைகளைத் தேட முற்படுவது சிந்தனைத்தெறிப்பு நடவடிக்கையாகவும் அமைந்து, நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து நல்ல தெளிவையும் நாம் பெற்றுக் கொள்ள உதவும். இவ்வினாக்களுள் முக்கியமானவற்றை பின்வருமாறு பட்டியலிடலாம்.

■ பாடசாலையிலிருந்து பெற்றோர் எவற்றை எதிர்பார்க்கிறார்கள் என அறிய முற்பட்டிருக்கிறோமா?

■ பெற்றோரிடமிருந்து நாம் எவற்றை எதிர்பார்க்கிறோம்?

■ பாடசாலை குறித்து என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என பெற்றோரிடம் நாம் வினவியிருக்கின்றோமா?

■ பெற்றோரை எவ்வாறு பாடசாலையில் ஈடுபடுத்திக் கொள்கிறோம்?

■ ஏன் சில பெற்றோர் ஈடுபாடு கொள்ளாதிருக்கிறார்கள்?

■ தவறவிடப்பட்ட பெற்றோருடன் விளைதிறன் மிக்க தொழிற்பாட்டுத் தொடர்பை நிறவுவதற்கு என்ன செய்யலாம்?

■ பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உதவுவதற்கு நாம் எவ்வாறு பெற்றோருக்கு உதவலாம்?

■ பெற்றோருடன் ஒன்றாகத் தொழிற்படுவதற்கு சக ஆசிரியர்கள் எவ்வளவு முக்கியத:துவம் அளிக்கிறார்கள்?

■ மாணவர்களின் கண்ணோட்டங்களைச் செவிமடுப்பதற்கு எமது பாடசாலை என்ன செய்கிறது?

**பெற்றோர் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்தலிலும் பாடசாலையில் ஆர்வம் கொள்ளச்செய்தலிலும் உறவுகளை மேம்பாடு கொள்ளச் செய்தலிலும் மேற் கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்**

■ பாடசாலை நுழைவாயிலில் பாடசாலைக்கான வருகையாளரையும் பெற்றோரையும் வரவேற்புக் கூடத்துக்கு (reception office) வழிகாட்டக் கூடியதான வழிகாட்டிப்பலகை நிறுத்தப் பட்டிருத்தல்.

■ பாடசாலையின் வரவேற்புக் கூடம் தகவல் நிறைந்ததாகவும் நன்கு வரவேற்பளிப்பதாகவும் அமைந்திருத்தல்.

■ பாடசாலையின் அறிவுறுத்தல்கள் யாவும் நேரான மனப்பாங்கை வளர்க்கக்கூடிய மொழியில் எழுதப்பட்டிருத்தல்.

- உதாரணமாக 'பாடசாலைக்கு வரும்

வெளியாளர்கள் யாவரும் அதிபர் அலுவலகத்துடன் முதலில் தொடர்பு கொள்ளவேண்டும்' என்பதற்குப் பதிலாக, 'பாடசாலைக்கான உங்கள் வரவு நல்வரவாகுக, தயவுசெய்து அதிபர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்' என எழுதப்பட்டிருத்தல்.

- பெற்றோரிடமிருந்தான எழுத்துமூலமானதும் தொலைபேசி மூலமானதுமான விசாரணைகள் யாவும் உடனுக்குடன் கவனத்திற் கொள்ளப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கோள்ளப்பட்டிருத்தல்.
- நேரான காரணங்களுக்காகவும் எதிரான காரணங்களுக்காகவும் பெற்றோருடன் தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணல்.
- பெற்றோருடனான தொடர்பாடலுக்காக செய்தி மடலொன்றை வாராந்தம் வெளியிடல்.
- மாணவரின் வீட்டுவேலைகள் தொடர்பான அறிவித்தல்களைப் பெற்றோருக்கு வழங்குதல்.
- மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் புதிய விடயங்கள் பற்றியும் கலைத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள புதிய மாற்றங்கள் பற்றியும் பெற்றோருக்கு அறியத்தருதல்.
- பாடசாலையிலும் வீட்டிலும் கற்றல் நடவடிக்கைகளில் பெற்றோர் எவ்வாறு உதவ முடியுமென பெற்றோருக்குத் தெரியப்படுத்தி அவர்களுக்கு ஆர்வமூட்டுதல்.
- மாணவர்களின் குடும்பங்களைத் தரிசிப்பதற்காக ஆசிரியர்களை ஊக்குவித்தல்.
- பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகளிலும் பெற்றோரையும் பங்காளிகளாக்குதல்.
- குடும்பப் பொருளாதாரம், குடும்பப் பின்னணி என்பன சார்பாக பெற்றோரிடையே வேறுபாடு காட்டாதிருத்தல்.
- பெற்றோரின் வாழ்நாட்கல்விக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருத்தல்.

இதுவரை நோக்கியவற்றிலிருந்து, பெற்றோர் - ஆசிரியர் உறவு ஒருவரை ஒருவர் மதிப்பதாகவும் அநுபவங்களைப் பகிர்ந்து கொள்வதாகவும் ஒரே இலக்கு நோக்கித் தொழிற்படுவதாகவும் அமையும்போதே, பெற்றோரும் பாடசாலையின் பங்காளிகள் என்ற எண்ணக்கரு அர்த்தம் பெறும். அதேவேளை, பெற்றோர் மீது அதிக பொறுப்புகளைச் சுமத்துவதன்மூலம் ஆசிரியர்கள் தமது பொறுப்புகளைத் தட்டிக்கழிப்பது நியாயமன்று. பெற்றோரும் ஆசிரியர்களும் இணைந்து தமது பிள்ளைகள் சிறப்புறக் கற்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தலே உண்மையான கல்விமேம்பாட்டுக்கு வழிவகுத்து, இருபத்தோராம் நூற்றாண்டின் சவால்களை மாணவர்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டு சாதனை படைக்கவும் உதவும்.

**References :**


Kelly, M.L. (1990). *School - home notes: Promoting children's classroom suc cess.* New york: Guilford.

Hough, M.& Paine, J. (1997). *Creating qualitylearning communities.* Melbourne: Macmillan Education Australia Pty Ltd.

Smith , S.C. (1987). The Collaborative School takes shape. *Educational Leadership, 45* (3), 4-6.















Design By : ICT Unit - J/Nelliady Madhya Maha Vidyalayam